உ

கடவுள் துணை.

18-சித்தர்களில் மகாமகத்துவம் பொருந்திய
கைலாச பரம்பரை கம்பிளி

# சட்டமுனி நாயனார்

திருவாய் மலர்ந்தருளிய

# வாதகாவியம் 1000.

இஃதை

மதுரை ஜில்லா பழநி தாலூகா

பழநி வைத்திய ஆசிரியர்,

## R. M. K. வேலுசாமி பிள்ளை

அவர்களால்

பல ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்து பரிசோதித்து
சீர்திருத்தி தமது

ஆர். எம். கே. அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

பவ-ஞூ 1935

புக் 1-க்கு விலை ரூ. 2.] [தபால் சிலவு வேறு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-JAN 1936
MADRAS

244

உ

கணபதி துணை.

# கைலாசபரம்பரை
# கம்பளி சட்டைமுனி நாயனார்

திருவாய்மலர்ந்தருளியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-JAN 1935
MADRAS
LC N25 97445

# சட்டமுனி
# வாதகாவியம் 1000.

## பாயிரம்.

அகண்டபரிபூரணமா முமையாள்பாத மப்புறத்தேநின்ற[illegible]தாரு
வைய்யர்பாதம் - புகன்றநின்றகணேசனொடு நாதாக்கள்பாதம் புக
ழானவாக்குடைய வாணிபாதம் - நிகண்டெனவே யெனையாண்டகுரு
வின்பாதம் நிறைநிறையாய்ச்சொரூபத்தில் நின்றோர்பாதம் - முகன்
றனையீன்றெடுத்த சின்மயத்தின்பாதம் மூவுலகுமெச்சுதற்குக் காப்
புத்தானே.

நிற்குணமாய்நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி நேரான பூரணமாய்
மனமெட்டாத - சற்குணமாய்ச்சமரசமாய்த்தானுந்தாண்டிச் சச்சிதா
நந்தவெளிக்கப்பால்நின்ற - தற்குணமாயெனையாண்டசின்மயத்தைப்
போற்றிச சமரசமாய்வேதாந்தவாதஞ்சொல்வேன் - நற்குணமாய்ச்
சனகாதி ரிஷிகள்பாதம் நலம்பெறவேநாவில்வைத்துப்பாடுவேனே. 1

பாடுகிறேன் பராபரயேயகண்டவித்துப் பண்பாகவதற்கடுக்கப்
பரையினுடவெளிதான் - நீடுகிறேனதுக்கடுக்க ஆகாசவெளிதான் நே
ராகவதின்கீழேவாயுவாச்சு - நாடுகிறேனதின்கீழேவன்னிவன்னி நல
மாகவதின்கீழேசலமுமாச்சு - ஊடுகிறேனதின்கீழேபூமியாச்சு ஓகோ
கோசீவனெல்லாமுதித்தவாறே. 2

## யாவும்பஞ்சபூதமெனல்.

வாறானசனங்களுக்கு மைந்துபூதம் மருவியதோர்தேவதைக்கு
மைந்துபூதந் - தாறானவண்டமெல்லாமைந்துபூதஞ் சதாசிவமாய்
நின்றதுவுமைந்துபூதங் - கூறானயோனியெல்லா மைந்துபூதங் குரும்
பரேஐந்திறாமெல்லாமாச்சு - நீறானவேடமிட்டுபதேசித்த நிலையெல்
லாமைந்தெழுத்துநிலையுமாச்சே. 3

ஆச்சிந்தப்பொருளறிந்ததிலேகூடி அறிவா[illegible]யறிந்துணர்ந்தது
வேதாறாய் - மூச்சிறந்தவிடமறிந் ததிலேநின்று முன்னற்றுப்பின்ன
ற்றுமுனைமேலாகித் - தோச்சிந்தவிழியிரண்டுஞ்சாக்கரத்தில்வைத்து
ச் சுழியோடேசக்கரம்போற் சுழன்றுயேறி - யாச்சந்தப்பழமறிந்த
[illegible]சி போலக் கலந்தேறவழிசொல்வேன்காணுகாணே. 4

## நந்திகாணாவிடில் வாதம்வாயாதெனல்.

காணப்பாலகுவாக மூலம்பார்த்துக் கைமுறையாய்வாசிகொண்
டூதியூதி-யூணப்பாசாக்கரத்தில் நின்றுநின்று வுத்தமனேநந்திகண்டா
ல்வாதங்காணும் - தோணப்பாவெறும்பேச்சால்வார்த்தைசொன்னாற்
சுடுகாட்டிற்பிணமான சொல்லுக்கொக்கும் - பூணப்பாமூலத்திலொ
ளிகண்டாக்கால் பொற்கொடிபோற் சுழிமுனையுந்திறந்துபோமே. 5

## சுழிமுனை திறந்தேறுவதுகடினமெனல்.

திறந்தாக்கால்மனமொடுங்குங்காற்றாடாது சுழலிலேயகப்பட்ட
துரும்புபோலாஞ் - சிறந்தாக்காலங்கங்கேயாதாரந்தோன்றுஞ் செப்
பரியசித்தியெல்லாஞ்சேர்ந்துஆடும் - மறந்தாக்காற்சுழுத்தியிலே யழு
த்திப்போடும், வாசியென்றகுதிரையிலே யேறியாடும் - இறந்தாக்கா
லொன்றுமில்லை யேகவெளிக்குள்ளே யேறுவதுகடினமெத்த வேறொ
ட்டாதே. 6

## வலியங்க வுவமானம்.

ஒட்டாதவைம்புலனா முலக்கையாக வோகோகோ ஆங்காரமுர
லுமாக - கட்டாதவாசியது உருவமாக கருவானமனத்தையுள்ளே மா
ட்டிக்கொண்டு - முட்டாதேயசையாதேயடித்துச்சன்னி முழுமோ
சமாக்கியல்லோமுழிக்கப்பண்ணும் - எட்டாதேயோகமுதல்ஞானமி
ரண்டு மெய்தாதேயிறந்தவர்கள்கோடிதானே. 7

கோடானகோடிசனம் மண்ணாசையாலுங் குலாவியதோர்தீனி
யுடவாசையாலும் - வீடானமோகத்திற் பெண்ணாசையாலும்விளங்
கியிதிற்பூட்டுகிறபொன்னாசையாலும் - நாடானசுகபோகசுகியினாலு
ம் நலமானபாசத்தின் மயக்கத்தாலும் - வாடாதேயுலகமெல்லா மயக்க
மாச்சு மக்களேவாய்ஞானப்பேச்சுமாச்சே. 8

## ஜீவகலையிருப்பு.

பேச்சாலேயொன்றுமில்லை பிழைக்கவென்றாற் பேரின்பச்சாத்
திரத்தைப்பேணிப்பார்த்து - மூச்சாலேசகலசனமிறந்ததென்று மூச்
சடங்கிச்சாகாமற்சாதகத்தைக்கேளு - வாச்சாலேநடுமூலங்கண்டத்
தூணி மக்கலேவாயுவினுட வீட்டிற்கட்டில் - தோச்சாலைவாசியெங்கு
மோடாதப்பா சோடசத்திற்சீவகலையிருப்புத்தானே. 9

## சீவகலைபோக்கைக் காணுமலிறப்பது.

சீவகலையிருந்ததினூற்பாடிவிக்குஞ் சிறப்பாகவுரிசையோட்டுண்ண
ப்பண்ணும் - சீவகலையிருந்துகொண்டெட்டும்நாலாய் செகத்திலேபி
றப்பட்டுநாளும்பாழாய், சீவகலைமதிபோலேதேய்ந்துதேய்ந்து செக
மெல்லாம் நரைதிரையாய்ச்சேரமாண்டு, சீவகலைபோவதனைக்காணார்
மக்காள் திரோதாயின் கூத்தானதிறமிதாமே. 10

## சோபதாபமில்லாமல் சோமப்பால்
## உண்[illegible]

ஆமப்பா பாதத்தினுட அடியென்பார்கள் அம்முதலாய்ப்பதினாறு
எழுத்துநிற்கும் வோமப்பா நாதமது கண்டத்திற்காணு முத்தமனே
வாயுவுக்குஉகந்தவீடு, சோமப்பாலுண்ணுவிக்குமதிமேலே நின்றாற் சோ
பமில்லை தாபமில்லைச் சோதிகாணும் காமப்பாலீரைக்கிரைக்ககலையு
மங்கி கைகடந்துநாளும் போங்காணுங்காணே. 11

## நான்கின்விபரம்.

காணிந்தநாலினுடவிபரஞ்சொல்வேன் கைமுறையாய்ச்சரிகை
யொன்று கிரியையொன்று - பூணிந்தயோகமொன்று ஞானமொன்று
புகழாகயின்னமொருவரிசைகேளு - தோணந்தசா[illegible]யொன்றுவிசா
ரமொன்று சொற்பெரியசந்தோஷ சாதுசங்கம் - ஊ[illegible]தப்படியாக
நின்றுதப்[illegible]டுரைக்கிறேனின்னமுண்டுரைக்கின்றேனே. 12

## வெளியொளி விஞ்ஞானமயம்.

உரைக்கிறேன் வெளிப்பாழு மொளியின்பாழு மோகோகோ
வெளியொளியாய் நின்றபாழும் - நிரைக்கிறே னிதுகடந்தால்நிற்கு
ணத்தின்பாழும் நேரான மனதுக்குமெட்டாதாகி - விரைக்கிறே
னன்னமயம்பிராணமயமாகி மேவிநின்றமனோமயமாய்வெளியிற்கூடி-
திரைக்கிறேன்புவியடங்குமொன்றாய்நின்ற திறமானவிஞ்ஞான மயமு
மாச்சே. 13

## மூக்காலத்திரையமும் நாலுவகையோனியும்.

ஆச்சிதுவுமாங்காரம்புத்தியாகி யப்பனேசித்தமுமாய்மனமுமாகி - வோச்சிதுவுஞ்செல்காலம்வருங்கால்மாகி வுத்தமனேநிகழ்காலம் மூன்றுமாகி - ஆச்சிதுவுமுற்காலத்திரையுமாகி மண்ணுலகில்நாலு வகையோனியாகி - காச்சிதுவுவண்டமெல்லாம் பணராயப்பூவாய் கலந்துநின்ற அத்தியதுகண்டுகொள்ளே. 14

## பேரண்டமும், புவனமும், பராபரையின் வீடும்.

அத்தியுடகிாயொன்று பேரண்டமாகி யதில்நிற்கும்வித்ததுவுமர் பிரந்தான்கேளு - பத்தியிதுசித்தண்டமாகிநிற்கும் பணர்கோடிகாய் கோடிபார்க்கப்போகா - மத்தியிந்தப்பேரண்ட மாயிரத்தினெட்டும் வாகானபுவனமொன்றென்றறிந்துகொள்ளு - வொத்தியிந்தவிருநூற் றிருபத்திநாலும் வுத்தமனே புவனமென வுணர்ந்துகொள்ளே. 15

உணர்ந்திந்தப்புவனமெல்லாஞ்சாகரந்தானென்று வுருதியாய்ச்சாகரந்தானேழாய் நிற்கும் - கணர்ந்திந்தச்சாகரங்களேழுங்கேளு கைவிட்டபதமானதொன்றுமாச்சு - பணர்ந்திந்தப்பதங்கேளுமெண்பத்துநாலும் பார்மகனேயிதுவெல்லாம்பராபரையின்வீடு - புணர்ந்திந்தக்கூற்றெல்லா மவளுடையகூத்து பூரணத்தின்வல்லமையாலாடினளே. 16

ஆடினதோராட்டெல்லாஞ் சொல்லக்கேளு அண்டமுதற்பதமளவுமளித்தகன்னி - யூடினதோர்சிறுவீடு போலேயாத்தாள் ஒருநொடிக்குள்படைத்தளித்தாளோகோபாரு - நீடினதோரெட்டெட்டாமறுபத்துநாலும் நிர்மலமாம்பரையுடையகூறுமாச்சு - கூறினதோர்புவனமெல்லாமவளேயாச்சு குரும்பரேசிவமென்னவெளிதான் காணே.

## பராபரையை அறியாவிடில் வாசியோகம்லயமாகாதெனல்.

வெளியாகநின்றதற்கு யிருள்மூடாமல் வேதாந்தத்தாயுமங்கே வொளியாய்நின்றாள் - ஒளியானநிற்குணத்துச்குள்ளேயிலே ஒடுங்கினு ருலகமெல்லாமூணிப்பாரு - தெளிவானதெளிவுவந்துசேர்ந்துதானுற்செகமெல்லாம் விந்தையென்று தெளிந்துபோகும் - வளியானபராபரையை யறிந்தாயானால் வாசியென்றயோகம்வந்து வணங்குந்தானே.

வணங்கினுலாறுதலம் வெளியாய்க்காணும் வாகாகச்சொல்லுகிறேனன்றுய்க்கேளு - யிணங்கினல்மூலத்திற்றளமோநாலு இயல்பான நடுமையமுக்கோணம்பாரு - புணங்கினுப்போலதுவுமிடைபின்னுங்கூடி புகழாகவிருமுனையில் வாசியாச்சு - வுணங்கினுமொருமுனையில் நந்திநந்தி வுத்தமனேயதீதமாந்தீயுங்காணே. (மருமுனையில் தண்டலி)

## பராபரையின்பெருமை.

தீயென்றுலுலகத்தில் தீயோவல்ல செகமெல்லாம்படைத்தழிக்கும்தெய்வந்தெய்வம் - தாயென்றுலுலகத்துதாயோவல்ல சகலமெல்லாம்நிறைந்திருக்குங்குண்டலியாந்தாய்தான் - வாயென்றுலடங்காது அவளைப்போற்ற மண்ணுலகில்வகைநாலு யோனியெல்லாம் - பாயென்றுல்செனனமுமாய் லயமுமாகும் பாழனகாலனில்லை பாரு பாரே. 20

## தோற்றத்தின்விபரம்.

பாரப்பாமூலத்தில் விந்துவினுற்றோற்றம் பரிந்துநின்றவாயுவினுல்லயமுமாச்சு - நேரப்பாவிறப்பிறப்பிரண்டுமங்கே நீடுலகில்செத்தவரைத்தெய்வமென்பார் -ஆரப்பாசொன்னலு மூலகங்கேளார் ஆச்சரியமனுடராய்ப்பிறந்துங்கெட்டார் - சேரப்பாவுலகமெல்லாஞ்செனிக்கும்வாறு செப்புகிறேனன்றுகத்தெளிந்துகொள்ளே. 21

## ஒடுக்கத்தின்விபரம்.

தெளிவானமண்ணதுவும்நீரிற்சேருஞ் சேர்தெழுந்தசலமதுவுந்தீயிற்சேரும் - ஒளியானதீச்சென்று வாயுவிற்சேரும் ஓடியந்தவாயுவதும்வெளியிற்சேரும் - களியாகிச்செடமாகிச்செத்தபின்பு கசடரே நரகசொர்க்கமாவதெங்கே - நெளிவானவாய்வுவொன்றே விந்திற்சேரும்நேராகநாலுமங்கேநீங்கிப்போச்சே. 22

## போகர்ப்புனல், சாகாக்கால், வேகாத்தலையறிய.

போகாதவிந்துவினுற் பிறக்குங்கோடி புகழானவித்ததினுல்மரமோகோடி - சாகாதகாலிதுதானறிவாய்மக்காள் சமுசயங்களெண்ணுதேசனனமில்லை - வேகாததலையறிந்தா லெல்லாம்போச்சு வெட்டவெளியானமனம்பிறக்குமோடா - பாகானதிரோதகையின் மயக்கமானுல் பரிவானநாதவிந்துபரிசமாமே. 23

## மூலாதாரத்தில் நாத்விந்திரண்டே வாசியெனல்.

நாதமென்னவென்றுக்கால், வாய்வு, வாய்வுநலமானசுக்குலமேவிந்துவிந்து - போதவிதுரண்டல்லோவாசியாச்சு புகழானயிருப்பிடந்தான்மூலமாச்சு - காதமல்லதூரமல்ல மூலத்தைப்பாரு கண்ணொளியிற்சூரியன்போலங்கேகாணும் - வேதமல்லோஅந்திடத்திற்சொன்னவார்த்தை வேதாந்தச்சின்மயமாங்குருசொன்னுரே. 24

## சுவாதிஷ்டானம் ந பிரம்மா. சரஸ்பதி.

சொன்னதொரு மூலத்தைத்தாண்டிப்பாரு சுகமாகவாறுதலம்
பிரமன்வீடு - மன்னதொருநகராமென்றபூமிக்குள்ளே வாசியினுற்பி
றப்பித்தார் கோடாகோடி - பன்னதொருவதின்மேலே மாலின்வீடு
பாங்கானபத்திதழும் பிறைபோல்வீடு - யென்னயினிசெகமெல்லாம்
ரக்ஷிக்குந்தாய்தா னென்மக்காள்மாயத்துக்காதிதானே. 25

## மணிபூரகம் ம விஷ்ணு. லட்சுமி.

ஆதியாந்திரோதகையுமிருந்தவீடு அடங்காதமோகமெல்லாமா
னவீடு - மாதியாங்காமியத்தையீய்ந்தவீடு மாயமெல்லாங்குடிகொண்டு
நின்றவீடு - பேதியாமனங்கலங்கிபெண்ணைத்தேடி பேய்க்கூத்
தாயாட்டுவித்தபெரியவீடு - சாதியாம்வரம்பழித்தமூக்கறச்சி வீடு
சமரசமாய்க்கண்டறிந்துமேலேபாரே. 26

## அனுகதம். சி ருத்திரன் ருத்திரி.

பாரப்பாயிதழிலே பனிரெண்டாகும் பானுவங்கேபனிரெண்டு
முகமாய்நிற்கும் - நேரப்பாகாணவென்றூற் கண்கொள்ளாது நேராக
நடுவணையிற்றிரிகோணமாகி - காரப்பாசிகாரமென்றவெழுத்துநிற்
குங் கைமுறையாய்ருத்திரனும்ருத்திரியும்நிற்பாள - கூரப்பாநடுவணை
யில்நின்றகாந்தி கூடினல்ராக்காலக்கூகையாமே. 27

## ருத்திரன்ருத்திரிதொழிலின்விபரம்.

ஆமப்பாவவருடையதொழிலைக்கேளு ஆகாரநித்திரையும்பயஞ்
சையோகம் - காமப்பால்விதனத்தால் மாச்சல்செய்து கடுநரையுந்
திரையுங் கண்புகைச்சலாகி - வேமப்பா சடமறந்துவிந்தையூற்றி
வெறுங்கூத்தாய்ஞானமெல்லாம் விழலாய்ப்பண்ணும் - ஓமப்பாவி
வருடையகூத்தையெல்லாங்கண்டு உயரநின்ற வகாரபதியுறவுகேளே

## விசுத்தி வ மகேஸ்பரன் மகேஸ்பரி இருப்பிடம்.

உறவான ஆறிதழில் வகாரம்நிற்கு மோங்கியதோர் காமமூதற்
குரோதம்லோபம் - மறவானமோகமொடுவாச்சரியமதமுமயக்கிவைத்
துப்பிறப்பினுள்ளே மாளப்பண்ணுந் - திறவானமனதுவந்தால் பரத்
தின்வீடு செப்பினேனிதின்குணத்தை முன்னேயானும் - நிறவான
மேல்மூலம்புருவமையங்கேளு நேரானசதாசிவனுமணியுந்தானே. 29

## ஆக்கினை ய சதாசிவம் மனோன்மணி இருப்பிடம்.

மணியானமனோன்மணியுஞ்சதாசிவனுங்கூடி வாகானயிரண்டிதழிலிருந்தார்பாரு - கனியான நால்வருந்தான் போற்றிசெய்யகண்ணடங்காபுருவமையத்தீயிற்பாரு - தணியாகசாக்கிரத்திலிருந்துகொண்டு சகலமெலாந்தோற்றுவித்துக்கூத்தும்பார்த்து - பிணியாகவெறுமையுமாய் மனதுமாகிப் பேய்க்கூதாய்க்கருவியுட கூத்துமாச்சே.

## சாக்கிரத்தில்நின்று தாயைத்துதிக்க.

கூத்தானவுலகத்தேகர்மதர்மம் கூடியதோர்சரிகைமுதல்கிரியையாகிக் - காத்தானயோகமுமாய்ஞானமாகிக் கலந்துநின்றநூலாகிக் கருவுமாகித் - தேத்தாகித்தெளிவாகி னினைவுமாகிச் செகமெல்லாந் தோற்றுகின்றசாக்கிரமுமாகிப் - போத்தாகிப்பொருளாகி மேல்வழியைக்காட்டிப் புருவமையத்தாயாரைப்பூசிப்பாரே. 31

பூசிப்பாரறுசமயப்புண்ணியர்களெல்லாம் புகழறியாப்பாஷாண்டர்தூஷிப்பார்கள் - பூசிப்பார்யோகமுதல் ஞானம்வேண்டிப்பொற்சடையோன்பதம்போற்றிப்புகழ்வாரையா - பூசிப்பார்சக்கரமும்புத்தகமும்வைத்துப் பெண்ணோடுதீபமுத லற்சிப்பார்கள் -பூசிப்பார் நியாசித்து மந்திரத்தையுன்னில் புகழாகக்கேட்டதெல்லாங்கொடுப்பாள்தாயே. 32

## வாமபூசைசெய்யப் பூரணலேகியம்.

தாயானபராபரையைப்பூசைபண்ண சாதகமாய்வாமத்திற்பூசைபண்ணு - வோயாமற்கிடைக்குமோமலையிலென்று னுத்தமனேசொல்லுகிறேன்லகுவாய்க்கேளு - காயான சாதிக்காய், கிராம்பு, யேலங், கசகசா, பத்திரியுஞ், சாரப்பருப்புஞ், - சாயானமதுரமொடு கோஷ்ட, மாஞ்சி சாதகமாய் அபினியொடு பத்துங்கூட்டே. 33

கூட்டுவதுவகையொன்று பலமதொன்று கோரக்கர்மூலிகைதான்பலமோபத்து - நீட்டுவது நெய்யாலேவறுத்துக்கொண்டு நேராகக்கற்பத்தை நிறுத்துப்போட்டு - மூட்டுவது அண்டமொன்றவித்துப்போட்டு முசியாமலரைத்துநன்றா யெடுத்துக்கொண்டு - பூட்டுவது ஆவின்பாற் படியோ மூன்று புகழான வஸ்துவொரு படியும்வாரே. 34

---

நமது அபிப்பிராயம்,

நோட்:- கோரக்கர் மூலிகையென்பது கஞ்சா கஞ்சாவை நெய்யால் வறுத்துச் சேர்க்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிவறுத்தால் லகிரி இல்லை. பால், எலுமிச்சம்பழச்சாற்றில் வேகவைத்தாலும் லகிரிபூற மாறிவிடுகிறது. ஜலம்விட்டுக்கசக்கி ரவியிலுலர்த்தி சேர்த்தால் லகிரியிருக்கும்.

ஆர். எம். கே. வேலுசாமி. வைத்தியர், பழனி.

வார்த்ததிலேரெண்டுபத்து பலந்தான்கேளு வாகானசற்கரை
யைக்கரைத்துக்கொண்டு - சேர்த்ததிலேகொதிக்கவைத்து முன்ம
ருந்துபோட்டுத் தெளிவானவாவின்நெய்கூடவார்த்துக் - கோர்த்தது
லேகிண்டிநன்றாய் மெழுகதுபோல்வாங்கி. கொள்ளமட்டுமுருட்டிய
தைத்தியானம்பண்ணிக் - கார்த்ததிலேஉன்மனையைப் புருவ மையத்
துள்ளே கைமுறைபாய்ப்பூசித்துக்கொண்டிடாயே. 35

## தாயைத்துதித்தல்.

கொண்டுயர்ந்த லகிரியின்மேல் மூலத்தூணி குளிர்ந்துநின்ற
மதியொளிபிற்கூடிக்கொண்டு - தண்டுகின்றநாதத்திற்சேர்ந்துமெள்
ளசாதகமாய்ச்சமாதியுட பதத்தில்நின்று - மண்டுகின்ற சிவத்தினுட
வெளியிற்கூடி மகத்தான பரையினுடவொளிபிற்கூடிக் - கண்டு
கொண்டுபராபரமாம்வெளியிலேறிக் காரணியே அம்பரையே யென்
றுபோற்றே. 36

அம்பரையே யகண்டமேபாதித்தாயே ஆதியந்தமில்லாத அம்மா
அம்மா- தம்பரையே சமரசமேஞானவீதி சச்சிதானந்தவெளித்தாயே
தாயே - நம்பரையேநாதாக்கள்கருணை வாழ்வே நானென்றும்நீயென்
றுமில்லாதானே - உம்பரையே யும்பர்முதலரியற்குமெட்டா வோங்
காரங்கடந்துநின்றவொளியேயென்னை 37

ஒளியாகிவெளியாகி யுருவமாகி யொன்றாகிரெண்டாகிச்சகலமா
கி -வளிவாகிநெளியாகி வானுமாகி மவுனமுற்றயோகமுதல் ஞானமா
கி - தெளிவாகித்தெளிவினுள்ளே தெளிவுமாகி, சித்தர்முதல்ரிஷிக
ளுட மனமுமாகிக் - களியாகிச்சுழியாகி மேல்கீழாகிக் கண்கொள்ளா
ப்பூரணியேயென்றுபோற்றே. 38

## பரையின்கிருபையால் ஆகுந்தோற்றங்கள்.

போற்றியவள்கருணைகொண்டு மேலேபார்க்கிற் புகழானசத்து
சித்தானந்தங்காணும் - சாற்றியதில் சேதனமசேதன மாய்நின்ற சச்சி
தானந்தமென்ற பூரண மூந்தோன்றும்-மாற்றியதோர்பாவற்றரூபமாகி
வாகானவுள்ளோடு புறம்புமாகி - யேற்றியதோரொன்றாகி யனேக
மாகி யேகாந்தநிற்மலத்தேயென்றுகாணே. 39

காணப்பா சத்தியமு மசத்தியமுமாகி கைவிட்டரெண்டுமற்றுக
ருணையாகி - பூணப்பா சத்தாகிச்சித்துமாகி புகழாகவானந்தமயமு
மாகி - யூணப்பா னித்தசுத்தவசுத்தமாகி யோங்கிநின்ற னிர்மலத்
ளியுமாகி - ஆணப்பாவரைகடந்துவெளியுமாகி ஆதியந்தமில்லாதவடி
வுமாமே. 40

வடிவாகிமுடிவாகிமாலுங்காணா மன்னுயிர்க்குளுளைந்துனின்ற மயமுமாகி - முடிவாகினானாகிநீயுமாகிமூச்சாகிமூச்சற்றபொருளுமாகி நெடியாகி வானாகிவானுந்தாண்டி னிறைந்துனின்ற வகண்டமுமாய் னினைவுமாகி - விடிவாகி யக்ஷரமாய் ரவிமதியுமாகி விளங்கினின்ற வானந்தப்பொருளுமாமே. 41

பொருளானவேதாந்தஞ்சித்தாந்தமாகிப் புகழ்ந்துநின்றசமரசத்தின்போக்குமாகி - அருளாகி சித்தாகி தேசிகனுமாகி யளவற்ற சிதாகாசரூபமாகி - மருளாகிமோட்சமுமாய்ப் பரமார்த்தமாகிவாரிதியாய் வையகமாய்த்தாபரமுமாகி - யிருளாகி வெளியாகி யலியுமாகியேத்தரிய பூரணமாயிருந்தவாறே. 42

பூரணமாய்க்காரணமாய்ப்புத்தியாகி போக்காகிவரவாகிப் புகழ்ந்துயெங்கும் - காரணமாய்னிற்குணமாய்க் கருணைதானாய் காசான தேகமொடுகருத்துமாகி - வாரணமாயதுவாகி யிதுவுமாகிமருவியபின்னதுவுமற் றிதுவுமற்று - தோரணமாயண்டமுதற் பதமுமாகி சொல்லாகி குறியாகி னின்றவாறே 43

குறியாகிவேதாந்தசாட்சியாகி கூடுகின்றமனமாகியதுவுந்தாண்டி நெறியாகிஅந்தரமாய்ச்சூட்சமாகி நேரானதிரேதாயிக்குள்ளுமாகித் தறியாகினாதவிந்துகலையுமாகி சகலவுயிர்க்காலயமாய்த்தான்றானாகிப் பிரிவாகி யெட்டாகினானுமாகிப் பேரொளியாய்ச் சிற்றொளியாய் னிற்கும்பாரே. 44

பாரப்பாசத்தற்று சித்துமற்று பரிவான வானந்தமயமுமற்று - நேரப்பா, பற்றற்றுமயக்கமற்று னிலைக்கின்றசங்கற்ப, விகற்பமற்று - சேரப்பாஅலையற்றவாரிதியாய்னின்று செகமெல்லாம்பூரணமாய்ப்பொங்கித்தானாய் - காரப்பாசிலந்தியுடனூலைப்போல கைவிட்டசூத்திரம்போற்கலக்குங்காணே. 45

கலந்துனின்றவுலகமெல்லாஞ் சொல்லுவதுந்தானாய்க் கார்த்துயிலைரவளர்க்கிரதோர்கருணைதானாய்-அலந்துனின்றவறுமையுமாய்க் காமியமுமாகி யனேகவிதமாகினின்ற குணமுமாகி - புலந்துனின்ற கோளாகிநோயுமாகிப் புவனத்தேநவலோகப்பொன்னுமாகி -மலந்துனின்றபொய்யாகிமெய்யுமாகி மாய்கையுமாய் ஞானமுமாய் வளர்ந்தவாறே. 46

## பூரணத்தைக்காணலறிதெனல்.

வளர்ந்துநின்றமுடிவேதோ வகலமேதோ வாக்காலுமனத்தாலு காணப்போகா - வளர்ந்துநின்றபூரணத்தைக் கேசரிதானென்பார் வாய்ப்பேச்சோ காணரிது மக்காள்மக்காள் - வளர்ந்துநின்றவெளியோடேவொளியுங்கூடி மன்னுயிருமண்டாண்ட பதமுந்தாண்டி - வளர்ந்துநின்ற பூரணத்தைக் காணவென்றால் மவுனத்தேயிருந்துறைந்துங்கடினந்தானே. 47

கடினமென்றுவிட்டாக்கால் மனம்பேயாகுங்காணொரும்பு ஆறையிலுங் கற்குழிந்தாற்போல துடினமென்றவில்வளைந் தம்புதைத்தாற்போலே சொற்பெரியகாமத்திற்சொக்கினாற்போல -படினமென்றமரத்தோடேமரந்தான்தேய்ந்து பற்றிநின்றதீயதுபோல் பத்தும்பாரு - நடனமென்றநாதாந்தவேதாந்தத்துள்ளே நண்பாகவுறைத்துநன்றாய் நாடுநாடே. 48

## நாடாதபேருக்குசித்தியாகாதெனல்.

நாடாதபேர்களுக்கு சித்தியென்ன நலமானகுளிகையென்ன வாதமென்ன - கூடாதமனதுக்கு சாத்திரங்களென்ன குறியில்லாயோகத்தில்வாசியென்ன ஊடாதமூடருக்கு குருத்தானென்னஒழியாதஆசைக்குப் பேரின்பமென்ன சூடாதபூவுக்குவாசனைதானென்ன சுகமறியான்பேசுகிறசொல்லிதாமே. 49

## சாஸ்திரத்தைக்காணமற் புலம்புகிறவர்கள்.

சொல்லுவாருலகத்தில்யோகங்கோடி சொற்பெரியவட்டாங்கமாற்கங்கோடி . சொல்லுவார்ஞானமுதல்சாத்திரங்கள்கோடி துரியத்தேநிற்கிறதுசொற்பமோடா - சொல்லுவார்வாதமென்ற வாசைபூண்டு சோதியுற்றவாமத்தைதூஷிப்பார்கள் - சொல்லுவார்சொற்கேட்டு அலைவார்கோடி துலங்கிநின்றசாத்திரத்தைக்காணார்காணே

## வாதக்கருஆறெனல்.

காணுதவாதத்தின் கருவைச்சொல்வேன் கலந்துரைத்தார்சித்தர்முதல்ரிஷிகள்கோடி - ஊணுகவாதத்திற் கருவதொன்று, வோங்கியதோர்வசியத்திற்கருவதொன்று,-பூணுகவயஸ்தம்பக்கருவதொன்று. புகழாகவிதற்குள்ளேமூன்றுகேளு - தோணுதஆள்மறைப்பு வஞ்சனத்தினொடு சொன்னதெல்லாமறைப் -பதொன்றுதுரைதானுறே ()

## ஆறுவிதத்தின்விபரம்.

ஆறுவிதக்கர்மத்திற்காதியென்ன அப்பனேவாதத்திற்காதியென்ன - வேறுவிதமொன்றுமில்லைவண்ணுணுநி வேதாந்தக்கருவுக்கு மனமேயாதி - நீறுவிதசுண்ணமுதற் குருவுஞ்சத்தும்நேரானசெந்தூரங்களங்குகட்கு - தாறுமுதற் செயநீரா மெழுகுந்தீநீர் சத்திக்குங்கிருவணமுங்குடோரிதானே, 52

## சாத்திரங்கள் யாவுமறைப்பெனல்.

தானுனபதினென்றும்வாதத்திற் கங்கஞ்சாதகமாய் சொல்லுகிறேன்வெளியாய்க்கேளு - கோனுனவழலையல்லோஆதியாதிக் குருசொல்லவேணுமதுவில்லாவிட்டா - பானுனபூசையிலே ஆயிசொல்லவேணும் பரிவாகயெண்ணூலேசொல்லவேணும் தேனுனசாத்திரங்கள்கோடாகோடி திறமாகச்சொல்லாதுமறைப்புதானே. 53

மறைத்தாரேரிஷிகள்முதல்சித்தரெல்லாம் வகைவகையாஞ்சாத் திரங்கட்கோடாகோடி - நிறைத்தாரேயேழுலட்ச வீசன்றானும் நே ராகசொல்லாதேபோனாரைய்யா - உறைத்தாரேயறியார்கட்குருகை காட்ட வூரிலுள்ளோ ரறியாமற் சாத்திரத்தைவைவார் - குறைத் தாரே வாதமென்ற அங்கமெல்லாங் கூறுவேன் வெளியாகக்கூறு வேனே 54

## லேசாய்வழலையெண்ணையை கக்கவைக்க வழி.

கூறுவதுமுந்திமுந்திவழலையாதி குடித்தயெண்ணைகக்கவைத் தாலவனேவாதி - மாருவதுபெண்ணெய்க்கக்க வகையைக்கேளு வாகானசவுக்காரக்கட்டிவாங்கிதேறுவதுசுண்ணாம்புங்கல்லில்வைத்து திறமாகநீர்வாரு இருபத்தைந்து ஆறுவதுவதின்பின்னே சுண்ணாம் பில்வைத்து வப்பனேமூடிநன்றாய்புதைத்துப்போடே. 55

## 1 மாதம்புதைக்க வழலையெண்ணெய்கக்கிவிடும்.

போட்டுவைத்துத் திங்களொன்றுவாங்கிப்பின்பு புகழானசீன த்தின்சுண்ணாந்தானு - மாட்டிவித்துஅதின்மேலே ரவியிற்போட்டு வாகான சீனத்தினுள்ளேவைத்து - மூட்டிவைத்து தீயெரிப்பாய்சா மமொன்று முசியாமலாறவிட்டுக் கவசம்வாங்கிச் - சூட்டிவித்துப் பார்த்தாலோ யெண்ணைகக்கிச் சோதினைக்கிக்கறுப்பாக யிருக்கும் பாரே. 56

கருப்பாகயிருக்குமென்றுமயங்கவேண்டாம் கல்வத்தில்வெண் காருவாலரைத்துக்கட்டி - உறப்பாகச்சுண்ணாம்புப்பொடியில்வைத் து உத்தமனேபுடம்போடு வெளுக்கமட்டும் - நறுப்பாகவழலையது சுண்ணமாகும் ஞட்டியிதுகடுங்காரமேத்துயேத்து - மறுப்பாகக்கடு ங்காரச்செயநீர்கேளு வாகாகவகையெல்லாஞ்சொல்லுறேனே. 57

## கடுங்காரச்செயநீர்.

சொல்லுறேன் அண்டமதுஅன்பத்தொன்று சுகமாகவெண்க ருவைஒன்றிலூற்றி நல்லுகிறேன் அண்டத்தோற்சுண்ணாந்தானும் நலமாகப் பலமொன்றுசுண்ணநீரில் - பல்லுகிறேன் கரைத்திதிலே தெளிவோர்சேரை பாங்கானசீனமொருகாசுபோட்டு - மல்லுகிறே ன்பூரமொருகாசுபோட்டு வாகானவீரமொருகாசுதானே. 58

காசிடைதான்கல்லுப்புச் சுண்ணம்போட்டு கலந்துஅந்தச் சுண் ணாம்பிநீரிஞேடே - ஆசிடைதானெருக்கம்பால் சிறங்கைவாரு ஆக வொன்றாய்க்கலக்கியந்த கருவில்வார்த்து - நேசிடைதான்கவர்கொ ண்டுகடைந்துவைக்க நேராகநுரைபோலச்செயனீராகும் பூசிடைக் குக்கடுங்காரச் செயனீரப்பா போக்கிதிலே சொல்லுகிறேன் கேளு கேளே. 59

## காரமேற்றும் விதம். சிவமகிமை.

சொல்லுகிறேனிந்தநீர் வழலைகூட்டிச் சுகமாகப்புடம்போட்டுகடு
ங்காரமேறுஞ் - சொல்லுகிறேனிந்தநீர்துரிசுக்கூட்டுச் சுகமாகக்சின
மொடுகாரத்தூட்டு சொல்லுகிறேன்சூடனொடு பூரத்தூட்டு துடியா
னயினங்கனொடுஉப்புக்கூட்டு - சொல்லுகிறேன்கட்டுவகைக் கெல்லா
மூட்டு துடியாகக்கடுங்காரமேறுந்தானே. 60

காரமல்லோசரக்குகளிலேறுவிட்டால் கைகடந்து ஓடிப்போம்
வாதந்தானுங் - காரமதுமேதென்றால்சவுக்காரங்காரங் காரத்தில்மே
ல்க்காரமேறிச்சானால் - காரமதுஅண்டாண்டங் கடந்துஆடுங் கார
ணமாய்நின்றதோர் வழலைக்காரக் - காரமென்றுசொன்னதெல்லாஞ்
சுண்ணம்பேகாரங் கண்டாயோசுண்ணம்புசிவனுமாச்சே. 61

சிவனொடுசத்திவந்து கூடியல்லோ செகமெல்லா முண்டாச்சு தி
ரேகமாச்சு - சிவனொடுசத்திநின்று அண்டாண்டமாச்சு சேர்ந்துநின்
றபுவனமுதல்பதமுமாச்சு - சிவனொடுசத்தியல்லோ வாசியாச்சு தெ
ளிவானநாதவிந்தாய்பெண்ணுமாச்சு - சிவனொடுசத்தியது சாரச்
சுண்ணந் தெளிந்தறிவான்வாதியென்றால்திறந்தான்காணே. 62

திறமானசத்தியதுசாரமாச்சு சேர்ந்துநின்றசவுக்காரஞ் சிவனு
மாச்சு - அறமானரெண்டாலேவாதமாச்சு அப்பனேவசியமுதல்வயஸ்
தம்பமாச்சு - நிறமானதிசைகடறிந்தாலவனேவாதி நெறியதனையறியா
ட்டால்வாதியல்லா - குறமானகுறம்பாடித்திரிந்தாற்போலக் குறும்
பரையோபலபலவாய்ச்சுடுவார்தானே. 63

## சரக்குபேர்.

சுட்டதினால்வருவதென்ன தோஷந்தோஷஞ் சுடாட்டால்தெ
ரியுமோவாதமென்றால் - பட்டதினால்பலனென்ன குருச்சொல்லவே
ணும் பண்பாகச்சொல்வதென்னவழலைச்சுண்ணம் விட்டதினால்வா
தமில்லைவசியமில்லை விளங்கியதோர்வயஸ்தம்பம் அஞ்சனத்தினொடு -
கட்டதினால்ஆளழைப்பு அதிசயமுமில்லை கைவிட்டவழலையினால்
காணுதொன்றே. 64

காணமல்திரியாமல் லேங்கிடாமல் காலேதோதலையேதோ வெ
ண்றெண்ணமல் - பூணமல்வழலையிலே செட்டோர்கோடி போக்க
றிந்துவழலைதொட்டால் வேதைகோடி - தோணமல்தோத்திவைக்
குங்கவரோகோடி சொல்லேதுகரையேது துறைதானேது - வீணகப்
பார்த்தல்லோவாதஞ்சுட்டால் வெறும்பொய்யாய் நூல்களெல்லாம்
விரைந்துபோமே. 65

## வழலை செயநீர் பிரிக்கும்விதம்.

## இதுவே காரசார செயநீர்.

போகாமல்வழலையுடமார்க்கஞ்சொல்வேன் பொற்கம்பியிழுத் தாற்போல்பிழுத்ததெல்லாமாடும் - வேகாமல்வெந்துநின்றசவுக்காரமொன்று விளங்கியதோர்சத்தியென்ற சாரம்ரெண்டு பாகாகநீத் தியதைக்கூட்டியாட்டப் பார்க்கையிலேசலமாகும்பாருபாரே வாகாகயின்னீரில்சவ்வீரம்போடமருவிடவேசிவப்பாகுஞ் செயனீர்தானே.

## ஷை செயநீரில் துரிசுகட்டும்விதம்.

தானென்றசெயனீறிற்துரிசிதோய்த்துச் சாதகமாய்ரவியிலிட்டுக ட்டிப்போகும் - வானென்றசீனத்தின்சுண்ணாம்பில்வைத்து வளமாகத்தீயெரிக்கவெளுத்,துக்கட்டும் - மானென்றசவுக்காரச்சுண்ணம்வீரமாட்டியந்தத்துரிசியின்மேல்பூசிப்போட்டு வேனென்றசுண்ணாம்பு பொடியில்வைத்து மேவியிருநாளிகைதானெரித்திடாயே 67

## துரிசிக்கட்டு குரு.

எரித்திடவேதுரிசியது குருவுமாகும் யிந்திடைக்குச்சாரமோடுகாரம்ரெண்டு - அரித்திடவேஉப்புரெண்டு ஆறுமாறும்அதுவதுவும்பலமொன்றுஆறுங்கூட்டி - மரித்திடவே அரைத்துநன்றாய்ப்பனியில்வைக்க மகத்தானமெழுகாகுமைந்தாகேளு - பரித்திடவும் லிங்கமொருபலத்தைதவாங்கிப் பாங்கானசுத்தியினிப்பகரக்கேளே 68

பகருகிறசெம்பருத்திப்பூவுக்குள்ளே பாங்கானபழச்சாறு படிதான்வார்த்து - நகருகிறபிசைத்தெடுத்துச்சுறுக்குப்போட்டு நலமானமுலைப்பாலுஞ் சுறுக்குப்போட்டு - வகருகிறசவுக்காரச் சுண்ணம் வீரம் வழலையொத்தச்சவாதோடு மூன்றுங்கேளு -நிகருகிறமுக்காசுயிடையேபூசி நேராகலிங்கத்தைதவாட்டுவாட்டே 69

வாட்டியந்தலிங்கத்தின்மேலேகேளு வளமாகமுன்மெழுகைக் கவசங்கட்டி - நாட்டியந்தத்தீமேலே அடுக்கவாட்டு நிலமாகலிங்கமதுகட்டிப்போகும் - மூட்டியிந்தப்படி தானேவெள்ளைகட்டும் மூதண்டசிலைகட்டுங்கெவுரிகட்டும் - வாட்டுயிந்தப்படிவாட்ட மால்தேவிகட்டும் வகையஞ்சுபாஷாணங்கட்டும்பாரே 70

கட்டியதோரஞ்சுக்குள் வேதைசொல்ல கரையேதுதுரையேதுகணக்குமேது - மட்டியதோரறிந்தமட்டும் விரித்துச்சொல்வேன் வகையாகக்கேளுங்கள் மாணுக்காளே - சிட்டியதோர் அயப்பொடிதான்பலமும்ரெண்டு திறமானசவுக்காரம் விராகனொன்று - முட்டியதோர்வெண்காரம்விராகனைஞ்சுமூதண்டச்சாரமது பலந்தான்காலே

பலமான அரைப்பலந்தான் துரிசிகூட்டிப் பாங்கானதாளகமும் பலமுங்கால்தான் - குலமானவீரமதுவிராகன்ரெண்டு கூட்டியெல்லாம் வெடியுப்புநீராலாட்டு தலமான காரசாரநீர்விட்டேயாட்டு சாரமுதல்வீரவகைதுரிசுசாகும் நிலமானமெழுகாகுமிதனைக்கேளு நேராக மூன்றுபங்காயுருட்டிவைப்பே .72

வச்சதிலேஒருபங்குஅரப்பொடியிற்சேர்த்து வகையாகக்குகையிலிட்டுநன்றாய்காச்சு காச்சதிலேபுருகியொருமணியாய்நிற்குந் தனையெடுத்துஉடைத்துஒருபங்குகூட்டி - மெச்சதிலேகரிகூட்டிவுருக்கஆடும் முன்போலமுக்கிலும உருக்கித்தீரு - கச்சதிலேதிரையோடுசவுடுதீருங் கறுத்திரும்போவல்லவது கனகந்தானே 73

கனகம்போல்நின்றாடும் பூத்திரையுஞ்சவுடுங் காணாது தங்கம்போல்கனமுங்காணுங் - கனகமம்பேலானதொருயிரும்பில்வேதை காவிக்குஉப்புக்குமேகிடாது - கனகம்போலானதென்ன யிரும்பேதென்றால் காணப்பா அப்பிரகசத்துச்சத்து - கனகமென்னயிதுக்கீடோதின்றாயானல் காயசித்திகோடிவரையிருந்துந்தானே 74

இருத்திமுன்னே கவிசித்த பாஷாணத்தை யியல்பாகக்கட்டியதோர்மெழுக்கினாலே - மொருத்தியதை நாகத்தில் கவசம்போட்டுப் புகழாகப்புடம்போடநாகங்கட்டு - மருத்தியிந்தப்படிபோட வீரங்கட்டும் அப்பனேதுத்தமுதல்வங்கங்கட்டும் - பருத்தியல்லோநூல்காச்சுப்பிடவையான பழங்கதையையிதில்வேதை பாடிலேனே 75

பாடிலேன்தங்கமொன்றுஉருகும்போது பாங்கானநாகமொன்றுகாரத்தோடீந்து - நீடிலேயிரும்பொன்று அதிமேலேபோட்டு நேராகக்காரமிட்டுவுருக்கிநன்றாய் - தூடிலேன்லிங்கமதுரெண்டுபோட்டு துணையாகக்காரமிட்டுமணிபோலாட்டி - நாடிலேன்ரவிமதிபி விருபதுக்கொன்றீய நலமானவற்ணமதுயெட்டுத்தானே 76

## லிங்கசுத்திபஞ்சபாஷாணக்கட்டு.

எட்டாகுமேழாகும் அஞ்சுமாகும் மிதையறிஞ்சு அஞ்சுவகைலோகத்தூட்டக் - கட்டாகுமுறையாகும் வேதையாகுங் கைவிட்டுப் போகாதுவுப்புக்கப்பா - நெட்டாகுந்தூரவுமாங்கிட்டவாகும் நிலைநிற்கும்வேதையிதில் பயமோயில்லை - மட்டாகுந்தூரமுமாயிரும்பின் வேதை மார்க்கமின்னஞ்சொல்லுகிறேன் கேளுகேளே 77

## செப்பு வெங்கலமாகி களங்கமாவது.

கேள்ப்பாதாளகத்தில் காரங்கூட்டிக் கெடிபாகயிடைக்கிடை தான்செம்பிலீய - நாளப்பாரசத்தையெல்லாஞ்செம்புவுண்டு நலமானவெங்கலம்போல்தகர்ந்துநிற்கும் - வாளப்பாயிந்திடைக்குத் தங்கமூட்டி வாங்கிநின்றுஉருகையிலே நாகமூட்டு - வேளப்பாயிந்திடைக்கு வீரம்காரம் மேதிச்சுக்கொடுத்தாக்கால்களங்கமாமே 78

## அயமுருக்கலிங்கக்களங்கு.

களங்கத்தைவெள்ளிபத்தில்யீந்தாயானல் கண்டிடுமேதிசைமாத் துக்கருதிப்பாரு - களங்கத்தைக்குடவனிலே தாக்கினுக்கால் கைமேலே ஆறேழுகாணுங்காணுங் - களங்கத்தை வெள்ளிசெம்பு யிரும்பிலீய க் காணுமேயெட்டரைதான்கருதிப்பாரு - களங்கத்தைக்காந்தத்தில் உருக்கிக்காட்டக்கண்விட்டுத்தங்கமுமாங்கண்டுகொள்ளே 79

## களங்குபார்.

கண்டுசொல்வேன்கெவுரிதன்னைக்காரியத்துள்ளே காட்டினுயி டைக்கிடைக்குயீயங்கட்டும் - விண்டுசொல்வேன் தங்கத்தில் யீயங் தாக்கி விளங்கியதில்காரமொடு வீரம்போட்டு - ஒன்றுசொல்வேன் ளங்காகும்செம்பிலீய உத்தமனையேழரையாமூணிப்பாரு - பண்டு சான்னகெவுரியுடகளங்குதன்னைப் பார்க்கவஞ்சுலோகத்திற்பழுக்கு தானே 80

## தாளகக்களங்கு.

பழுக்கயின்னம்வகைசொல்வேன்கேளுகேளு பாங்கானயிரும் பொன்றுதங்கமொன்று - தளுக்கெனவேயுருகும்பபோ நாகமொன் று தாக்கதிலேசீலையொன்று தானேகொள்ளும் - அளுக்கையிலே ன்றெடுத்துரவியிலீய யப்பனேதிசமாத்தாமறிந்துகொள்ளு வழுக் கெனவும்போகாது காவிக்கப்பா மாத்தேறிவர்ணமுமாம் புடத்திற் றனே. 81

## கெவுரிகளங்கு.

காணப்பாவங்கத்தில்வெள்ளையிட்டுக் கைமுறையாயுருக்க நன் றாயுடையும்வங்கம் - பூணப்பாயிந்தயெடுத்து வெள்ளியிலேதாக்கு புகழானவெள்ளியதுஉடையும்பாரு - தோணப்பாயிந்திடைக்குச் சூதங்கூட்டிச் சுகமாகஅரைத்து ஒருபுடத்தைப்போடு - வீணப்பா வல்லவிதுகுருவுமாச்சுவேதையினிச்சொல்லுகிறேன்விரைந்துகேளே

## சீலைக்களங்கு.

விரைந்துவங்கமுருக்கையிலே நூத்துக்கொன்று மேவியதோர் குருப்போடவெள்ளியாகுங் - கரைந்துநின்றநவலோகம் வெள்ளியா குங் கல்முதலாய் மண்ணோடு வெள்ளியாகுந் - திரைந்துநின்றயெலு ம்புமுதல்வெள்ளியாகுந் திசமாத்தேயிருபத்துஅஞ்சுமாத்து புரைந் துநின்ற கந்தையைப்போல் சரிகையோகம் போக்கறியேன் கோடி கரைபோக்குத்தானே 83

## பூரர்.

போக்கான கவரெல்லாமேதாலாச்சு புகழான சவுக்காரச்சுண் ணத்தாலாச்சு - வாக்கானமனமெட்டாநினைவுமெட்டா வாய்திறந்து பேசுதற்குநாவுமெட்டா - தாக்கானசவுக்காரச்சுண்ணத்தாட்டு சுதா சிவனுங்காணுமல்தயங்கிப்போனர் - நாக்கானசரசுவதியுந் தோத்தி ரமேசெய்தாள் நலமானபூமியுடநாதந்தானே 84

தானென்றவழிலேயொன்று சொல்லக்கேளு சா்தகமாய்லகுவா கத்தானேசொல்வேன் - வானென்றவெய்யலுக்குள்பூமிநாதம் வரை வரையாய்ப்பொங்கியது பொலிந்துநிற்குங் கோனென்ற சுண்ணம்பு கடுங்காரமெத்தக் கொள்கிப்பார்மஞ்சளிலே சிவந்துநிற்கும் வேனெ ன்றபங்குனியுஞ்சித்திரையும்ரெண்டில் வெகுசுறுக்குவெகுசுறுக்காய் காணுங்காணே. 85

## நாளறியவழிலே.

காணப்பா பூனீறு பதக்குவாரி கரைத்தகல்சுண்ணம்புதண் ணியிலேபோட்டு - பூணப்பாயிதைக்கரைத்தபாண்டத்துள்ளே புக ழானகல்லுப்புப்படியோபோட்டுத் - தோணப்பாஅடுப்பேத்தியெரி த்துநன்றாய்ச் சுவறியதுகுழம்பானபதத்தில்கேளு - ஊணப்பாவீர மொருபலந்தான்போட்டு ஒக்கவதில்வெள்ளையிருபலந்தான்போடே

போட்டெடுத்துபதத்தோடேவில்லைதட்டிப் புகழாகவுலரவிட் டுக்கடுங்காரமேத்தி - ஆட்டெடுத்தசுண்ணம்பில்புடத்தைப்போடு அப்பனேவீரத்தில்தாக்குரெத்தங் - கூட்டெடுத்த விடங்களெல்லாந் தீப்பட்டுவேகுங் கூறுதேசவுக்காரச் சுண்ணமாச்சு - மூட்டெடுத்த சாக்கோடு அறுபத்துநாலு மூதண்டஉபரசங்கள்சத்துமாமே 87

சத்தொன்றுசூதமொன்றுதங்கமொன்று தாக்கிடவேசெந்தூரக் களங்கமாகு - மத்தொன்றுமில்லையப்பாயிதிலேவேதை வாய்திறந் துபாடுதற்குபனையோயில்லைக் - கொத்தொன்றசவுக்காரக்கொத்தை த்தூக்கக் கும்பிட்டுவாத-முன்னேகைகட்டிநிற்கும் - விக்தொன்று சத்தொன்று சூதமொன்று மேவிபிதிற்கோடிகவ...டலாமே 88

## சவுக்காரவிபரம்.

ஆடலாஞ்சத்தாலேகாயசித்தி அப்பனேலோகத்தில்கவனசித்தி ஆடலாமண்டாண்டந்துளைந்துயேறி ஒருவழியோஒருகவறோ ஊணி ச்சொல்ல - நாடெல்லாமாடுகிறவாதமென்ன நலமானவண்ணனைக் கேளுகேளு - வீடெல்லாம்பொன்னுகும் வெள்ளியாகும் வேதை யின்னஎட்டுவகைவேதைதானே 89

## எச்சரிக்கை.

இதில் 16-வது பக்கம் நாளறியவழலை என்று வைப்புசவுக்காரம் 86-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சுண்ணும்பு, ஜலம்,அளவு சொல்லவில்லை. அதற்காக போகர் 7000 முதல்காண்டம் 382-வது பாட்டிலும், போகர் 700-லும், போகர் நிகண்டு 1200-லும், வைப்புசவுக்காரம் செய்முறையில் அளவு, எடை, பாகம் நன்ருய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. வினையவான்களுக்கு இவ்வளவு எழுதினலேபோதும். R. M. K. V.

## வைப்புச்சவுக்காரத்திற்கும் வழலையென்றுபேர்.

## வழலை காரமேறுகிறவிபரமறிய.

வைப்புச்சவுக்காரத்தில் வீரம் வெள்ளைகூட்டினல் கடுங்காரமேறி வழலை கோடியசுன்னமாதுமென்பது.

---

தானென்றசவுக்காரத்தெண்ணைவாங்க தத்தளிப்பார்தத்தளிப் பார்சார்வுகாணர் - கானென்றயெண்ணைவிட்டுக்கழற்றினலும் கடுங் காரமிதற்குமோவ்வா தேதென்ருச்கால் - வானென்றவீரமொடுவெள் ளைகூட்டி வகையாகக்கடுங்காரமேரிச்சையா - கோனென்றகுருவேது யிதுவேஆசான் கொடியசுண்ணம்கொடியசுண்ணம்வழலைதானே

## வழலைச்சுன்னத்தால் கெந்தகம்கட்டி மெழுகாவதும் கெந்தகமெழுகால் சூதம்கட்டி தங்கஞ்சேர்த்து குருவாவதும்.

---

வழலையென்றசுண்ணமொன்றுசாரமொன்று வாகாகஅரைக்கை யிலேயிளகிநிற்கும் - நிழலையென்றகெந்தகந்தான் ரெண்டுபோடு நீட்டிநன்ருயரைக்கையிலே மெழுகுமாகும் - தழலையென்றவீரமது ஒன்றுபோட்டுத் தாக்கியிதைக்கறண்டியிலேவைத்துநன்ருய் - அழலை யென்றதீயில்வைத்து மெள்ளவூது அப்பனே மெழுகாகுமதுதான் பாரே 91

## கெந்தகமெழுகால் ரசம் வீரிட்டுச்சாகும். கட்டியசூதம் 4 தங்கம் 1 சேர்த்து குருவாவது.

தானென்ற மெழுகில்விட்டுச் சூதமூத்த சார்வானஆனையைப் போல் வீரிட்டுச்சாகும்- வானென்றசூதத்தில் மெழுகைக்கட்டி வாட் டியிதைக்கரண்டியிலே உருக்கிக்கொண்டு - கானென்ற தங்கமது நாலுக்கொன்று கலந்துருக்கிசூதமதுமணிபோல்வாங்கி - வேனென்ற கெந்தகத்தின் மெழுகைக்கட்டி விளங்கவொரு புடம்போடக் குரு வமாமே. 92

குருவாகநின்றதொரு கோசபீசங் குடியிருந்தபட்டணத்தில் நவலோகம்பொன்னாங் - கருவானகுருவோடு சவாதுகூட்டிக் கலந்துநின்ற சரக்கையெல்லாந் தொட்டுவாட்ட - மருவாகு மணியாகும் வேதையாகும் வாதமென்ற அங்கமெல்லா மிதுக்குள்ளாகுந் - திருவாகும் சித்தாகுங் குளிகையாகுஞ் செப்பரிது செப்பரிது திறந்தான் பாரே. 93

கோஜம்என்பது தங்கம் பீசம்என்பது ரசம் என்பதற்கு சட்டம்.

நோட்:- யூகிமுனி வகாரவைத்தியசிந்தாமணியில் தங்கம் கோஜம்என்றும், போகர் முப்புகாரசாரத்துரை 60-ல் ரசம் பீஜம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. R. M. K. V.

பாரப்பாயிக்குருவை புனுகிலூட்டிப் பரிசிக்கஉபரசமும் நவலோகமெல்லாம் - நேரப்பாபாஷாணங் காரசாரம் நிறைநிறையாய்ச்சுண்ணமுமாம்பரிசித்துவூத - வேரப்பாவாதத்துக் கிதுதானென்று வேதாந்தத்தெட்சணாமூர்த்திசொன்னார் - ஆரப்பாயிதின்முறையை அறியப்போனார் அறிந்தவனேரசவாதிசித்தனாமே. 94

## மால்தேவிமெழுகு அம்ருதம்.

சித்தானகெந்தகம்போல் மால்தேவிதன்னைச் சிறப்பாகமெழுகாக்கில்மெழுகாமப்பா யத்தானமெழுகெடுத்து யிரும்பு காந்தம் பாங்கான உபரசங்கள்தன்னில்ப்பூசி - நத்தானதீயிலிட்டுக் காச்சயீயம் நலமாகலவ்வொன்றில்வேதைகோடி - முத்தானமால்தேவி யாடுங்கூத்து முன்னேதுபின்னேது முகியாவாறே. 95

## மால்தேவிமெழுகால் அயத்தை நாகமாக்கும்விதமும் அயநாகத்தால் 100 தொந்தம் நாகம்கட்டும்விதமும்.

வாறானமால்தேவி மெழுகுதொட்டு வகையாக அயத்தகட்டில் பூசியூத தாறானநாகமுமா மிரும்புதானுஞ் சாத்துகிறேனிதினுடைய வேதைகேளு - வீறான அயநாகம் பலந்தானென்று விளங்கிநின்று உருகையிலேமைந்தாகேளு - கூறானயிடைக்கிடைக்கு நாகம்போட குழறியதுசட்டிப்போம்பின்னும்போடே. 96

## ஷை நாகக்கட்டில் சூதம்கட்டும் வாதஞ்சித்தி.

போடப்பானூறுதொந்தம் நாகங்கட்டும் போட்டபின்புநாகத்திற் பலந்தானென்று - நீடப்பா உருக்கையிலே பலம்சூதம்கூட்டநேராகச் சூதமிதில்நிலைக்கும்பாரு - வீடப்பாயிச்சரக்கால் வாதஞ்சித்தி இதைவிட்டால் வேறொன்று வாய்க்குமோசொல் காடப்பா அலைவானேன் வேர்தழையைத்தேடி கைகண்டவாதமென்ன வழலைதானே. 97

தாமென்றநாகரசமிரெண்டுக்கொக்கத் தாயிட்டுஉருக்கியதைத் தவளமாக்கி - வேமென்றகெந்தகத்தைரெட்டிப்பூட்டி மேவியதோர் அயக்குப்பிக்குள்ளேபோட்டு - பாமென்றமதுவைவைத்து ஈசானத்தில் பாங்கானவயிரவனைப் பூசைபண்ணி வாமென்றமணித்தாயைப் பூசைபண்ணி வாகாகஅடுப்பேத்தி யெரித்திடாயே. (தாய் என்பது தங்கம்.) 98

## அயநாகத்தால் கட்டிய நாகம் 1, ஷை நாகத்தால் கட்டிய ரசம் 1, தங்கம் 2, கெந்தகம் 4. சேர்த்து செந்தூரமாக்கி ஷை செந்தூரம்சாப்பிட காயசித்தியாகும். கற்பாந்தகாலம் வாழலாம் எனல்.

யெரித்திடவேகெந்தகத்தின் தைலமுண்டு யிதமாகசெந்தூரமாகும்பாரு - அரித்திடவேபணந்தூக்கு மண்டலந்தாகொள்ளு அருணனைப்போல்காயசித்தி யாகுந்திரேகம் - பொரித்திடவே நவலோகம் நூத்துக்கொன்று பொன்னுக்குப்பொன்னாகும் புகழ்ந்துபாரு - மரித்திடவேயெடுத்தசடங் கற்பாந்தகாலம் வைத்திருப்பான்வாதியென்றுல்மைந்தாகாணே. 99

காணப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கனகமொடு அயநாகஞ்சரியாய்க்கூட்டி - பூணப்பாயிதுவொன்றுசெம்புபத்தில் புகழாகச்சேர்த்துருக்கி யெடுத்துக்கொண்டு-தோணப்பா ‡சமனாகவெள்ளிசேர்க்கச் சுகமாகபத்தாகும்ஆணியில்லை - ஊணப்பாஇன்னமிதில் கருவைச்சொல்வேன் வுத்தமனேஅயனாகத்துண்மைகேளே. 100

‡ ஒருஏட்டில் ரசநாகம் வெள்ளிசேர்க்க சுகமாகபத்தாகும் ஆணியில்லை என்றிருப்பதால் ரசம் நாகம் வெள்ளியிடை சொல்லவில்லை. மற்றோர் ஏட்டில் சமனாக வெள்ளிசேர்க்க சுகமாக பத்தாகும் ஆணியில்லை என்றிருப்பதால் [redacted] சரி. ஆர். எம். கே. வேலுசாமி, வைத்தியர், பழநி.

உண்மையென்றஅயநாகம்ஒன்றுக்குள்ளே வூட்டுவாய் ‡ரசமிதில் பத்துத்தானும் - தண்மையென்றதங்கமிதில் ரெண்டுகூட்டு சாரானசெம்பிலேயிருபதாட்டு - வண்மையென்றவெள்ளியிலேநாற்பதாட்டு வாகாகஉருக்கியிதைவூதினக்கால் - நுண்மையென்றபொன்னதுவும் பத்துமாத்தாம் நெடிக்குள்ளேசெய்கிறவாதமாமே. 101

‡ 101-வது பாட்டு முதல்வரியில் ரசம் என்று ஒருஏட்டிலும் சாரம் என்று ஒருஏட்லும் இருக்கிறது. ரசம்என்றஏடேசரி. R. M. K. V.

ஆமப்பாயிதைப்போலே பதிமடங்குமாடும் ஆச்சரியங்காந்த மதுகாகமானுல் - ஓமப்பாவாசனைக்குச்சூதஞ்சாகு முத்தமனே காய சித்தியோகசித்திமெத்த - சோமப்பாலுண்ணிவிக்குங் குண்டலி யைத்தூக்கும் சொற்பெரியவாசியொடுமவுனமொன்றும் - நாமப்பா கண்டபடியிந்தக்கற்பம் நலமாக மாத்திதுக்குளிருபத்தஞ்சே. 102

## மனேசிலைமெழுகால் உபரசங்கள் செம்பாவது.

அஞ்சானசிலையினுடமெழுகைத்தொட்டு அந்திடைக்குச்சவ்வீ ரங்கூடக்கூட்டி - பஞ்சானநவலோகம் பூசிக்காச்ச பரிசனத்தே வேதையுமாம்பாருபாரு - மிஞ்சானஉபரசத்தில் பூசிக்காச்ச விளங்கி யமேதார்உபரசங்கள்செம்புமாகுந் தஞ்சான பாஷாணம் பூசிவாட்ட தனித்தனியே செந்தூரமாகும்பாரே. 103

செந்தூரமொவ்வொன்றில் வேதைச்சொல்ல செகமனேத்துங் கொள்ளாது செப்பமாட்டேன் - செந்தூரமொவ்வொன்றில்காயசித்தி சிவப்பாகுங்கருப்பாகும் வெளுப்புமாகும் - செந்தூரமொவ்வொன் றில்தொந்திச்சேற செகமெல்லாஞ்செந்தூரமயமாய்ப்போகுஞ் - செந் தூரஞ்சிலைமெழுகா லானதெல்லாந் திசிமாத்துக்கப்பாலாந் தெளிந்தி டாயே. 104

## உபரசச்செம்பால் தங்கச்செம்பு.

தெளிந்திட்டஉபரசத்தின் செம்பினுலே செப்பரிதுதங்கமுதல் செம்புமாகும் - களிந்திட்டநவலோகஞ்செம்புமாகுங் கைமுறையாய் நூறுதொந்தங் கடந்துயேறும் - நெளிந்திட்டஒவ்வொன்றில் கவ ரோகோடி நிலையேது தலையேது நினைவுமேது - ஒளிந்திட்ட சரவேதி நாதத்தாட்டு வொன்றுலுமொடுங்காமலோடுந்தானே. 105

ஒடுங்காமலோடுதற்கு வாதிக்கப்பா உத்தமனே பாய்மரமுங்காத் தூப்போல - நடுங்காதவாருதியில் நொடிக்குக்காதம் நலமாகஓட்டி வைக்கவாதங்கேளு - அடங்காதவுலசத்தில்வாதம்பார்த்து ஆச்சுதில் லை யென்றதொருமோடர்க்கெல்லாம் - படுங்காதையில்லாமல் தொட் டதெல்லாம் பழுப்பதற்கும் பார்ப்பதற்கும் பரிசுகேளே. 106

## சரக்குகப்பல்.

## 8 வகை வேதையின்பேர்.

பரிசமொடு,சத்த,முதல்தூப,தீபம், பாங்கானசந்தான, சேர்வை, யோடு - தெரிசின,முதல்வாசனையா, மெட்டுவேதை சேர்ந்ததிலே மெட்டெட்டாய் பிறிந்ததெல்லாம் - வரிசையொடு ஆடுறதுயெத்தா லென்றல் மகத்தானசவ்வீராசனுலே - புரிசமுடனிதைவைத்து யெடுத்துஆடு போக்கொன்றுந்தப்பாது பொய்போகாதே. 107

## சவ்வீரவைப்பு.

வீரவைப்புவைக்க சூதத்தை மாவாக்கி சேர்க்கவேண்டும்.

சூதத்தைமாவாக்கவேண்டியுநற்துவேண்டிய திராவகம் செய்முறை.

---

பொய்யாமற்சவ்வீர வைப்பைக்கேளு புகட்டுகிறேனுதாக்கள் புகழ்ந்துமெச்ச - கையாமல் சீனமொரு பலந்தான்பத்து கலரிதிலே வெடியுப்புரெண்டுபத்து - நையாமல் சவுட்டுப்புமூணுபத்து நலமாகயிதுமூன்றுந் திராவகத்தைவாங்கி - தையாமல்சூதமொருபலந்தானெட்டு தாக்கியதில் கிண்டிடவே தவளமாமே. 108

## சவ்வீரவைப்புக்கு சூதமாவில்சேர்க்கவேண்டிய சரக்குவிபரம்.

தவளத்தில்கல்லுப்பு பலந்தான்ரெண்டு சாதகமாய் வெடியுப்பு பலந்தான்ரெண்டு - கவளத்தில் சீனமொருபலந்தான்ரெண்டு கலந்திடுவாய் துரிசியொருபலந்தான்ரெண்டு - தவளத்தில் பூனீறுபலந்தான்ரெண்டு அன்னமென்றபேதியதுபலந்தான்மூன்று - துவளத்தில்சாரமொருபலந்தான்நாலு கூட்டியெல்லாம் பொடித்துஒரு குப்பிக்கேத்தே. 109

## வீரம் 2 வது மடக்கு.

ஏத்தியிது வாலுகைமேல் தினந்தான்மூன்று யெரித்திடுவாய் முத்தீயும்பதங்கமேறும் - போத்தியிந்தச்சவ்வீரந் தேங்காய்போல புகழாகயிறுகிநிற்கும்பூட்டக்கேளு - மாத்தியிதுயெண்பலந்தானிறுத்துக்கொண்டு வாகானகல்லுப்பு வெடியுப்புப்படிகி- தோத்தியிது பூனீறுதுரிசியோடு சொன்னதெல்லாம் வகைக்கு ரெண்டு பலந்தான் கூட்டே. 110

கூட்டதிலேசாரமொரு பலந்தானலு கூறன்னபேதியது பலந்தான்மூணு - மூட்டதிலே ஒன்றாகப் பொடித்துக்கூட்டி மூதண்டக் குப்பியிலேயேத்திநன்றாய் - ஆட்டதிலே வாலுகையிலடுப்பிலேற்றியாறுமல்ரெண்டுநாள்தீயைமூட்டி - நீட்டதிலேபதங்கமது யிறுகியேறி நிற்குமப்[redacted]குநிற்கும்பாரே. 111

## இப்படி 3 முறை மடக்கினல் கொச்சிவீரம். 5 முறை செய்தால் கோடாசோரிவீரம்.

பாரப்பாமும்முறையில் கொச்சியாகும் பாங்கானஐமுறையில் கோடாசோரி - நேரப்பாயிதுவல்லோ வீரராசன் நேரறிந்துசெய்பவனேவாதயோகி - ஊரப்பாசுடுவார்கள் வாதமாடு மொன்றுமில்லையென்பார்கள் சாத்திரத்தைப்பார்த்து - தேறப்பாஓடுறதுக் காதியென்ன சிறுவடமுஞ்சுன்னரெண்டும் வீரந்தானே. 112

## கோடாசோரிவீரமே வாதத்துக்கு ஆதியெனல். இந்த வீரவைப்பு வைக்கத்தெரியாவிடில் வாதமென்று நினைக்கவேண்டாம்.

வீரமன்றோ வாதத்துக்காதியாகும் விடுபட்டமதயானையுபாசத்
தைத்தின்னக் - காரமொன்றோ, சாரமொன்றோ துரிசியொன்றோ,
கஞ்சவடோ, பூனீறுப்பதொன்றோ - பாரமன்றோ சூதத்தில்
சேர்த்துக்கொண்டு பண்பாகவீர்ப்பன்னனுகித்தப்பா - சாரமன்றோ
வாதத்திலிந்தவீரஞ் சமைக்கறியாமோடருக்கு வாதம்போச்சே. 113

போச்சென்றுவிட்டாக்கால் வாதம்போச்சு புகழானயோகமு
தல் ஞானம்போச்சு வாச்சென்றநூலோடு குருச்சொல்லும்போச்சு
மகத்தானகுளிகைமுதல் காயசித்திபோச்சு - மூச்சென்றவாசிமுதல்
லெட்சயங்கள்போச்சு மூதண்டங்கிழிந்தோடும் மனமும்போச்சு - நீச்
சென்றசமுசாரவலையிற்சிக்கி நிலையாமுற்கிரிகையிலேநிற்பார்காணே.()

## குரு, சத்து, சுண்ணும்புக்கிதுவே யாதியெனல்.

காணப்பாவீரத்தினுண்மைகேளு கைவிட்டசாரணையா முபார
சத்தையெண்ணும் - பூணப்பாசுண்ணும்புக்கிதுவேயாதி புகழான
குருவுக்குஞ்சத்துக்குமாதி - ஆணப்பாசெந்தூரக்களங்குக்காதி ஒடு
கிற தூரமிதுஉசத்திமெத்த - வீணப்பாயிதைவிட்டால் வாதமேது
வேதாந்தச்சின்மயமாங்குருவின்சொல்லே. 115.

சொல்லானசாத்திரங்கள்மெத்தவுண்டு தொகுப்பான அறுபத்து
நாலுமாபுக்குள்ளே வில்லானசரம்போலேசீஷவர்க்கம்மேதினியுங்கொ
ள்ளாதுமலைகொள்ளாது - வல்லானசாத்திரங்கள் வளவிடவோவென்
றால் வாருதியும்பத்தாது வகைசொல்லாது மல்லானசாத்திரத்திலிந்த
வீரம் வைத்திலரே னுதக்கள்,வைத்திட்டேனே 116

## பூமிநாதமேபூநீர் காரமிது சாரமிது சுண்ணம்எனல்.

வைத்திட்டதேதென்றால் மைந்தாகேளு வாகாகக்குருவானபூமி
நாதம்-வைத்திட்டகுருவேதுவென்றாயானு லப்பனேபூனீறுபொங்கிப்
பூத்துக் - கைத்திட்ட பூப்போலேநிற்குமப்பா காரமிதுசாரமிது சுண்
ணஞ்சுண்ணம் மொய்த்திட்டபூனீறைவாரிக்கொண்டு முறைமுறையா
யாடுகிறதுரையைக்கேளே. 117

கேளப்பாசாறுவாராத் தழைகளெல்லாங் கெடியாகப்பிசைந்த முத்திப்பிழியத்தண்ணீர் - வாளப்பாபால்வகையில் பூனீறுபோட்டு வகைவகையாய் பால்ச்செடியைச் சுட்டசாம்பல் - வேளப்பாகரைத்த தனையுப்பாய்க்காச்சி விளங்கியந்தப்பாலுக்குள் கூடப்போட்டு - நாளப்பாயிருந்துடனே முறிந்துதண்ணீர் நமனுக சரக்கையெல்லாங் கொல்லுந்தானே. 118

**சதுரகள்ளிப்பாலில் சதுரகள்ளிசுட்டசாம்பலைக் காச்சியஉப்பும், பூநீரும் போட்டு முறிந்தநீரை வெள்ளைப்பாஷாணத்துக்கு சுருக்கிடவேனல்.**

சரக்கிலேகடுஞ்சரக்கு மெதுச்சரக்குமுண்டு சாதகமாய்ப்பாடமென்றால் பனையோயில்லை, - அரக்கிலேதீப்பட்டாப்போலேவேகு மப்பனேவெள்ளையுட குணந்தான்காணுங் - தரக்கிளேசதிரக்கள்ளிப்பாலாம்நீரைத் தாக்கியந்தவெள்ளைக்குச் சுறுக்குப்போடு - நிரைக்கிலே பூனீறுஞ்சாரகாரம் நேராகஅரைத்துமேல்கவசங்கட்டே. 119

கட்டியதைக்கரியோட்டில் வாட்டுவாட்டு கைமுறையாய்வெள்ளையதுயிறுகிக்கட்டும் - முட்டியதோர் செயதுரிசிகாரங்கூட்டி முறிந்துருகும் வெண்காரம்கூடக்கூட்டி - ஒட்டியிதைகவசமிட்டு தனியேவாட்டு உத்தமனேவெள்ளையது உருவாய்க்கட்டும் - தெட்டியிந்த வெள்ளையொன்றுவங்கம்ரெண்டில் சேர்த்துடனேநீர்வத்திக் தெறிக்குந்தானே. 120

## வெள்ளிவித்தை.

தெரித்ததொருவங்கத்தை வெள்ளிரெண்டில் சேரப்பாயிதுவொன்று அதுவுந்துளாம் - மறித்ததொருவெள்ளியிடை சூதம்போட்டு மாட்டுயிந்தரெண்டிடைக்குமுந்தும்வெள்ளை - செறித்ததொருமுன் பாலினீரைவார்த்து நேராகவரைத்துநன்றாய்யுருட்டிக்கட்டிப் பொறித்ததொருஉண்டையின்மேல்அப்பிறகங்கட்டிப் பொங்கியதோர்வெண்காரமேலேபூசே. 121

பூசியிதின்மேலைந்துசீலைசெய்து புகழாக உண்டையின்மேல் மணலைக்கொட்டி - மாசியதின்மேலனுகாயீசானத்தில் வயிரவர்க்குப் பூசையிட்டுப்புடத்தைப்போடு - காசினியோர்மெச்சுதற்கு குருவேயாகும் [illegible]பாவங்கத்தில் நூத்துக்கொன்று - வேசியென்றரசவாதவெள்ளிவித்தை வேதையென்னபதிஞருமாத்துத்தானே. 122

மாத்தானவெள்ளியுமாஞ் செம்பிலூட்டு வாகானயிரும்பிலிட வெள்ளியாகுங் - கொத்தான பித்தளைவெண்கலமும்வெள்ளி குலாவியதோர் காந்தமுதல்வெள்ளியாகும் - எத்தமது இறைச்சாப்போல் வெள்ளிக்கேணி யிறைக்கிறைக்கத் துலையாதுவெள்ளிவித்தை ஊத்தான ஊத்தைப்போலிக்குருவைத்தொட்டு ஒருகோடிசூதத்தையடக்கலாமே. 123

மடக்கியதோர்சூதத்தில் சுன்னங்கோடி மகத்தான குருக் கோடிகளங்குங்கோடி - மடக்கியதோர்சூதத்தில் சுரபிகோடி மகத் தான தம்பனமாங்குளிகைகோடி - மடக்கியதோர்சூதத்திற் செந் தூரங்கோடி மலையிலேயாடுகிற சகடுகோடி - மடக்கியதோர்சூதத் திற்தீபதூபம் வாகான அஷ்டகர்மம்மாடலாமே. 124

## லிங்கக்கட்டு.

ஆடவேயமவித்தைக் கருவைச்சொல்வே னப்பனேயிலைக்கள் ளிப்பாலுக்குள்ளே. ஆடவேமுன்போலே பூனீறும்உப்பு மொக்கயிட் டுமுறிந்தநீர் வாங்கிக்கொண்டு நாடவேலிங்கத்திற்சுருக்குப்போட்டு நலமாகமுன்போலேகவசமாட்டி - தேடவேயிதையெடுத்து தூரிசிசு சாரம் செப்பரியஅப்பிரகங் காரங்கூட்டே. 125

இந்தப்பாட்டில் உப்புஎன்பது இலைக்கள்ளி சமூலம் சுட்டசாம்பல் 1 படிக்கு 4 படிஜலம்விட்டு தினம் கலக்கிக்கலக்கி 3 நாள் வைத்திருந்து 4 நாள் கலக்காமல் தெளிவை இருத்து வடிகட்டி இரும்புச்சட்டியிலிட்டுகாச்ச உப்பாகும். இந்த உப்பும் பூநீரும் இலைக்கள்ளிப்பாலிலிட முரிந்து நீரா கும் அதை லிங்கத்தை சுருக்கிடவேனஅரியவும். 118 வது பாட்டில் இக் கருத்தை சொல்லப்பட்டிருக்கிறது. 119 வது பாட்டுக்கும் விரிவான எட் டிங்வைத்திருக்கிறேன். R. M. K. V.

கூட்டியிந்தமூன்றையுந்தான் முன்பாலிலாட்டிக் குறையாமலிங் கத்திற்கவசங்கட்டி - மாட்டியிந்தலிங்கத்தைக்கரியோட்டில்வாட்டி வாங்கையிலே பவழம்போலுருகிநிற்கும் - நீட்டியிந்தலிங்கத்தை முன்பாலிலாட்டி நேரானவீரத்தின்மேலேகட்டி - மூட்டியந்தக்கரி யோட்டில்வாட்டக்கேளாய் முத்துப்போல்வீரமுள்ளே மணியுமாமே.

மணியானவீரமொன்று தங்கம்நாலில் மாட்டியொருமணியாக வாங்கிக்கொண்டு-கணியானதாள்கமுந்தூரிசுபூரங்காணப்பாபுனுகோடு வீரங்கூட்டித் - தணியானதங்கமணி மேலேபூசிச் சாதகமாயேமுசுன் னக்குகையில்வைத்து - அணியானசில்லிட்டுச் சீலைசெய்து அப்பனே கனக்கவொருபுடத்தைப்போடே. 127

## தங்கசுன்னத்தால் ரசக்கட்டு.

போடையிலேயீசானம்பூசைபண்ணிப் புகழாகவாரினபின் னெ டுத்துப்பாரு - நாடையிலேதங்கமொடு வீரம்ரெண்டும் நலமாக மல்லி க்கைப்பூப்போலேநிற்கும் - ஆடையிலேவாசனைக்குச்சூதங்கட்டும் அ டுக்கடுக்காயாடுகிற வரிசைகேளு - ஓடையிலேயிக்குருவில் சவாது கூட்டி யொருபொட்டாலுருக்குகிறவரிசைகேளே. 128

வரிசையென்னசரக்கையெல்லாந் தொட்டுத்தொட்டு மணிமணி யாயுருக்கையிலேயுருகியாடும் - வரிசையென்னொவ்வொன்றில் நவ லோகவேதை மக்களேஉபரசத்திலொன்றிற்கோடி - வரிசையென்ன கடுஞ்சாரக்காரம்பூரம் வாசனைக்குமெண்ணத்திலேவெகுபோக்குமாடும் - வரிசையென்ன ஒவ்வொன்றிற்கோடாகோடி வாய்திறக்கப்போகாது யேமப்போக்கே. 129

தங்கசுன்னத்தில் புனுகுவீரம்கூட்டி நவலோகமொன்றில் பூசிப்புடமிட பொருமிவெந்து சுண்ணும்பாகுமெனல்.

யேமமென்றகுருவாலே சுண்ணஞ்சொல்வேன் யேமதென்றல் குருவோடேபுனுகுவீரம் - சேமமென்றநவலோகம் பூசிப்போட்டத் திறமாகப்பொருமிவெந்துசுண்ணும்பாகும் - தாமமென்றசரக்குகளில் பூசியூத தவளம்போலநீறியெல்லாஞ்சுண்ணும்பாகு - மோமமென்ற லுபரசத்தில்பூசியூத உத்தமனே உபரசங்கள்சுண்ணமாமே. 130

## நவலோகசுன்னமொன்றில் சூதம்கட்டினுல் 8-வகை ரசவாதமும் சித்திக்குமெனல்.

சுன்னமென்றநவலோகச் சுன்னந்தொட்டு துடர்ந்தேரவீரமிட் டுச்செந்தூரங்கோடி - சுன்னமென்றநவலோகங் காரங்கூட்டிச் சூட் டிடவேகளங்கமது தில்லையாதப்பா - சுன்னமென்றலோகத்தில் சூதங் கட்டில் தூமமுதல்சந்தானமெட்டுமாகுஞ் சுன்னமென்றவொன்பதிலே சுன்னங்கோடி தூக்கினுல்சங்கிலிபோல்துடருந்தானே. 131

## சூதம் அடைபோல் கட்டுமெனல்.

துடர்ந்தேறச்சாரமொடுலோகச்சுன்னம் சூட்டையிலேசெலமா குஞ்செயநீரப்பா - அடர்ந்தேறுசெயனீரில்சூதமிட்டுக்காச்சில் அடை போலக்கூப்பிட்டுவில்லையாகும் - நடந்தேரசூதத்தில் குளிகைகோடி நாடெல்லாஞ்செந்தூரச் சுன்னங்கோடி - கடர்ந்தேறக்காயசித்தி கனகங்கோடி கரையில்லைதுகையில்லை கண்டிலேனே. 132

கண்டிலேன்சரக்கான சுன்னமொன்றில் காட்டப்பாசாரத்தைச் செயநீராகும் - மொண்டிலேன்வீரமிட்டால்செந்தூரமாகும் உத்தம னேலோகமிட்டால் களங்கமாகுந் தண்டிலேன்சவாதோடுகாரம்பட் டால் சரக்கெல்லாமுருகிநின்று வேதைகோடி, - பண்டிலேன் புனு கோடுவீரம்பட்டால் பலபலவாஞ்சரக்கெல்லாஞ்சுண்ணமாட்டே.

ஆடலாமுபரசத்தின்சுன்னந்தொட்டு அளவேதுகரையேதுசங் கமேது - ஒடலாங்கெவனமுதல்காயசித்தி போட்டினுலொவ்வொன்று ஞ்சங்கவரையோடும் - நீடலாஞ்சாரமுதல் காரபூரம் நேராகவிரிக்க வென்றுலுலகம்பத்தா - காடெலாம்பொன்னுகு மலைபொன்னுகுங் கரைகண்டோமென்றவர்கள்கண்டிலேனே. 134

## பூனீர் செயநீரில் வெங்காரக்கட்டு.

கண்டிலேனென்றதுறை கோடாகோடி கைமுறைதான்லகுவாகச்சொல்லக்கேளு - ஒண்டிலேன்சாரமொடுபூனீர்கூட்டி உத்தரைக்கச்செயநீராம் நீருக்குள்ளே - தண்டிலேன்புழுகோடு வீரம்பூரம் தாக்கியிந்தச்செயநீரில் கலந்துகொண்டு - மண்டிலேன்காரமிதில்தோச்சுப்போடே மகத்தானசுண்ணும்புங்கட்டுமாமே. 135

## வெங்காரமெழுகால் துருசுகட்டு.

கட்டியதோர்வெண்காரஞ் சாரங்கூட்டிக் கலந்தரைத்துவைக்கையிலேமெழுகுமாகும் - வட்டியதோர்முன்னீரில் துரிசுதோய்த்துவுரப்போடுவெய்யிலிலேதினந்தான்பத்து - முட்டியதோர்துரிசியின்மேல் வெண்காரமெழுகை மூட்டியிதையுலரவைத்து ஊஷரத்தினுள்ளே - மட்டியிதைபாண்டத்தில் கீழ்மேலிட்டு வாகாகஅடுப்பேத்தியெரித்திடாயே. 136

## அயச்செம்பு துயரம்போம்.

அடுப்பேத்திசாமமொன்று யெரித்தபின்பு ஆறவிட்டுநீபாருதுரிசுகட்டும் - அடுப்பேத்தியித்துரிசுபலந்தானென்று வாகானதுத்தமொன்றுசமனாய்க்கூட்டி - அடுப்பேத்திமுன்னுருக்கியிரும்புரெண்டுமூட்டியதில்காரமொன்று ஒக்கக்கூட்டித்தீ - தொடுப்பேத்திக்குகையிலிட்டுருக்கநன்றாய்துலக்கியதோர் செம்பாகுந் துயரம்போமே. 137

## அயச்செம்பில் வேதை.

துயரம்போம்அயச்செம்பைக்கண்டாலைய்யா சூட்டதிலேசமனாகதங்கந்தன்னை - துயரம்போந்தகடாக்கிப்பூசக்கேளு சுத்தியாஞ்சூதமொடுகெந்தகமுங்காரம் - துயரம்போமுலைப்பாலா லரைத்துப்பூசிச்சூழவொருவோட்டிலிட்டுப் புடத்தைப்போடு - துயரம்போமிதையெடுத்துவெள்ளி பத்திலீயச் சுகமாகத்தங்கமுமாஞ்சூட்டிப்பாரே.

## தங்க அயச்செம்பு செந்தூரம்.

அயச்செம்பு 1, தங்கம் 1, நாகம் 4, சூதம் 2, கெந்தி 10,
சவ்வீரம் 1, கட்டிய வெங்காரம் 1.

சூட்டிப்பார் அயச்செம்பிலின்னஞ்சொல்வேன் செம்பானஅயச்செம்புசுறுக்குவேதை - நாட்டிப்பாரயச்செம்புபலந்தானு நலமானதங்கமதுபலந்தானென்று - மூட்டிப்பாரிதினோடுநாகங்கேளு முன்னிடைபோல்நாலுபலங் கூடக்கூட்டி - ஓட்டிப்பார் சூதமது பலந்தான்ரெண்டு ஒக்கஅந்தநாகத்தில் தொந்திப்பாயே. 139

தொந்தித்துநாகரசம் வேறேவைத்துச் சுகமாகத்தங்கமொடு அயச்செம்புங்கூட்டி-அந்தித்துயுருக்கிரெண்டும் பொடியாய்ப்பண்ணி அதினேடு முன்நாகரசமுங்கூட்டி - மந்தித்த கெந்தகந்தான் பலந் தான்பத்து மைந்தனேசவ்வீரம் பலந்தானென்று- பந்தித்துமுன்கட் டுக்காரமொன்று பாச்சியொன்றாய் அயக்குப்பிக்குள்ளேபோடே.

போட்டிதனைவாலுகையின் மேலேவைத்துப் புகழாகத்தீயெரித் துப்பதத்தைப்பாரு - ஓட்டிதனைச்சிலாக்கைவிட்டுக் கிண்டும்போது உத்தமனேகதிர்முனையில்காகாப்புக்காணும்- மூட்டிதனைப்பதமென்று தீயைமாத்து மூதண்டநிறுவாணிவருவாளங்கே - கூட்டிதனைப்பரிம ளமும்வஸ்துசுத்தி கொத்தாகப்பராபரையைப்பூசைபண்ணே. 141

பூசித்தால் வைத்தகுப்பி தங்குதங்கும் போடலாம்வேதை யைத்தான்கோடாகோடி - நேசித்தாலவளைப்போ லீவாரில்லை நிஷித மென்றால்வாதமெல்லாம் நிற்மூலமாச்சு - ஆசித்தால்வாதமுன்னை அமடுபண்ணும் அண்ணைக்கண்ணுடுகொண்டாலேதுமில்லை - மாசித் தால் சித்தர்க்கும் ஞானிகட்கும் மக்களேவாதம்விட்டால் ஞானம் போச்சே. 142

## தங்கஅயச்செம்பு செந்தூரம்சாப்பிட வாசிகட்டும்.

## ஞானகுருவாவாய் நவலோகம் தங்கமெனல்.

போகாமல்ஞானமது கொளுந்திட்டேறப்பொன்னேடுமயச்செம் புசெந்தூரத்தைச் - சாகாமல்தினந்தோறும் பணந்தானுண்ணுசரி யிறதோர்வாசியெல்லாமுள்ளேகட்டும் - நோகாமல்மண்டலந்தானுண் டாயானல் நோவில்லைதேகமதுபொன்போலாகும் - வாகானசெந் தூரம்நூத்துக்கொன்று மாட்டினல்நவலோகந்தங்கமாமே. 143

## வெங்காரம் குரு.

ஆமப்பாமுன்கட்டும்வெண்காரத்தை ஆடுதறகுக்குருவாகச்செ ய்யக்கேளு - ஓமப்பாபுனுகோடு சூதம்வீரம் உத்தமனேகற்பூரங்குரு வண்டோடு - தாமப்பாகோழியுட வெள்ளைக்காரஞ் சாதகமாய்வெள் ளூரந்தானேழுங்கேளு - காமப்பால்விட்டரைத்துமேலேபூசிக் கடுர வியில்போட்டிடவுங்குருவுமாமே. 144

## தூிருசு குரு.

குருவாகமுன்கட்டுத் துரிசுமேலே கூறுகவிதுமேழுமரைத்துப் பூசிக் - கருவாகாவியிலிட்டுக் காய்ந்தபின்பு கடியதொருபூனீருக்குள் ளேவைத்து - மருவாகத்தீயெரிப்பாய்கடிகைமூன்று வாய்திறந்துகு ருவாகுந்துரிசுபாரு - திருவாகுந்துரிசுயொடு காரம்ரெண்டும் சேர்த் தரைத்துசிமிளுக்குளடைத்திடாயே. 145

ஷை வெங்காரதுந் துருசுதுருவால் சூதம்கட்டும் பாஷாணம்கட்டும் ரவியில் அண்டம் மெழுகாதுமெனல்

அடைத்ததொருகுருப்பட்டால் சூதங்கட்டு மப்பனேபாஷாண மெல்லாங்கட்டும் - உடைத்ததொருமுட்டையிலே பணவிடைதான் போட்டு உருகவைத்தால்ரவியினுள்ளே மெழுகுமாகும் - படைத்த தொருமெழுகெடுத்து நவலோகத்தில் பரிசிக்கப்பொன்னாகும்பாரு பாரு- நடைத்ததொருபாஷாணமெழுகுபூசி நலமாகவாட்டிடவே சிவந்துபோமே. 146

## அண்டமெழுகால் சூதக்கட்டு.

சிவந்ததெல்லாஞ்செந்தூரம் நவலோகத்தூட்டச் செகமறியப் பொன்னாகுமண்டவித்தை - தவந்ததெல்லாமுபரசங்கள் சத்துமாகுந் தாய்கூட்டவெவ்வேறுவேதைகோடி - உவந்ததெல்லாமெழுகுபடச் சூதங்கட்டு முருக்கிணமாஞ்சகலமெல்லாமுருகப்பண்ணும் - அவந்த தல்லஅண்டவித்தை தொட்டதெல்லாங்கட்டு மப்பனேசாரத்தைக் கட்டக்கேளே. (தாய் என்பது தங்கம்.) 147

## அண்டமெழுகால் சாரம் தந்தம்போல் இறுகிக்கட்டுமெனல்.

கேளப்பாயிக்குருவைக்கருவாலாட்டி கெடியாக சாரத்தின்மே லேபூசி - வாளப்பாஊஷாரத்தில்வைத்துநன்றாய் வாலுகையிலேத்தி யிதைத்தீயைமூட்டு - தாளப்பாதந்தம்போலிறுகிக்கட்டுஞ் சாரத்தின் புகையடங்கித்தவளம்போலாம் - நாளப்பா சாரவித்தை யுகாந்தகாலம் நலமாகஆடுகிலுங் கரைகாணாதே. 148

## சாரவீர தங்கசெந்தூரம்.

கரைகாணாச்சாரத்துக் கிடையேவீரம் காட்டப்பா தங்கமது நாலுக்கொன்று - நிரைகாணப்பொற்றலையின் சாற்றாலாட்டி நே ராகவில்லைதட்டிச்செம்பில்வைத்து - தரைகாணப்புடம்போடு செந் தூரமாகுந் தாக்கப்பாநூத்தொன்று நவலோகத்தில் - உரைகாணப் பதினாறுமாத்துமாகு முத்தமனேஉபரசத்திலோடுந்தானே. 149

## சாரத்தின் வல்லமை.

அகஸ்தியர் திருவகம் 800-ல் 369-வது பாட்டில் சாரத்தில் வீரம்கட்டினால் பித்தளையும் பொன்னாகுமென்றும், 370-ல் சாரத் தில் துருசுசுன்னம்சேர்த்து சூதத்தில்விட்டு ஆட்ட சூதம்கட்டி மணியாகும் என்றும் 371-ல் சொல்வதையும் மருப்க்கம் கவனி யுங்கள். *R. M. K. Veluswamy, Palni.*

சாரமடாகட்டினலவனேவாதி சாக்கேல்லாம் பாண்டமடா தடியே சாரம், வீரமடாஇதினேடெ கூட்டினக்கால் மேல்லுமடா ஓடுமுதல் கல்லு மண்ணும், காரமடா கூடஇட்டாலுபரசங்கள் சத்தாங் கக்கிநீன்ற சத்துக் களில் வேதைகோடி, ஊரமடா சேந்தூரம் பூசியூதி உருக்கிடவே போன் னுதுமுறைத்துப்பாரே, என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. *R. M. K. V.*

## சாரக்குரு.

ஒடுதற்குச்சாரத்தில் குருவைச்சொல்வேனெடுங்காமலண்டாண டங்கிழிந்துஆட - ஆடுதற்குச்சாரமொன்று வீரமொன்று நலமான சூதமொன்றுபூரமொன்று - ஊடுதற்குத்தங்கமொன்று குருவண் டோடு உறவாகவெண்கருவாலரைத்துக்கட்டிக் - கூடுதற்குயேழுசுண் ணக்குகையிலிட்டுக் குமுறவொருபுடம்போடக்குருவுமாமே. 150

## சாரக்குருவில் வெண்கருச் செயநீர்.

குருவெடுத்துஅண்டத்தின்கருவில்போடு குறையாமல்பதினெ ருநாள் கையால்மத்தி - மருவெடுத்தவெண்கருவோ செயநீராகு மக் களே இன்னீரில் வரிசைகேளு - கருவெடுத்தசூதமொடு வீரம்பூரம் கைமுறையாய்ப்புனுகோடு குருவண்டொக்கத் - தருவெடுத்தசெயநீ ராலரைத்துநன்றாய்ச் சாதகமாய்த் துரிசியின்மேல் பூசிப்போடே.

## தாளக்குரு துருசுக்குரு.

போடப்பாபதினெருநாள் துரிசுதானும் பொங்கியதுகுருவா கும் பூட்டக்கேளு - ஊடப்பா துரிசிரிடை மாலின்தேவி வுத்தமனே வெள்ளையொடுசிங்கிசூதம் -கூட்டப்பா அந்திடைதான் முன்னீராலாட் டிக் குகையில்வைத்துப்புடம்போடக்குருவுமாகும் - நாடப்பாவுப ரசங்கள்நவலோகத்தில் ஞட்டிடவேனுத்தொன்று வெள்ளியாமே.

## சிவந்தகரு.

ஆமப்பாமுன்சாரக் குருவைத்தானு மளவாகச்சிவந்தகருக்குள் ளேபோட்டு - ஓமப்பாயேழுனுள்மத்தித்துநன்றாய் உருகவைக்கவெய் யலிலே $\frac{\text{தைல}}{\text{மெழுகு}}$ மாகும் - வேமப்பாபாஷாணந்துவைத்துவாட்ட வெவ் வேறேமெழுகாகுமறுபத்தினுலும் - சாமப்பாஒவ்வொன்றில்தொந் தம்நூறு தட்டுருவியேறுமொன்றில்வேதைகேளே. 153

வேதையென்னஉபரசங்கள் நவலோகமெல்லாம் வெவ்வேறேபரி சத்தில் வேதையாகும்-வேதையென்னமுன்தையிலம் சூதத்தில்சூத்த விறைத்துப்போங் காரமிட்டு ரிக்கியாட்டு - வேதையென்னமெழுகொ ன்றில் தூபதீபம் விளங்கியதோரெட்டுவகைக்கருவுமாம் - வேதை யென்ன அண்டத்தில் மெழுகுபூட்டி வெதுப்பினலண்டமுள்ளே மெழுகுமாமே. 154

## அண்டமெழுகு.

மெழுகான அண்டத்தில் காரங்கூட்டி மேலானசவாதிட்டு மேதித்தொன்றாய் - சுளுகாகச்சரக்குகளைத் தொட்டுப்போடத் தூம்பரமோயெழும்பாதுசொற்னமாகும் - நழுகாகுமண்டத்தைத் தொந்தித்தேற நாவடங்கா பாவடங்கா நானுங்காணேன் - கழுகாகும்வாசனைக்குத் துடர்ந்தாப்போல கரையில்லைவேதையொரு அண்டந்தானே.

## முன் 150-வது பாட்டிலுள்ள சாரக்குருவை செயநீருக்கி சூதம் உருக்கிக் கட்டலாமெனல்.

தானென்றசாரத்தின்குருவிைேடே சாதகமாய்மூன்றுயிடைசாரங்கூட்டி - கோனென்ற அமுரியுப்புச் சத்தேபோட்டுக் குமுறவரைகொப்பளித்துச்செயநீராகும் - வானென்ற சூதத்தில்விட்டுக்காச்சவட்டாகவில்லையைப்போலுருகிக்கட்டும் - வேனென்றபாஷாணந்துவைத்துவாட்ட மேலோடிப்புகையாமல் கட்டுந்தானே. 156

## சாரகுருசெயநீரில் உபரசங்கள் சத்தெடுக்கலாம் சகலமும் செய்யலாம்.

கட்டியதோர்சரக்குகளைத் தொந்தித்தேறக் கரையேது தூகையேது கணக்குமேது - ஒட்டியதோர் உபரசத்தின் சத்தோகோடி யுத்தமனேமெழுகுமுதல் செந்தூரங்கோடி - நெட்டியதோர்குருக்கோடி களங்குகோடி நேராகவுருக்கினமு னீத்தினமுங்கோடி - கொட்டியதோர் தேள்ப்போலே சாரவேகங் குமுறுமப்பா அண்டாண்டங்கூடத்தானே. 157

## சாரக்குருவில் சவ்வீரம், பச்சைகற்பூரம், சவ்வாது கூட்டி 7 சரக்கும்கட்ட கோடானகோடிதொழிலாடலாமெனல்.

கூடயிந்தச்சாரமென்ற குருவினோடே கூட்டப்பாசவ்வீரம்பூரந்தானும் - நாடயிந்தமூன்றோடே சவாதுகூட்டி நலமாகமத்திச்சுவைத்துக்கொண்டு - ஓடயிந்தக்கல்லுப்பு வெடியுப்புச்சீன முத்தமனே வெண்காரந் துரிசு சாரம் - ஊடயிந்தச்சூடனெடு ~~வேப்பின்~~மேலே உறைப்பாகபூசியிதை றவியிற்போடே. 158

போட்டுவைத்துவாரமொன்று தீர்ந்தபின்பு புகழாகப்பூனீறுக்குள்ளேவைத்து-மூட்டிவைத்து அடுப்பேத்திச்சாமமொன்றில் மூர்ச்சையாய்வெறைத்துப்போ மேழுந்தானும் - பூட்டிவைத்து ஒவ்வொன்றில் சுன்னங்கோடி புகழானசெயநீரோ களங்குகோடி - நாட்டிவைத்துயேறுகிற வரிசைசொல்வேன் நலமானகல்லுப்பால் பூரங்கட்டே.

## சரக்குதொந்தம் சுன்னமாக்கும் வரிசைக்கிரமம் வாதிகட்கு இது நல்ல பாதையெனல்.

பூரத்தால் தாளகத்தைக் கொன்றுநீயும் புகழான தாளகத்தால் வங்கங்கொல்லு - வாரத்தால் வங்கத்தால் நிமிளைகொல்லு வாதான நிமிளையினல் சாரங்கொல்லு - நீரத்தசாரத்தால் துரிசியைத்தான்கொல்லு நேரான துரிசியினல் தங்கங்கொல்லு - வேரத்த தங்கத்தால் சூதத்தைக்கொல்லு வெட்டவெளியாச்சுதிந்த வாதந்தானே. 160

## உப்பரியார்வாதி.

வாதமென்றசொல்லுக்கு யிதுவேயங்கம் வாய்மூடப்பிடரிநின்று பேசும்பாரு - போதமென்றசொல்லுக்கு மனமேயாதி புகழானயோகத்தில்வாசியாதி - நாதமென்றவுப்புமுதல் காரசாரம் நலமறியான் வாதியல்லநாயிற்கேடு - வேதமென்றஉப்புமுதல் ஏழிஞலேவிரித்தாட ஒவ்வொன்றில்விளம்பிறேனே. 161

## பூனீற்றின் மகிமை.

### இந்த 7-ம் வழலையாகிய சிவஉப்புக்குத்தாதுவேனல்.

விளம்பரிதுஉப்பாலே ஆடும்வேதை வேருமில்லைதூருமில்லை சாரத்தாட்டு - விளம்பரிதுதுரிசியிடலவணத்தாட்டு வெடியுப்புச்சொல்வதற்கு நாவோயில்லை - விளம்பரிதுகாரமொடுசீனத்தாட்டு வெட்டவெளி வாதமெல்லாஞ்சூதனட்டு - விலம்பரிதுயிதுவேழுஞ் சிவனுக்குத்தாது வெறும்வாயைமெல்லுவார்வாதிதானே. 162

தானென்றதித்தனேயும் பூனீராலாச்சு சாகிறதும்பிழைக்கிறதும் பூனீராலாச்சு - வானென்றகுளிகையெல்லாம் பூனீராலாச்சு வாதமென்றஅங்மெல்லாம் பூனீராலாச்சு - கோனென்றவழலையென்பார் வண்ணனென்பார் கூட்டுகிறஉவரென்பார் சவடென்பார்கள் - தேனென்றமொழியுடைய தெட்சணமூர்த்தித் திருவிளத்தால்சொன்னதொருவழலைமுத்தே. 163

## வெடியுப்புச்செயநீர்.

முத்தானவெடியுப்புச் செயனீர்கேளு மூதண்டப்புளியெட்டுவெடியுப்புப்பத்து- பத்தானசாரமொன்றுசீனமொன்று பாங்கான அமுரியுப்புப்பலந்தான்போட்டுக் - கொத்தாகயிதுவெல்லாம் மிடித்துநன்ருய்க் கொளித்திடவேவெந்துயிது சுண்ணம்பாகு - மத்தானசுண்ணத்தைப்பனியில்வைக்க வப்பனேசெயனீராமறிந்துகொள்ளே. 164

## வெடியுப்புசெயநீரில் வீரமிட்டால் ஆட்டுரத்தம் போல் சிவக்கவேண்டும். சிவக்காவிடில் செயநீரில் காரமில்லை.

அறிந்துகொள்ளுசெயநீரில் வீரம்போட்டால் அப்பனேஆட்டு றெத்தம்போலேநிற்கும் - அறிந்துயிதிற்பூரமிட்டுவைத்துக்கொண்டு ஆடுகிறதுரையெல்லாம் வகையாய்க்கேளு - செறிந்துநின்றசீனமொடு காரஞ்சூடன் செப்பரியதுரிசியொடுபூரமஞ்சும் - பிறிந்துயிந்தச்செய நீரால்தோய்த்துப்போட பொறிபட்டவிடதுபோல் பொருமிவேமே.

வெந்தமட்டோ ஒவ்வொன்றை விரித்தாயானால் விரவியதோர் சரக்கையெல்லாம் வெவ்வேறுகட்டு-மந்தமட்டோ நவலோகம் புகை யுங்கட்டும் யானையுடகைபட்டகதலியாகு - மிந்தமட்டோ பாஷாண மெல்லாங்கட்டு மிரும்பானால் தண்ணியைப்போ லுருகியாடும்-மந்த மட்டோ போனமட்டோ வேதைமட்டோ வாய்திறக்கப்போகாது பூநீருப்பே. 166

## சாரச்செயநீர்.

உப்பைவிட்டுச்சாரத்தி நீரைச்சொல்வேன் உத்தமனே அண்டத் தோற் சுன்னம்பண்ணிச் - செப்பமிட்டுயிந்நிடைக்குச் சாரஞ்சேர்த் துசேர்த்தரைக்கச் சேர்ந்தரைக்கமெழுகுபோலாங் - கொப்பவிட்டுக் குகையில்வைத்துப்புடத்தைப்போட்டு கொட்டியொருபீங்கானில் பனியில்வைப்பாய் - அப்பவிட்டுசெயமாகுஞ்சாரநீர்தா னுடுகிறவரி சையிதிலறைகிறேனே. 167

## சாரசெயநீரில் செம்பு களிம்புபோகும்.

அறைகிறேனிரும்பதிலே சவுடுதிரைபோகும் அப்பனேனாகமி திற்புகையேகட்டும் - நிறைகிறேன்செம்பிதிலே களிம்புபோகும் நே ரானசரக்கெல்லாமூலம்போகு - முறைகிறேன்செயநீரில் போடுறத் தைக்கேளு மூதண்டஅமுரியுப்புவீரம்பூர - மறைகிறேனெண்ணு மலிதிலேபோடு வாகாகவைத்துயிந்தமுறையைப்பாரே. 168

## வெடியிப்புசெயநீர் 1. சாரசெயநீர் 1, கலக்க தயிருமெனல்.

---

பாரப்பாசாரநீர் சேரையொன்று பாங்கானவெடியுப்பு நீரோ சேரை - சேரப்பாரெண்டுயொன்றாய்க் கலந்தாயானால் செகமறியத் தயிர்போலநிற்கும்பாரு - வேரப்பாவாதத்துக்கிதுதான்சொன்னேன் வேரோடேதொட்டேற வழியுஞ்சொன்னேன் - காரப்பாகுருபதத் தைக் கருவைச்சொல்வார் காராட்டாலொன்றுமில்லைகள்ளப்பேச்சே.

## தொழில்முடிந்த வாதிலட்சணம்.

### ஒருவார்த்தை பொருக்கமாட்டான்.

கள்ளமெனென்னவெள்ளமெனென்ன வென்றுயானால் கண்முன்னே கும்பிடுவான் காணும்போது - தள்ளமெனென்ன தூஷிப்பான்சாத்திரம் பொய்யென்பான் சண்டாளபிசத்தில் செனித்தமாண்பர் - வெள்ள னென்னமனமுடையோன் கருத்தைக்கண்டால் வெகுளியெனக்கரு வோடேகுருத்தான்சொல்வார் - உள்ளமெனென்னக்காத்திருந்தால்யெ ல்லாஞ்சித்தி ஒருவார்த்தைபொருக்திடான்வாதிதானே. 170

### வெடியுப்புசெயநீர் சாரசெயநீர் 2-ம் சமன்சேர்க்க தயிருகும் அதில் பச்சைக்கற்பூர சுன்னஞ்செய்தல்.

ஷ செயநீர்களில் கோந்ரம் சவுக்காரச்சுன்னம், வீரம், பூரம் போட்டால்தரன் உயிர். R. M. K.

தாமெனென்றபிருநீராந்தயிருக்குள்ளே தாக்கியொருசேரய்யா பூரம்போட்டு - வாமெனென்றரவிழில்வைக்கக் கற்பூரவுப்பாகும்வாகாக விளைந்தபின்பெடுத்துக்கொண்டு-காமெனென்ற வெண்கருவைவிட்டுஆட் டிக் கனக்கவொருவில்லைதட்டியுலரப்போட்டு - வேமெனென்றசுண்ணு ம்பின்சீனத்தில்வைத்து மெத்தனவுங்கடிகைரெண்டு தீயிடாயே. ()

### பச்சைக்கற்பூர செயநீர்

இட்டெரித்துஆறினபின்னிறக்கிவாங்கி யெடுத்தல்லோகற்பூர வுப்புத்தானு - பட்டரிந்துவெண்கருவாலரைத்துக்கட்டி வாகான சுண்ணத்திற்புடத்தைப்போடு-கெட்டரிந்துபூரங்காரமேறும் நேராக ச்சாரமிட்டு அரைக்கநீராங் - சுட்டறிந்துகற்பூரச்செயநீரப்பா கொ டுங்காரச்சரக்கையெல்லாங்கொல்லுந்தானே. 172

### பச்சைக்கற்பூர செயநீரில்

### கல்லுப்பு கட்டு.

கொல்லுகிறபூரநீர்க் குள்ளேமைந்தா குலாவியதோர்கல்லுப் பைத்துவைத்துப்போடு - மல்லுகிறரவியிலிடுயெழுநாள்தான் வாகா கப்பூசுதற்குமருந்தீகளு - வெல்லுகிறயிந்துப்புச்சாரம்ரெண்டு மே திச்சுவெண்கருவா லரைத்துப்பூசி - அல்லுகிறரவியிலிட்டுக்காய்ந்த பின்பு அடவானசீனமென்றசுன்னத்தேத்தே. 173

ஏத்தப்பா சீனமென்றசுண்ணந்தானுமிதமாக உப்புக்குக்கீழ்மே லிட்டுப் - போத்தப்பாஅடுப்பேததிக்கடிகையஞ்சு புகழாகத்தீயெரி த்துஆறவிட்டு - மாத்தப்பாஉப்படங்கிக் கட்டிப்போகும் வாகாகவா ங்கியிதில் ‡காரமேத்தி -தோத்தப்பாசுண்ணாம்பில் புடத்தைப்போடு தப்பாவாய்க்கட்டியிதுவெளுக்குங்காணே. 174

## ஒருசரக்கை எப்படி காரமேற்றுவது?
## ரசம், கல்லுப்பு, காரமேற்றும் விதம்.

‡காரமேத்திஎன்பது:= முன்கடுங்கார செயநீரில் சவுக்காரசுன்னம் கலந்து அதில் கல்லுப்பை நனைத்து நனைத்து 7-நாள் ரவியிலிடவேண்டுமென்பதாம். இது போல் ரசம்முதலிய சகலசரக்குகளையும் நனைத்துலர்த்தி கடுங்காரமேற்றினல்த்தான் ஓடாது நிலைத்துநிற்குமென்பதை சகலரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 237-வது பாட்டிலுள்ள சூதக சுன்னத்துக்கும் இப்படி காரமேற்றலாம். R. M. K.

## சவுக்காரச்சுன்னம்பூசி கல்லுப்பை சுன்னமாக்குதல்.

காணப்பாயிதையெடுத்துவீரம்பூரம் கைவிட்டபுழுகோடு சவுக் காரச்சுன்னம் - ஆணப்பா துக்கடத்தின் வெண்மலமுங்கூட்டி ஒருஞ் சமத்தித்துஉப்பிலப்பி- பூணப்பாசுண்ணாம்பில்வைத்துவூது பூப்போ லேநீறியுப்புச் சுண்ணமாகுந் - தோணப்பா யிந்திடைக்குச்சாரங் கூட்டித் துடியாகவரைக்கையிலே செயனீராமே. 175

## கல்லுப்புச்செயநீரில் பாசாணம் 64-ம் கட்டும், உபரசம் 120-ம் சத்தெடுக்கலாம்.

---

ஆமப்பாசெயநீரிற் தோய்த்துவாட்ட அறுபத்தநாலுவகைச் சரக்குகட்டும்- ஓமப்பாசெயநீரிலுபரசங்கள்சத்தா முத்தமனேசார முதல்காரமெல்லாஞ் - சாமப்பாசெயநீரி லவணங்கெந்தி சாதகமாய் மெழுகாகுங்களங்குமாகுந் - தாமப்பாசரக்கொன்றில் வேதைகோடி தாக்குகிறவரிசையிதில்சாத்துறேனே. 176

## கல்லுப்புச்சுன்னத்தால் உபரசங்கள் சுன்னமாகும் பாசாணம் 64-ம் உபரசங்கள் 120-ம் ஆக 184சரக்கும் புகையாமல் மணியாகஉருகிநிற்கும்.

சாத்துகிறேனுப்பென்ற சுன்னத்தோடு சாதகமாய்ப்புனுகிட்டுச் சீனமிட்டு - ஏத்துகிறேன்சரக்கோடு உபரசத்திலப்பி யிதமாகவூதை பிலேயெல்லாஞ்சுண்ணம்போத்துகிறேன் சுன்னத்திற்சவ்வாதுகாரம் பூட்டிபொன்றாய் மத்தித்துவைத்துக்கொண்டு - ஆத்துகிறேனுபரசங் கள்பாஷாணத்தி லப்பியிதைவூதிடவுமணியுமாமே. 177

## காயசித்திக்கு
## எப்படி சூதம்கட்டலாம்?

**உருக்கிக்கட்டிய பாஷாணங்களை உபரசத்தி லூட்டி ஷை உபரசத்தைத் தங்கத்தி லூட்டி ஷை தங்கத்தை சூதத்தி லூட்டினுல் சூதம் கட்டும். 8 வகை வேதையாகுமெனல்.**

---

மணியாகஉருகிநிற்குமுபரசமுஞ்சரக்குமாட்டுகிற வித்தையினி சொல்லக்கேளு - தனியானபாஷாணமுபரசத்திலூட்டு தாக்கியதோர் உபரசத்தைதங்கத்திலூட்டு - அணியானதங்கத்தை சூதத்தூட்டு அசையாமற்கட்டிப்போஞ் சூதராசன் - பிணியானதணுகாதுகாயசித் தியாகும் பேரானயெட்டுவித வேதையாமே. 178

## கோடான்கோடி தொழில்.

---

வேதையிதிற்சொல்லவென்ருல் ஒவ்வொன்றைத்தொட்டுமெழு கோடு செந்தூரங்களங்குகோடி - பாதையிதிற்செயநீரோ சுன்னங் கோடி பறக்கிறதோர்குளிகைமுதற் சித்துக்கோடி - போதவித்தை விரித்தாடயுகங்கொள்ளாது போக்கிதிலே சொல்லவென்ருல் துறை யோகோடி - காதயிதிலுப்பைவிட்டுக்கடந்துமேலே கற்பூரமாற்கத் தைகாட்டுறேனே. 179

## கல்லுப்புச்செயநீரில் சூடச்சுன்னமும் அதிலுலாகும் தொழில் முறைகளும்.

காட்டுகிறேன்கல்லுப்புச் செயநீர்க்குள்ளே கற்பூரபலகையிதில் வாரியிட்டு - மூட்டுகிறேன்ரவியில்வைத்து யேபூசுன்னக்குகையில் முசியாமல்வாரியிட்டுவூதச்சுண்ணம் - பூட்டுகிறேன்சுண்ணத்தில் கா ரம்வீரம் புகழானசவ்வாது கூடக்கூட்டி - வூட்டுகிறேன்சரக்கோடு உபரசத்திற்பூசி உருக்கிடவேமணியாகநிற்கும்பாரே. 180

பாரப்பா ஒவ்வொன்றிற்களங்குகோடி பார்க்கின்சுண்ணமொடு செந்தூரங்கோடி- நேரப்பாஒவ்வொன்றைத்தொந்தித்தேற நிலையேது கலையேது நேரோகோடி - தூரப்பாதொட்டாடத்துலையாதொன்றுஞ் சொல்லியதோர்சாத்திரங்கள் கோடாகோடி - வேரப்பாவுப்புத்துவும் விண்ணேபூரம் வேதைக்குவிதுரெண்டும் விட்டாற்போச்சே. 181

## பற்பசுன்னங்கள் வெள்ளையாகாத காரணம் ஏன்?

## பச்சைக்கற்பூர சுன்னத்தைவிட்டதால்த்தான் சுன்னங்கள் வெள்ளையாகவில்லை.

## பச்சைக்கற்பூரசுன்னத்தால் தங்கம் பூப்போல் நீறுமெனல்.

விட்டாக்கால்பூரமென்றசுண்ணந்தன்னை வெண்டதுபோல்வெளுக்காதுசுண்ணமெல்லாம் - பட்டாக்காற்சரக்கெல்லாந்தட்டுருவிப்பாயும் பாங்கான தங்கத்தைபூப்போல்நீத்தும் - தொட்டாக்சால்வீரத்தைநெறத்தம்போலாம் சூட்டினுலுபரசங்கள் சத்துமாகும் - நீட்டாக்கால்பத்தண்டமெழுகுமாகும் நாமறியோமொவ்வொன்றில் வேதைதானே. 182

## பூனகத்தண்ணீர்.

தாமென்றபூரத்தின் வேதைசொல்லச் சச்சிதானந்தமென்றசிவந்தான்வேணும் - வாமென்றபூரமது சுன்னமானல் வாய்திறக்கப்போமோடாமாணைக்காகேள் காமென்றபூனகந்தேங்காய்மட்டுங்கழுவியிதைப்பால்வார்த்துப்பிழிந்துபோடு- வேமென்றபூரத்தின்சுண்ணம்போட வெறுஞ்சலமாம்புஷ்டியற்றுநிற்குங்காணே. 183

## பூநாகசெயநீரால் தங்கம் செம்பாகுதல்.

காணப்பாபூனகத்தண்ணீராலே கலந்தரைப்பாய் காரமொடுசிலையும்கெந்தி - ஊணப்பாசூதமொடு சமனய்க்கூட்டி யுறுகரைத்துப்பணம்போலே வில்லைதட்டி - தோணப்பாதங்கத்தில் லொவ்வொன்றையைச் சுழித்துள்ளேவாங்கியது செம்புமாகும் - வீணப்பாபூனகம்போட்டரைத்துயீந்தால் மேமேலறிமேமேலறியுட்கொள்ளாதே. 184

கொள்ளாதேபோர்வதென்னமாங்கிஷத்தினலே, குற்றமில்லைகுற்றமில்லை ஞதாக்கள்போட்டுத் - தள்ளாதேபறிச்செம்புணூறுதொந்தமேருஞ் சடிதியிலேமறிககவென்றால்மறிக்கலாகும் விள்ளாதே யிரும்பிவிடவேதையேழு விளங்கியதோர் காரியத்திட்டாயானல் - நள்ளாதேமாத்தேது அஞ்சுகாணும் நலமானபறிச்செம்பின் மறிப்பிதாமே.

## கிளிஞ்சித்தண்ணீர்.

## இரும்பை ஈயமாக்கும் விதம்.

மறிப்பானகற்பூரங் கிளிஞ்சியிலேயூட்டு வாருதிபோல்செலமாகும்பிஷ்டியில்லை - நெறிப்பாகயிந்நீரில் தாளகமுங்காரம் நேராகச்சூதமிட்டுஅரைத்துக்கட்டி - பொறிப்பாகயிரும்பிலிடு யீயமாகும் பூட்டினல்தங்கத்தில்ஞகமாகுங் - குறிப்பாகஒவ்வொன்றை தொந்தித்தேறக் கோடானகோடி சத்துனகமாமே. 186

## கிளிஞ்சித்தண்ணீரால்

### தங்கத்தை நாகமாக்கி நாகக்கட்டும் சூதக்கட்டும்.

நாகத்திலுகமதுகட்டிப்போகும் நலமானசூதமதுனூறுதொந் தமேறும் பாகத்திலரைக்கரைக்கத்தாதுவெல்லாங்கட்டும் பாதையிதி லென்னசொல்வேன்பாருபாரு - வேகத்திலிந்தநீர்சுறுக்குப்போட் டால் விளங்கியதோர்சரக்கெல்லாங் கட்டுங்கட்டும் தாகத்திலகப்பட்ட பாணக்கம்போல் சகலசத்தையுட்கொள்ளுஞ்சூதந்தானே. 187

### சூதம்கட்டி கரிதனில் உருக்கியாடினுலும் சாரணை செய்யாவிடில் சூதம் ஓடிவிடும், சொற்பவேதைகாட்டுமெனல்.

---

சாரணைவிபரம் போகர் 7000, 2-வது காண்டமும் பின் இந்நூலிலும் பார்த்துக்கொள்ளவும். R. M. K.

---

உட்கொண்டால்சூதமது கவனமாகு முத்தமனேசாரணையைத் தீர்த்தாயானல் - உட்கொண்டால் பரிசமுதல் சத்தவேதை ஓடுகிற வேதையிதிற்சங்கவரையோடும் - உட்கொண்டுஉபரசமும் பாஷாண மெல்லாமொவ்வொன்ருய்தின்றுகக்க ஞதவேதை-உட்கொண்டுகக்கா ட்டால்வேதைகொஞ்ச முறுதியில்லேசூதத்துக்கோட்டந்தானே 188

### இந்திரகோப உற்பத்தி.

மேகஞதம் என்றும், இந்திராணி நாதம் என்றும், இந்திரகோப பூச்சி என்றும், தாம்பூலப்பூச்சிக்குப்பெயர். இது எப்படி உற்பத்தியாகிறதென்ருல்:- மின்னலே இந்திராணி, இடியே ஈசன், 2-ம் சேரும்போது இந்திராணி நாதம் இந்திரகோபபூச்சியாக உதிர்கிறது என்று அகஸ்த்தியரும், ரோமரிஷியும் சொல்லியிருக்கிருர்கள்.

ஆர். எம். கே.

---

### இந்திரகோபநிருதி செயநீர்.

ஒட்டமதுசுறுக்காக விரிந்துவோட ஓங்கிநின்றயிந்திரமாங்கோ பப்பூச்சி - நாட்டமதுபடியொன்றுஅளந்துபோட்டு நலமானகற்பூர சுன்னம்போட்டு - கூட்டவதுரெத்தம்போல் பிஷ்டியத்துக் கொடிய தொருநிருதியென்று சொல்வார்சொல்வார் - தீட்டம்போல்நின்றதெ ன்னமேகஞதம் செப்பரிதுயிதின்வேதைசெப்புறேனே. 189

## இந்திரகோபச் செயநீரால் தங்கச்செம்பும் நவலோகங்களைச் செம்பாக்குதலும்.

செப்புகிறேன்பாஷாணந்துவைத்துவாட்டச் சிவந்துருகுஞ்சாரக் கெல்லாந்தூரமேவோடும் - ஒப்புகிறேனவலோகமுருக்கிச்சாய்க்க உத்த மனேதங்கமுதற்செம்புமாகுந் - தப்புகிறேனென்றாலுந் தப்பொட் டாமல் தனித்தொந்தம்நவலோகம் பத்தேயேறும் - அப்புகிறேநவ லோகச்செம்பிலொன்று அணைத்திடுவாய்வெள்ளிபத்தில்தங்கமாமே.

## நவலோகச்செந்தூரம்.

தங்கபொன்றேயிதிணுலேயெடுத்தவேதை தனித்துநின்றஒன்ப தையுமணியாயாட்டி - பொங்கமன்றேயந்திடைக்குச் சூதங்கூட்டிப்பு கழாகவுருக்கியிதை வாங்கிக்கொண்டு - அங்கமன்றேஅந்திடைக்குக் கெந்திசேர்த்து அயக்குப்பிக்குள்ளேத்திசெந்தூரித்தால் - பங்கமன் றேவாராமலீசானத்தில் பைரவர்க்குப்பூசையிட்டுப்பார்த்திடாயே.

## இந்திரகோபசெயநீரில் சூதக்கட்டும்.

பார்த்திட்டசெந்தூரந் தினந்தான்குன்றி பருகிடவேகாயசித்தி மண்டலத்திலாகும் - கோர்த்திட்ட ‖ நவரச / உபரச மும் நவலோகத்துள்ளே குமட்டிடவேணுத்தொன்றுதங்கமாகு - மேர்த்திடவேசெந்தூரம் ணுகாரசெந்தக மீட்டெடத்தயிட்டெடத்த தொந்தமேறு - கார்த்திட்ட மானவித்தைமேகணுதம் வாசனைக்குச்சூதமதுகட்டிப்போமே 192

‖ இரண்டு ஏட்டுப்பிரதியிலும் இரண்டுவிதமாகவிருப்பதால் இரண்டையும் கீழ்மேலாக கோடிட்டு எழுதப்பட்டது.

## தாளகச்சுன்னம்.

கட்டியதோர்கற்பூரச்சுன்னத்துக்குக் கலந்துரெண்டுபிடைசார ங்கருதியாட்ட - கெட்டியதோர்செயநீராம்நீருக்குள்ளே நேராகவீர மிட்டுகலக்கரெத்தம் - ஒட்டியதோர்தாளகத்தைத் துவைத்துப்போட உத்தமனேமஞ்சளத்துவெள்ளையாகு - மட்டியதோர் சவுக்காரசுண் ணம்வீரம் மணைத்தனைத்துப்பூசியிதைரவியிற்போடே. 193

## தாளகசுன்னத்தால் உபரசம் 120-ம் பாசாணம் 64-ம் ஈயமாகும். இதுவே சத்துவெனல்

---

போட்டுலர்ந்தபின்னெடுத்துச் சீனச்சுண்ணப் பொடியில்வைத்
துத்தீயெரிக்கச் சுண்ணமாகும் - மாட்டுநல்தாளகத்தின் சுன்னத்
தோடு மைந்தனைவிரமிட்டுச்சாரங்கூட்டி - ஆட்டுநல்செவ்வாதும்
கூடப்போட்டு அப்பியல்லோஉபரசங்கள் பாஷாணமெல்லாம் - மூட்
டுலர்ந்துஉருக்கிடவேயீயமாகு மொவ்வொன்றையெடுத்தாட ஒளிவில்
லாதே. 194

ஒளிவில்லாசத்தாலேசெந்தூரஞ்சுண்ண பூத்தபணிசளங்கோடு
குருவோகோடி - ஒளிவில்லாஒவ்வொன்றில் தொந்தப் நூறு அந்தக்
தத்துறைதோறுமேத்தாலாகுங் - ஒளிவில்லாச்சத்தொன்றில் கவரோ
கோடி காணப்பாயினச்சேர்வைகவரோகோடி - தெளிவில்லாச்சுழி
முனைபோல்செட்டிட்டேறும் நேரானமால்தேவிவேகந்தானே. 195

## மால்தேவியென்ற தாளகசுன்னத்தால் நாகம் வங்கம் சுன்னஞ்செய்து சூதம் கட்டலாமென ஒப்புவமைச்சொல்.

புலி வங்கச்சுண்ணம். புலிக்குஇரை ஆடுபோல்
வங்கச்சுண்ணத்தில் சூதம் சாம்.

வேகமென்றமால்தேவி சுண்ணத்தூடே மேதிச்சுப்புனுகோடு
வீரங்கூட்டிப் - பாகமென்றணுகவங்கத்தப்பியூதப் பஞ்சுபோல்பொ
ருமியதுசுண்ணமாகும் - தாகமென்றபுலியப்பாவங்கச்சுண்ணந் தனிபு
லிக்குஆடேதுசூதமாச்சு - வாகமென்ற நாகத்துக்கிரைதானென்ன
மருவியதோர்தவளையென்றசூதந்தானே. 196

## வங்கச்சுன்னத்தால் சூதம் தயிராகி வெண்ணெயாகும். அதில் நாகஞ்சேர சூதப்புட்டு.

---

சூதமென்றஆனைக்குச்சிங்கவங்கந் தொடுமுன்னே தயிராகும்
வெண்ணெயாகும் - போதமென்றசூதத்தில் நாகம்பட்டால் பொங்
கியது புட்டுப்போலாகும்பாரு - வாதமென்றபொருளுக்குச் சூத
மாதி வாய்ப்பேச்சுசேட்டாக்கா லொன்றுமில்லை - வேதமென்ற அந்
தத்தின் பொருளேதோன்றும் விளங்கியதோர் வாதத்தில் சூத
மொன்றே. (வேதமுடிவை சூதம் காட்டும்.) 197

ஒன்றானயால்தேவி சுண்ணம்பட்டால் ஒன்பதென்றலோக மெல்லாஞ்சுண்ணமாகுங் - கண்ணான உபரசங்கள்பாஷாணங்கள் கலந் தாது சுண்ணம்பாய்விரிந்து போகுங் - குன்றானமலைனீரும்மேறுனீ ருங் கூப்பிட்டால்கேளாது தொந்தமேற - நன்றானசுன்னமொன் றில்கவரோம்கோடி நாதாக்களாடுகிறகருவிதாமே. 198

## விரிவுரை.

---

சூதப்புட்டுக்கு தாளகச்சுன்னம். வீரம் புனுகுபூசி பஞ்சசுன்னக் குகையில்வைத்து ஊத சூதம் சுன்னமாகும். செம்பிலிட தங்கமாகும். இப்படியே நவலோகங்களையும் பூசியூதி சுன்னம்செய்யலாம். ஆனால் உபரசம் பாசாணங்களில் 10-க்கு தாளகசுன்னம் 1. வீரம் 1, புனுகு 1. சேர்த்தரைத்து ஊதினால்தான் நீறும். K. M. K.

---

கருவானதாளசத்தில் சவ்வாதுகாரங் கலந்துகொண்டுஉபரசமும் சாக்கிலப்பி - உருவாகவுருக்கையிலேமணிபோலாடு மொவ்வொன் றில்துறைபதுவுங்கோடாகோடி - மருவாகதொந்திக்கத் தொந்தமே றும்வகைபேதுதுகையது வாதவர்க்கம் - தருவாகநின்றதொரு மாவின்தேவி சமத்தையினிச்சொல்லுகிறேன்கேளுகேளே. 199

### தாளகச்செயனீர்விட்டு கொதிப்பிக்க சூதம் கட்டும்.

கேளப்பாதாளகமாஞ்சுன்னத்தோடு கெடியாகவொண்டிடைதான் சாரங்கூட்டி - நீளப்பாஅரைக்கையிலேசெயநீராகும் நேரானசெய னீரிலாட்டைக்கேளு - கோளப்பாசெயனீரைச்சூதத்தாட்டிக் கொ திப்பிக்கப்புளிபோலக்கட்டிப்போகும் - நாளப்பாயிச்சூதமெண்ணை குத்திலடாகக்காண்டியிலே உருக்கிக்கொள்ளே. 200

### சூதம்கட்டினால் சாவுபொய்யாம்.

உருக்கியதோர்சூதமது குருவுக்காகு முத்தமனைகளங்கோடு சுண்ணமாகும் - பெருக்கியதோர்குளிகை முதற் செந்தூரமாகும் பேரானதம்பனமும் வசியமாகும் - செருக்கியதோரண்டமெல்லாஞ் சுத்திப்பார்த்துச் சிவனிருக்குமேருவையுந் தெரியப்பண்ணு - மருக் கியதோர்சாவுபொய்யாந் தேகம்பொன்னா மாடுகிறவாதமெல்லாஞ் சூதந்தானே. 201

## தாளகசெயநீரில் பாஷாணக்கட்டும் உப்பு மெழுகும்.

தாளென்றசெயநீரிற் பாஷாணங்கள் சமுசயங்களெண்ணாதே
தோய்க்கக்கட்டும் -காளென்னவுபரசங்களெல்லாஞ்சத்தாங் கவர்கோ
டிவிரிந்தாடுமுபரசத்தின்போக்கு வேளென்றலவணமொடு காரசா
ரம் வெதுப்பினூற்றேய்த்ததிலே மெழுகுமாகும் - வாளென்றமெழு
கதிலே பரிசவேதை வாசனைக்குப்பாஷாணங்கட்டுந்தானே. 202

## அண்டமெழுகும் சாகாமல் நிருத்திவைக்கும் சூதக்கட்டும்.

கட்டியதோர்பாஷாணங் கவரோகோடி காட்டையிலேமெழுகா
குமுபரசங்களெல்லாம் - முட்டையிலேகவசித்துமவியிற்போட மூன்
றுமொன்றாய்க்கரைந்துள்ளே மெழுகுமாகும் - நெட்டையிலேயிதின்
மெழுகுபரிசவேதை நேரானஅண்டவித்தை சாக்கெல்லாங்கொல்லும்
- தட்டையிலே வாசனைக்குச் சூதஞ்சாகும் சாகாமலிருத்திவைக்கு
சூதந்தானே. 203

## தாளகச்சுன்னத்தால் வங்கச்சுன்னம்.

இருத்தியதோர்தாளகமாஞ்சுன்னத்தோடே இதமானபுனுகோ
டுவீரமிட்டு- அருத்தியதோர்வங்கத்திற்பூசிப்போட அலர்ந்துபொங்கி
மல்லிகைப்பூப்போலேயாகும் - வருத்தியதோர்வங்கமென்றசுன்னஞ்
சுன்னம்வாய்திறக்கப்போகாதுபிலவான்மெத்த - பொருத்தியதோர்
¶ வீரமிட்டுக்காரங்கூட்டி புகழானசவ்வாதும்புனைந்துவையே. 204

¶ புனுகோடு காரம் சவ்வாது என்று ஓருஏட்டிலும், புனுகு,
கற்பூரம், சவ்வாதுயென்று மற்றோர் ஏட்டிலும் இருப்பது தப்பு,
வீரம், காரம், சவ்வாது என்றஏடே சரி.

R. M. K. வேலுசாமி, வைத்தியர், பழனி.

---

## 64 பாஷாணங்களையும் சுண்ணம்செய்வதற்கு வங்கச்சுண்ண குரு.

வைத்திந்தசாக்கெல்லாம்பொட்டுப்போடமணிபோலேநின்றுடும்
பாஷாணமெல்லாம் - கைத்தயிந்தப்பாஷாணக்குலங்களெல்லாந்தனித்
தனியேகவர்கோடிசங்கமோடும் - ஐத்தயிந்தவங்கத்தின்சுன்னத்தோ
டேவப்பனைபுனுகோடுவீரங்கூட்டி - மொய்த்ததொருவுபரசத்திற்
பாஷாணத்தூட்டி முசியாமலூதவெல்லாஞ் சுன்னமாமே. 205

### ஏவாதி! வங்கச்சுண்ணம்செய்! பார்ப்போம்!

சுண்ணமெல்லாம்வெகுசுருக்கு தொட்டதெல்லாங் கொல்லுஞ் சூட்டினாற்சாரத்திற்செயநீரோகோடி - வன்னமெல்லாமடங்கிற்று வங்கத்துள்ளேவாதியென்றுவந்தவனை வங்கங்கேளு - அன்னமெல்லாங்கெடுத்தாண்டு யோகம்பார்க்க அடிமையாய்ப்பண்ணுவிக்கும் வங்கராசன் சின்னமெல்லாம்பின்னிட்டு யேகமணமாக்கித் தெளிவாடே ஞான வெளிசேர்க்குந்தானே. 206

சேர்க்கிறதோர்முறைனே மாணாக்காளே தக்ஷிணாமூர்த்திகண்டார்யென்னைப்பெற்றார் - ஆர்க்கிறதோர்வாதமுதல் யோகஞானமதுக்கதுக்குக்கருவல்லாமறியச்சொன்னார் - பார்க்கிறதோர்முறையெல்லாம் பார்த்துக்கண்டேன் பாடினேன்வெளியாகவுங்களுக்குமக்காள் - ஏர்க்கிறதோர்முறையென்ன மெத்தக்கொஞ்ச மேற்றாக்காற்சமாதிக்குள் ளிருககொட்டாதே. 207

## வாதத்துக்கு ஆதியானகுரு.
### இன்னதென்றுசொல்லவேணும் தாயே!
### மனம் கவலைப்படுகிறது என்று ரிஷிகள் துதித்தல்.

ஓட்டாதேயென்றுசொன்னரிஷிகள் சித்தருத்தமியாம் மனோன்மணியைக்கேட்டுக்கேட்டுக் - காட்டானகுருவென்னவன்னமென்ன களங்கென்ன செந்தூரப்போக்குமென்ன - நெட்டானவேதையென்ன செயநீரென்ன நேரானசுண்ணத்தின்நேர்மையென்ன - கட்டானவலத்தில்வைத்த தாயெசொல்லு தயாபரியேஎன்றுசொல்லிப்போற்றினாரே. 208

## பூமிக்கரு சொல்லரிது
## வழலையென தாய்மருமொழி கூறல்

போற்றினார்பானமொடு சுத்திவைத்துப் புகழாகமனப்பொங்கியாத்தாள்சொன்னாள் - மாற்றினார்மனக்கவலைதாயேயென்றார் மக்களேயஞ்சாதேபூமியென்றாள் - தோற்றினார்பூமியிலேகருவேதென்றார் - சொல்லரிதுசிவன்சொல்லக்கேட்டேனென்றாள் ஆத்தினார்நாதாக்கள் சித்தர்கோடி அலட்டாச்சுவழலையென்றறைந்திட்டாளே. 209

## வழலைக்கு ஆதிஎன்னதாயே! பூமிநாதமெனல். பூமிநாதமே பூநீர்.

அரைந்தபின்புலகிரியினு லவள் பதத்தில்வீழ்ந்து ஆத்தாளேவழ
லைக்காதியென்ன - அரைந்தபின்பேதுமில்லைபூமிநாதம் மகத்தான
கன்னியுடமாதவிடாய்மக்காள் உரைந்தபின்புரவிபட்டுப் பொங்கிநீறு
முத்தமினைநாரியுடமருந்துமாச்சு - நிறைந்தபின்புசுண்ணமிதிற்கூடி
னுக்கால் நேரானவிண்ணோர்கள்மருந்துமாச்சே. 210

## பூநீர் சுண்ணாம்பு புனுகுகூடில் சகலமும் நீறும்.

விண்ணோர்கள்மருந்தோடுபுனுகுகூட்ட வீரமென்றமருந்தாச்சு
தொட்டதெல்லாம்நீறும் - கண்ணோடுபசுப்போனுற் பால்கறக்காப்
போல்காமத்தை விண்ணென்பார்காணுவாதி - புண்ணோடேவழிந்த
ரத்தப்நாரிமருந்தென்பார் போக்கறியா வாதிகள்தான் சொல்லும்
வார்த்தை - பண்ணோடேயிதுக்கொன்றுமொவ்வாதென்று பராபரை
த்தாய்ஊசரத்தைச்சிரசென்றாளே. 211

## பிண்டம்என்பது சத்தி—சத்தியாகிய பூநீர் என்ற பூமிநாதம் இதுதானென்றுதெரிய பரீக்ஷைகள்.

சிரசானபூனீறுமென்னைப்பெற்ற சிற்பரியேசிறப்பில்லை யேதோ
வென்னில் - அரசானநீர்விடவேரெத்தம்போலாம் அறியாயோமஞ்
சள்ப் படரெத்தம்போலாப் - நிரசானவீரமிட ரெத்தம்போலாம் நேரா
கச்சாரமிடசெயநீராகும் - துரைச்சாணியாகிநின்றபூமினுதப் தொட்ட
தெல்லாம் பதையாமற்கொல்லுந்தானே. (இது கைக்கும்.) 212

## இக்கவியின்பொருளை அறிந்துசெய்யும் வல்லவர்கள் யார்?

## அண்டம் என்பது சிவம்—இக்கருவை அறிந்தவர்க் காகாதபொருள் ஒன்றுமில்லையெனல்.

---

கொல்லுகிறகருவெல்லாம் பூமிநாதம் கூட்டுகிறகருவெல்லாம்வழ
லைச்சுண்ணம் - மல்லுகிறகருவெல்லாம்உப்புஉப்பு மாட்டுகிறகருவெல்
லாம்தங்கம்சூதம் - வெல்லுகிறகருவெல்லாங்காரசாரம்விடுவிக்குஞ்
சாரணைக்குவீரருசன் - அல்லுகிறகருவெல்லாம் நாகவங்கம் அலையா
மற்சொல்லிவிட்டேன் போவென்றாளே. 213

---

வழலைஎன்பது அண்டம். இதுவே சிவஉப்பு.
(சிவஉப்புகைத்திடாது. மஞ்சளுக்கு சிவக்காது. தீயிலிட கருத்துப்போதும்)
அகஸ்தியர் பரிபாஷை500-ல் 2-ங்காண்டம்29, 30-வது பாட்டு. R. M. K.

## வங்கச்சுன்னத்தால் நிமிளைச்சுண்ணம்.

போமென்ற பராபரையைப்பூசைபண்ணிப் போனார்களவரவர்கள் மரபினுள்ளே - தாமென்றவர்கமாம்சுண்ணத்தோடு சாரவேபுனுகிட்டு வீரம்போட்டு - காமென்றநிமிளையின்மேல் பூசியூதக் கடல்நுரைபோல் பொங்கியதுசுண்ணமாகும் - வாமென்றுகூப்பிட்டால் வாதம்வந்துவாய்பொத்திசொன்னபடிகேழ்க்குந்தானே. 214

கேழ்க்கவேநிமிளையென்றசுண்ணத்தோடேகெடியாகச்சவ்வாதுசாரம் § வீரம்-வாழ்க்கவேமத்தித்துவைத்துக்கொண்டு ஆயியுடபதத்தைநன்றாய்ப்பூசைபண்ணி - தாழ்க்கவே பாஷாணகுலங்களெல்லாம் தடவியிடநவலோகம்வேதையாகும் - நாழ்க்கவேவுபரசங்கள் வாசனைக்குச்சத்தாம் நாதமென்றநிமிளையுடஆட்டுத்தானே. 215

§ சாரம் என்று வேறொருபிரதியிலிருக்கின்றது.

## நிமிளைச்சுன்னத்தால் தங்கச்சுண்ணம்.

ஆட்டானநிமிளையிலேபுனுகுவீரம் அப்பனேசீனமிட்டாட்டிக்கொண்டு - மூட்டானதங்கமதிற்பூசிப்போடே மூதண்டசுண்ணும் பாம்பரிதான்பாரு - நாட்டானவிக்குருவிற்புனுகுவீரம் நலமாகமத்தித்துத்தொந்தமேற - தாட்டானநூறுதொந்தந் தங்கமேறுந்தனித்தனியே தொந்தமொன்றிற்கோடிதானே. 216

கோடியென்றுசொன்னதுவுங் கொஞ்சங்கொஞ்சம் குறுகாது விரிந்தோடுங்கூறப்போகா நாடியென்றுதங்கமுமேசுண்ணமானால்நாதமென்றவேதைமட்டுந்துடர்ந்து ஆடும் - வாடிநின்றுமயங்காதே தங்கம் வித்து மற்றதெல்லாம்வித்தல்லசூதம்விந்து - ஓடிநின்றயிறக்கமெல்லாந்தங்கத்தாளே உத்தமனேசூதத்தால்வர்ணமாச்சே. 217

ஆச்சப்பாதங்கம்போல்நவலோகந்தா னடுக்கடுக்காய்த்தொந்தமிதுஏறியாடும் - மோச்சப்பாவுபரசமும்மலைகள்தானு மொருமொட்டால் நீறிப்போமூதிப்பாரு - வாச்சப்பாசரக்கெல்லாஞ்சுன்னமாகும் வாய்திறக்கப்போகாது சுன்னத்தாட்டு - மூச்சப்பா வற்றவிடத்துக்கொக்குமொக்கும் மூதண்டில்நாதமென்றநிமிளைதானே. 218

## நிமிளைசெயநீரில் சூதம்கட்டி சூதம் சுன்னம்செய்து செம்பிலிட தங்கமாகுமெனல்.

தானென்றநிமிளையொன்று சாரமிரண்டு தாக்கயிலேயிளகியதுசெயநீராகும் - வானென்றசூதத்தையிதிலேபோட்டு வளமாகக்காண்டியிலே கொதிக்கக்கட்டும் - மேனென்றசூதமதுசுன்னமாகும் மேதினியைச்சுத்தவென்றேற்குளிகையாகும் - கானென்றகளங்காகுஞ்செந்தூரமாகுங் காயசித்தியாகுமிந்தச்சூதங்காணே. 219

## நிமிளைச்சுன்னத்தால் சாரக்கட்டு.

காணப்பாநிமிளையுடசுண்ணம்வீரம்காரமொடுபுனுகிட்டுக்கலந்து கொண்டு - பூணப்பாசாரத்தின்மேலேபூசப் பொலமெபாலெணநீர்பா யுஞ்சாரந்தானும் - ஊணப்பாமணலில்வைத்துப்புடத்தைப்போடுஉரு வாகச்சாரமதுவெண்டுபோலாம் - தோணப்பாவிதையெடுத்துவீரங் கூட்டித்துடியானவெண்கருவாலரைத்துக்கட்டே. 220

## நவாச்சாரச்சுண்ணம்.

கட்டுவதுபணம்போலேவில்லைகட்டு கடியதோரேழுசுண்ணக்கு கைபிற்போடு - மட்டுவதுவூதுநன்ருய்ச்சாரசுண்ணம் வாய்திறக்கப் போகாதுஆயிநாதம் - ஒட்டுவதுசாரத்தாலொட்டியேற உபரமதுபூர ணத்தின்மேலேயாடும் - நெட்டுவதுகடுநெட்டுநெட்டியோட நிலையாது நிலையாதுசாரப்போக்கே. 221

## திருமூலர் 70-யுகமாடியும் சாரத்தின்முடிவைக் காணமுடியவில்லையெனல்.

சாரமென்றபோக்கெடுத்து மூலமூர்த்தி தனித்தேழுபத்துயுக மாடிக்காணர் சாரமென்றபோக்கெடுத்து நந்திநால்வர்சார்பறியோமெ ன்றுசொல்லிமௌனமாஞர் - சாரமென்றபோக்கெடுத்து ரிசிகள்யோ கி தத்தளித்துத் தத்தளித்தின்னங்காணர் - சாரமென்றபோக்கெடுத் துநானும்பார்த்துத்தள்ளாதென்றுசொல்லிவிட்டிட்டேனே. 222

## நவாச்சாரவைப்பு.

சொல்லியதோர்சாரத்தின்பிறப்பைக்கேளு துடியானமூத்திரங் களொன்பதையுங்கூட்டி - மல்லியதோர்லவணமொடுகாரங்கூட்டி வா கானபூனீறுகூடக்கூட்டி - அல்லியதோர்பாண்டத்தில் பரங்கிவைத் தான் அதிஞலேயித்தணைதாஞட்டுமாச்சு- எல்லியதோர்சாரவித்தை சாரஞ்சாரம்எடுத்தெடுத்ததுரைக்கெல்லாமேத்தந்தானே. 223

வத்தமென்றசாரத்தின் சுண்ணத்தோடே யிட்டணைத்துச்சவ் வாதுகாரம்வீரம் - மாத்தமென்றவுபரசங்கள் பாஷாணங்கள் வாச னைக்குமணிபோலேநின்றுஆடும் - ஆத்தமென்றவாட்டாடத்துலையா தப்பா அதற்கதற்கினச்சேர்வைபச்சைகூட்டி - ஊத்தமென்றதொந்தி ப்பாம்வேலைதயாகு முருக்கினத்தைவிரிக்கவென்றூற்கூடாவாறே.

## சாரச்சுன்னத்தால்
## நவலோகம் பாஷாணமுதல் சுண்ணம்.

வாரானசாரத்தில்வீரம்போட்டு மைந்தனேபுனுகிட்டுச் சீனம் போட்டு கூறுனநவலோகம்பாஷாணங்கள் - கொள்கிறதோருபாசங் கள்மரமும்மண்ணும் - தாரானதிதுபூசியூதச்சுண்ணந் தனித்தனியே தொந்தித்தாற்சுண்ணங்கோடி - வேருனயினமென்ன வேதையென் ன விடிந்ததேசாரத்தின்றலையிற்றுனே. 225

## சாரசுன்னத்தால் துருசுச்சுண்ணம்.

தலையானசாரத்தில்புனுகுவீரந் தாக்கியல்லோ துரிசியின்மேற் பூசிப்போடக் - கலையானசுக்கான்போற்றுரிசியாகுங் காணப்பாவேழு சுண்ணக்குகையிலூத நிலையானதுரிசியதுசுண்ணமாகும் நீச்சானவா தமெல்லாங்கணக்காலாச்சு - மலையானவெட்டெட்டுக்கர்மமெல்லாம் வாசலிலேவேலைசெய்யுமைந்தாபாரே 226

## துருசே சிவன்.

பாரப்பாதுரிசியல்லோகுருவுமாச்சு பாங்கானதுரிசியென்னவுப் புவுப்பு - நேரப்பாவுப்பென்னசிவனுமாச்சு - நேரானசிவமென்ன துரிசுச்செம்பு - வர்ரப்பாசத்தியென்னவூசாத்தினுப்பு மகத்தானபூமி யுடநாதமைந்தா-ஆரப்பாதுரிசியுடவாட்டைக்காண்பா ரளவில்லைதுரி சியது சிவன்தான்காணே. 227

சிவனென்பார்சத்தியென்பார் கண்டரென்பார் செகமெல்லா மாட்டிவைத்தகுருத்திரனென்பார் - குவனெபார்பரிசானபாணியென் பார்குலாவியதோர் நீலவர்ணகாளியென்பார் அவனென்பார் ஆதி யென்பார் அந்தமென்பார் ஆத்தாளுமப்பனுந்தானிருந்தவிடமென் பார் தீயென்பார் தவத்தோர்க்குச்சீவனத்தை யீய்ந்த சாரங்கபாணி யெனச் சாத்துவாரே. 228

## துருசுசுன்னம்-சொல்லவாரில்லை.

சாத்துவார்துரிசுயென்ற சுன்னத்தோடு சாதகமாய்வீரமொடு காரங்கூட்டிப் போத்துவார் சவ்வாதுகூடப்போட்டு பொலிவாகசாக் குகளைத்தொட்டு ஆட்டமாத்துவார் மணியாகும்முபாசங்கள்சத்தாம் வகையொன்றில்வேதை சொல்ல வாரோயில்லை-ஊத்துவாய்போலெ ழும்பு முருக்கினத்தின்வேதை ஒருகோடி தொந்தனையுமோடுந் தானே. 229

## சாரச்சுன்னம்.

ஓடவேபுழுகொடுதுரிசுச்சுண்ண முத்தமேனே வீரமொடு சீனங்
சுனனம்
கூட்டி ஆடவே சாரத்தின் / சரக்கின் மேற்பொட்டுப்போட்டு அனல்மேலேவைத்தூதுப்பொங்கிநீறும் - நாடவேபொட்டிட்டாலுபரசமும்மலையும் நலம்பேறவேவெண்டதுபோல் பொருமிநீறும் - நீடவேவொவ்வொன்றிற்கவரோ சங்க நீருென்று நூறுதொந்தமேருந்தானே. 230

நூறுதொந்தமேறயிலேஒவ்வொன்றுகோடி நுணுக்கத்தில்நுணுக்கமெத்தசுண்ணமார்க்கம் - கூறுதொந்தமோவ்வொன்றிற் களங்குகோடி குறிப்பானவீரமிட்டால் செந்தூரங்கோடி - மாறுதொந்தஞ்சாரமிடச் செயநீர்கோடி மகத்தான மெழுகுமுதற் குருவுங்கோடி வேறுதொர்தமோவ்வொன்றிற் சங்கமோடும் வேதையென்ன வஷ்டாங்கமாடுந்தானே. 231

## துருசு சுன்ன மகிமை

அஷ்டாங்கசித்தியதறுபத்துநாலுமாட்டிவிக்குங் காணியிடைதுரிசுச்சுண்ணம்-கட்டாகவாதமெல்லாம் திலையாடுங்கைவிட்டாலாடுகிற துரையோகோடி-நெட்டாங்கவசியமுதற்றம்பனங்கள்செய்யும்நேரான காயசித்தி நிலைக்கப்பண்ணும்-தட்டான்கைப்பொன்னதுபோற் பலபணிதிபண்ணுஞ் சாதகமாய் கண்டருடசுண்ணந்தானே. 232

## லயகாலசிங்கிதைலம்.

சுண்ணமென்றதுரிசியிலேகழஞ்சியொன்று சூட்டப்பாசவ்வாது கழஞ்சுநாலு-தன்னமென்ற புனுகதிலே கழஞ்சுநாலு தனிப்பசுவின் கொழுப்பதிலேகழஞ்சிரெண்டு - கன்னமென்றபுத்தீசலிருகழஞ்சுபோடு கைமுறையயநாதவிந்துகழஞ்சோரெண்டு - வன்னமென்றவீரமிதிற்கழஞ்சுபோடு வாகாகக்குழைத்துநன்றுய் ரவியில்வையே. 233

வைத்ததின்மேற்காந்திபைத்தான்பிடித்தாயானல்வாருதிபோற் தயிலமெல்லாமுருகியோடும்- நைத்தயிதைபரணியிலேவாங்கிவைத்து நலமாகக்கூட்டுகிற மருந்துகேளு - பைத்தொட்டிச்சாரமொடு காரம் நாபி பாங்கானகெந்தகமும்மலின்தேவி - கைத்ததொருகஸ்தூரி யேழுங்கேளு கைமுறையாய்பணந்தூக்கிவுரைத்திடாயே. 234

## சிங்கிதைலத்தால் சூதக்கட்டு.

உரைத்திட்டதைலமென்னலயகாலசிங்கி யுத்தமேனசாஸ்திரத்திற்சிங்கிகோடி - நிரைத்திட்டயெந்நூலிலிதுதானென்று நேராகவிதிமுன்னேசிங்கியில்லை- கரைத்திட்டசூதத்திற்சிங்கிகுத்த தவளையைப்போற்றத்தளித்துப்புட்டுமாகும் விரைத்திட்டபுட்டெடுத்துச் சூடன் தீயில்வெதுப்பிவைத்துக்கரண்டியிலே யெண்ணைவிட்டே. 235

### வேதைக்கு பலசரக்கைத்தொட்டு அலையாதேவாதி! சூதத்தைப்பொன்போல் உருகும்படி கட்டு.

### வேதைகண்டால் சிவதரிசனையாம்.

எண்ணைவிட்டுவுருக்கியிதைக் குகைபிற்போட்டு விதமாகக்காரமிட்டு ஆட்டு ஆட்டு - கண்ணைவிட்டுப்பொன்போலவாடுஞ்சூதங் கையிலேசிக்கிறது வாழுந்தானும் - விண்ணையோட்டி காட்டினதிற் கொக்குமொக்கும் வேதைகண்டாற்சிவன்கண்டவாறுமாகும் - ஒண்ணைவிட்டுப்பலபலவாஞ் சரக்கைத்தொட்டு அலைகிறுருலகத்துவாதி தானே. 236

## இரசச்சுன்னம்.

### சூதச்சுன்னம்செய்ய 7 சுன்னக்குகை.

உலையாமற்சொல்லுகிறேன்மைந்தாகேளு வுருகிநின்றசூதத்தை சுண்ணமாகத் - தலையானகடனுறையைச்சுண்ணநீராற் சாதகமாயரைத்துதிக்கடுஞ்சுண்ணமாக்கி - நிலையானஅந்திடைக்கு இணங்கன்சீனம் நேரானகல்லுப்புச்சூடனோடு - கலையாகவெண்கருவாலரைத்துதிக்கொண்டு கடுஞ்சுண்ணமானபின்பு அதிலேகேளே. 237

கேளப்பாவைந்திலொன்று மால்தேவிபூரம் கெடியாகப்பூட்டியிதைவெண்கருவாலாட்டி - தாளப்பாவில்லைதட்டி யுலரப்போட்டுச் சமரசமாய்ச்சுண்ணத்திற் புடத்தைப்போடு - வாளப்பாவிதையெடுத்துக்குகைபோற்பண்ணி வளமாகமேல்மூடியொன்றுசெய்து - நாளப்பாவதற்குள்ளேசூதம்வைத்து நலமாகமூடியொரு சீலைசெய்யே. 238

செய்தபின்புதணல்போட்டுச்சேர்த்தவூது திரமாகரசமுள்ளே நீராகுமட்டும் - கைதபின்புநீரெடுத்துக்கழஞ்சிதூக்கிக் கனகமொருநாற்கழஞ்சிதூக்கியாட்டி - கொய்தபின்புரசத்தைக் கிளிபோற்கட்டிக் கொடுத்தபின்புமணியாகுங்கூறக்கேளு - நைதபின்புஏழுவகைக்குகையிலிட்டு நலமாகச்சில்லிட்டுச்சீலைசெய்யே 239

### 2-வது கவசம் உப்பும்சுண்ணாம்பும்.

சீலைசெய்துலரவைத்துஉப்பும் சுண்ணாம்பும சேர்த்துநன்றாய்ப் பொடியாக்கிக்கீழ்மேலிட்டு - சேலைசெய்து சட்டியிலேவைத்துமூடிக் குழிவெட்டிக்கெசப்புடமாய்ப் போடுபோடு - மாலைசெய்துவேளையிலேயீசானத்தில் ஆயிக்குப்பூசைபண்ணிப்பாத்திரங்கள்வைத்து - வாலைசெய்தபுருவமையத்தர்ச்சனைகள்பண்ணி ஆறவிட்டெடுத்துப்பார் சுன்னம்மாமே. 240

## கோசபீசமென்ற தங்கரசச்சுன்னம் முடிந்து விட்டது. இனி வாதம் அரைக்ஷணத்தில் முடிக்கலாம்.

---

சுண்ணமென்றகோசமொடு பீசமிரண்டுந் துடியாக நீறியதுகார மானல் - வன்னமென்னவேதையென்ன புடஞ்செயந்தா னென்ன வாகானகட்டென்ன செந்தூரமென்ன - யன்னமென்ன காமமென்ன வுலகமென்ன அரைக்ஷணத்தில்முடிக்கலா மீநேகங்கோடி - இன்னமெ ன்ன சொல்லுவது வாதத்துக் கிம்முறையே நூல்களெல்லா மெடுத்த வாறே. 241

சத்தி, நாதம், அண்டப், கோஜம் என்பது தங்கம்.
சிவம், விந்து, பிண்டம், பீஜம் என்பது ரசம். } R.M.K.

## தொட்டால் பழுக்கும் எனல்.

வாரானசுண்ணத்தில் வீரங் கார மணுவளவு சவ்வாது கூடக்கூ ட்டி - தாரூணசரக்கெடுத்துப் பொட்டதொன்று தடவியேவுருக்கவல் லோ மணிபோலாடும் - வேரூன்தொவ்வொன்றில் வேதைகோடி வெ ருவியதை தொந்திற்றூற்றுந்தங்கோடி - கூறூணதொவ்வொன்றில் கவரூகோடி கொள்கியதோர் பரிசனத்தில் வேதையாமே. 242

## தங்கரசக்குருவை கையால் பூசிக்கொண்டு தொட்டால் தொட்டதெல்லாம் தங்கம்.

சித்தர் சீவனத்துக்காக ஈசன் பார்வதிக்குச் சொன்ன முறை.

வேதையென்னவிக்குருவைக் கையாற்றூட்டு வேண்டியசீதா சரக்கையெல்லாங் கையில்வாங்கி - பாதையென்ன தொட்டதெல்லாந் தங்கமாகும் பரிசனமுந் தாம்பரமு மெட்டுமாடும் - காதையென்ன வொன்றுமில்லை லகுதான்மெத்த காணரிது குருசொல்லக் காணவே ணும் - பேதையென்ன சித்தருக்கு சீவனத்துக்காகப் பொற்சடை யோன் பார்வதிக்குப்புகழ்ந்திட்டாரே. 243

## தங்கரசச்சுன்னத்தால் உபரசம் 120-ம், நவலோகம் 9-ம் சுன்னம், பட்டவிடமெல்லாம் சுன்னமாகுமெனல்.

இட்டதொரு குருவோடே புனுகுவீரமிதமான சீனமிட்டுவைத தன்கொண்டு - நட்டதொருசரக்குகளிற்பூசியூத நலமான சுண்ணும்பா முபரசங்கள்தாதும் - பட்டதொருவிடங்களெல்லாஞ் சுண்ணைம்புக் காடாம் பரிவாக வொவ்வொன்றில் வேதைகோடி - விட்டதொரு சுண்ணம்பைத் தொந்திக்கேற வேதைகட்டு களங்கெல்லாம் வேதை யாமே. 244

• பரிசூதம்போனால் வாதமென்ற சொல்லில்லை.

ஆமப்பா சுண்ணம்பை விரித்து ஆட அரியபற்கு முடியாது அளவோயில்லை-வேமப்பா வண்டரண்டஞ் சுண்ணமாக வேதையென்ன பாதையென்ன வேர்தானேது-ஓமப்பா சூதமொடு தங்கம்போன ஊத்தமனே வாதமென்ற சொல்லும்போச்சு - காமப்பால் வித்தைக்குமிதுவேயாதி கரையில்லை பரிசூதகக் குருவிற்றனே. 245

## வெள்ளிரச சுண்ணக்குரு.

தாமென்ற வெள்ளியதுநாலுக்குள்ளே தாக்கியல்லோ சூதமென்ற சுண்ணமொன்று - வேமென்ற முன்போலேயுருக்கிவாங்கி விளங்கி நின்ற தங்கம்போற்புடத்தைப்போடு - கோமென்ற குருவாகும் வெள்ளிதானும் கொள்ளையோ கொள்ளையிதில் வெள்ளிவித்தை - வாமென்ற வெளிமட்டுந் தொட்டேயாடும் வளர்ந்துதே வெள்ளிவித்தைமைந்தா பாரே. 246

பாரப்பா சுக்குலந்தான் காணிபாய்ந்து பரிவாகச்சடமாச்ச சடத்தாற்கோடி - கோரப்பா வளந்தாற்போல் வாதத்திற்கு கோரணபீசமிதுகாணிபோதும் - தூரப்பா கடந்தேற கோடாகோடி சொற்கடந்த வெள்ளிபொன்னுமிரண்டுமாகும் - ஆரப்பா வறிவார்களிந்தப்போக்கை யுத்தமர்கள் கண்டிருப்பாருணர்வுதானே. 247

## வெள்ளிச்சுன்னத்தால் யாவும் மணியாகும்.

## சூதம் 16 மாத்து வெள்ளியாகும்.

உணர்வான ரசிதமென்ற சுன்னத்தோடே ஒக்கவேவீரமிட்டுக் காரங்கூட்டி - தணர்வானி சவ்வாது கூடப்போட்டுத் தாக்கினாற்சரக்கெல்லாமணிபோலாடும் - துணர்வான்சரக்கொன்றுவுபரசமும்லோகம் தொடச் சூதம்பதினாறுமாத்தாம்வெள்ளி - பணர்வான வெள்ளிவித்தை பார்க்கப்பார்க்க பரிவாகநாலுயுகந்துலையாவாறே. 248

## வெள்ளிச்சுன்னத்தால் பாஷாணம் 64-ம் உபரசங்கள் 120-ம் சுண்ணமாமெனல்.

துலையாதவெள்ளியென்ற சுண்ணத்தோடு கூட்டப்பா வீரமொடு புனுகுசீனம் - கலையான பாஷாணமும் பாசத்திற்பூசி கனலிலே போட்டேதச் சுண்ணமாகும் - நிலையான சுண்ணமொன்றிற் சுண்ணங்கோடி நிற்கயிடமற்றுடு மண்டமெல்லாம் - மலையான மேருவது சுண்ணமாகும் வாசனைக்கு மாமுதலாய்ச் சுண்ணமாமே. 249

## சூதம் கட்ட அறிந்தால் வாதம் சித்தி.

ஆமப்பா சுண்ணமொன்றிற் சுண்ணங்கோடி அந்தந்தச்சுண்ணத்தே வெள்ளிகோடி - ஓமப்பா வொவ்வொன்றிற்குருவோ கோடியோடுகிற பாதையென்னலுரைக்கப்போகா - நாமப்பாகண்ட மட்டும் நூலிற்சொன்னோம் நாதாக்கள் விரித்த நூற்றொகையோயில்லை - சோமப்பாவுண்டாக்கால் யோகசித்தி சூதத்தைக் கட்டறிந்தால் வாதம் சித்தே. 250

வாதத்துக்கு அரசன் சூதம். சூதமே சிவம், காயசித்தி, யோகத்திற்கு இதைவிட வேறில்லை.

## ஒரு ரசமணியினால் இந்த ஜெகமெல்லாம் சுழலும்.

ஜெகமெல்லாம் சுழற்ற ஒரே ரசமணி போதும்.

சித்தாக காயசித்திபண்ணுவிக்கும் ஜெகமெல்லாஞ் சுழற்றவொருகுளிகைபோதும்-மத்தாகும் வாயிலிட்டாற்கேசரியைக்காட்டும் வாதமென்ற சொல்லுக்கு மாசனாகும்-முத்தான குருவாகும் சுண்ணமாகும் மோட்டத்துக்கேறுகிற யேணியாகும் - கொத்தாகும் சிவமாகும் குறியைகாட்டும் குளிகையென்ற ரசத்தினுடகுணமதாமே. 251

## ரசமணி
## சாரணை ஒன்றுக்கு விபரம்.

ரசம் கட்டினாலும் முதல்முதல்பூநாகசத்தையூட்டினால்தான் அதற்கு பசியெடுக்கும். பின் மற்ற சத்துக்களை கபளீகரித்து சாப்பிடும் வல்லமை உண்டாமெனல்.

குணமானபொற் குருவில்சூதங்கட்டி கூட்டப்பா முந்திமுந்தி பூனாகசத்து - தணமான கெந்தகமுமப்பிரகசத்துந் தாக்கியல்லோ ஒவ்வொன்றாய் விடுவித்தபின்பு - மணமான உபரசங்கள்முத்திரண்டு பத்தும் வாகான பாஷாண மறுபத்தினாலும் - யெனமானதொவ்வொன்றாயூட்டி விடுவித்தா லென்மக்காள் சாரணைதானென்றுமாச்சே 252

**வாசியும் 12, ரசமணியும் 12. அதில் 7-வித ரசமணியும் சாரணைக்கு தகுந்தபடி பெயரும் இன்ன ரசமணிக்கு இன்ன எடை இருக்கவேண்டும் என்ற விபரமும் நிகண்டு 1200ல் காண்க.**

---

ஒன்றான சாரணைதான் சகடுமாச்சு உத்தமனே மூன்றானால் கெவனமாச்சு-கன்றான அஞ்சானால் கேசரியுமாச்சு கலந்துபிதுமேழானாலஷ்டமா சித்தி-தன்றான ஒன்பதல்லோ கமலினியுமாச்சு தவம்பெறவே பத்தல்லோ காமதேனு - ஒன்றான பதினைஞ்சு சொரூபமாச்சு கூறுமிந்தப்படி கொடுத்துவிடுவிப்பாமே. 253

விடுவிக்க முறைநீகேளு சொல்வேன்யானும் வேதாந்தச்சின்மயமா மூர்த்தி சொன்னார் - னெடுவிக்கு மூபாசங்கள் னாத்திரண்டுபத்தும் நேராகக்கொடுத்தல்லோ தீர்ந்தபின்பு-மடுவிக்கும் பாஷாணமறுபத்தினாலும் வரிசையாய்க்கொடுத்ததிலே தக்கப்பண்ணி - அடிவிக்கும்நவலோகமிட்டுத்தாண்டி அடுத்தாப்போல் ரெத்தினங்கள் ஒன்பதையுந் தாக்கே. 254

## கமலினி குளிகை மகிமை.

தாக்கியபின் குளிகையைப்பார் ரவிதோத்துப்போகுஞ் சதானித்தம் தசைனாத்ங்க ளதிலேதான்றும் - னோக்கிப பின்னொடிக்குளொரு கோடிகாதம் னோகாமற்கொண்டேகுங் கேசரத்தினுள்ளே தேக்கியபின் னட்டமா சித்தியாடுந் தெளிவாக நினைத்ததெல்லாங் கொடுக்கும்பாரு - தூக்கியபின் கமலினிதான் தீயையுண்ணுஞ் சுகமாக வாருதியை யுறுஞ்சும்பாரே. 255

### கமலினி குளிகையணிய பூரணத்தைக்காட்டும்.

**சதா நசநாதம் கிளம்பும். அஷ்டமாசித்தியாகும். நினைத்ததை யெல்லாங் கொடுக்கும். அக்கினியை யுண்ணும். சமுத்திர ஜலத்தைக் குடிக்கும்.**

---

உறுஞ்சுமே மாருதத்தைக் குளிகைவேக மோட்ட மென்றால் நிமைக்குள்ளே சங்கமோடும் - அறிஞ்சுமே மேல்னோக்கினு னுன்பணையைத்தாண்டி மடுக்கநின்ற பூரணத்தின் தமரைக்காட்டும் - மறிஞ்சு போய்மனத்தையெங்குமோடொட்டாது மும்மலமாம் லகிரிகொண்டாப்போலேயாகு மறிஞ்சுபோய் வாயுவெல்லா முள்ளே நிற்குமகத்தான கமலினியினாட்டுத்தானே. 256

மும்மலம்:— ஆணவம், மாய்கை, கன்மம், (காமியம்.)

## சொரூபமணி மகிமை.

ஆட்டான சொரூபமணியாட்டைக்கேளு அப்பனே வாயிலிடத் தேகமில்லை – மூட்டான கண்டிப்புத் தேம்போலா மூச்சற்றவிடம் போலே கத்தியோடும் – நீட்டான நொடிக்குள்ளே அனந்தவரையோ டும்·நிமைக்குள்ளே நூறுசங்கம் நேராய்வாங்கும் – ஓட்டானதமர் கடந்து பூரணத்திலோடு முத்தமனே ஆறுவரை பெறலாமே. 257

ஏறயிலேமணியோடு மூரசுகேட்கு மிதமான செயகண்டி சங்கங் கேட்குங் கூறயிலே வெகுதொனியாய்ப் பேரிகையுங்கேட்குங் குமரிய தோர் மேகத்தினிடியுங்கேட்குந் தேறையிலேயிடிவிழுந்த மின்னல்கா ணுந் திகைத்துப்போங் கண்மயங்கிச்செவிகேளாது– ஆறயிலே மனம் புத்திரெண்டுங்கெட்டு அகண்டத்தே தன்மயமாயடங்கிப்போமே. 258

அடங்கியதோர் நாதாக்கள் லெக்கமில்லை அப்பனே பொன்பெற வந்தோரில்லை – முடங்கியதோர் சுழிமுனையின் வாசிபோல முக்குறி யுங்கடந்துநின்ற கேசரியைப்போல - துடங்கியதோர் சொரூபமணி வாங்கவாங்க சொல்லுவார் சிலம்பொலிதானுண்டென்று - தடங்கி யதோர் சிலம்பொலியில் புக்கிவந்த சாதகரைக் கண்டிலேன் கண்டி லேனே. 259

கண்டிலேன் சொரூபமணி, கமலினிதானிரண்டும் காரணமாயெனை யாண்ட சின்மயத்திற்கல்லாற் கண்டிலேன் கைலாசம் பரம்பரைக்கே யல்லாய் சாதகமாய் மற்றோர்கள் மரபிலில்லை - ஒண்டிலேனிக்குளிகை திருமூலவற்க முத்தமனே சனகாதி பதஞ்சலிமா முனியு - மண்டிலே நம்முடைய மரபுக்கல்லா லாச்சரியம் யாருக்குமில்லைகாணே. 260

காணப்பாயே மூபேர் மரபுக்குள்ளே கைகடந்து சிலம்பொலியைக் கண்டோரில்லை - பூணப்பாமூலருக்கு ஞலாம்பேரன் போயல்லோ சிலம்பொலியில் சொக்கிவந்தார் – ஊணப்பா சமாதியிலே மனத்தை க்கட்டி ஓடாமல் வாசிதன்னைச்சுழியிலேத்தி– நாணப்பா துரும்பாக்கி க்குளிகைபோட்டு சொற்பெரிய பூரணத்திற்பழகிடீரே. 261

## தீட்சை என்பது.

வாசியை சுழியிலேத்திப்பழகும் விதம்:—

உதயத்திலெழுந்திருந்து சுழிமுனையில் மனதை வைத்து அதாவது உச்சிக்குங்கீழ் உண்ணாக்குக்கும்மேல் சிருதமர்வழி மனதைச்செலுத்தி வாசியை ஓம் என்ற விசையதனலுண்ணியேற்று.] அகாரமாகியசிவம் உகாரமாகிய சத்தியுடன் சேர்ந்து மகாரமென்ற மவுனமாகிவிடும். அகாரமுடன் உகாரம் மவ்விற்பாய்ந் தோன்றாய் கலக்க பிரணவமு மாச்சு. இதுவே தீக்ஷை ஓங்காரம் நாதாக்கள்மறைத்தது. அகாரம் மூலத்தில் நிற்கும். உகாரம் கண்டத்தில் நிற்கும். மகாரம் மனோன் மணியில் நிற்கும். (ஆர். எம். கே - வேலுசாமி. வைத்தியர் பழனி.)

## குளிகை சாரணை செய்யும்போது சத்தை விடுவிக்கும் புடராஜன்.

பழகவே குளிகைக்கு சாரணையைக்கேளு பாங்கான புடராஜன் பரிவாய்ப்பண்ணு - தளகவே சதிரகள்ளி வுப்பதொன்று தன்னேடே லவணமஞ்சு காரம்ரெண்டு - யுளகவே யெவாச்சாரம் சத்திச்சாரம் அதினேடு சவுக்காரம் காசிச்சாரம் - மிளகவே நவாச்சாரம் பிடாலவண மித்தோடு பூனீறுங்கூடப்போடே. 262.

போடப்பா சவ்வீரங்கெந்தகமுஞ் சிலையும் புகழான தாளகமும் லிங்கம், வெள்ளை-நீடப்பா கடல்நுரையும் வளகிலோடு நேராக அஞ்சுவகை மூத்திரத்தினுப்பு - மூடப்பாயிதுவெல்லாம் சமனுய்க்கூட்டி உத்தமனே பீங்கானிலரைத்துவைத்து - கூடப்பா குளிகையிட்டுச்சத்துக்களையிட்டு குழறிநன்ருயுருகிறதைக் குறிப்பாய்ப்பாரே. 263

(5·வகைஅமுரி விபரம்:-மனிதன், பசு, யானை, குதிரை, கழுதை.)

## சூதத்தில் ஊட்டிய சத்தை கக்கியதுக்கு அடையாளம் சூதம்தன் இடையே இருக்கவேண்டுமெனல்.

10 எடை சூதத்துக்கு 10 எடை சத்தையூட்டி கக்க வைக்க புடமென்ற மருந்து 1 போடவேண்டும். புடம் என்ற மருந்து 10-க்கு 1 போடாவிட்டால் சாப்பிட்ட சத்தை கக்காதெனல்.

குறிப்பாக நின்றுருகும் பருவம்பார்த்து குமட்டியதிற்புடமே போட்டுக்கக்கப்பண்ணு - நெறிவாக கக்கின துக்கடையாளந்தான் நேராகச் சூதத்தினிடையே நிற்கும்- கறிப்பாக மறிந்தாப்போல் சாரணையின் மார்க்கம் கையறிந்து வகையறிந்து பண்ணித்தேறு- மறிப்பாகச் சத்துநின்ருல் பின்பொருக்கால்சூட்டு வாகாத வொவ்வொன்ருய்க்கழித்திடாயே. 264

ஒவ்வொன்ருய்க் கழத்திவிட்டு வுபசாரமுஞ்சரக்கு மூட்டியல்லோ நவலோகம் நவரெத்தினங்களெல்லாங் - தவ்வொன்ருயதைவிட்டுத்தீர்ந்தாயானுல் காணுமாக்கள் சாரணை தானென்றேயாச்சு - தவ்வொன்ருய் வெளிகடக்கும் பூரணத்திலேற்றுஞ் சாதகமாய் வாய்த்தேருல்காயசித்தியாக்தும் - ஒவ்வொன்ருய் மவுனத்தில் கேசரியைக்காட்டும் மகத்தான குளிகை செய்ய மார்க்கங்கேளே. 265

## நோட்:—

சட்டமுனி நிகண்டு 1200ல் குகையும் குகைக்குள் பூசும் மருந்தும் ஒவ்வொரு மணிக்கு எடையும் இத்தனை தரம் சத்தூட்டினல் இன்னபெயரென்றும் சூதம் கட்டும் விதமும் கட்டிய ரசம் 10 எடை குகையில் வைத்துருகும்போது சமன் பூநாக சத்தைக்கோடு. இரண்டும் சேர்ந்துருகும்போது புடமென்ற மருந்து I கோடுயேன்று விரிவாய் சோல்லப்பட்டிருக்கிறதை பார்த்துச்செய்யவும். (R.M.K.)

போகர் 7000, 2-ங்காண்டத்தில் ரசமணிக்கு சத்தூட்டும் சாரணை விபரமும் குகையும் குகைக்குள் பூசும் மருந்துகளும் புடலக்ஷணங்களும் வெகு விமரிசையாய் சொல்லப்பட்டிருகிறது. (R.M.K.)

கொங்கணர் 3000, 2-ங்காண்டத்தில் 12 வித ரசமணியின் பெயரும் அதின் மகிமையும் புகழத்தக்கவிதமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. (R.M.K.)

## கிராவணம்.

### இந்த கிருவணம் சத்தில்சேர்த்து சூதத்துக்கு கொடுக்காவிடில் சூதம் சத்துக்களை உட்கொள்ளாதெனல்.

மார்க்கமென்ன கிராவணத்தைச் சொல்வேன்யானும் மனுஷனுடு ஆடு பன்றி கோழி காக்காய் காற்கமென்ன மயிலோடு குதிரையேழுங் கலங்காமலதினுடைய பிச்செடுத்து - ஆற்கமென்ன ஆனையொடு குதிரைமாடு அப்பனே மனுஷனுட குறும்பிவாங்கு- சேற்கமென்ன வகையொன்று காசுதூக்கு செப்புகிறேன் மருந்துயின்னம் செப்புகிறேனே. 266

செப்புகிறேன் தேன்வெண்ணை குன்றிகாரங் திறமானமெழுகோடு சாரங்கூட - ஒப்புகிறேன் வெடியுப்பு துரிசிச்சுன்னம் உத்தமனே கற்பூரம்புனுகுகூட - நப்புகிறேன் நாதவிந்து வாய்நீரொக்க நலமாக வகைவகைக்குக் காசுபோடு - கொப்புகிறேன் தாளகத்தால் வங்கப்பற்பங் குலாவியதோர் மனேசிலையால் யியஞ்செய்யே, 267

## தங்கபற்பம்.

### (தங்கத்தை நீற்ற 3-வகை பற்பம். இது நல்ல முறை.)

செய்யப்பா கெந்தகத்தால் நாகபற்பங் திறமாகவிதுமூன்று மூன்றுகாசு - வையப்பாயிதினேடே தங்கமொன்று மாட்டியிதில் வெண்கருவாலரைத்துக்கட்டி - கையப்பா கரியோட்டி ஊதத்தங்கம் கலந்துகொண்டு பற்பமாய் நீறிப்போகும் - நையப்பா யிதைக்கூட்டி நன்றுயாட்டி நலமான நல்லெண்ணை சேரைவாரே. 268

வாரப்பாயிதுக்குள்ளே வசம்புச்சாறு வாகாகக்கால்படி தான் விட்டு நன்றாய் - நேரப்பா காச்சியிதை மெழுகுபோல நேர்பாக மெடுத்து வைப்பாய் பீங்கானுக்குள் - பாரப்பாயிதின்பேரு கிராவணந்தானென்பார் பாங்கான சாரணைக்கு சத்தில் தொட்டு - ஓரப்பா கொடுத்தாலேசூதங்கொள்ளும்மூட்ட ாட்டால் சத்துக்களையுட்கொள்ளாதே 269

ரசத்தில் கிராவணத்தை சத்துடன் சேர்த்து போடாவிட்டால் சத்து மிதக்கும். ரசம் உள்ளே வாங்கிக்கொள்ளாது. உட்சென்று வாங்கியபின் புடம் ஒன்று போடவேண்டுமெனல்.

கொள்ளாட்டால் சாரணைக்கு பிலமோயில்லை கோபித்துச்சூதமது உட்கொள்ளாது – அள்ளாட்டால் களங்கோடு செந்தூரங்கள் அணையாது லோகத்தின்மேலே நிற்கும் - நள்ளாட்டால் கிராவணத்தைத்தொட்டுப்போட நலம்பெரியமலை முதலாயுள்ளே வாங்கும் - தள்ளாட்டால் கிராவணத்தை விட்டாயானால் சாங்கமாய் வேதைக்கு பிலமும் போச்சே. 270

எல்லாம் கிராவுணத்திலிருக்கிறது. ஜாக்கிருதை! கிராவணத்தை விட்டால் வேதையில்லை.

போச்சுதென்று விட்டாக்கால் சாரணையைத்தானும் புகழான சித்தரென்ற பேரும்போச்சு - ஆச்சென்று கிராவணத்தை விட்டாயானால் ஆடுகிற வேதையுட பிலமும் போச்சு - பீச்சென்று சுண்ணப்பை விட்டாயானால் நேரான செயநீருங்குருவும் போச்சு - போச்சென்று வாதத்தைக்கெட்டுச் சுட்டால் பேயபிடித்த நாய்போல பிரளுவாயே. 271

## நாகக்குருசெய்.

பிசளாமல் லகுவிலே சொல்லக்கேளு பேரான வெண்காரம் பலந்தானென்று- மசளாமல் அண்டத்தோற் பலந்தானென்று மாட்டி ரெண்டுஞ் சதிரகள்ளிப்பாலாலாட்டி – திரளாமல் திரண்டதொரு பூனீறுபலந்தான் சேரிதிலேசாரமொரு பலந்தானீவு - மசளாமலரைக் கையிலே மெழுகாம்ரெண்டும் அப்பிதனை நாகமொருபலந்தான்ரண்டே

2-வது கவசம் வெங்காரம் அண்டத்தோல்.

இரண்டான அண்டத்தோல்மேலே கட்டு நேராகச்சுண்ணம்புச்சீலை சுத்தி – திண்டாகப்புடம்போட நாகங்கட்டுந் தகர்ந்தக்கால் தளுக்கெல்லா மொளியாய்க்காணும் - பண்டாக முன்கவசம் வாங்கிப்போட்டு பாங்கான பூனீறுபலந்தானென்று - நன்றாச்சாரமொன்று மால்தேவியொன்று நாட்டியரை மெழுகாகுங்கவசங்கட்டே. 273

## நாகக்கட்டு.

பூநீர் நவாச்சாரம் தாளகம் வகைக்கு 1 பலஞ் சேர்த்தரைக்க மெழுகாகும். இதால் 5 புகையடங்கி நாகம் கட்டும்.

கட்டியல்லோ சீலைசெய்து புடத்தைப்போட கைவிட்டபுகையநு சுங்கட்டிப்போகும் - ஓட்டியல்லோ யிதையெடுத்து வேதைசொல்வே னுருக்கி யல்லோ தங்கமது கழஞ்சிதானும் – நெட்டியல்லோ நாக மொருகழஞ்சி வாங்கிநேராக வெண்காரம் பூசித்தாக்கு - குட்டியல் லோபோட்டெடுத்த குரங்குபோல குமுறாமல் நாகமிதிற்கூடிப்போமே 274

## நாகக்குருவில் வேதை.

கூடிநின்று உருகையிலே வீரம்போடு குறிப்பாக உட்கொண்டு கலந்துபோகும் - வாடிநின்று மயங்காதே வெள்ளி செம்பில் மாட்டிடு வாய் பத்திலொன்று தங்கமாகும் - நாடிநின்று யிந்தயெடை லிங்கம் போட்டால் நலமான வெள்ளி செம்பிலெட்டுங்காணும் - ஓடிநின்று யிதற்குள்ளே சரக்கையூட்ட உத்தமனே கோடி கவரோடுந்தானே. 275

உட்சென்று கலக்காவிடில் முன் கிராவணத்தை சேர்த்து ப்போடவேண்டும். [R. M. K.]

## அயச்சத்து.

பூநீர் சார ஜெயநீரால் அயம் தண்ணிபோலுருகும்.

ஓடயின்னுஞ் சுருக்காக கருவைச்சொல்வேன் உத்தமனே சார மொடு பூனீர்கூட்டி - நாடியிதை அரைத்துவைக்க செயநீராகும் நல மான யிந்நீரில் கருவைக்கேளு - ஊடயிதில் தாளகமுங் காரம்வீர முத்தமனே துரிசிபிதிணனும் போட்டு - ஆடயிதிற் செயநீரைவிட்டு ஆட்டி அரைப்பொடிதான் பலமொன்றில் பிசறியூதே. 276

ஷை 4 சரக்கும் இரும்புபொடிக்கு சமனுக சேர்த்துருக்கவும். இப்படியே மூன்று தரம் செய்யவும். [R.M.K.]

## அயச்சத்து 1, முன் கட்டிய நாகத்தில் சபுன் தங்கம் சேர்ந்தது 1, சேர்த்துருக்கி களங்காக்கி வேதையிடல்.

ஊதையிலே யுருகியொரு மணியுமாகு முத்தமனே பொன்போலே வர்ணங்காணும் - பாதையிலே யிப்படித்தான் முக்காலுது பரிவாகப் பொன்போலே கண்விட்டாடும் - வேதையிலே முந்நாகந் தங்கம்ரெண் டும் விளங்கியே யிரும்பிடைக்குக் கூடத்தாக்கு - பாதையிலே வீர மிட்டு லிங்கம்போடு மைந்தனே களங்காகும் வேதைகேளே. 277

வீரம் லிங்கம் சமனுகவோ நாலுக்கொன்றே சேர்த்து கண்டுகொள்ளவும். (R. M. K.)

உன் யோகத்தை பரீக்ஷி. தரித்திரனேயானுக்கால் தவறிப்போகும்.

## காந்த சத்து.

கேளப்பா நூத்தொன்று நவலோகத்தோடுங் கெடியான மாத்தென்ன பனிரெண்டாகும் - நாளப்பா செல்லாது யிந்தப்போக்கு நலமாக யின்னமொரு போக்குச்சொல்வேன் - வேளப்பா காந்தத்தை யிரும்புபோலூது விளங்கியதோர் காந்தமெல்லாஞ் சத்தாய் நிற்குந் தாளப்பா பிடித்துநின்றால் குருதான் சொல்வார் தரித்திரனேயானுக் கால் தவறிப்போமே. 278

## காந்த சத்து வேதை.

தவறாமற் காந்தமென்ற சத்துக்குள்ளே தாக்கப்பா தங்கமொன்று நாகமொன்று - உவறாமற் காந்தத்தினிடையேபோட்டு உருகி யொன்றாய் நிற்கையிலே கெந்தகபூ ஞ்சூதம் - நவறாக அந்திடைக்கு அரைத்துப்போடு நலமாக உட்கொண்டு கவ்வுமாகும் - கவறாக மெடுத்திதனை நவலோகத்தில் காட்டு யிருனூத்தொன்று தங்கமாமே. 279

## தங்கம் செய்வது அரிதல்ல. ஜெகத்தில் சாகாமலிருக்கவேண்டும். அதற்கு இம்முறையே செய்தருந்து.

தங்கமோ செய்வது தானரிதோவல்ல சாதகமாய் களங்கெடுத்துக்கெந்தகத்தைக் கூட்டி - அங்கமோ அரைத்திதனை பொற்றலையின் சாற்றில் அளவாகப்புடம்போட் செந்தூரமாகும் - பங்கமோவாராமல் தினம் பணந்தானுண்ணு பளபளக்குமுடம்பெல்லா முகமோ காந்தி, சிங்கமோ யிவனென்பார் நவையோ மாருஞ் செகத்திலே சாகாமலிருப்பான்தானே. 280

நல்ல புத்தியில்லையே! பெண்ணாசைவிடவில்லையே! பெண்குழியில் விழுகிறாயே! எப்படி கற்பம் சித்திக்கும்.

## சாகாமலிருந்தால் அவனே வாதி.

சாகாமலி நந்தாலே அவனேவாதி சஞ்சாரத்தாலலேந்து செத்துப்போனல் - வேகாதநாலேது அறிவங்கேது வெளியோடே கூடுகிற மனமங்கேது - ஆகாத புத்தியினல்வாதி கெட்டான் அம்மம்மா பெண்ணாசைக்குழியில் வீழ்ந்தான் - போகாமல் வாசினதான் சுத்திக்கொண்டு பொன்னாசை பெண்ணாசை ஆச்சுதானே. 281

## ஊஷரத்தால் பொன்னுமாகும். அறிவேகுரு.

தானென்ற ஊஷரத்தால் சலவைபண்ணித் தரித்திடையிலாபரணம் பூண்டுகொண்டு - வேனென்ற பெண்ணுடைய அதரந்தோய்த்து வேசிக்குப்பொன் கொடுத்து திருட்டுச்செய்து - கானென்ற திரோதாயி மயக்கத்திற்நெங்கிக் கிலந்திறந்த மாடுகளே சொல்லக்கேளு வானென்ற ஊஷரத்தில் பொன்னுமாகு மகத்தான மார்க்கமிது மருவிப்பாரே 282

[ஊஷரம் என்பது பூநீர்.]

## பூநீர் 1, சாரம் 1 அரைக்க ஜெயநீராகும். அதில் கெந்தக செம்பு.

மருவியின்னஞ் சுளுவாக சொல்லக்கேளு வாய்திறந்து சொல்லார்களிந்தப்போக்கை - அருவியின்னம் பூநீருஞ்சுன்னத்தோடே அப்பனே சாரமிட்டு அரைக்கத்தண்ணீர்-கருவிலிந்த நீருக்குள் கெந்தகத்தைப்போட்டு காச்சப்பா கரண்டியிலே வத்தமட்டுந் - தருவியிந்த கரண்டியைத்தான் பனியில்வைக்கச் சாதகமாய் ஜெயநீராயூறுந்தானே. 283

### நோட்:—

பூநீர் தை மாச தசமியில் எடுத்தவுடன் நவாச்சாரம் சேர்த்து அரைத்தால் தான் நீருண்டாகும். மற்ற மாதங்களில் எடுத்த பூநீரில் நீர்பிரியாது. 'தசமியில் எடுத்த பிண்டம் தப்பில் சுத்தகெங்கை யாகாவாறே' என்று அகஸ்தியர் பரிபாஷை *500*ல் சொல்லப்பட்டிருக்கிறது. விளைவுபூநீரே சுன்னமாயிருப்பதால் பச்சையாகவே சேர்க்கலாம். நேரிந்தவர்கள் சுன்னஞ்செய்து பார்க்கவும்.

( R. M. K. )

ஊறியதோர் ஜெயநீரில் முன்சேரைவார்த்து உத்தமனே வைத்து
நன்றாய்க் காய்ச்சு நீயும் - மாறியதோர் பனியில்வைக்க ஜெயநீராகு
மைந்தனே அஞ்சுகாமிப்படியே காச்சி - கூறியதோர் கெந்தகத்தை
யெடுத்துக்கொண்டு கொள்கியொரு பலந்நிறுத்துக் கல்வத்திட்டுத் -
தேரியதோர் காரமொரு காசிடைதான் போட்டுச் சிறுகுட்டித்தக்
காளிப்பழமும்போடே. 284

(காரம் என்பது இவ்விடத்தில் வெங்காரம்)

## கெந்தக செம்பு க்ஷணத்தில் வேதை.

பழம்போடு மூன்றுநாள் மூன்றுசேரை பாங்காக வரைத்து
நன்றாய்ப் பணம்போற்கட்டி – களம்போடு உலர்ந்தபின்பெடுத்துக்
கொண்டு காரியமொருபலத்தி லொவ்வொன்றாக - உளம்போடு புறு
கையிலே கொடுத்து நன்றாயுருகியெல்லாம் வாங்கினபின்னெடுத்து
க்கொண்டு - தளம்போடு பியமிட்டு ஊதிப்போட சார்வான கெந்தக
ந்தான் செம்புமாமே. 285

## கெந்தகச்செம்பால்தங்கம்செம்புமாகும்.

செம்பாக கெந்தகந்தான் பலநூற்குள்ளே செப்புவார் செப்புவார்
திருக்குமெத்த-செம்பானால் கெந்தகந்தான்வேதைமாற்றம்க்ஷணபேதி
கணபேதி பரிசபேதி செம்பானால்நவலோகஞ் செம்புமாகும்சேர்த்த
விடம்தேய்த்தவிடமெல்லாம் பொன்னாம் - செம்பானால் திசைக்கொ
ன்றுதங்கத்தூட்டி சேர்ந்தேறும் வாறுதொரந்தம் தங்கச்செம்பே 286

## தங்கச்செம்பால் தேகம் பொன்னாம்.

## வெள்ளிபத்து மாத்து.

தங்கமது கடைசியிலே யானசெம்பைத் தாக்கப்பா நூற்றிடை
யாம் வெள்ளிக்கொன்று-தங்கமாம் வெள்ளியது-பத்தும்பத்தும் தப்
பாது கெந்தகத்தின் வேதைதானும் - தங்கமது செம்பானால் தேகம்
பொன்னாம் தாக்கிபுண்ணத் தாக்கிபுண்ணக் கவனமாகும் - தங்கமது
செம்பாகிலோடுந் தூரம் க்ஷணத்திலே மறிக்குகிறேன் பாருபாரே. 287

## கெந்தகச்செம்பால் இரும்பு தங்கமாகும்.

மறிக்கிறேனஞ்சாக மூணுமாக மக்களே யெட்டாக ஆறுமாகப்
பிறிக்கிறேனேழாக ஒன்பதாக போன கெந்தகத்தின் செம்பைத்
தானு - முறிக்கிறேன் செப்பெடுத்து செம்பிலீந்தி மூட்டப்பா
வெள்ளியிலே அஞ்சுமாத்து - நெறிக்கிறேன் செம்பெடுத்தாயி நம்பி
லீயமேராக நாலஞ்சு மாத்துதானே. 288

## கெந்திச்செம்பால் ரசகுளிகை.

மாத்தான செம்பெடுத்து யீயத்தூட்ட வழமாக மாத்தேழு காணுங்காணு - மூத்தான செம்பெடுத்து நாகத்தூட்ட உத்தமனே யொன்பதுதான் மாத்துக்காணுங் - காத்தான வாசனைக்குக் கெந்திச் செம்பு, காணியொரு கோடிக்காங் கோடிகோடி - கோத்தான குளி கைக்குக் ×கக்கிஷமாகுங் கொள்கியிந்த கெந்திசத்தால் குளிகை கட்டே 289

ஒரு ஏட்டில்—காரசத்தால்

× கக்கிஷம் } பிரயாசம். (Hardness Difficulty)
கக்கசம் } ரசம் ஓட எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் முடியாது. கஷ்டப்பட்டு ஓடவும் முடியாது.

## சத்தியாகி கெந்திசெம்பால் ஈசனாகிய ரசம் கட்டும் மகிமை.

கட்டினல் குளிகையது யசையாதப்பா கட்டாட்டால் வண்டு போலூர்ந்து ஓடும் - நெட்டினற் கெந்தகமோ சத்திசத்தி நேரான ரசமென்ன ஈசன்ஈசன் - ஓட்டின லொன்றேடொன்று சேர்ந்து ஓடாமல் கரடத்தே கட்டிப்போகுங் - தேட்டினற் றெட்டொட்டாங் கெந்திச் செம்பு திறமான சத்தியுட திறமை தானே 290

கரடு = கரடுமுரடு, ஒழுங்கின்மை = வளர்ச்சியற்றது
கரடு = யானையின் மதவெரி.

கரடம் = யானை மதம்பாய் சுவடு. உரை:—
யானைக்கவுளினின்றும் மதம் பாயும் துவாரம்.

கரடத்தே = யானையின் மதவெரி அற்று

கரடத்தே கட்டிப்போகும் என்பதற்கு உரை = கோனல், முருகல், கரடு முரடில்லாமல் சூதமென்ற யானையின் மதவெரி அடங்கி கெந்தகச்செம்புடன் ரசம் நன்றாய்க் கலந்து கட்டும் எனல்

---

தேட்டினல் = தெளிவானல் சூதமென்ற யானையின் மதவெரி யெல்லாம் அடங்கி கட்டுப்படுமுன் கெந்திச்செம்புடன் ரசம் கலந்துருகி தெளிந்தபிறகுங்கூட ரசம் தெளிந் துருகும் சமயத்திலும் ரசம் வஞ்சித்து ஏமாற்றி விட்டு ஓடப்பார்த்தாலும் (றெட்டொட்டாங் கெந்திசெம்பு) கெந்திச்செம்பை ஏமாற்றிவிட்டு ஓடவிடாமல்கெந்திசெம்பு ரசத்தை கட்டிவிடும்.

ஏமாறுத கெந்திச்செம்பு ரசத்தை ஓடவிடாமல் கட்டிவிடும்.
தெட்டிதல் = வஞ்சித்தல். தெட்டவர் = தெளிந்தவர்.

---

ரசம் கெந்திச்செம்பை ஏமாற்றமுடியாது. ரசம் வஞ்சித்து ஓடப்பார்த்தாலும் கெந்திச்செம்பின் வல்லமையால் ஓட முடியாமல் அடங்கிவிடும் (ரசம் கட்டிவிடும்) கெந்திச் செம்பை ஏமாற்றிவிட்டு ரசம் ஓட முடியாது.

---

மதம் பிடித்த யானைபோல் சூதம் மதங்கொண்டு, மதங்கொண்ட யானை கண்தெரியாமல் ஓடுவதுபோல் சூதமென்ற யானை மதவெறி கொண்டு ஓடினாலும், மதவெறியாலும் ஓடமுடியாதபடி விந்துவென்ற ரசமானது நாதமாகிய கெந்தியின் காமகலையால் மயங்கி கட்டுண்டுபோம்.

ஒரு வார்த்தையில் இவ்வளவு உரை அடங்கியிருக்கிறது கவனிக்கவும்.

---

உரை எழுதியவர்:—

## ராஜயோகி, ஆர். எம். கே. வேலுசாமி.

### வைத்திய ஆசிரியர், பழனி.

---

## கெந்தக செப்பு செந்தூரம்

திறமையொத்த கெந்தகமாஞ் செம்பதொன்று சேரிதிலே காந்த மொன்று தங்கமொன்று - நிரமையொத்துருக்கி நன்றாய் மணி யாய்வாங்கி நேராக யிந்திடைக்குச் சூதங்கூட்டி - யரவை யொத்த கெந்தகமோ ரெட்டிப்பிட்டு வரையப்பா பொற்றிலையின் சாற்றினாலே குரவையொத்த அயக்குப்பிக்குள்ளே யிட்டு கொடியதொரு வாலு கையில் தீயை மூட்டே 291

## 1000-க்கு 1-ல் நவலோகம் தங்கமாகும்.

மூட்டியல்லோ செந்தூர பதத்தைப் பார்த்து முகுந்தனுட தங்கைக்குப் பூசை செய்து - நாட்டியல்லோ யீசானம் திருவாணிக்கு நலமான பூசை செய்து வாங்கிக்கொண்டு ஆட்டியல்லோ சகஸ்திரத் துக்கொன்றே வேதை யப்பனே நவலோகத்தோடும் பாரு - நீட்டியல் லோ வீசமிடை மண்டலந்தா னுண்ண நேரான கதிர்போலத் தேக மாமே 292

## கெந்தகசெம்பு செந்தூரம் சாப்பிட

### கற்பாந்த காலம் வாழலாம் தன்னுக்குள் ஆரூதாரம் தெரிசனையாகும்.

கதிர்போலத்தேகமாங் கற்பாந்தகாலங் கழிகிறதோர் வாசியெல்லாஞ் சுழியிலேருஞ் - கதிர்போல நான்முகனும் கைவசமாஞ்சதாநித்தம் நாதாந்த வெளியில் நிற்கு - மெதிர்போலக் கேசரிதான் முன்னேகாணு மேறலாஞ் சக்கரங்களாரும் பார்த்து - முதிர்போல மனமடங்கி வாசனையைத்தள்ளு முத்தான தேவிபுட நாதந்தானே 293

நாதமென்ற செந்தூரம் லோகத்தூட்ட நலம்பெறவே செம்பாகும் பத்துத் தொந்தம் - நேதமென்ற கடசியிட்ட தொந்தம் வாங்கி நேரப்பா வெள்ளியிலே நூற்றுக்கொன்று - வாதமென்ற கெந்தியுட தொந்தஞ் சொல்ல வாயேது யுபரசத்தி லிப்படியே யேறுங் - காதமென்றுற் சொல்லயிலாஞ் சத்தகோடி கடந்து நின்ற ஓட்டத்தை கண்டிலேனே 294

### 283-வது பாட்டின் பூநீர்

### செயநீரால்வெள்ளைமெழுகும் அதால் தாளகமெழுகும்.

கண்டிலேன் கெந்தகந்தான் கொதித்த நீரிற் கைமுறையாய் வெள்ளையிட்டு கொதிக்க வைத்துத் - தண்டிலே நிப்படித்தான் எழுதிராங் காச்சி தனையெடுத்து அதிற்பாதி துரிசுச் சுன்னம் - பண்டிலேனிதையரைத்து மெழுகாய் பண்ணி பாங்கான தாளகத்தில் கவசங்கட்டி-யொண்டிலேன் கரியோட்டில் வாட்டக்கேளு யுத்தமனே மால்தேவி மெழுகு மாமே 295

### தாளகமெழுகால் வீரமெழுகும் அதால் துருசுமெழுகும்

மெழுகான மால்தேவி வீரத்திற் பூசி மெத்தெனவே கரியோட்டில் வாட்டுவாட்டு - வொழுகாக வீரமது மெழுகுமாகு முத்தமனே யிம்மெழுகை துரிசுக்கப்பி - நளுகாக வாட்டயிலே துரிசு தானும் நலமான வெண்ணெயைப்போல் மெழுகுமாகு - மளுகாமற் சொல்லுகிறேன் மக்காள் வாத மாதியென்ற பரியெடுத்துத் தகடு போடே 296

(பரி என்பது தங்கம்.)

### துருசுமெழுகால் தங்கம் குருவாகி சூதம் கட்டுதல்.

தகட்டிலே துரிசுடய மெழுகைப் பூசி சாதகமா யண்டத்தோல் கீழ்மேலிட்டு - முகட்டிலே புடம்போடத் தங்கம் நீரு மூதண்டக்குருவாச்சு பரிதானப்பா-பகட்டிலே னிக்குருவை பூசிவாட்டப் பாங்கான சரக்கெல்லாம் வேதையாகும் - நகட்டிலே பரிக்குருவால்ச் சூதங்கட்டும் நலமான சூதகத்தி னுண்மை கேளே 297

## தங்க இரச சுன்னம்.

ஆண்மையென்ற சூதத்திற் றங்கங் கூட்டி யடவாக யுருக்கி யதை வில்லை வார்த்து - வளமை யென்ற வீரமொடு பூரஞ்சூதம் வகையான புனுகோடு மாலின்றேவி - கெளமையென்ற முலைப்பாலா லரைத்துப் பூசிக் கெடியாக யேழுசுன்னக் குகையில் வைத்து தளமையென்றிச் சீலை செய்து புடத்தைப் போடத் தவளம்போற் குருவாகுஞ் சூதந்தானே 298

## ஜகத்தோரை மயக்குகின்ற தங்க ரசசுன்ன குரு.

குருவான சூதத்திற் சவ்வாது காரங் கூட்டியல்லோ மத்தித்துக் காதில் வைத்து - மருவாக யிதையெடுத்துச் சரக்கைத்தொட்டு மாட்டிடுவாய் நூற்றொன்று நவலோகத்திற் - திருவாக தசமாத்தாஞ் சேர்த்து பாரு செகத்தோரை மயக்குகின்ற மாற்கமைந்தா - தருவாகுங் குருவாலே வித்தை கோடி சாதகமா யிருந்தவற்குத் தெரியுந் தானே 299

## தங்கரச சுன்னத்தால் துருசுகுரு செய்யும் விதம்.

தெரியவே குருவோடு வீரங்கூட்டி சிறப்பாக வெண்கருவாலரைத்து நன்றாய்ப் - பரியவே துரிசியின் மேலேபூசிப் பாங்காக வேழு சுன்னக் குகையில் வைத்து - நெரியவே சீலை செய்து குருவாலே புடத்தைப் போடு நிற்மலம்போல் குருவாகுந் துரிசுதானு - மரியவே யிதிலாடுமாட்டம் யறிஞ்சமட்டும் சொல்லுகிறேன் நன்றாய்கேளே 300

## துருசு சுன்னத்தால் ஸ்தம்பன ரசமணி. செய்யும்விதம்.

நன்றான குருப்பட்டால் சூதங்கட்டும் நலமான சரக்கெல்லாம் வாசனைக்குச் சாகு - மொன்றான தொவ்வொன்றில் வேதை கோடியோடுமே வெகுதூரந் துரிசுவேகம் - கன்றான துரிசியினால் தங்கம் நீரும் காட்டு முன்னே சூதமது மணிபோலாடுந் - தன்றானகுளிகையுமாந் தம்பனமுமாகும் தாக்கினாலுருக்கினமாந் தாக்கு தாக்கே 301

## 295-வது பாட்டின் வெள்ளைமெழுகும் தாளகமெழுகும் பெருமையைப்பேச நாவோயில்லே.

தாக்கினுல் வெள்ளையுட மெழுகு வேதை சதகோடி விரிந்தாடு மப்பா கேளு - பாக்கினுற் ருளகமு மிப்படியே யாடும் வாய்திறந்து பேசுதற்கு நாவோயில்லே - நோக்கினுல் வீரத்தில் கோடி போக்கு
296-வது பாட்டு
நுகந்து நின்ற துரிசியினுல் சங்கமாடு - மாக்கினுற் றங்கத்திலாடும்
296
வித்தை யறிந்து சொல்ல முடியாது அப்பா பாரே 302

## 297, 298-வது பாட்டின் தங்கரச சுன்னத்தால் சூதக்கட்டின் பெருமை.

அப்பனே தங்கத்திற் சூதம்கட்டி லண்டபீண்டந் தூளாகு மணியு மாகு - மப்பனே யிதுரெண்டும் வாதத்துக்கு ஆதிகுரு அணுகுரு வென்ற நாமம் - அப்பனே யிதைவிட்டால் வாதம் போச்சு ஆடுகிற குளிகை முதல் சித்தும் போச்சு - அப்பனே யிதுரண்டுஞ் சேர்த்தோன் வாதி அரியாட்டால் வாதியல்ல அறிந்து கொள்ளே 303

## சிவசத்தி ஜெயநீர் செய்யும் விதம்.

### சத்தியாகியபூநீர் பலம் 5
### சிவமாகிய இணங்கன் பலம் 5

அறிந்துகொள்ள இன்னமொரு கருவைச் சொல்வே னீறியாரோ நாதாக்க ளறிந்துகொண்டும் - நெரிந்து சொல்ல நூல்களிலே சொல்லாதேனே நேரான சுளுக்கென்று மனத்தில் வைத்தா ரறிந்துகொண்ட கருவையெல்லாம் வெளியாய்ச் சொல்வேன் மக்களே நீங்களுந் தான் மனதில் வைத்து - பொரிந்த கொண்ட ஊஷரத்தின் வெள்ளைப்பூவை புகழாகப் பலமஞ்சு தூக்கிக்கொள்ளே. ஊஷரம்பூநீர் (இது சத்தி) (பூநீர் மஞ்சளுக்கு சிவக்கும், நல்ல ஜலம் பட்டாலும் சிவக்கும்)

## சிவமாகிய வெடியுப்பு ஜெயநீர்.

தூக்கியே யிணங்கனதில் பலந்தானஞ்சு துடியாக விட்டதிலே பழச்சார் விட்டு • தாக்கியே யரைத்து நன்றாய் சாம மொன்று சாதகமாய் கரண்டியிலே வைத்து வூது - தேக்கியே சிலுசிலுத்துக் கட்டிப்போகும் செகமரியச் செயநீராம் பனியில்வைக்க - நோக்கியே யிந்நீரோ சிவனுமாச்சு நுகர்ந்து நின்ற சத்திநீர் சொல்லக் கேளே305

இணங்கன் என்பது வாண மருந்துக்கு உபயோகிக்கும் வெடியுப்பு உறுதி. இது ரவிஉப்பு. இதையே சேர்க்கவும். (பிரம கற்பத்திற்கும் இணங்கன் என்று பெயர். இதைப்பற்றி பின் விரிவாய் எழுதப்படும்.) R. M. K.

## சார ஜெயநீர்.

சத்தியென்ற சாரமது பலந்தான்பத்து தாக்கப்பா யிந்திடைக்கு ஊஷரத்தின் பூவை - முத்தியென்ற கல்வத்தி லரைத்து நன்றாய் முன்போலே கரண்டியிலே கொதிக்கவைத்துப் - பத்தியென்ற பனியிலே வைத்தாயானால் பளபளென ஜெயநீராம் பாரு பாரு சத்தி என்ற செயநீராம் இந்தசாரநீரு க்ஷணத்திலே வேதையிதில் விளம்பக் கேளே (இந்த ஜெயநீரின் நிறம் தங்கநிறமாயிருக்கிறது. R. M. K.)306

## தயிர்.

விளம்பியதோர் சாரநீர் செரங்கை யொன்று வெடியுப்பு ஜெய நீரும் செரங்கை யொன்று - தளம்பியதோர் ரெண்டு மொன்றாய்க் கலக்க தயிர்போலே தானுரையும் தன்மைபாரே, பாரப்பா இத்தயிரில், வீரமொடு பூரம்போட்டு - பன்பாக கலக்கியிதை வைத்துக் கொண்டு, உத்தமனே வெண்காரந் துரிசு தோய்த்து - அளம்பியதோ ரவியிலிடு தினந்தான் ஏழு ஆச்சரியம் ரெண்டினமுங் கட்டிப்போமே. 307

கட்டியதோர் காரமது காசுமூன்று காசிடைதான் வீரமொடு பூரம்போட்டு - நெட்டியதோர் புனுகோடு சூதம்போட்டு நேராக அரைத்து நன்றாய் முன்தயிரினாலே - ஒட்டியதோர் முன்துரிசி பலந் தானொன்றில் உறப்பூசிக் காயவை தினந்தானஞ்சு - கொட்டியதோர் ஊஷரத்தின் குருவில் வைத்துக் குறையாமல் மூடி நன்றாயடுப்பி லேத்தே • (ஊஷரகுரு=பூநீர்) 308

## துருசு குரு.

ஏத்தியே சாமமொன்று முத்தீயுமாட்டி எடுத்துப்பார் துரிசியது குருவாய் நிற்கும் - போத்தியே யிந்திடைக்கு வெள்ளை யிட்டு புகழாக நாலி லொன்று வீரமிட்டு • ஆத்தியே வீரமிடை சூதமிட்டு அரைத்திடுவாய் முலைப்பாலிற் றினந்தானொன்று - மாற்றி யே வில்லை தட்டி யுலரப்போட்டு வாகான பூநீரு குருவில் வையே 309

வைத்தல்லோ அடுப்பேத்திச் சாமமொன்று வாகாகமுத் தீயு மாட்டு மாட்டு-தைத்தல்லோ வெள்ளைசென்று தாம்பிரத்தை தின்று சாதகமாய் குருவாகும் வெள்ளை தானும் / துருசு தானும் - கைத்தல்லோ போகாம லீசானத்திற் கடிய நிருவாணிக்குப் பூசை செய்து - கைத்தல்லோ யிதை எடுத்து வைத்துக்கொண்டு நாடகத்தை யாடுகிறேன் பாரு பாரே 310

## வீரக்கட்டும் அதால் வெள்ளைக்கட்டும்.

ஆடுகிறேனிக்குருவிற் சவ்வாது கார மீனத்தல்லோ மத்தித்து வீரத்திற்பூசி - காட்டுகிறேன் கரியோட்டில் வாட்டுவாட்டு கசகாமல் மணிபோல கட்டிப் போகும் - மூட்டுகிறேன் இவ்வீரத்தை முன்தயிரி லாட்டி மூதண்டவெள்ளைக்குப் பூசிவாட்டு - நாட்டுகிறேன் வெள்ளை யது மணிபோல் நிற்கும் நாமரியோ யிதுபோர போக்குத்தானே 311

### வெள்ளைப்பாஷாண குருவால் துருசுகுருவும் அதால் சூதக்கட்டும்.

போக்கான வெள்ளைதனை வெண்கரு வாலாட்டி புகழாகத் துரிசியின்மேல் பூசி நன்றாய் - வாக்கான ஊஷரத்தின் குருவில் வைத்து மைந்தனே யடுப்பேத்தி யெரித்தாயானால் - தாக்கான குரு வாகுந் துரிசிதானுஞ் சந்திக்க சூதமது கட்டிப்போகும் நோக்கான சரக்கெல்லாம் வாசனைக்குச் சாகும் நொடியில்லை யுபரசங்கள் சத்து மாமே 312

## துருசுகுருவால் தங்கம் நீரும்.

ஆமப்பா இக்குருவிற் தங்கம்நீரும் மணுகியினால் நாகவங்கங் கட்டி போகும் - போமப்பா வொவ்வொன்றிற் குருவோகோடி யோடுகிற செந்தூரங் களங்கங்கோடி - வேமப்பா அண்டாரண்டந் துரிசிபட்டால் வேதையென்ன பாதையென்ன விளம்பப்போகா - தாமப்பா துரை தோரும் தங்கம்வித்து சேர்த்தல்லோ யினந்தோறும் வேதைபாரே 313

## வன்னி கெற்பம்.

வேதையின்னஞ் சொல்லுகிறேன் துரிசியாலே விளங்கி நின்ற செம்பரத்தைப் பூவைவாங்கி - பாதையிந்தத் துரிசுயிட்டு பிசைந்து நன்றாய்ப் பரிவாக அமுக்கிவைத்துப் பிழிந்து கொண்டு - கோதை யென்ற படிச்சாறு அயப்பாண்டத்தூத்தி கொள்கியஞ்சு பலமதுவும் வன்னிகெற்பம் - பேதையன்றிப் பொடித்திட்டு அடுப்பிலேற்றிப் போகத் தீயெரித்தூத்தழாவிடாயே (வன்னிகெற்பம்=லிங்கம்) 314

## லிங்க மெழுகு.

துளாவியது புருகைபிலே காரந்தானும் சூட்டப்பா கழஞ்சி யொன்று பொடித்துநீயும் - வளாவியது மெழுகான பதத்தில்வாங்கு வப்பனே லிங்கமென்ற மெழுகிதாச்சு - உளாவியிந்த மெழுகெடுத்து நூற்றுக்கொன்று ஊட்டினல் நவலோகந் தங்கமாகும் - விளாவிய தோர் வெள்ளியைப்போ லுபரசத்திலோடும் வேதையொன்றே காய சித்தியாகுந்தானே 315

## பாஷாண மெழுகு.

ஆகுமிந்தப்படிதானே செம்பரத்தஞ் சாற்றில் அப்பனேஅஞ்சு பலம் வீரம் போட்டு - போகுமிந்தப்படியெரித்து மெழுகாய் வாங்கி பொற் றகடுங் கூடயிட்டுப் பிசைந்து கொண்டு - வாகுமிந்த உபரசத்தில் நவலோகத்தில் மக்களே ஐந்நூற்றுக்கொன்று போடு - பாகுமிந்தத் திசைமாத்தாம் வீரத்தாட்டு பரிவாகலிங்கத்திற் தங்கங்கூட்டே 316

கூட்டுறதோர் மெழுகுவகை யின்னங்கேளு கொடியதொரு சதிரக்கள்ளிப் பாலோ நாழி - மாட்டுறதோர் குருவென்ற துரிசு போட்டு வாகாக முறிந்த பின்பிருத்துக்கொண்டு - நாட்டுறதோர் வெள்ளையது பலந்தானஞ்சு நலமாகப் பொடித்திட்டு காரம் போட்டு மூட்டுறதோ ரடுப்பேற்றி மெழுகாய்வாங்கி மூதண்ட வெள்ளியிடத் தகடுபோடே 317

போட்டல்லோ பிசைந்துகொண்டு யிரும்பு செம்பில் புகழாக வங்கமொடு நாகத்தூட்ட - மூட்டல்லோ யிதுவெல்லாம் வெள்ளி யாகும் முன்னேது பின்னேது வெள்ளைக்கப்பா - ஆட்டல்லோ வெள்ளையுட மெழுகுபட்டால் அப்பனே யுபரசங்கள் வெள்ளியாகும் பாட்டல்லோ நாதாக்கள் நூலைப்போலே பல கலம்ப நூலல்ல பாரு பாரே 318

பாரப்பா யிப்படியே பாஷாணங்கள் பரிவான அறுபத்துநாலுந் தானும் - நேரப்பா யிம்முறைபோல் மெழுகுமாகும் நிரைநிரையாய் வெள்ளிமுதற் பொன்னுமாகும் - ஆரப்பா யெனைப்போலே திறந்து சொல்வார் அடக்கியல்லோ யிக்குருவை <u>வழலையென்றார்</u> - தூரப்பா யிதினலேவழலையாச்சுச் சுண்ணம்புக்காடாச்சுத் துறையு மாச்சே()

கடையில் விற்கும் ஷெ வேடியுப்பே 7-வது பிர்மகற்பம் என்றும் 7-வது வழலை என்றும் பெயர். R. M. K. வேலுசாமி, பழநி.

# வழலேக்கு.

எண்ணெ கக்கவைத்து கடுங்கார ஜெயநீரால் காரமேற்ற தெரியாதவர்கள் சாஸ்திரத்தை பொய் என்பார்களாம்.

---

துறையான வாதத்திலிதுபோலாகா சொல்லாமல் மூடியல்லோ போட்டார் சித்தர் - நிறையான வழலேக்கு யெண்ணெகக்க நேரான சுண்ணும்புத் தண்ணீர்வார்த்து - மறையானகடுங்கார மேத்தியாட்டி வல்லோர்களெடுப்பார்களேழையாஞல் - அறையான முறை கடக்க மாட்டார் வாதி அரகரா சாத்திரத்தை பொய்யென்றுரே 320

பொய்யென்று போகாமற் குருவையெல்லாம் புகட்டி விட்டே னென்னூலிற் கருவே கோடி - தையென்ற இரசம்போ லாடுமோடுஞ் சமுசயங்க ளொன்றுமில்லே தப்புமில்லே - கையென்ற களவிருக்க மறைத்தார் சித்தர் களவெல்லாம் நிகண்டுக்குள் காட்டிப்போட்டேன் மெய்யென்ற துருசியுட குருவைத் தொட்டு வேதைக்குக் கட்டு வகை சொல்லுறேனே 321

# கெந்தகத் தைலம்

---

சொல்லுகிறேன் கெந்தகந்தான் பலமோபத்து சூடியல்லோ கல்வத்தில் வெண்காயச்சாறு - அல்லுமென விட்டரைப்பாய் மண்டலந் தானப்பா அதற்குள்ளே துரிசியென்ற சுன்னங்கேளு - மல்லுகிறேன் கழஞ்சிரெண்டுங் கூடபோட்டு வாகாக அரைத்து நன்றுய் வில்லே கட்டி - வெல்லுகிறேன் குப்பியிலே யடைத்துநன்றுய் விளங்கியதோர் பூப்புடத்தில் தைலம் வாங்கே 322

வாங்கியதோர் தைலத்தில் பணத்தைத்தோய்த்து மாட்டப்பா நூறுபணம் வெள்ளிக்குள்ளே - தாங்கியதோர் தங்கமது பத்து பத்தாம் தப்பாது யிப்படித்தா நவலோகம் பொன்னும் - ஓங்கியதோர் தைலமது தங்கத்திற்குத்த யுத்தமனே செம்பாகுந் தங்கச்செம்பு-பாங்கியதோர் தொந்தமிது நூறுமேறும் பரிவாகவெள்ளியிது செம்பு மாமே 323

செம்பான வெள்ளியது னூறுதொந்தமேறும் சேர்ந்து நின்ற கூடசியிலே வேதையாகும் - வம்பான செம்பிதுதான் தராதரத்தில் மகத்தான தேசியது யேமசத்தி - அம்பான வேகம்போல் தொந்தித் தேரு மறிந்திருந்த வாதியென்று லரிவானப்பா - செம்பான செம்பெடுத்துக் கைவளேகிற்பண்ணி தொட்டுரைத்துக் காச்சவெல்லாம் பொன்னுமாமே 324

பொன்னுகுங் காயமது, உள்ளே கொள்ளப் பொற்சிலை போல் தேகமுமாம் பூணிக்கொள்ளு - மன்னுகும் வாதத்திலிந்தச் செம்பு மாட்டினு வித்தோடே செயசூதத்தைத் - தின்னுகும் வேதையுமாம் பரிசமாகுஞ் செகமெல்லாங் காணிசெம்பின் விலை காணுது - பன்னு குந்தூமமொடு சத்தவேதை பறக்கிறதோர் குளிகை முதலாகுந் தானே. 325

தானென்ற தாளகத்தை கெந்திபோலே சமரசமா யரைத் தந்தப்படியே கட்டி - கானென்ற குப்பியிலே தைலம் வாங்கிக்கலந்து கொண்டு பறித்தகடு தைலத்துள்ளே - வேனென்ற நவலோகமுபாசங் களெல்லாம் மெத்தெனவே பரிசிக்க சொர்னமாகுந் - தேனென்ற தைலத்தில் பாஷாணமெல்லாம் சிறப்பாக தோய்த் தனலில் வாட்டு வாட்டே 326

வாட்டயிலே சிலதுவகை மெழுகுமாகும் வாகாகச் சிலதினங் கள் செந்தூரமாகும் - நீட்டயிலே சிலதினங்கள் சத்துமாகும் நேராக சிலதினங்கள் கணிபோலாகு - மூட்டயிலே ஒவ்வொன்றில் கோடி வேதை மூக்குறச்சி யாடுகிற ஆட்டு ஆட்டு - காட்டயிலே சூதத்தை கொல்லுங் கொல்லுங் கைவிட்ட பரிசினத்தில் வேதையாமே 327

## வீரத்திற் சிமிட்டுவித்தை.

ஆமப்பா முன்னெடுத்த துரிசு வெள்ளை யடவாக வீரமிட்டு குருவுமிட - ஓமப்பா அண்டமது தைலமாகு முத்துநின்ற தைல மது பரிசவேதை - தாமப்பா குருவாலே யெல்லாங் கட்டுஞ் சங்கிலி போற் துடர்ந்தேரும் வேதை கோடி - தாமப்பா யிதனாலே கட்டிய முன்வீரந் தாக்கிடவே நவலோகங் குருவுமாமே. 328

குருவான தொவ்வொனறில் வேதை கோடி குருக்கினுல் குருகாது நின்று ஆடுங் - தருவான வீரத்தால் பரிசவேதை சத்தாகும் லகுவிலே சாரணையுமாகுங் - குருவாகுந் தொட்டதெல்லா மெட்டியோடுங் கரையாத யெனத்தையெல்லாங் கரைத்துப்போடுங் - திருவாகும் வீரத்திற் சிமிட்டுச் சொல்வேன் செப்புகிறே னன்றுகக் கேட்டிடீரே 329

கேட்டிடீர் காண்டியிலே சேங்கொட்டை ரெண்டு கெடியாக வெட்டியிட் டிதிலே கேளு - மார்ட்டிடீர் லெலுமிச்சங் காயளவு வாகான வெள்ளாட்டுக் கொழுப்போ போட்டு - நாட்டிடீர் கெந்தக முந் தாளகமுஞ் சாரம் நலமான வெண்காரஞ் சவுக்காரங் கூட்டி - மூட்டிடீர் வகையொன்று விராகன் கால்தான் முயற்சியாய்க் கூட்டி யெல்லாங் கொதிக்கவையே 330

கொதிக்கயிலே லிங்கமஞ்சு விராகன் போட்டுக் குமுறுமல்கிண் டியிதைத் தைலமுண்ணப்பண்ணி - மதிக்கையிலே யெடுத்துப்பார் கருத்துக்கொண்டு வாகாக யிறுகிநிற்கும் லிங்கந்தானும் - பதிக்கை யிலே மேல்கறுப்பைச் சீவுசற்றே பரிவாகக் கட்டியதோர் வீரம்பூசி- வீதிக்கையிலே பறித்தகடு மேலே சுத்தி விரவியது மேல் வீரம் விளங்கப்பூசே 331

பூசியதை யுலர வைத்துவெண்கல்லுமுப்பும் பொலிவாக யரை த்து நன்றாய் கவசங்கட்டி - நேசியதைக் கரியோட்டில் வாட்ட வாட்ட நேராகத் தகட்டை யுள்ளே வாங்கிக்கொள்ளு - மாசியத்து நின்று லிங்கங்கட்டுங்கட்டு மாட்டப்பா நவலோகம் பொன்னுமாகும் ஆசியென்ன லிங்கத்தை தங்கத்துள்ளே அப்பனே யிடைக்கிடைக்கு த்தாக்குதாக்கே 332

தாக்கிடவே தங்கமது தகர்ந்துதூளாம் தப்பாது நூத்தொன்று நவலோகத்தில் - தேக்கிடவே பொன்னுதுங் குருவுமாகுஞ் செய்ப வற்குச் செந்தூரக் களங்கமாகும் - நோக்கிடவே தங்கமொடு லிங்க வேகம் நுகர்ந்தாக்கால் காயசித்தியாகும்பாரு - ஆக்கிடவே யிதைத் தொட்டுத் தொந்தமேற அடங்காது அடங்காது யேறிப்பாரே 333

# நாதமாகிய அப்பிரகத்திலிருந்து விந்தாகிய ரசம் பிரித்தெடுக்கும் விதம்.

ஏறவே அப்பிரகச் சூதங்கேளு விதமாக அப்பிரகத் தகடுவாங் கித் - தேறவே கட்டியதோர் வீரந்தன்னைச் சேர்த்தரைத்துயெரிகால மெண்ணையாலே - மாறவே பூசியிதை சீலைசுத்தி மருவியதோர் தீபத் தில்கொளுத்தினுக்கால் - ஆறவே யெரியயிலே தட்டத்தட்ட அப்பிர கச் சூதமிதில் விழுகும் பாரே 334

வீழுகின்ற சூதத்தைக் கூட்டிவாரி வேதைக்கு வழிசொல்வேன் கேளு கேளு - ஆளுகின்ற ஊற்சூதம் சுத்திசெய்து அந்திடைக்குச் சமனுகக் கூட்டியாட்ட-வாளுகின்ற சூதமிதில்சேராதப்பா வாதியெ ன்றால் சேர்க்கறிவான் வரிசைகேளு - தாளுகின்ற பரித்தகடு நடுவே காட்டச் சந்தித்து ரெண்டுமொன்றாய்க் கலக்குந்தானே 335

கலந்துடனே நவனீதம்போலே நிற்குங் காட்டுமுன்னேநவலோ கம் பரிசுவேதை - அலந்துடனு மிறக்காமல் காணிகொள்ளு அப்ப னே மண்டலந்தான் காயசித்தி . மலந்துடனே சட்டை கக்கும் ரவி யொப்பல்ல மநத்தான கற்பமது மைந்தா பாரு - குலந்துடனே குல மென்ன சுக்குலந் தானல்லோ கொள்ளுகிற சூதமது சுக்குலமு மாச்சே 336

## சத்திநாதச் சரக்கு விபரம்.

ஆச்சப்பா அப்பிரகச் சூதங்தொட்டு ஆடலாந் தூமமுதல் சத்த வேதை - போச்சப்பா வெகுதூரஞ் சொல்லமாட்டேன் புகழாக நவ நீதம் பூசினக்கால் - வாச்சப்பா பாஷாண மெல்லாங்கட்டு மருவி வே நவலோகங் குருவுமாகும் - ஓச்சப்பா ஒவ்வொன்றில் தொந்தங் கோடி ஓடலா மாடலா மூணிப்பாரே 337

ஊணிப்பார் அப்பிரகம் சத்திநாதம் யுத்தமனே பூநீறு சத்திநாதம் பேணிப்பார் நிமிளையது சத்தினதம் பேரான பூநாகம் சத்திநை - மாணிப்பார் திரிகுணசல சத்திநை மப்பனே மிருதம்புலிங்கங் சத்து னதம் - தோணிப்பார் நாக வங்கஞ் சத்திநைஞ் சொற்பெரிய செம்பு சத்தி நாதமாச்சே 338

நாதமென்ற யினங்களிலே சூதஞ்சேர்க்க நலமான மாருதம்போல் விரிந்துஆடும் - நாதமென்றம் யினமென்ன சத்துஞ்செம்பும் நாட்டு கிற முறை கண்டோன் வாதி வாதி - நாதமென்ற பூநாகங் குருவு மாச்சு நலமறியான் வாதியல்ல வண்ணான்காண்பான் - நாதமென்ற பெண்ணதமுறிக்கவப்பா நாட்டுவாய்பூநாதங் கல்னதம் ரண்டே 339

ரெண்டாலே உலகமெல்லாம் விரிந்துதப்பா ரெண்டேதுவென் றக்கால் நாதவிந்து - ஒன்றாலே நின்றதென்னவிந்துவொன்று உத்த மனே நாதத்தி லஞ்சுகேளு - வென்றாலே முட்டையொன்று யோனி ஒருஎட்டில் வெளி யொன்று விளங்கியதோர் வித்தொன்று பூமியொன்று - நன்றான மன மொன்று ஞானயோனி னலாலே பிறபஞ்சமொடு வாதமாச்சே 340

ஆச்சப்பாயிதைவிட்டு உளறும்வாதி அவன்பேச்சுமிவன்பேச்சுங் கேட்டுச்சுட்டு - நீச்சப்பா வாதமென்று சுட்டுக்கெட்டார் நிலையான சாத்திரத்தைக் காணார்காணார் - மூச்சப்பா அத்தாக்கால்பிணமுமானார். மோகமற்ற காலத்தில் பெண்ணைத்தேடான் - கூச்சப்பா யித்தனைக் கும் பூமினதங் கூறூர்கள் நாதாக்கள் கூறூர்தானே 341

## அப்பிரகச்சத்துக்கிண்ணி
## அப்பிரக விளைவு 4-வகையின் விபரம்.

கூறாத சத்தியுட நாதமான குலாவியதோர் அப்பிரகச்சத்தைக் கேளு - ஆறுதனுலுவகைச்சாதியுண்டு அதுக்குள்ளே முதத்தரந்தான் யேமவர்ணங் - தேறாத சிவப்பு வற்ணம் ரெண்டாம்பட்சம் செப்பக் கேள் கறுப்பானல் மூணம்பட்ச - மாறாத வெளுப்பானல் நாலாம் பட்ச மக்களே னலுவகைச் சாதிதானே 342

## அப்ரேக் சத்தெடுக்கும் விதம்.

சாதியிலே யேமவர்ணம்தன்னை வாங்கித் தகர்த்திடித்து நன்றாக நவனீதம்பண்ணி - வேதியிலே கொள்ளோடேபோட்டு நன்றாய் வேக வைத்துத் தினமொன்று யெடுத்துக்கொண்டு - ஆதியிலே யிந்திடைக்குப் பாதிகார மப்பனே கூட்டியிதை அரைத்துநன்றாய் - மாதியிலே வெள்ளாட்டு ரத்தம்விட்டு மருவ நன்றாய் மாளமட்டு மரைத்திடாயே

அரைத்ததிலே வெண்ணெயொடு குன்றிவெல்ல மப்பனே தேனோடு சிறுமீனெள்ளு - நிரைத்ததிலே கோதும்பை உளுந்து மொச்சை நேரான முசலெலும்பு யெருமைக்கொம்பு - விரைத்ததிலே குதிரையுட குளம்பு தந்தம் வீறான வறத்தவளை குக்கிலோடு திரைத்ததிலே வகையொன்று பலமோ கால்தான் சாதகமா யப்பிரகம் பலந்தான் பத்தே 344

பத்தாக அரைத்து நன்றாய் வில்லைதட்டிப் பாங்கான ளைத்தை போட்டுவூது - முத்தான மணிபோலே சத்துவீழு முறைமுறையாயுடைத்தெடுத்துக் கறட்டைவாங்கி - அத்தான முன்போலெ அரைத்துக்கட்டி அப்பனே ளைத்திலூதுவூது - கோத்தான சத்தெல்லாம் மணிபோல் வீழுங் குறையாமலுருக்கிவிட விபரங்கேளே 345

கேளப்பா காரமொடு சாரஞ்சேர்த்து கெடியாக உருக்கியதை உருவாய்ப்பண்ணி - ஆளப்பா யெடுத்திதனைச் சாய்க்கக்கேளு அதிமதுர மிலுப்பைப்பூ நெய்யுந்தேனும் - வேளப்பா வெல்லமொடு நல்லயெண்ணெ வேரான வாழைப்புட கிழங்குதானும் - தாளப்பா ஆட்டுப்பால் தேங்காய்ப் பாலுஞ் சதிரகள்ளிப்பாலு மதிற்கூடவாரே 346

வாத்தெல்லாங் கலக்கியொன்றாய் வைத்துக்கொண்டு வாகாகச் சத்துருக்கியதிலேசாய்ப்பாய்-கோத்தெல்லாம் பதினைஞ்சுதிரமே சாய்த்துக் குறிப்பாகப் பார்த்தாக்கால் வெள்ளிபோலாஞ் - சேத்தெல்லாஞ் சத்திடைக்குத் தங்கங்கூட்டி சிறப்பாக பாத்திரம்போல் வார்த்துக்கொண்டு - ஆத்தெல்லா மப்பிரகச் சத்துக்கிண்ணி அட்சயமாம் பாத்திரமென்றறைந்திட்டாரே 347

## அப்ரேக்சத்துக் கிண்ணியில் ரசக்கட்டு.

அறைந்திட்ட பாத்திரத்தைச் சீலைசெய்து அப்பனே வாலுகையின்மேலே வைத்து - நிறைந்திட்ட பாத்திரத்தில் சூதம் விட்டு நேராகயெரிக்கையிலே வெண்ணெயாகும் - அறைந்திட்ட வெண்ணெதனை தண்ணியிலே போட்டு மருவியது யிறுகிய பின் எடுத்துக்கொண்டு உறைந்திட்ட ஆரையிலைக் கவசங்கட்டி உத்தமனே பதினைஞ்சு புடந்தான் போடே 348

போட்டபின்பு பிராயிலையைக் கவசங்கட்டிப் புகழாகப் பதினே ஞ்சு புடந்தான் போடு - நாட்டபின்பு ×சேந்திராய் கவசங்கட்டி நல மாகப் புடமஞ்சு தீர்ந்தாயானல் - ஆட்டபின்பு குளிகையுமா மிதுக் குக் கேளு அபினேடு கஞ்சாவுஞ் சாதிக்காயு மூட்டபின்பு பத்திரி யுங் கிரும்பு நாபி முத்திய தோர் மத்தைவித்துத் தேங்காய்தானே 349

×சேந்திராய்—சிகப்பு தராக்கோடியிலே.

## ஸ்தம்பன ரசமணி.

### 11-நாளில் வாயிலிட ஸ்திரீகளுக்கு ஸ்தப்பனமாம் சுருக்குமெத்த.

தேங்காயு கசகசா சாரப்பருப்பு சிறப்பான மருளு மத்து வெட்டிவித்தும் - பாங்காயுமிதையெல்லா மிடித்து நன்றாய்ப் பரிவாக குளிகைக்குக் கவசங்கட்டி - வாங்காயும் புகை போக்கில் கட்டி வைத்து மண்டலந்தான் கழிந்தபின்பு ரவியிற்போடே - போட்டுமே பத்துநாள் காய்ந்தபின்பு புகழாகவாயிலிட தாதுஸ்தம்பிக்கும் பாரே

### யோகசித்தி, காயசித்தி, வர்தசித்தியாகுமெனல்.

பாரப்பா யிக்குளிகைத் தாவடமாய கோர்த்து பரிவாக அஞ் செழுத்து மூன்றெழுத்துமோத - நேரப்பா தேவியொடு சிவன்தான் வந்து நிற்மலமாம் யோகமுதல் ஞானமீவார் - சேரப்பா வாத முதல் சித்தையீவார் செகசால மாற்கமெல்லாந் தெளியச் சொல்வார் - ஊரப்பா யிருந்தாலென்ன மலையில் வாழ்ந்தென்ன உறைத்தவனே ரசவாதி ஞானிதானே 351

தானென்றும் பொருளென்றும் வேறில்லாமல் தன்னுயிர்போல் மன்னுயிரைத் தானுய்க்கண்டு - வானென்றுந் துப்புரவா யிருந்தாப் போல மாய்கையல்லோ மேகத்தைப்போலே சூழுங் - தானென்ற திரோ தாயிமாய்கை நீக்கிக் கண்ட தில்லைப் போனதில்லை வந்ததில்லை- ஊனென்ற சடமெடுத்து நின்ற வித்து ஒழியாத பூரணந்தான் விந்துவாச்சே 352

## சகல் சித்துகளும் இந்த ரசமணியால் சித்தியாகுமெனல்.

விந்துவென்ற சூதத்தில் மந்திரமோ சித்தி மேகத்திலோடுகிற குளிகை சித்தி - அந்துவென்ற யோகமுதல் ஞானசித்தி வப்பனே காயசித்தி லோகசித்தி- தந்துவென்ற சடத்துக்குள்ளாதாரஞ் சித்தி சாஸ்திரத்திற் சொல்லாத கருவோ சித்தி - பந்துகொண்ட வாதத்தி லட்டாங்கசித்தி பாரப்பா சூதத்தைக் கட்டிநேற்கே 353

கட்டியதோர் சூதத்திற் சுன்னங்கோடி கருவறிந்து கூட்டினல் குருவோ கோடி - ஒட்டியதோர் களங்கு முதற் செந்தூரங்கோடி ஊட்டியதோர் சாரணையால் குளிகை கோடி - தொட்டியதோர் கெடு ப்பினமுங் கட்டினமுங் கோடி செகசால மாடுகிற செயநீர் கோடி மட்டியதோர் காயசித்தும் லோகசித்துங்கோடி வலிந்துநின்ற சூதத் தின் மகிமை கேளே 354

## அப்பிறகக்களங்கு

மகிமைபென்ற அப்பிரகக் கிண்ணிதன்னை வள்மாக யுடைத்து வைத்துருக்கும்போது - தகமையென்ற நாகமந்த பிடையேபோடு சாதகமாய்க் கூடிநின்றுருகும்போது - நகிமையென்ற நாகபிடை லிங்கம்போடு நலமாக யுருகையிலே களங்குமாகு - மகிமையென்ற செம்பினுள்ளே நூத்துக்கொன்று பாச்சப்பா பத்தரையுந் தப்பா வாறே 355

வாறான அப்பிறகக் கிண்ணிக்கொக்க மாட்டியல்லோ சூதத்தை எடுத்துக்கொண்டு - தாறுகக் கண்டிடைக்கு ரெண்டிடை தான் கெந்தி தகர்த்தொக்க அயக்குப்பிக்குள்ளேபோட்டு - வேறான வாலு கையின்மேலே யேத்தி விளங்கியதோர் செந்தூரபதத்தை பார்த்து கூறான யீசானம் பூசைபண்ணி குமட்டியந்த செந்தூரஞ் சிமிளில் வாங்கே 356

## ரசச்செந்தூரம்
## இதனல் வாசிகட்டும் எனல்,

வாங்கியதோர் செந்தூரங் குன்றியுண்ண மண்டலத்தில் காய சித்தி தாதுவிர்த்தியாகும் - மோங்கியதோர் யோகசித்தி ஞானசித்தி ஓடியதோர் வாசியுள்ளே யொடுங்குஞ்சித்தி - தாங்கியதோர் நவலோ கம் நூத்தொன்றுக்கியத் தப்பாதுயேமசித்தி தாக்கிப்பாரு - பாங்கி யதோர் ஆயியுடனுந்தவேதை பண்பேதி சண்பேதியாகுங்காணே 357

காணப்பா அப்பிறக கிண்ணிதானுங் கருத்தாக வொருபலந் தானுருகும்போது - பூணப்பா யிந்திடைக்கு கட்டியதோர் வீரம் போட்டதை மணிபோலே வாங்கிக்கொண்டு - தோணப்பா மணி மேலே புழுகுவீரஞ் சொற்பெரிய உரத்தோடு சூதம் பூரம் - முண்ண ப்பா முலைப்பாலாலரைத்துப் பூசி உத்தமனே குகையில் வைத்துச் சீலைசெய்யே 358

## அப்பிரகக்குருவால் செம்பு களிம்பு போகும் நாகவங்கங்கட்டும்.

செய்த பின்பு பராபரையை பூசைபண்ணித் திறமாகக்கெசபுட மாய்ப் போடுபோடு - கைய்தபின்பு குருவாகு மப்பிறகச் சத்துக் காட்டுமுன்னே சூதமது கட்டிப்போகும் - வைத பின்பு அடித்தாப் போல் பாஷாணங்களை வாய்திறக்க வொட்டாமல்ச் சண்ணிக் கொல்லும் - மெய்தபின்பு நாகவங்க வாசனைக்குக் சட்டு மிதமாசச் செம்பிலிடக் களிம்புபோமே 359

போமப்பா வொவ்வொன்றில் வேதை கோடி பூட்டுகிற யினங் கண்டு பூட்டியாடு - காமப்பால் வித்தையைப் போலிதுவுமாடுங் கரையில்லைத் தொகையில்லைக் கவரோ கோடி - ஓமப்பா அப்பிறகஞ் சத்திறைத முத்தமனே சூதமென்ன சிவத்தின் விந்து - தாமப்பா ரெண்டு மொன்றாய்க் கூடிறைக்கால் சடத்தோடு நவலோகம் தங்க மாமே 360

லோகமோ யிதுக்கிடு அல்லவல்ல நகர்ந்துநின்ற உபரசத்தில் மலையோ பொன்னும் - பாகமோ அறிந்தாக்கால் மண்ணும் பொன் ணும் - பாச்சினல் சூதத்தில் தொந்தம் நாறும் - வேகமோ வெகு வேக மண்டாண்டம்பத்தும் வேதைக்குஞ் சித்துக்கு மிதுவோராசா தாகமோ வெகுதாகஞ் சூதத்தைக் கண்டால் தாக்கயினி அண்ட வித்தை சாற்றுறேனே 361

## அண்டமெழுகு.

### பல் விழுந்த கிழவன் தின்றல் பாலனைப்போல் பல் முளைக்கும்.

சாற்றுறே னிக்குருவில் சற்றே வாங்கிச் சவ்வீரங் கூடயிட்டு தேய்த்துக்கொண்டு - போத்துறேனண்டத்தின் மேலேபூசிப் புகழாக நடுவே வைத்துத் தணலைச் சூழ்ந்து - மாத்துறே னெரித்துவரத் தணலைத்தானும் வாகாக முட்டைநின்று கூகூவென்று-யேத்துறேன் தீயையதின் மேலேமூடி யிதமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரே 362

யெடுக்கையிலே முட்டையது மெழுகாய் நிற்கு மென்னசொல் வேனிதின்போக்கு யென்ஞல்கூடா - தொடுக்கையிலே யூசரந்தான் யேறினுப்போல் தூமமுடன் பரிசமுதல் தீபவேதை - மடுக்கையிலே வாசனைக்கு நவலோகங்கள் மாத்தேது இருபத்துயெட்டேகாலாம் - படுக்கையிலே பல்விழுந்த கிழவன் தின்றல் பாலனைப்போல் பல் முளைக்கும் பாருபாரே 363

பாரப்பா மெழுகாலே சூதங்கட்டும்பட்டவுடன் பாஷாண மணி போலாடும் - நேரப்பா உபரசங்கள் சத்தேயாகும் நிரைநிரையாமெவ்வொன்றில் வேதை சோடி - வேரப்பா தொட்டோடி தூரைக்காண வேதாந்த சிவன் காணார் சித்தர் காணார் - ஆரப்பா யெனைப்போல சோதிக்கப்போறார் அண்டவித்தை கரைகாண அறிந்திலேனே 364

# பூநாக சத்து.

பூநாகம் உற்பத்தி செய்யும் விதம்.

அறியாத பூநாகச்சத்தைக்கேளு அப்பனே செம்மண்ணுங் குளத்திற்குள்ளே - பிறிவாகக் குழிவெட்டி நீளத்தானும் பேராகக் குதிரைலத்தி பரப்பி நன்றாய் - மறியாமல் வாகுவைக்கல் மேலேபோட்டு வாகாக வெல்லத்தைக் கரைத்துத்தூவி - நெறியாக மூடிவைக்கப் பூநாகந்தானும் நேராக மேச்சலுக்கு நிரையும் பாரே 365

நிறைந்தவுடன் தினம்பார்த்து பொறுக்கி கொண்டு நேரானபாறையிலே உலரப்போட்டு - அறைந்துடனே தூக்கியது பலந்தானூறு அப்பனே காரமது பலந்தான்புத்து- மறைந்துடனே காரமதைதேன் வார்த்தாட்டி வளமாகப் பிசறியந்தப் பூநாகத்தில் - உறைந்துடனே பாண்டத்தில் வைத்துமூடி யுத்தமனே சீலைசெய்து அடுப்பிலேற்றே

(வழலைச்சுன்னம் கால் ரூ. எடை தேனில் கலந்தரைக்கவும்.)

யேற்றியல்லோ தீயெரிப்பாய் சாமம் நாலு யிதமாகப் பூநாகம் பற்பமாகும் - மாற்றியல்லோ யிதையெடுத்துக்கல்வத்திட்டு வாகான தேனோடு வெல்லங் குன்றி - கோத்தியல்லோ வெண்ணையொடு காரம் நேர்தான் புகழாக அரைத்து நன்றாய்த் தினந்தானென்று - ஆத்தியல்லோ வில்லைதட்டி வங்கநாள மடவாக வொவ்வொன்றாய்ப் போட்டுவூதே 367

ஊதையிலே மணிமணியாயிறங்குஞ்சத்து உத்தமனேகறடுமிந்தப்படியேயூது - பாதையிலே வந்ததெல்லா மெடுத்துக்கொண்டு பாங்கான காரமிட்டுருக்கி நன்றாய் - கோதையிலே அப்பிரகஞ் சாய்த்தாப்போல குறையாமல் பதினைஞ்சு தரமும் சாய்த்து - வேதையிலே யிதினுடைய வேகஞ்சொல்ல விண்ணோர்க்குங் கண்ணோர்க்குங் கொள்ளாவாரே 368

# பூநாகசத்தால் வயிரம் கட்டும்விதம்.

கொள்ளாத பூனைச் சத்ததொன்று குமிறிநின்றுருகையிலே வயிரமொன்று - தள்ளாதே கொடுத்தாக்கானுள்ளே கொள்ளுந் தன்முகத்தில் கட்டியதோர் சூதமொன்று - விள்ளாதே கொடுத்துவொன்றாய் வாங்கிக்கொண்டு மேல்ப்பூச மருந்துசொல்வேன் புனுகுவீரம் - நள்ளாதே பூரமொடு வழலைச்சுன்னம் நாட்டியிதை மத்தித்து மணிமேற்பூசே 369

## பூநாக வயிர ரசச்சுன்னம்
## இதுவே வைரகுரு·

பூசியதோர் மணியதனைக் குகையில்வைத்து பொலிவாகச் சில்
லிட்டுச் சீலைசெய்து - தேசியதோர் கெஜபுடமாய்ப் போட்டாயானால்
சிறந்துநின்ற வயிரமது குருவுமாகு-மாசியதோரத்துநின்ற ✕ரவியின்
விந்து மகத்தான குருவாச்சு மைந்தா பாரு - வாசிய் தோராட்டுப்
போ லிதுவுமாடும் வரிசையாய்ச் சொல்லுகிறேன் வகையைக் கேளே

✕ ரவிவிந்து—வயிரம்

## வைர குருவால் சூதச் சுன்னம்.

கேளப்பா குருவொன்று சூதமொன்று கெடியாக விட்டரைப்.
பாய் மூலைப்பாலாலே - தாளப்பா யிதையெடுத்துக் குகையிலிட்டுச்
சாதகமாய்ப் புடம்போடச் சுன்னமாகும் - நாளப்பா சூதமது குரு
வேயாச்சு நலமான குருவொன்று சூதம்பத்து - கேளப்பா சேர்த்த
ரைக்க நூறுதொந்தமேறுங் குறையாமலேற்றியதின் குணத்தைக்
கேளே 371

## தங்கச்செப்பு.

ஏறியதோர் தொந்தமது பத்தில் வாங்கி யேத்தப்பா தங்கத்தில்
பத்துக்கொன்று - வாறியதோர் தங்கமது செம்பையாகு மகத்தான
செம்பிதுதா னருணன் காந்தி - தேரியதோர றுபத்துலை தொந்தஞ்
சேர்ந்தபின்பு வொன்றெடுத்து வெள்ளிநூறில் - கூறியதோரொன்
றியப் பத்தும் பத்து கூறுகிறே னின்னமிதிற் கூறுறேனே 372

கூறுகிறேன் பறிச்செம்பு தின்றான் விசங் கொண்டாக்கால்
பட்சத்தில் காயசித்தி - மாறுகிறேனென்றாலுமனமாறாமல் மகத்தான
பூரணத்தில் மாநவப் பண்ணு - மாறுகிறேனென்றாலும் மாறாட்
டாது அப்பனே மேல்நோக்கி யிழுத்து நிற்கும் - தேறுகிறேனென்ற
வர்கள் கொள்ளுமாற்கந் திருட்டுவித்தை வாதிக்குச் செறித்தி
டாதே 373

செரித்திடுவே தாருக்கு சிவயோகிக்கு செப்பியதோர் சாத்திரத்
தை நம்பினோர்க்கு - தரித்திடு வதாருக்கு குளிகையென்றால் சாங்க
மாய் வாசிகண்ட ஞானிக்கப்பா - வரித்திடுவதாருக்கு வாதசித்தி
வாமத்தே நின்றுரைத்த பூசையோர்க்கு - மரித்திடுவ தாரென்றால்
பெண்ணாசை கொண்டோன் மகத்துவங்களென்ன செய்யும்மாள்
வான்தானே 374

# பூநாக சத்தால் நாகக்கட்டு.

## புகை 5-ம் அடங்கி கட்டும்.

தானென்ற பூநாக சத்ததொன்று தனித்துநின்று உருகையிலே நாகம்போடு - வானென்ற புகையஞ்சுங் கட்டிக்கொள்ளு மணிபோலே கண்விட்டு ஆடுமாடுங் - கானென்ற ளுகமிதில் போடப்போட கவ்வியுள்ளே நூறிடையைக் கட்டிக்கொள்ளு - மூனென்றவுடலேது வாதத்துக்கு உத்தமனே ளுகமது உட்லுமாச்சே 375

ஆச்சப்பா உடலுக்குயிரே சூதம்அதற்குள்ளே கொடுக்குமுன்னே வாங்கிக் கட்டும் - ஓச்சப்பா வாசியென்ன யிதற்கென்றாக்கா லுத்தமனே தங்கமது உன்னிப்பாரு - ஏச்சப்பா நாதமிதுக் கேதென்றாக் கால் யேதுமில்லை கெந்தகந்தானிதுக்கு நாதம் - கூச்சப்பா நாகத்திலிது வெல்லாங்கூடக் கொள்ளேயோ கொள்ளேயிதில் வாதந் தானே()

வாதத்துக்கு

நாகம்=உடல். ரசம்=உயிர். தங்கம்=வாசி.

கெந்தி=நாதம் கனீரென்ற ஓசை.

# பூநாக நாகரச தங்க செந்தூரம்.

வாதமென்ற சொல்லுக்கு நாக ரச கெந்தம் வாகான தங்க மிதிற் கூட்டினுக்கால் - காதமென்ற சொல்லில்லை வாதங்கிட்ட கைகட்டிச் சொன்னபடி யெல்லாங் கேழ்க்கும் - நீதமென்ற பூனுகசத்து நாகரச இகந்தி நேராகயுருக்கினதை புடத்தைப் போடு - பாதமென்றசெந்தூர மாருமாகும் பரிசனத்தில் வேதையுமாம் பரிந்துகாணே 377

உருக்கும்போது சவுக்காரச் சுன்னமும் சேர்க்கவும். R. M. K.

# நாகரச, தங்கச்சுன்னம்.

## 375-வது பாட்டுப்படி நாகம் கட்டிச் சேர்க்கவும்.

காணப்பா தினங்குன்றி கொண்டாயானுல் கனகம்போல்மண்டலத்தில் காயசித்தி - ஊணப்பா கட்டியதோர் ளுகமொன்றி லுத்தமனே தங்கமிட்டுச் சூதமிட்டுத் - தோணப்பா மணியா யிதனே வாங்கிச் சொல்பெரிய வீரமொடு புழுகு பூரம் - பூணப்பா சவுக்காரச் சுன்னமொன்று புகழாக அரைத்ததின்மேல் பூசிப்போடே 378

போட்ட மணியேழுசுன்னக் குகையில் வைத்துப் புகழாகச் சீலேசெய்து புடத்தைப்போடு - ஆட்ட மணிநீறியுள்ளே சுன்னமாகு மாச்சரிய ருகமது குருவேயாச்சு - நீட்டாமணி சுன்னத்தில் வீரங் காரம் நேராகக் கூட்டிலோ பரிசவேதை - மூட்ட மணியதற்குள்ளே சவ்வாது கூட்டில் முறைமுறையாய் சரக்கெல்லா முருகும்பாரே 379

பாரப்பாவிக்குருவில் புனுகு வீரம் பாங்கான சீனமிட்டு வைத்துக்கொண்டு - நேரப்பா உபரசங்கள் சரக்கிற்பூசி நேராக ஊதவெல்லாங் குருவேயாகுஞ் - சேரப்பா ஒவ்வொன்றை தொட்டுயேற செகசாலம்போலாடுஞ் செப்பமாட்டேன் கூரப்பா நாகவித்தை வர்ணத்துக்கு குருடனுக்கும் பொன்னாகுங் கூட்டிப்பாரே 380

## பூநாக சத்தில் வங்கக்கட்டு சூதக்குரு.

கூட்டியே பூநாகசத்தில் வங்கங் குழறவிட்டிருக்கினல் பத்துக் கொன்று - ஊட்டியே கட்டிப்போம் வங்கந்தானும் நலமாக யிதுக்குள்ளே சூதம்போட்டு - மாட்டியே மணியாக வெடுத்துக்கொண்டு மைந்தனே யிதுமேலே புழுகுவீரம் - காட்டியே சவுக்காரம் பூரஞ் சீனங் கலந்தரைத்து மணிமேலே பூசுபூசே

## வங்கச்சுன்னமும் ரசக்கட்டும்,

பூசியதோர் மணிக்கல்லோ கீழுமேலும் புகழான ஊஷரந்தின் குருவைப்போட்டு - ஆசியதோர் புடம்போட வங்கம்நீறும் மப்பனே வாதமெல்லாங் கைக்குள்ளாச்சு - வீசியதோர் வங்கச்சுன்னம் சூதத்தூட்ட விறைத்துப்போம் புலிப்பாஞ்ச ஆடுபோலே - தேசியதோர் ரசத்தை யுருக்கிக்கொண்டு திருப்புகிறேன் வாதத்தை திருப்புறேனே()

## ரசச்சுன்னம்.

திருப்புகிறேனிந்த ரசமணியின் மேலே திறமான வீரமொடு பூரம் சீனம் - பருப்புகிறேன் புழுகோடு சவுக்காரந்தான் மாட்டிய தின்மேல் பூசி வைக்கக்கேளு - அருப்புகிறேனேழுசுன்னக் குகையில்வைத்து அமரவொரு புடம்போட ரசமுஞ் சுன்னம் - இருப்புகிறேனிச் சுன்னமொன்று வாங்கி யிதமாக நாலிடையாந் தங்கத் தூட்டே 383

ஊட்டியொரு மணியாக வாங்கிக்கொண்டு உத்தமனேபூசுதற்கு மருந்து கேளு - ஆட்டியதோர் தாளகமும் புழுகுவீர மப்பனேசவுக்காரச் சுன்னம் பூரம் - நீட்டியதோர் மணிமேலே யிதனைப்பூசி நேர்க யேழுச்சுன்னக் குகையில் வைத்து - மூட்டியதோர் சீலேசெய்து சுண்ணாம்பும் உப்பு மூடியொரு கெசபுடமாய்ப் போட்டிடாயே 384

## தங்கச்சுன்னம்.

போட்டல்லோ யீசானம் பூசைபண்ணு பொங்கியல்லோ குகை நிறையுந் தங்கச்சுன்னம - ஆட்டல்லோ யிதினாலே வாத ஆட்டு அறியாட்டா லிக்குருவை வாதியல்ல - பூட்டல்லோ கனபூடு தங்காசச் சுன்னம் புலியின் கைபகப்பட்ட ஆடுபோல - மூட்டல்லோ வங்கத்தில் தங்கம் நீறு முதலான வாதத்தில் தங்கந்தானே 385

## அண்டமெழுகு.

தானென்ற பொற்குருவில் தங்கங்கூட்டத் தனிப்பவழம் போலாகுந் தன்னைக்கேளு - வேனென்ற நவலோகம் பரிசவேதை விளம்பியிதை அண்டத்திற் பொட்டுப்போட - கானென்ற மெழுகாகு மண்டந்தானுங் கைமுறையாய்ப் பத்தண்ட மிப்படியேயாகு - மூனென்ற அண்டமொன்றில் பரிசவேதை யுத்தமனே யெட்டுவகை வேதையாமே 386

## பறிக்குருவால் உருக்கினம்

ஆமப்பா பறிச்சுன்னம் வீரங்கூட்டி அதினோடு சாரமிட்டுச் சவ்வாதுபோட்டு - ஓமப்பா உபரசங்கள்சரக்கைத்தொட்டு உருக்கினால் மணிபோலே நின்று ஆடுஞ் - சாமப்பா ஒவ்வொன்றில் தொந்தித்தேறத் தனித்தனியே சரக்கொன்றில் வேதை கோடி - வேமப்பா அண்டாண்டம் பறிச்சுன்னத்தாட்டு வேறேது சித்துக்குப் பறி தானாச்சே பறி = தங்கம் 387

பறியாச்சு பறியைவிட்ட வாதமெல்லாம் பறியறிஞ்சால்சித்தாச்சு வாதமாச்சு - முறியாச்சு அடிமைகொண்டு முத்தொழிலைத் தானு முறைமுறையாய்க் குளிகையென்ற குருவுமாச்சு - கறியாச்சு சோராச்சு பொற்கலமுமாச்சு கலந்து நின்ற கூடுதற்கு கன்னியாச்சு - நெறியாச்சு யென்றுசொன்ன வுலகத்தைவிட்டு நீங்கறியார் வாசனையை நீங்கிடாயே 388

## பொற்குருவால் சகலத்தையும் சுன்னம் செய்யும்விதம்

நீங்காத பொற்குருவில் வீரங்கூட்டி கோரகப் புழுகிட்டுச் சீனம் போட்டு - வாங்காத உபரசங்கள் சரக்கிற் பூசி வாகாக வூதிடவே யெல்லாஞ் சுன்னம் - தாங்காத ஒவ்வொன்றைச் சூட்டச் சூட்டச் சதகோடி நவகோடி விரியுஞ் சுன்னம் - ஓங்காத வொவ்வொன்றில் வேதையாட ஒரு யுகமோ சண் யுகமோ வொடுங்கிடாதே 389

## கண்டர் சுன்னம்.

ஒடுங்காதப்றிக்குருவில் வீரம் பூர முத்தமனே புனுகோடு உர முங்கூட்டி - நடுங்காத சூதமொடு சவுக்காரச் சுன்னம் நலமாகக் கூட்டியினைதக் கருவாலாட்டி - படுங்காத பலகைக்கு மேலே பூசிப் பாங்கான யேழுசுன்னக் குகையில் வைத்து - தடுங்காத தண லில் வைத்து ஊது ஊது சாதகமாய் கண்டரது சுன்னமாமே 390

ஆகுமே கண்டர் சுன்னஞ் சிங்கிக்கப்பா அடுக்கடுக்கா யுபரச மும் பாஷாணத்தோடு - வேகுமே அண்டரண்டந் தொட்ட விடமெல் லாம் வேதையென்ன பாதையென்ன குளிகையென்ன - போகுமே நெடுந்தூரஞ் சங்கவரை தாண்டி பூட்டறிந்தா லுருக்கினமோ சுன்னங் கோடி - வாகுமேயிதற்கல்லோ குருவென்றனுமம் மற்றதெ ல்லா மிதின் கீழே மைந்தா காணே 391

## குகை செய்ய வெள்ளிச் சுன்னம்.

மைந்தனே முன்னெடுத்த ரசச்சுன்ன மாட்ட வொன்று நாலி டையாம் வெள்ளிக்குள்ளே - மைந்தனே பணியாக வாங்கிக்கொண்டு மருவியதோர் பூரமொடு புழுகு வீரம் - மைந்தனேசவுக்காரச்சுன்ன த்தோடு மாட்டப்பா தாளகமுஞ் சினந்தானும் - மைந்தனே யிதை யரைத்து மணிமேல் பூசி வாகாக யேழுசுன்னக் குகையில் வையே ()

## வெள்ளிச் சுன்னக்குகையும் மூடியும்.

வைத்த குகை சீலைசெய்து சுன்னம் உப்பு வாகாகக் குகைதன க்குக் கீழ்மேலிட்டு - கைத்ததொரு கனபுடமாய்ப் போடு போடு கல ந்துநின்ற வெள்ளியது சுன்னமாகுங் - தைத்ததொரு யிக்குருவை மண்ணில் போட்டுச் சாதகமாய் குகைபண்ணி யுலரவைத்து - ஊைத்த தொரு பாஷாண முள்ளே வைத்து நலமாய்ப் புடம்போடக் கட்டுங் காணே 393

கட்டுமே யிப்படிதான் சரக்கதெல்லாங் காணப்பா சரக்கோடு லோகத்தில் - ஒட்டுமே ஒட்டு முன்னே வெள்ளியாகு மூபரசத்தே பரி சிக்க வெள்ளியாகுந் . தட்டுமே சீனவை ரெட்டிப்பு மாத்து சாதக மாய் குகை வாதமென்பார் வாதி - நெட்டுமே உபரசத்தை குகையில் வைத்தூத நேராக வுருகியுள்ளே சத்துமாமே 394

சத்தொன்றிற் குருவோ கோடி சுன்னங் கோடி தனித்தனியே வேதை யொன்றில் சங்கமோடும் - பத்தொன்றிற் விரித்தாட உருக்கி னமோ கோடி பாங்கான நீற்றினமோ குருவோ கோடி - வித்தொன் றில் விரித்த சுன்ன மிப்படியேயானல் வெவ்வேறு சுன்னத்தில் ஏதோ ஏதோ சித்தென்ற சின்மயமாந் தட்சணமூர்த்தி தேசிகனர் சொ ன்னகுரு திறமிதாமே 395

## தொந்த மேற்றும் வரிசை விபரம்.

ஆமப்பா ரசிதமென்ற குருவினூடே அப்பனே காரமிட்டு வீசம்போட்டு - ஓமப்பா சவ்வாதிட்டு வைத்துக்கொண்டு உத்தமனே உபரசமுஞ் சரக்கதெல்லாந் - தாமப்பா பூசியதை யுருக்கினுக்கால் தனித்தனியே கண்விட்டு ஆடுமோடுஞ் - சேமப்பா பாஷாண முபரசத் தில் தாக்கு சேர்ந்துநின்ற உபரசத்தை லோகத்தூட்டே 396

## வெள்ளி குருவால் உபரசம் 120-ம் நீற்றும் விதம்.

ஊட்டினு லுபரசமும் லோகம் வெள்ளி யுரைத்தாக்கா விருபத்தி யைந்து மாற்று - மாட்டினு லொவ்வொன்றில் தொந்தங்கோடி வாய் திறக்கப் போகாது வல்லோர் காண்பார் - மூட்டினல் முன் குருவில் வீரம் பூர முன்னயான புரூகோடு சீனமெரிக்க - கூட்டினு லதுவோ டே வுபரசமுஞ் சரக்கும் கூசாம லொன்பதிலும் பூசியூதே 397

## எதிர்த்து வந்த வாதியை காதில் குறட்டிட்டு ஜெயிக்கும் விதம்

ஊதினு லுபரசமுஞ் சரக்கோடு லோக முத்தமனே தனித்தனியே பொருமி நீறும் - வாதினு லாடவென்ருல் ஒவ்வொன்றில் சங்கம் வர திட்டு வந்தவனே வளைத்துக்கொண்டு - எதினுலாட பினியென்று கேட்டு யெடுத்தாட உருக்கினமோ களங்கோ நீருே காதிலே குற ட்டிட்டு இழுத்துக்கொண்டு கைமுறையாய்க் கவர்கோடி யாடு ஆடே

## நீ செய்யும் வேதையை கெடுப்பின மருந்தால் எதிரி கெடுத்தால் மாற்ற மருந்து.

ஆடையிலே கெடுப்பினத்தி லழித்தானுனல் அஞ்சாதே மாணுக்கா சொல்லக்கேளு - ஊடையிலே வெடியுப்புக் காரசார முத்தமனே கல்லுப்பு சீன மஞ்சு - நாடையிலே அரைத்து நன்றாய் தேனை வார்த்து நலமாகச் சிமிளியே வைத்துக்கொண்டு தாடையிலே போட்டவனைப் பூசிக்காச்சு சண்டாளக் கெடுப்பின மு மோடிப் போமே 399

## எதிரி செய்யும் வேதையை கெடுத்து தவிடுபொடி யாக்க வங்ககுரு.

போமப்பா கெடுப்பினத்தின் வேகமெல்லாம் பொன்னுகும் வெள்ளியுமாம் பூசிக்காச்ச - ஆமப்பா அவன் தோத்த பின்பு நீதான் அவனுடைய வேதையெல்லாங் கெடுக்கக் கேளு - தாமப்பா வங்கமது உருகும்போது தனித்த அண்டத்தோற் பொடியைத் தூவிகிண்டி - சேமப்பா வருத்தவுடன் சாம்பலாகுந் திறமான சாம்பலிலே சுவுரி கூட்டி - ஓமப்பா யிதினேடு புழுகுவீர மொக்கயிட்டு மத்தித்து வைத்துக்கொள்ளே 400

## வங்க குருவால் எதிரி மயங்குவது

வைத்ததொரு களங்கெடுத்துப் பொன்னில்பூச மைந்தனே அணல்பட்டால் வெண்கலமேயாகும் - ஊனத்ததொரு தங்கமது திருவேயாகும் ஞானுமுறை யாறுமுறை யுருக்கினுக்கால் - கச்சதொரு தூளாகுந் தவிடுபோலாங் கடுஞ்சுறுக்கு கடுஞ்சுறுக்கு கெடுப்பினந் தான் மைந்தா மெச்சதொரு வித்தையிது ஆருக்குண்டு விளங்கியதோர் மூலவற்கத்துண்டு பாரே 401

பாரப்பா மூலவற்கத் துள்ளே நீயும் பரிவான போகருட பிள்ளை வற்கம் - நேரப்பா ஐந்நூற்றன்பத்தேழ்வர் நிரைநிரையா யண்டரெண்ட கடாகமெல்லாஞ் - சேரப்பா திரிவார்களவரைக் கண்டால் திர்மாக யென்னுடைய ஞமஞ்சொல்லுஞ் - தூரப்பா பாட்டருட பிள்ளையென்றல் துர்மாற்கம் பண்ணுர்கள் சொல்லுசொல்லே 402

சொல்லியிந்தக் கூட்டத்தில் சேர்ந்து ஆடு துடிமெத்த துடிமெத்த மூலவற்கம் - அல்லியல்லோப் படந்தாபோல் நாமவருமொன்று அடித்தாலும் வைதாலுஞ் சகித்துப்போகு - மல்லியல்லோ மற்றொருவர் மரபேயானல் வார்த்தை வரு பேச்சு வரு மைந்தா கேளு கல்வியல்லோ வெதகல்வி சித்தருட மரபு கண்டாக்கால் அண்டத்தில் கலந்துபேசே 403

பேசையிலே மென்மேலாய்ப பேசித்தாண்டு புறம்பான மரபிலே சேரவேண்டாம் - ஆசையிலே மூலருட மரபில் சேரு - அப்பனே காலாங்கி மரபில்சேரு நேசையிலே நூல்பாரு ஞானம் பாரு நேராக வாசிபுண்ட கருவைப்பாரு - பூசையிலே புழுகினுட வாசம்போல் புத்தியுள்ள பிள்ளை யென்று செப்புவாரே 404

## பூநாகக்கிண்ணியில் ரசம் கட்டும்விதம்.

செப்புகிறேன் முன்னெடுத்த பூநாகச் சத்தை திறமாகச் சோதித்துத் தீர்ந்துகொண்டு - நப்புகிறே னந்திடைக்குத் தங்கங் கூட்டி நலமாக வுருக்கியொரு கிண்ணி வார்த்து - கொப்புகிறேன் கிண்ணியிலே சூதம் விட்டுக் குணமான வாலுகையின் மேலே வைத்து - ஒப்புகிறேன் தீயெரிக்கச் சூதங்கட்டு முத்தமனே யெடுத்துருட்டி நீரில் போடே 405

போட்டுவைக்கயிறுகியது குளிகையாகும் புகழான ஆரையிலையில் புடத்தைப் போடு - ஆட்டுவைக்க பிராயிலையில்ப் புடத்தைப் போடு அப்பனே குளிகையுமாஞ் சூதந்தானு - மூட்டு வைக்க சாரணைக்காந் தாவடத்துக்காகு மூதண்ட குருவுக்காஞ் சுண்ணும்புக்காகும - நாட்டுவைக்கச் சித்திக்கா முத்திக்காகும் நலமான சூதத்தை யெடுத்து ஆட்டே 406

## பூநாக கிண்ணியில் செந்தூரம்.

எடுத்ததொருப் பூனகக் கிண்ணிக்குள்ளே யெளிதாக செந்தூரஞ் செய்யக் கேளு - அடுத்ததொரு ரசம் போடு தங்கம் போடு அப்பனே †திரிகுணசல் கூடப்போடு - அடுத்ததொரு வாலுகையிலேற்றிக் கொண்டு வகையுரய் அயத்துடுப்பால் கிண்டு கிண்டு - கடுத்ததொரு கிண்ணியிலே செந்தூரமாகும் காட்டப்பா ஒன்பதிலும் நூத்துக் கொன்றே 407

†திரிகுணசல் என்பது = தாளகம்—கெந்தி—மனோசிலை இவை 3-ம் சேர்க்காவிடில் செந்தூரங்கள் சிவக்காது என்று சட்டமுனி நிகண்டு 44-வது பக்கம் சட்டம்.

ஆர். எம். கே.

ஒன்றான நவலோகங் தங்கமாகு முத்தமனே உபரசங்கள் பொன்னுமாகும் - நன்றான செந்தூரந் தின்றக் குன்றி நலமாக மண்டலத்தில் காயசித்தி - கன்றான பூனாகக் கிண்ணியாட்டு கரையேது கணக்கேது கவரோ கோடி - பன்றானப் பூனாகப்பிறவி சொல்வேன் பாங்காகக் கேளுங்கோள் மாணாக்காளே 408

## பூநாகப் பிறவி இதுவே சஞ்சீவி

கேளுங்கோள் மேகத்தினிடியோ னாகங் கெடியான மழையல்லோ விந்துவாச்சு - தாளுங்கோள் பூமியது யோனியாச்சு தளுக்கென்ற மின்னலினாற் கெற்பமாச்சு - வாளுங்கள் பூனாகச் சனனமாற்கமகத்தான சஞ்சீவி யிதுதான் மக்காள் - நாளுங்கோ விப்படியே யிந்திரமாங் கோபம் நலமாகச் சனித்த திந்தப்படித்தான் காணே 409

## காயசித்திக்கு பூநாக சத்தும் இந்திர கோபச் சத்தும் அமுர்தமெனல்

காணப்பா பூநாகச் சத்தைப்போல கலந்து யிந்திரகோபத்தை யூதசத்தாம் - பூணப்பா பூனாக ஆட்டைக்காட்டில் புகழாக ரொட்டிப்பு யிதுதானாகும் - தோணப்பா காயசித்தி பண்ணுவோர்க்குச் செகமாக யிதுரண்டே அமுர்தவித்தை - ஊணப்பா யிதினாலே சித்தியானால் ஓடுங்காமலுகாந்தவரை யிருத்தும்பாரே 410

## காந்தசத்து.

இருத்தியதோர் காந்தசத்தின் சத்தைக்கேளு யிதமாக பலம் பத்து யிடித்துக்கொண்டு - அருத்தியதோர் கெந்தகமும் பலந்தான் பத்து - அதினோடே பூனாகந் தேங்காய்மட்டு - வருத்தியதோர் காரமது பலந்தான் ரெண்டு வாகாக மத்தித்து கலயத்திட்டு - திருத்தியதோர் பூமியிலே பட்சமொன்று திறமாக புதைத்து வைத்துயெடுத்துக்கொள்ளே 411

எடுத்ததிலே சின்ன மீனெள்ளு மொச்சை யிதமான உளுந்தோடு குன்றி கார - மடுத்ததிலே பிறுவெச்சங் கூடப் போட்டு வாகான மேஷத்தின் ரெத்தத்தாட்டி - விடுத்ததிலே சறவுலையில் விட்டு வூது மேலான காந்தமது சத்தாய் விழுந் - தொடுத்ததிலே யதையெடுத்து உருக்கி நன்றாய் சூட்டப்பா நாலிலொன்று தங்கந்தானே 412

## காந்தக்கிண்ணி செந்தூரம்

தானென்ற சத்தாலே கிண்ணி வார்த்துத் தன்னுக்குள் துடுப்பதுபோல் லொன்று பண்ணி - வானென்ற வாலுகையில் கிண்ணி வைத்து வகையான சூதம்விட்டு தங்கம் போட்டு - கானென்ற திரிகுணசலில் வீரம்போட்டு கைமுறையாய் துடுப்பாலே கிண்டக்கிண்ட தேனென்ற நிறமாகி செந்தூரமாகுஞ் செகமெல்லா மொன்பதிலும் நூத்துக்கொன்று தாக்கே 413

## காந்தசத்து செந்தூரம்.

தாக்கினல் நவலோகம் பொன்னுமாகுந் தப்பாது வென்னூலில் த்துரைகளொன்றும் - தூக்கினல் காந்தசத்துப் பலமதொன்று சொற்பெரிய பறியொன்ற இரண்டுங்கூட்டித் - தேக்கினல் சூதமொன்று பிதிலே யிய்ந்து திறமாக கல்வத்தில் பொடியாய்ப் பண்ணி - வாக்கினுலிந்திடைக்கு கெந்திபீட்டு வகையாகப் பொடி செய்து குப்பிக்கேத்தே 414

குப்பியதை தினமொன்று வாலுகையிலேற்றி கொட்டியிதைக் கல்வத்தில் கெந்திபீட்டு - அப்பியது பொற்றிலேயின் சாற்றலாட்டியடவாக வில்லைதட்டி புடத்தைபோடு - செப்பியது செந்தூரமாகுங் காந்தம் தினந்தோறுங் குன்றிரெண்டு மண்டலமேபுண்ண - ஒப்பியது வாதபித்த சேத்துமத்தைப் போக்கும் உடலறிந்து அனுபானத்துன்னு யுண்ணே 415

உண்டாக்கா லுடலிருகி நரையுமாறு முத்தமனே திரேகமது பொன்போலாகுங் - கொண்டாக்கால் வயிரம் போல் கையுமாகுங் குத்திஞல் மலை சிதறித் தூளாய்ப் போகுங் - கண்டாக்கால் நோய்களெல்லாந் தலைகெட்டோடுங் கைமுறையாய்த் திரேக மெல்லாஞ் சிவந்துபோகும் - அண்டாக்கால் காந்தமென்ற பூமிதை மறிந்தவர்க்கும் மறியார்க்கு மாகுந்தானே 416

## கெந்தகச்சத்து.

ஆகுமே கெந்தகத்தின் சத்தைக் கேளு வப்பனே கெந்தகந்தானிரெண்டுபத்து பலமேயாகும் - வாகுமே குறட்டையுட பழமும் போட்டு - வாகானகோவைபுட பழமும்போட்டு தன்னேடு முசுமுசுக்கை பழமும் போட்டு - பாகுமே அமுக்கிருப் பழமும் போட்டு பாங்காக தக்காளிப் பழமும் போடே 417

போட்டப்பா ஒரிலையாந் தாமரையுங்கூட புகழ் கண்டங்கத்திரியின் பழமுங்கூட - நாடப்பா சிவந்துநின்ற மாம்பழத்தின் தோலும் நேரான வெண்கார பலமோ பத்து - கூடப்பா தேன் வெல்லங் குன்றி வெண்ணை குறையாமல் வகையொன்று பலமோ ரெண்டு - ஊடப்பா அரைத்து நன்றாய் வில்லைதட்டி யுறவான வங்கமென்ற ளைத்தூதே

## கெந்தகக் கிண்ணி.

ஊதையிலே மணிமணியாய்ச் சத்துவிழு முறவாகப் பொருக்கி யெல்லா மெடுத்துக்கொண்டு - பாதையிலே அப்பிரகச் சத்தைப் போலப் பாங்காக சோதித்து யுருக்கி சாய்த்து - மாதையிலே யிஞ்சி டைக்கு நாலுக்கொன்று மைந்தனே தங்கமிட்டு கிண்ணி வார்த்து - கிண்ணியிலே சூதமிட்டு தங்கம்போட்டு குறையாமல் திரிகுணசல் வீரம் போடே 419

போட்டுமே கிண்ணியைத்தான் வாலுகையிலேற்றி குமுறவதை அயத்துடுப்பால் கிண்டு கிண்டு - நாட்டியது செந்தூரமான பின்பு நலமான ஒன்பதினு மாயிரத்தொன்றேடும் - ஆட்டியிதில் செந்தூர மின்னங் கேளு அடவான நாகரசங் கெந்தகத்தைப் போட்டு - மூட்டியிதை முன்போலே செந்தூரிக்க மூதண்ட ஒன்பதினு மாயிரத்துக் கொன்றே 420

## நாகரசச் செந்தூரம்.

ஆயிரத்துக் கோடியதோர் கிண்ணிதன்னை அப்பனே ஊதறிந்து ஊத ஊதப் - பாயிரத்தில் செம்பாகுங் கெந்திச் செம்பு பாச்சினால் தங்கத்தில் னூறுதொந்தமேறும் - ஓயிரத்தில் வேதையிட யளவுதூர முத்தமனே பரிசனத்தில் வேதையாகும் - சேயிபத்தில் கெந்தியுடச் செம்பைத் தொட்டு செப்பிபதோர் பொய்யெல்லாஞ்செல்லுந்தானே

## நிமிளைச் சத்து.

செல்லவே நிமிளையுடச் சத்தைக்கேளு சீராக நிமிளையொரு பல மோ பத்து - நல்லவே காரமொரு பலந்தானஞ்சு நலமான சாரமது பலமுங் கால்தான் - மல்லமீதே குன்றி வெண்ணை வெல்லங் தேனும் வகையொன்றுக் கிருபலந்தான் மெழுகுமாமே - ஆகுமே மத்தித்து வில்லை தட்டி அடவாக நாளத்தில் போட்டு வூதே 422

போட்டுதே நிமிளையது சத்தாய் வீழும் பொன்னிறம்போல் தா னிருக்கும் புகழாய் வாங்கி - மாட்டுதி முன்போலே யுருக்கிசாய்த்து வாங்கி யிதில் நாலிலொன்று தங்கஞ் சேர்த்து - நீட்டுதி யுருக்கியிதில் கிண்ணி வார்த்து நேராகச் செந்தூர முன்போற் செய்ய - காட்டுதிச் செந்தூரம் நவலோகத்தில் நலமாக ஆயிரத்துக்கொன்று போடே 423

போடப்பா நவலோகந் தங்கமாகும் புகழான உபரசமும் தங்க மாகும் ஆடப்பாசெந்தூரம் தொந்தமேற்றி ஆயிரத்தின் மட்டோடோ மப்பாலேறு - மூடப்பா நிமிளையது ஓடும் வேகம் யுரைக்க வென்று வுரையேது உன்னிப்பாரு - நாடப்பா நிமிளையுட கிண்ணிதானும் நலமாகக் களங்காகுங் குருவுமாமே 424

குருவாதுஞ் சுன்னமுமாஞ் செந்தூரமாகுங் கூப்பிட்டால் கேளாது யிதிலே போக்கு - தருவாகுங் குளிகையுமாந் தூமமாகுஞ் சாதக மாயெட்டுவித வேதையாகுந் - திருவாகுங் காயசித்தி லோக சித்தியாகுஞ் செகச்சால மானதெல்லாந் திறமாயாடு - மருவாகுந் தேவிபுட நாதத்தாட்டு வாய்திறக்கப் போகாது போக்குத்தானே 425

## சகல சத்துக்களையும் கரடு கட்டாமல் உருக்கி சத்தெடுக்க குடோரி.

போக்கான சத்தெடுக்க குடோரி கேளு புகழான வெள்ளையொருபலந்தான் மூன்று - வாக்கான தாளகமோ பலந்தான்ரெண்டு வகையான சூதமது பலந்தானென்று - தாக்கான சாரமரை காரங் கால்தான் சாதகமாய் ஊஷரமோ பலமதொன்று - தாக்கான யிதையெல்லாம் பொடியாய்ப் பண்ணிச் சோரவிட்டு யெருக்கம்பால் ரவியில் வையே 426

வைத்தல்லோ யெருக்கம்பால் யேழுதிறங்குத்தி வாகாக உலர்ந்த பின்பு குப்பிக்கேற்றி -னைத்தல்லோ வாலுகையிலேற்றிமூட்டி நலமாக வறுசாம மெரித்தாயானால் - கைத்தல்லோ குப்பியிலே பதங்கமேறும் கண்டாயோ யிதின் பேரு குடோரியாகும் - மைத்தல்லோ யிந்திடைக்குக் கட்டியதோர் காரமு் வாகான யெட்டிலொன்று ரெங்கு கூட்டே 427

கூட்டியல்லோ பொடிசெய்து அடைத்துக்கொண்டு கூசாமல் சத்துவகை எடுக்கும்போது - நீட்டியல்லோ முப்பதுக்கு ஒன்று போடு நேரான சத்துவகை எல்லாங் கக்கும் - மூட்டியல்லோ யிலையிவிடச் சத்துமாகு மூதண்ட மண்மணலுஞ் சத்தேயாகு - மாட்டியல்லோ உபரசங்கள் சத்தேயாகு மாற்றியதோர் ரெத்தினங்கள் களை போகாதே 428

களையோடே ரெத்தினங்கள் நின்று ஆடுங் கைவிட்ட லோகத்திலுபாசத்தைச் சேர்க்கும் - வளையோடே சாரணைக்கு யுண்டுகக்கும் வாகான உருக்கினத்துக்கிதுவேயாதி-முளையோடே ரசத்தைப் போக்கோட்டாமல் மூட்டிவைக்கும் மாட்டிவைக்குங் குடோரி தானுந் - களையோடே சாறுகளில் சத்தோ கோடி தனித்தனியே வாங்கிவைக்குந் தாக்கு தாக்கே. 429

# காயசித்திக்கு மருந்து சாப்பிடும் வரிசைக்கிரமம்.

வாங்கியதோர் காயசித்தி செய்யும் மாற்கம் வரிசையாய்ச் சொல்லுகிறேன் கேளு - ஓங்கியதோர் கடுக்காயை முந்தியுண்ணு யுத்தமனே யிருபதுனுள்ளான பின்பு - பாங்கியதோ ரவ்வைவக்காய் மிளகை யேற்றி பரிவாக நூறுமட்டு மமுரியிலே கொள்ளு - தாங்கியதோர் கடந்த பின்பு சொல்லக்கேளு தப்பாமலேறுகிற முறையைக்கேளே

முறையோடே பொற்றிலையும் அவுரிகூட்டி மூதண்ட வல்லாரை கரந்தைகூட - நிறையோடு காக்குறட்டானஞ்சுங்கூட நேராகச் சூரணித்து வைத்துக்கொண்டு - மறையோடு பாக்களவு பாலிலுண்ண மக்களே காயசித்தி கசடுபோகும் - துறையோடே அப்பிரகம் பின்னேயுண்ணுச் சொல்ப்பெரிய காந்தத்தைக் கொள்ளு கொள்ளே 431

கொண்டபின்பு கெந்தியுண்ணு தங்கமுண்ணு கொள்கியதோர் பூநாகத்தை யுண்ணு - கண்டபின்பு சூதமுண்ணு சட்டை கக்குங் காற்றடைப்பாய் குகையினுள்ளே யிருந்துகொள்ளு - உண்டபின்பு வயிரமுண்ணு வயிரதேக முத்தமனே முன்னெடுத்த தேகம் போச்சு தண்டபின்பு சூதத்தால் தேசமாச்சுச் சதகோடி கற்பவரை நிற்கும் பாரே 432

நிற்குமே நின்றதினுல் பலமே தென்னில் நேரான யோகத்தைக் கண்டு தேறி - நிற்குமே தேகமென்னில் குளிகையிட்டு ஆடி நிரை நிரையாயண்டமொடு பேரண்டம் பார்த்து - நிற்குமே சிவமென்னில் புவனம் பார்த்து நிலையான பதம் பார்த்து கண்டுதேறி - நிற்குமே சிவகலைதான் சிவனுய் மைந்தா னிமிஷத்திற் பூரணத்தில்புக்கியாடே

ஆடவல்லோ வாதசித்தி ஆசான் சொன்னு ரான் சொன்னுர் மாயி சொன்னு ளைய்யன் சொன்னுர் - ஊடவல்லோ ஞானத்தில் சித்துஞ்சொன்னுர் உரைக்க வல்லோ மனத்தானும் வாசிசொன்னுர் கூடவல்லோ அகண்டத்தில் லெட்சயங்கள் சொன்னுர் கூறுன மன மடங்கச் சாஸ்திரங்கள் சொன்னுர் - நாடவல்லோ மேல்மூலத் துள்ளே நின்று நலமான சித்துக்கு வகையைக் கேளே 434

# அறுபத்துநாலு மடபதி

வகையாகக் காயசித்திப் பண்ணும்போது மைந்தனே குகைக் குள்ளே பஸ்பம் போட்டுத் - தகையான பிருணயம் பண்ணி பண்ணிச் சாதகமாய் லெட்சயத்தைச் சாரனேக்கிப் - பகையாக வாசனை யைத்துரத்திச் சாடிப் பாங்கான காமத்தை பரிந்துதள்ளித் - துகை யாக மேல்மூலத்துள்ளே நின்று சொக்கியல்லோ பூரணத்திற் கற்பங் கொள்ளே 435

கொள்ளையிலே பத்தியந்தான் புளியாகாது கூருன வுப்போடு பெண்ணுகாது - நள்ளயிலே மோரோடு மாங்கிசமுமாகா நலமான எண்ணெயொடு சுண்ணும்பாகா - தாளயிலே யிதுவெல்லாம் தள்ளி யுண்ணு சாதகமாய் கற்பமது சித்தியாகும் - பிள்ளையிலே உங்களைப் போல் பிள்ளையில்லை போாக சித்தருக்குள் கீர்த்தி கொள்ளே 436

. கொள்ளவே நாதாக்கள் மெச்சுவார்கள் கூறியதோ ரறுபத்து மாபோரெல்லாங் - கண்டல்லோ ஆறுபிள்ளை யென்பார் மக்காள் கலந்தோடி திரிந்தாக்கால் சித்தரென்பார் - மிண்டல்லோ சமாதியுற் ருல் ரிஷிதானென்பார் வேதாந்தம் பார்த்தாக்கால் ஞானி யென்பார் தொண்டல்லோ சின்மயத்தின் தொண்டரென்பார் சொரூப முற்ற ஞானியென்றும் சொல்லுவாரே 437

சொல்லியதோ ரறுபத்து நாலாய் நின்ற சுந்தரமே சித்தருட மரபைக்கேளு - மல்லியதோர் தெட்சணத்தில் சின்மயமாந்தேவர் மகத்தான சனகாதி குமாரரோடு - அல்லியதோர் வியாக்கிரமர் பதஞ் சலியிஞேடு அப்பனே மூலவற்கம் நம்முடைய வற்கம் - நல்லியதோர் சௌராஷ்ட்ரானந்தனுதர் சவுண்டீச ஞுதரோடு தன்னைக்கேளே 438

கேளப்பா கந்துகி ஞுதமொடு கெடியான கூருமானந்த மூர்த்தி தாளப்பா யோகவானந்தமூர்த்தி தன்னுடனேமதிங்கவானந்தமூர்த்தி நாளப்பா காந்தவானந்தமூர்த்தி நலம்பெரிய ரிஷபவானந்த யோகி வாளப்பா கைவரதானந்த யோகி மகத்தான கெகனவானந்தர் தானே

தானென்ற சூரியானந்த யோகி தபோசித்தி யானந்த யோகி யோடு - வானென்ற சவுண்டிகானந்தமூர்த்தி மகத்தான ரூபவானந்த ரோடு-வானென்ற கேசரானந்தமூர்த்தி கலந்துநின்ற கெந்தவானந்த மூர்த்தி - தேனென்ற மாய்கை யானந்தமூர்த்தி செப்புகிறேன் மகா மாய ஞுதர்தானே 440

மாயமற்ற நித்தியானந்தமூர்த்தி மகத்தான விசுவானந்த ஞுதர் காயமற்ற ஊமையானந்தனுதர் கைவிட்ட சர்வ சர்வானந்தமூர்த்தி - பாயமற்ற சுபகரானந்தமூர்த்தி தன்னொடு தானுனந்தமூர்த்தி - சேய முற்றஅமுர்தானந்த யோகி சேர்ந்துநின்ற செகண்டிகானந்தர் தானே

காணப்பா லெட்சயானந்த மூர்த்தி கலந்துநின்ற சுத்தவானந்த மூர்த்தி - பூணப்பா சித்தவானந்த மூர்த்தி புகழான அந்தவானந்த மூர்த்தி - ஊணப்பா சம்பிர வானந்த மூர்த்தி - ஓங்கியதோ ருலகை யானந்த மூர்த்தி தோணப்பா திரிலோகானந்த மூர்த்தி சொற்பெரிய பிரமவானந்தர் தானே

ஆனந்த ரக்ஷகானந்த ஞுத ரப்பனே மலினவானந்தனுதர் - வா னந்த பிரசண்ட வானந்தனுதர் மகத்தான வனங்கவானந்தனுதர்- கா னந்த வித்தியானந்தனுதர் கைகலந்த அம்பிகானந்தனுதர் - ஊனந்த நந்தியானந்த ஞுதர் ஓங்கியதோர் மகானந்த மூர்த்தியாமே 443

மூர்த்தியென்ற சுந்தரானந்தனாதர் மூவுலகுஞ் சஞ்சரித்த காலானந்தர் - ஆர்த்தியென்ற டமரகானந்தனாதர் அப்பனே அபயவானந்தனாதர் - கீர்த்திகொண்ட விகாரவானந்தனாதர் - கெடியான பூதவானந்தனாதர் - சார்த்திகொண்ட சர்வஆனந்தனாதர் சாதகமாய் வியோதமவானந்தர் தானே. 444

காணப்பா கோரக்கர் னாதரொடு கைவிட்ட சொரூப வானந்தமூர்த்தி - தோணப்பா நிற்குணானந்தமூர்த்தி சொற்பெரிய வாசியானந்தமூர்த்தி - பூணப்பா கங்காளனாத மூர்த்தி புகழான பூரணானந்தமூர்த்தி ஊணப்பா கமலவானந்த மூர்த்தி யுத்தமனே யறுபத்து நால்வர்பேரே

பேரான மரபுகளிற் சாஸ்திரங்கள் வெவ்வேறு பேணியவர் சீஷவர்கம் நூலோ கோடி - வாரான அங்கங்கள் கோடா கோடி மாட்டுகிற சாரணையோ குளிகை கோடி - நேரான வேகையுட வித்தை கோடி, நேர்ப்பாக பார்க்குகிற யோகங் கோடி - சீரான தொந்திப்புஞ் சந்திப்புங் கோடி செப்பினார் மறைபொருளாய்ச் செப்பினாரே 446

செப்பினா ராட்டதொன்று மூட்டதொன்று திறமாகத் தாக்கென்றும் னைக்க தென்றும் - ஒப்பினார் பலபலவாய் பரிணாமங்கள் உரையறிந்து கூட்டுவது கடினமெத்த - தப்பினாரிடை பாகம் கைபாகங்கள் தாக்கியதோர் களங்குக்கு லெக்குச் சொல்லார் - அப்பினார் நூலுக்குள் முன்பின்னாய் வைத்து அப்பனே யென்னாலே வெளியென்றாரே 447

வெளியாகச் சொன்னேனென்பார் உட்கருவை மறைத்து வேணுமோ யென்னாற்கு ஆசானென்பார் - ஒளியாகக் காணுமென்பார் அந்தாவென்பார் ஒளிப்பில்லை மறப்பில்லை யெந்நூலீலென்பார் - நெளியாகத் தொந்தமிது சங்கமென்பார் நேராக நிறுத்துகிற கருவைச் சொல்லார் - தனியாக ஓடுகிற குருவின் மாற்கஞ் சாங்கமாய்ச் சொல்லாமற் சாதித்தாரே 448

சாதித்த நூல் பார்த்து உலகவாதி தன்னாலே தான் கெட்டேனென்று சொல்லி - வாதித்த சாஸ்திரத்தை மெய்யென்றெண்ணி வரை வரவே சுடுகையிலுந் தப்பும் தப்பும் - பேதித்த புத்தியினால் நூல் பொய்யென்று போகக்கெட்டவர்கள் கோடாகோடி - ஓதித்த நூலையெல்லாம் பார்த்து யானு முத்தமனே தோஷமென்றுரை செய்தேனே 449

உரையென்ன வென்ருக்கால் சாக்கின்பேரு முத்தமனே நாதாக்கள் ஒளித்தபோக்குந் - திரையென்னவென்ருக்கா லரைப்புப்பாகஞ் செப்பாத குருக்கிடையுங் கருக்கிடைபினேடு - கரையென்ன யினங்களிலே பாகந்தப்புங் கைவிட்ட லவணமொடு காரசாரந் துறையென்ற புளியோடு உப்பு ரெண்டுஞ் சூட்டுகிற முறையெல்லாந் துறந்திட்டேனே 450

# இந்நூலும் நிகண்டும் வாதத்துக்காதி எனல்.

துறந்திட்ட இந்நூலோடு நிகண்டுதானுஞ் சொல்லார்கள் சொல்லார்கள் கோடி தனமீந்து - மறந்திட்ட உலகத்தில் சிக்கிற்ருனல் மகத்தான சிவயோகி ருஜயோகி - கறந்திட்ட பால்போல வாதமெல்லாங் கைப்பலனய் சித்திக்குங் கருவோ சொல்லும் - யெறந்திட்டுங் கொடுக்கார்க ளெந்தநூலை யெய்ததினல் வாதத்துக் காசனமே 451

அரசனே வாதத்துக் கவன்தான் கேளு அத்வித வேதாந்த சிரோமணியு மாவான் - அரசனே ரசத்துக்கு குளிகைச் சித்தன் அவன் செய்த தவத்தாலே யெய்து மெந்நூல் - அரசனே குருவுக்குச்சுன்னத்துக்கெல்லா மவனுடைய பயல் செய்வா னீற்றினங்களெல்லாம் - அரசனே அரசனல்ல ருஜயோகி அத்தனைக்கும் பண்ணிவிக்கும் நிகண்டு தானே 452

# கருவறிய.

நிகண்டான வாதத்துக் காதியென்ன நோாக பாய்கிறதோர் வேகமென்ன - புகண்டான வர்ணமென்ன கட்டினங் களென்ன போக்கான செந்தூரங் களங்கமென்ன - தகண்டான புடசெயத்தின் மாற்கமென்ன தாக்கியதோர் புடமென்ன கிருவணங்களென்ன - பகண்டான குருவென்ன சுண்ணம்பென்ன பரிவாகக் கருவறிந்தோன் வாதியாமே. 453

கருவேது செயநீர்க்குச் சிறுநீருப்பு கைப்பட்டால் சிவப்பதென்ன வீரம் வீரம் - உருவேது உப்பாலே கட்டினங்களாச்சு ஓடுகிற வேகமென்ன உபாசமு மாச்சு - துருவேது வாதத்தில் துரிசுசாரஞ் சாத்தியதோர் களங்குக்கு நவலோகங்கள் - குருவேது வாதத்திலூஷாத்தின் சுன்னங் கொடியதொரு திராவகமு மிணங்கனச்சே

ஆச்சப்பா யித்தனைக்குஞ் சவுக்காரமாதி யல்லவென்ருல் ஊஷாத்தின் சுன்னமாதி - ஓச்சப்பா யிதுக்கென்ன உப்பேயாதி ஓமுக்கமிதில் தோற்றமிதி லாணிப்பாரு - போச்சப்பா யிதினலே அண்டசண்டந் தாண்டி புகழான குப்பிக்குங் கெந்தகமேயாதி - மாச்சப்பா செயநீர்க்குச் சாரமாதி மகத்தான சாரணைக்குப் புடந்தான்காணே.

காணப்பா களங்குகொள்ளக் கிருவணமேயாதி கைவிட்டுப்பாய்
வதற்கு குளிகையாதி - ஊணப்பா புடத்துக்குத் தங்கமாதி யுற்ற
வர்ணமேறுதற்குச் சூதமாதி - தோணப்பா குருவுக்கு வீரமாதி
சொற்கேளாச் சுன்னத்தில் வழலையாதி - பூணப்பா லகுவாக ஆ-
வென்றால் புகழான ஊஷரத்தின் சுன்னத்தாட்டே 456

## லகுவித்தை.

சுன்னமென்ற துறையெல்லா மிதனுக்குள்ளே சூட்சத்தைச்
சொல்லார்கள் சவுக்காரமென்பார் - சுன்னமென்ற வாய்ப்பேச்சோ
பூநீரின் வேகந் தொட்டவிடம் பட்டவிடம் எல்லாம் நீறும் - சுன்ன
மென்ன பூமியுட நாதம்பொங்கிற் சுகமான கற்சவுடு மலையி நாதஞ்
சுன்னமென்ன சுன்னமென்னச் சொன்னலாமோ சுணங்கலே உவற்
காட்டில் குடிசை போடே 457

## பூநீர் சுன்னம் காலம்.

குடிசிடுவாயெப்பவென்றால் பங்குனி மேஷம் கூறுதே வெள்ளை
யெல்லாம் வாரு வாரு - அடிசுடுவதெப்பவென்று லந்தக்கால மப்ப
வல்லோ பூநாதம்பொங்கிநீறுங் - கெடிசுடுவதேதென்று லிந்தநீற்றால்
கேளாத சாரமிதில் கெடியாய்ச் சாகும் - முடி சுடுவதேதென்று
லவணஞ்சாகு முடிலவண மடிசாரம் ரெண்டுங்கொல்லே 458

## காரசாரக்கட்டு ஜெயநீர்.

கொன்றதொரு ரெண்டையுந்தான் செயநீராக்கி குறிப்பாக வீர
மிட்டு பூரம்போட்டு - கலக்கியந்த செயநீரில் காரந்தோய்த்துக்
கடுரவியிற் போட்டிடவே காரங்கட்டுந் - சண்ணதொரு காரத்துக்
கிடையே வீரஞ் சாத்தப்பா வீரம் யிடை பூரம் போட்டு - விண்ண
தொருபூரமிடை பூநீர்ச்சுன்ன மேதித்து சுக்குலத்தால் (சுக்கிலம் = வெண்கரு) வில்லே
கட்டே 459

## வஸ்து வாங்க.

கட்டிவைத்து வஸ்துவிட மாற்கம்கேளு கன்னியவள் தலைருது
வில் வடிவுபார்த்து - ஓட்டிவைத்து குணம் பார்த்து அழைத்துவந்து
உத்தமனே புளிபைவிட்டு நெய் பாலோடு - நெட்டி வைத்து மதுர
மொடு லவணங்கூட்டி நேராக நீராட்டிச் சலவையீய்ந்து - அட்டிவை
த்து யிளவயசு மன்னனையுங்கூட்டி அவனுக்கு மிட்படியே மேய்த்தி
டாயே 460

மேய்த்திட்டு யிருவருட அமுரிதானும் விரைந்து ஒரு பீங்கா ணும் பாண்டத்தில் விட்டு - ஆய்த்திட்ட சீனமொரு பலமோ பத்து அந்திடைக்குச் சமனாகக் கல்லுப்பிட்டு - மாய்த்திட்ட பூரமது பல மதொன்று வாகாள சவுக்காரச் சுன்னமொன்று - ஒய்த்திட்ட மாக விட்டமுரிக்குள்ளே யுத்தமனே மண்டலந்தான் அமுரி வாரே 461

## சோரையுப்பு.

வார்த்தல்லோ ரவியில்வைத்து வற்ற வற்ற வாகானமண்டலந் தான் கடந்தபின்பு - கோர்த்தல்லோ புலர்ந்தபின்பு உப்பாய் நிற்குங் கொடியதொரு லவணமிது மாற்கங் கேளு - ஊர்த்தல்லோ மண்ட லத்தில் ருதுவானுக்கா யுத்தமனே பீங்கானில் வாங்கிக்கொண்டு சேர்க்கவல்லோ முன்னுரைத்த வில்லைபோடத் திறமானநாதமங்கே முறியும் பாரே. 459-வது பாட்டில் 462

பாரப்பா முறிந்த பின்பு இந்த உப்பிலிட்டுப் பாங்கான சையோக சுக்கிலமும் விட்டு - நேரப்பா தினந்தோறும் ரவியில் வைப்பாய் நே ராக விளைந்தல்லோ உப்புமாகுஞ் - சேரப்பா யிதின்பேருசோரமென் பார் செப்பரிது செப்பரிது யிதினில் வேதை - கூரப்பா யிதையெடு த்துச் சுன்னஞ் செய்ய கூறுகிறேனறிந்த மட்டுங் கூறுறேனே 463

## சோர உப்புச் சுன்னம்.

அறிந்த மட்டுங் கூறுகிறே னுப்புமேலே அப்பனே வீரமொடு வழலைச்சுன்னஞ் - செறிந்தமட்டும் பூரமொடு சாரங்கூட்டிச் சீராக ஆட்டயிலே யிளகும் பாரு - நெறிந்த மட்டு முப்பிலே யிதனைப்பூசி நேராக உலரவைத்து யிதனைத்தானும் - பிறிந்த மட்டுஞ் சீனமென்ற சுன்னத்தில் வைத்துப் போாக அடுப்பேற்றி யெரித்திடாயே 464

## சோரச் சுன்ன ஜெயநீர்.

## இதால் பச்சைகற்பூரச் சுன்னம்.

யெரித்த பின்பு யிதைப்பாரு-சுன்ன மாகு, மில்லாட்டால் திரு ம்பி யந்தப்படியே யாட்டு - மறிந்த பின்பு யிதை யெடுத்து அஞ்சு சுன்னக் குகையில் வைத்தூதக் கடுஞ்சுன்னமாகும் பாரு - தரித்த பின்பு யிந்திடைக்குச் சாரங்கூட்டிற் சமுத்திரம்போல் நீராகு மின் னீர்க்குள்ளே - தரித்த பின்பு பூரமிட்டுக் கடிகை வைத்து கலந்தெடு த்துக் குகையினுள்ளே போட்டு ஊதே 465

## பச்சை கற்பூரச் சுன்னம்.

இதால் சகலமும் நீறும்.

## தங்கமும் சுன்னமாகும்.

ஊதினுற் பூரமது சுன்னமாகு முத்தமனே யுசத்தியிது பூரச்
சுன்னம் - பாதினு லிதினலே சூதங்கட்டும் பரிசனத்தில் தங்கமது
சுன்னமாகுங் - கோதினுற் பாஷாணம் வாசனைக்குச் சாகுங் குறை
யாம லுபசரங்கள் சத்துமாகும் - ஆதினு லிதினேடு வீரங்கூட்டி
லண்டாண்டந் தடாகமெல்லாஞ் சுன்னமாமே 466

## அண்டம் மணிபோ லுருகி கட்டும்.

ஆமப்பா யிதினேடு சவ்வாது கார மணிகினு லண்டமொரு
மணியாயாடும் - ஓமப்பா நிர்மலமாங் கற்பூரத்தில் உத்தமனே வஸ்து
வந்து கூடிச்சானுல் - வேமப்பா அண்டரண்டந் தீயில்லாமல் வேதை
யென்ன பாதையென்னக் கவரோ கோடி - ஞமபபா அறிந்தமட்டுஞ்
சொல்லக் கேளு நலமான ¶பூரத்தில் சாரங்கூட்டே 467

¶ ஷி பூரச்சுன்னத்தில் சாரம் சேர்த்தரைத்து
பனியில் வைக்க ஜெயநீராகும். ஆர். எம். கே.

## பூரச்செயநீரில் தாளகச் சுன்னம்.

கூட்டியல்லோ ஆட்டயிலே செயநீராகுங் குறிப்பாகவீரமிட்டுச்
செயநீர்க்குள்ளே - மாட்டியல்லோ தாளகத்தை செயநீரிற் தோய்த்து
மகத்தான ரவியிலிட மஞ்சள் போகும் - ஞட்டியல்லோ யிதையெடு
த்து அஞ்சு சுன்னக் குகையில் நலமாக வைத்தூதச் சுன்னமாகு
மூட்டியல்லோ சுன்னத்தில் புனுகு வீர முசியாமல் மத்தித்து
வைத்துக் கொள்ளே 468

## தாளகச்சுன்னம். புனுகு, வீரம் 3-ம்

பூசியூத சகல சரக்குகளும் சுன்னமாகுமெனல்.

---

வைத்தல்லோ தொட்டெடுத்துச் சரக்கிற் பூசி வாகாக ஊத
யெல்லாஞ் சுன்னமாகு - மெத்ததிலே உபரசமுஞ் சுன்னமாகும்
விளங்கி நின்ற லவண முதல் காரசாரம் - நத்தல்லோ பூசியெல்லா
மூதச் சுன்னம் நலமாகச் சுன்னமது தொந்தித்தாக்கால் - லெச்சதி
லே தொந்தமிதிலாயிரந்தானேறு மெடுத்துரைக்க முடியாது யேத்திப்
பாரே 469

## 120-உபரசமும் மணிபோலுருகி கட்டும்.

யேத்தியதோர் சுன்னமொன்றில் கவரோ சொல்ல யேழு யுகம் பத்தாது முடிவுங் காணார் - மாத்தியதோர் தாளகத்தில் சவ்வாது காரமத்தித்து உபரசங்கள் சாக்கிற்பூசி - ஆத்தியதோர்லவணமொடு சாரகார மதுக்கதுக்கப் பூசியதை யுருக்கஆடுந் - தோத்தியதோ ரோவ்வொன்றைத் தொந்தித்தாடச் சொற்பெரிய ஆயிரமோதொந்த மாமே 470

தொந்தத்தில் தொந்தமிட்டு யேற்ற யேற்றத் துலையாது சங்க வரை தொந்தமேறும் - பந்தத்தில்கோடிபந்தங் கொளுத்தினுப்போல் பலபலவா யேறிவரும் லெக்கோயில்லை - மந்தத்தில் நில்லாது வஸ்து வித்தை வாய்கொண்டு சொல்லவென்றால் கூடாதப்பா - அந்தத்தி லந்தவரை வேதையோடு மப்பனே மாத்தேது நூறுதானே 471

## தாளகச் செயநீரில் சூதக்கட்டு.

தானென்ற தாளகத்தில் சாரம் ரெட்டி தாக்கையிலே செலமா குந் தன்னைக் கேளு - வானென்ற சூதத்தில் செயநீர்விட்டு வாகாகக் கொதிக்கையிலே கட்டிப்போகும் - வேனென்ற சூதத்திற் பொற் குருவைப் பண்ணு வேதைக்காம் பாதைக்காங் குளிகைக்காகுந் - தேனென்ற வெள்ளிதனைக் குருவே பண்ணு திரும்பினதோர் திக் கெல்லாம் வெள்ளியாமே 472

ஆமப்பா செயநீரில் குளிகை பண்ண அண்டாண்ட பதங் கடந்து அப்பால் காட்டும் - சோமப்பால் பீரிட்டோடும் குளிகை யிட்டு பார்த்தால் - சொற்பெரிய ஆறுதலம் வெளியாய்க் காணும் - வேமப்பா கேசரிதான் மேலே பாரு வெட்ட வெளி வெட்ட வெளி கண்கொள்ளாக் காந்தி - சாமப்பா மாயையோடு வாசனைகள் தானுந் தனிச்சூத வஸ்துவுட பெருமை பாரே 473

## தாளகசுன்னத்தால் வங்கச்சுன்னக்குரு.

பெருமையென்ற தாளகத்தின் சுன்னத்தோடு பேரான வீர மிட்டுப் புழுகும் போட்டு - உருமையென்ற சீனமிட்டு வஸ்துவினு லாட்டி யுத்தமனே வங்கத்தின் மேலே பூசி - அருமையென்ற புடம் போடு பொருமி நீறு மப்பனே கடுங்காரச் சுன்னமாகுந் - தருமை யென்ற சுன்னத்தில் புழுகு வீரந் தாக்கி வைத்து நவலோக பரிசம் பண்ணே 474

## வங்கச்சுன்னத்தால் தங்கச்சுன்னம்.

பரிசித்துப் புடம்போடச் சுன்னமாகும் பாங்கான நவலோகந் தொந்தமேறு - முரிசித்து தொந்தத்தில் சட்டினமோ கோடி உருக் கினமோ நீத்தினமோ கோடாகோடி - கரிசித்து நவலோகத்துள்ளே காட்ட காட்டயிலே நூறுபத்து எட்டு மாத்து - அரிசித்த உபரசங் கள் பாஷாணங்கள் ஆதியுப்புச் சாரமொடு காரத்தப்பே 475

## சகல சரக்கும் சுன்னம் செய்தல்.

அப்பியே ஊதினல் தனித்தனியேச்சுன்ன மப்பனே ஒவ்வொன் றில் தொந்தங்கோடி - ஒப்பியே விரித்தாடக் கோடியுகந்தாண்டு முத் தமனே தங்கத்தில் சவ்வாது காரந் தப்பியே மத்தித்து வைத்துக் கொண்டுத் தனித்தனியே உபரசங்கள் சரக்கில் பூசிக் - கப்பியே உருக்கவெல்லா மணிபோலாடுங் கவர்பிரிந்து கோடி தொந்தமேறுந் தானே 476

ஏறுமே தொந்தமொன்றில் வேதை கேளு யிட்டாக்கால் லெட் சத்துக் கொன்றேயோடு - மாறுமே யொவ்வொன்றில் கவரோகோடி வாய் திறக்கப்போகாது யானுங்காணேன் - தேறுமேமாத்தேது எழு பத்தஞ்சு சேர்த்தாக்கால் வெள்ளி செம்பு பத்துமாகும் - கூறுமே வஸ்துவுட மாற்கத்தாலே கூசாமலோடுமிந்தக் கொள்ளை தானே 477

## வங்க ஜெய நீரில் சூதக்கட்டு.

கொள்ளையென்ற வங்கத்திற் சாரம் ரெட்டிக் கூட்டியல்லோ மத்திக்க செயநீராகுந் தள்ளையென்ற செயநீரில் சூதம் வார்த்து தணல்மேலே வைக்கையிலே யிட்டளிபோலாகும் - பிள்ளையென்றசூத த்தை யுருக்கிக்கொண்டு பாங்கான பொற்குருவாய் செய்தாயானல்- அள்ளையென்ற லோகமெல்லாம் பொன்மயமாய்ப்போகும் ஆட்டேது சித்தேது அடங்கிப்போச்சே 478

போச்சப்பா யிப்படியே வெள்ளியைத்தான் பண்ணும் போக் கேது நீக்கேது ரசித மலையாகு - மாச்சப்பா வங்கத்தின் வாடைப் பட்டால் அண்டரண்ட முருகியொரு மணியாய் நிற்கும் - நீச்சப்பா வென்று சொன்ன வாதவேலை நிலைச்சல்லோ கணைக்காலின் கீழே யாச்சு - கூச்சப்பா வங்கத்தின் சுன்னத்தாலே கூறுகிறேன் நிமிளையுட குணத்தைக்கேளே 479

## நிமிளை குரு.

குணமான வங்கத்தில் வீரங் காரங் கோவையென்ற சவ்வாது கூட்டிக்கொண்டு - மணமான நிமிளையிலே பூசியாட்ட மணிபோலே நின்றுடும் நிமிளை தானுந் - தணமான நிமிளையிடை தங்கங்கூட்டித் தன்னிடைக்குச் சூதமிட்டுக் கூட்டியாட்டி - பணமான புனுகோடு வீரம் சீனம் பாங்கான சூதமொடு உரமுங் கூட்டே 480

உரத்தோடு வங்கமென்ற சுன்னம் போடு ஒக்கவல்லோ மத்தித்து நிமிளைக்கப்பி - தரத்தோடெ அஞ்சு சுன்னக் குகையில்வைத்து தாக்கியொரு புடம்போட நிமிளை தானுந் - துரத்தோடுங் குருவாச்சு சத்திராதஞ் சொற்பெரிய வேதையினில் சொல்லக்கேளு-வரத்தோடு சவ்வாதிட்டு மத்தித்துக்கொண்டு வாசனைக்குப்பாஷாணம் தொட்டுப்போடே 481

## நிமிளைச்சுன்னம் இதால் தங்கச்சுன்னம்.

தொட்டவுடன் பாஷாணங் கட்டிப்போகுஞ் சூட்டப்பாலோ கத்திலாயிரத்துக் கொன்று - மட்டுடனே மாத்தென்ன அன்பத்தொன்று மகத்தான நிமிளையுட வாட்டுமைந்தா - பாட்டுடனே சூதமது விரைத்துப்போகும் பரிசத்தில் வேதிக்கும் நவலோகத்தில் - நெட்டுடனே யிக்குருவில் தங்கம்நீறும் நேரானதங்கமது ஆடும்பாரே

## நிமிளைச் சுன்னம் வேருமுரை.

பாரப்பா வங்கமென்ற சுன்னத்தோடே பாங்கான வீரமிட்டு பூனுது போட்டு - நேரப்பா சீனமிட்டு வஸ்துவாலே நேராகவரைத்து நன்றாய் நிமிளைக்கப்பி - தாரப்பா அஞ்சுச் சுன்னக்குகையில்வைத்து தாக்கியொரு புடம்போட நிமிளைச்சுன்னங் - கூரப்பா நிமிளையிலே புனுகு வீரங் கூட்டியல்லோ உபரசத்தில் சரக்கிற் பூசே 483

பூசியல்லோ ஊதையிலே சுன்னமாகும் பூட்டினு லொவ்வொன்றில் தொந்தங்கோடி - ஆசியல்லோ சுன்னமொன்றில் கவரோகோடி அடங்காது அடங்காதுவேதைசொல்ல - மாசியல்லோ அகற்றிவைக்குந் தேவிநாத மகத்தான நிமிளையிலே சவ்வாது காரம் - நேசியல்லோ மத்தித்து உபரசமுஞ் சரக்கும் நேராக தொட்டுருக்க மணியுமாமே

## நிமிளைச் செயநீரில் சூதக்கட்டு தங்கச்சுன்னம், வெள்ளிச்சுன்னம்.

மணியான சரக்கெடுத்து சரக்கிற் பூசி மாட்டியல்லோ யுருக்கிடவே உருகியாடுங் - கணியான தொந்தமிப்படியே கேளு காணப்பா ஆயிரந்தான் துவர்ந்து யேறுங் - தணியான தொந்தத்தில் வேதைகோடி சாற்றரிது சாற்றரிது நிமிளை வேகம் - மணியான ஒவ்வொன்றிற் கோடிசித்தியாகும் அண்டரண்ட மாட்டிப்பாரே 485

ஆட்டப்பா நிமிளையொன்று சாரம் ரெண்டு அரைக்கரைக்கச் செயநீரா மப்பா கேளு - மூட்டப்பாச் சூதத்தைச் செயநீர்க்குள்ளே முதுந்தனலில் வைத்துடனே வட்டுப் போலாம் - நீட்டப்பா தங்கமது சுன்னமாகும் நேரான வெள்ளிபுமோ சுன்னமாகும் - கூட்டப்பா ரெண்டாலே வாதமெல்லாமாச்சு கோடிதுறை யாடுமிந்த ரெண்டுந்தானே 486

## ப்றிசூதச்சுன்னம்

தானென்ற சூதத்தில் குளிகையாகும் சாரணையால் பரிசமுதல் சத்தவேதை - வானென்ற வெளிகடந்து நிர்க்குணத்தைக் காட்டும் வாகான சூதத்துக் கடுத்தவாறு - வேனென்ற சூதத்தால்வாதமாச்சு விளங்கியதோர் வாதசித்தி மிதிலேயாச்சு - கோனென்ற சூதத்தை வாதித்தோன் வாதி கூறுகிறேனிதைத் தொட்டு குமட்டுறேனே 487

## நிமிளைச் சுன்னத்தால் சாரங்கட்டி சுன்னம் செய்யும் விதம்:

குமட்டுகிறே நிமிளையுட சுன்னமொன்று கூறுன புனுகொன்று வீரமொன்று - அமட்டுகிறேன் சீனமொன்று கூடக்கூட்டி யப்பயிலே சாரமிது கசியும் பாரு - புமட்டுறேன் மணலுக்குள் வைத்துநீ பும் போடப்பா புடமொன்றில் சாரங்கட்டும் - உமட்டுகிறேன் சாரத்தில் வீரங்கூட்டி யுத்தமனே வஸ்து விளைலரைத்துக்கட்டே 488

## இந்த சாரச்சுன்னத்தால் நிமிஷத்தில் வாதம் சித்திக்கும் காயசித்தியாகுமெனல்.

கட்டியதை அஞ்சுச் சுன்னக் குகையில் வைத்து கரியோட்டி ஊது நன்றாய் சுன்னமாகும் - நெட்டியதோர் சாரமதுசுன்னமானால் நிமிஷத்தில் வாதசித்தி காயசித்தி - அட்டியதோரொன்று மில்லை கேசரத்திலாட அண்டாண்ட பதமெல்லாங் கைக்குள்ளே காட்டும் - ஒட்டியதோர் சாரமென்ன சத்திசத்தி யுத்தமனே யுகங்கோடி யொடுங்காதாட்டே 489

## இந்த சாரச்சுன்னத்தால் ச்கல சரக்கையும் சுன்னம் செய்யலாம். சொல்ல முடியாத எழுத்தில் அடங்காத சதகோடி தொழிலாடலாமெனல்

## சுன்னக்காடு.

ஒடுங்காத சாரத்தில் வீரங்கார முத்தமனே சவ்வாது கூடக்கூட்டி - அடுங்காத உபரசங்கள் பாஷாணங்க ளஞ்சாதலவண்மொடு சார காரம் - படுங்காதத் தொட்டுதே யெல்லாமாடும் பாச்சினால் தொந்தமொன்றில் கவரோ கோடி - தடங்காதே ஒவ்வொன்றில் வேதை கோடி சதகோடி நவகோடி சாற்றிலேனே 490

## நவாச்சாரச் சுன்னம்.

சாற்றிலேன் சாரததில் புனுகு வீரந் தயவாகச் சீனமிட்டுக் கூடவாட்டி - போற்றிலே னுபரசங்கள் பாஷாணங்கள் புகழாக பொட்டிட்டு ஊதச்சுன்ன - மாட்டிலே னெவ்வொன்றிற் தொந்தங் கோடி வகையாகப் பார்த்தவர்களாருங் காணேன் - காற்றிலே பட்ட தீபோலே மைந்தா கடல் தொடுத்து மலைவரையுஞ் சுன்னமாமே 491

சுன்னமென்று விதுசுன்னஞ் சாரச்சுன்னஞ் சொற்பமல்ல தண்ணியது சுன்னமாச்சு - கன்னமென்ற கோலிதுதான் வாதத்துக்கு கைப்பூட்டுந் தகர்த்தெறியு மிதுவே மைந்தா பன்னமென்றயிதின் பெருமை பகரொண்ணுது பாடவென்றால் நாக்கொள்ளா ணுேக்குங் கொள்ளா, சின்னமென்ற கேசரியைத் தொட்டதொக்குஞ் செகத்தி னுள்ளோர் சாரத்தை நீற்றிலாரே 492

## வாத குரு.

சாரம் விட்டால் வாதத்தில் சாரம்போச்சு சாதகமாய் சூதம் விட்டால் வர்ணம்போச்சு - பூரம் விட்டால் சுன்னத்தில் குருவே போச்சு புகழான உப்பை விட்டால் செத்தும் போச்சு - வீரம் விட்டால் சுன்னத்தில் செந்தூரம் போச்சு, விளங்கியதோர் பறிவிட்டால் புடமே போச்சு - காரம் விட்டால் சவுக்காரங் காரம் போச்சு கைவிட்டு போச்சுதப்பா வாதந் தானே 493

97445

## சாரச் செயநீரில் சூதம் இட்டலிபோல் கட்டும்.

தானென்ற சாரத்தில் சாரம் விட்டாட்ட சலமாகும் புஷ்டி யில்லை செயநீரப்பா - கானென்ற செயநீரில் சூதம் விட்டு கனல் காட்ட யிட்டலிபோல் கட்டிப்போகும் - ஊனென்ற தங்கத்திலேற்றச் சுன்னம் - உத்தமனே வெள்ளியிலுமேற்றச் சுன்னம் - வானென்ற வெளிகடந்து ரெண்டுமோடும் வாதிக்குப் பிறணனிது குருவாம் ரெண்டே 494

## சூதக்கட்டு பறி ரசச்சுன்னம்.

குருவான சாரத்தில் புனுகுவீரங் கூட்டியல்லோ மத்தித்து துருசிக்கப்ப - திருவான சுத்தானுந் துருசுதானும் திறமான அஞ்சு சுன்னக் குகையிலூது - திருவான துரிசியது சுன்னமாகுஞ் சகலத் துக்குமாதியந்தமான சுன்னம் - உருவான உப்பிதுதான் உன்மனையு மிதுதான் உத்தமனே சிவனிதுதான் உன்னிக்கேளே 495

## துருசு சுன்னக் குரு.

சகலத்துக்கும் வழலை அல்லது சவுக்காரச் சுன்னம் சேர்த்துசெய்தால் தான் வாதம் சித்திக்கும். வங்கநீர் சவுக்காரத்தால் துருசுநீரும் இல்லாவிடில் துருசுக்கு பிறணனில்லையென்று சொல்லப்பட்டிருப்பதால் வங்கநீர் என்பது வங்கச்சுன்னமல்ல சிவஉப்பு சத்தியுப்பு 2-ம் கூடியதற்கு வங்கமென்று பெயர் அதற்கு சட்டம். இது கடாசியில் எழுதப்படும். ஆர். எம். (௭.

கேளப்பா குருவென்ற நாமமெல்லாங் கெடியான துரிசிக்கே
யெடுத்த ஞமம் - நாளப்பா யிதின் பிறகே வீரமாச்சு நலமானசூத
மொடு தங்கமாச்சு - தாளப்பா யிதின் பிறகு சாரமாச்சு தனித்து
நின்ற லவணமொடு காரமாச்சு - வேளப்பா யிதுக்கெல்லா மாதி
யென்ன விடுபட்ட மதயானை வழலை தானே 496

## உபரச சரக்கு 120-ம் சுன்னம் செய்யும் விதம்.

தானென்ற துரிசியிலே புனுகுவீரஞ் சாதகமாய்ச்சினமிட்டு வஸ்து
வினுலாட்டி - கானென்ற உபரசங்கள் சரக்கோடொக்க கல்லோடு
மண் முதலாய் வெருவியூத - பானென்ற சுண்ணம்பாஞ் சுறுக்கு
மெத்த பாச்சினுற் தொந்தமொன்றி லட்சமேறும் - வானென்ற
சுன்னமொன்றில் கோடி கவரோடும் வாய்திறக்கமுடியாது துரிசிப்
போக்கே 497

## துருசு சுன்னத்தால் மனோசிலை மணி.

துரிசியென்ற சுன்னத்தில் சவ்வாது காரஞ் சூட்டியல்லோ மத்
தித்து சிலையில்பூசி - நெரிசியென்ற தீயிலிட்டு ஊதும்போது நேராக
மணிபோலே யுருகி யாடுந் - பரிசியென்ற உபரசங்கள் பாஷாணங்
கள் படும்பாடு யெப்படியோ பகரமாட்டேன் - வரிசை யென்ற வித்
தைபிது கண்டர் வித்தை பகத்தான உருக்கினத்தின் தொந்தங்
கேளே 498

தொந்தமிட தொந்தமிடக் கோடிவரை கட்டுந் துகையேதுஒவ்
வொன்றிலாடும் மாற்கஞ் - சந்தமிட சந்தமிடக் கவரோசங்கந் தாக்
கேது ஞேக்கேது தொட்டு ஆட - அந்தமிட அந்தமிட ஓடுமோடு
அடங்காத துகையினுள்ளே கணக்கோயில்லை - தொந்தமிட தொந்த
மிட நீலகாளி கோடிதுறைக் காளியென்ற குருவிதாச்சே 499

## துரிசு செயநீரில் சூதக்கட்டு.

ஆச்சப்பா யித்தனையு மாட்டிவிக்கு மாதியென்ற துரிசியிலே சாரம் செட்டி - ஓச்சப்பா விட்டரைக்க செலமேயாகு முத்தமனே சலத்தினுள்ளே சூதமும் விட்டுக் - சாச்சப்பா கறண்டியிலே சூதங் கூட்டுங் கண்விட்டு நின்றாடுங் கரியினுள்ளே - வாச்சப்பா யிந்தரசம் சாரணையைத் தீர்த்தால் வரைகடந்து மேலேற வாங்குந்தானே 500

## மூலவற்க குளிகை.

மேலேறி உன்மனையைத் தொட்டு ஆடும் விளங்கியதோர் பூரணத் திலாறுங் கண்டு - சேலேற யேத்திவிட குளிகைவேகஞ் சொல்லரிது சொல்லரிது கடினமெத்த - காலேறமூலரிந்தக் குளிகையிலே யாடி கலந்த வற்கப் பிள்ளைகட்கு மிதுதான் சொன்னார் - மாலேற கீர்த்தி கொண்டார் கொங்கணர் தானப்பா மகத்தான மூன்று காண்டம் பாடினாரே 501

பாடினதோர் மூன்று காண்டம் மெத்த நன்று பரிவாக வெளி யென்று பாட்டன் சொல்ல - மூடினார் தெரிஞ்சாப்போலுந் தெரி யாதுபோலு மூதண்ட சித்தனுட நேர்பு மெத்த - கூடினா ரங்கங்கள் தொட்டுத் தொட்டு குறையாமல் சாஸ்திரத்தைச் சேர்த்து சொன் னார் - ஊடினார் தந்நூலில் வெளி கண்டேயப்பா உரைத்திட்ட கவ டத்த ஞானி தானே 502

## மகா திராவகம்.

## இதால் நவலோகங்கள் கரையும் அதால் சூதம் கட்டும் உயர்ந்த முறை.

கவடத்துச் சொல்லுகிறேன் திராவகத்தை மக்காள் கைமுறை யாயிணங்கனொரு பலமோ னூறு - குவடத்த சீனமது பலமோயெழு பது கூறுன சவுட்டுப்பு மூன்றுபத்து பலந்தான் - சுவடத்த சாரமது பலமோ பத்து சோதியத்த துருசியது பலமோபத்து - அவ டத்த கல்லுப்பு பலமோ அஞ்சு ஆதியென்ற கற்சவுடு பலந்தான் பத்தே 503

மலையின் நாதம்

பத்தான நாயுருவி யுப்பினோடு பாங்கான வெள்ளுப்பு வாழை யுப்பு முத்தான ஊஷரத்தின் குருவினோடு மூதண்ட வெவாச்சாரஞ் சத்திச்சாரங் - தொத்தான சவ்வீரம் வகையதொன்று கூட்டப்பா அய்யஞ்சு பலந்தானீயும் - பத்தான யிதுவெல்லாம் பொடியாய்ப் பண்ணி பாங்காக அஞ்சு பங்காய் பகுந்து வையே 504

வைத்ததொரு பங்கெடுத்து கலையத்திட்டு வர்காக செங்கலினல் சில்லுப்போட்டு - கச்சதொரு செங்கல்மையர் தமரும் போட்டு கவிழ்க்கிறதோர் மூசையின்மேல் பணம்போல் பொத்து - தைச்ச தொரு மூசையின்மேல் குப்பி வைத்து தமரோடே தமர்சேர்த்து சீலை செய்து - வைத்ததொரு கலைய முதல் சீலை செய்து யி த மா க அடுப்புமேல் யேத்து யேத்தே 505

ஏத்தியே முத்தீயு மெரிப்பாயப்பா யிதமாகப்புகையோடு குப்பி மூக்கில் - போத்தியே புகையோடு தண்ணீர் வீழும், புகழான திராவ கத்தை மறுபங்கிலூற்றி - மாத்தியே பாவினையே செய்து நன்றாய் வாகாக கலையத்திலெடுத்து வாங்கி - ஆத்தியே யிப்படித்தானேந்து திரம் வாங்க வப்பனே திநீரின் வேகங்கேளே 506

கேளப்பா நவலோகந் தண்ணீராகுங் கெடியான உபரசமுந் தண்ணீராகும் - வாளப்பா ரெத்தினங்கள் தண்ணீராகு மருவிய தோர் பாஷாணந் தண்ணீராகுந் - தாளப்பா தண்ணீரால் பலமோ தென்னில் சரக்கோடு உபரசமுஞ் சத்தேயாகும் - ஆளப்பா நவலோ கந் தண்ணீர்பட்டா லாடாமற் சூதமது கட்டிப்போமே 507

# சரக்கு கொல்லுகிற வித்தை.

கட்டியதோருபரசத்தின் சத்தினாலே கைமுறையாய்க் குரு பண்ணு சுன்னம் பண்ணு - ஒட்டியதோர் செந்தூரங் களங்கம் பண்ணு - ஓடுமே வெகுதூரம் பறியைக்கூட்டு - மாட்டியதோர் வே தையல்ல தூமவேதை மகத்தான உபரசத்தின் வேதை தானும் - அட்டியதோ ரொன்றுமில்லை காயசித்தியாகு மப்பனே சாரணைக்கா மறிந்து கொள்ளே 508

அறிந்து கொள்ளுஞ் சரக்கினுட சத்தில் வேதை அப்பனே மெழுகாகுங் களங்கமாகுந் - நெரிந்துகொள்ளுஞ் சுன்னமொடு குரு வுமாகும் தேரான செந்தூரஞ் செயநீராகுந் - பிறிந்துகொள்ளு பறி தனை யுந்திண்ணி நீற்றும் பேரானசரக்கினுட வேகமப்பா - செறிந்து கொள்ளும் பாஷாணம் ரசத்தினூட்டுச் செகமெல்லாம் பொன்னாகச் செய்யுங்காணே 509

செய்யுமே நவலோகந் தண்ணீர்க்குள்ளே திறமாகப் பாஷாணந் துவைத்துவாட்ட - ணையுமே பறித்தண்ணீர் பட்டதானல் நவலோகத் தண்ணியொன்றில் கோடிவேதை - கையுமே பாஷாணம் நவலோகத் தில் காட்டுமுன்னேப் பொன்னுக்குப் பொன்னுமாகும் - அய்யுமே நவரத்தின தண்ணீர்க்குள்ளே அப்பனே பறிச்செம்பாஞ் சூதஞ் சீரமே 510

## சூதம் சாகிறதை அறிந்தவன் வாதி.

சாகிறதோர் சூதத்திற் குருவோ கோடி சமரசமாய்ப் பண்ணு கிற சுன்னங்கோடி - சாகிறதோர் சூதத்திற் களங்குகோடி சார்வாக ப்பண்ணுகிற செந்தூரங் கோடி - சாகிறதோர் சூதத்திற் காய சித்தி கோடி தாக்கியதோர் சாரணையால் குளிகை கோடி - சாகிற தோர் சார்வறியார் சூதத்துக்குச் சாகிறதை யறிந்தவனே வாதி யாமே 511

---

ஆமப்பா சூதமது பலந்தான் பத்து அதற்குள்ளே திராவகத் தைத் துளிதான்வார்க்க - வேமப்பா சூதமது வெந்துநீரும் வெந்த தொரு சூதத்தைத் தொந்த மேற்ற - ஓமப்பா நூறுதொந்த மேறு மேறு முத்தமனே தொந்த மொன்று நவலோகத்தில் - தாமப்பா ஆயிரத்துக்கொன்று போடத் தப்பாது தசமாத்துத் தாக்கிக்காணே

தாக்கியே சூதத்தில் தங்கபற்பஞ் சாதகமாய்ச் செய்தாக்கால்
தங்கத்தில் சூதபறபம் ஒரு எட்டில்
குருவோகோடி- ஆக்கியே சுன்னமுதல் களங்கு கோடி அப்பனே செந்தூரங் குளிகை கோடி - ஞேக்கியே சூதத்தைக் கொண்டா யானுல் ஞேக்கான அருணன்போல் காயசித்தி - தேக்கியேசட்டை யிடுங் கவனமாகுஞ் செகச்சால மாற்கமெல்லாஞ் சூதந்தானே 513

---

## திராவகத்துக்காதிச் சரக்கு சூதமிதிலாடும்.

தானென்ற திராவகத்துக்காதியென்ன சார்வான லவணமொடு க்ஷார சார - மூனென்ற பூமியுட ஞதத்தோடு உத்தமனே சீலையினுட சவடு கூடி - கோனென்ற குருப் போலே ஆடிச்சப்பா கூறரிது தீச்சுட்ட நீரின் போக்கு - வானென்ற சூதமிது விதிஞலாடும் வகை யுரைக்கப் போகாது மைந்தா காணே 514

காணப்பா முன் சொன்ன வஸ்துவாட்டு கரையில்லை கணக் கில்லை யேதோவென்ருல் - பூணப்பா விந்துவது சிவனுமாச்சு புக ழான ஞதமது சத்தியாச்சு - ஊணப்பா விதுரெண்டு மூலமாச்சு முத்தமனே ஜீவஜெந்து கோடாகோடி - தோணப்பா விரிந்தது பேர் விதுவுமாடுஞ் சொல்லிறந்த பூரணத்துக்கொக்குந்தானே 515

## சித்தர் மூலிகை.

தானென்ற மூலிகையைச் சொல்லக்கேளு சாதகமாய்க் கருநெல்லி கறுத்த நொச்சி - தானென்ற புற்சோதி பெரியசோதி கறுத்து நின்ற கொடுவேலி சாயா விருட்சம் - பானென்றமுண்டணியும் பாகவேதி படர்ந்த கல்த்தாமரையுஞ் சுணங்கபாலி - வேனென்ற ரோமவிருட்சஞ் சேந்தாடும்பாவை விளங்கியதோர் பொற்சிந்தி செந்திராயே (முண்டணி என்பது ஒரு விருட்சம்.) 516

செந்திராய் தன்னோடு குண்டலாமாம்பாலை சிவப்பான சதிரக்கள்ளி சிவந்ததில்லை பந்திராய் கறுத்து நின்ற கரியசாலை அப்பனே மூவிலையாங் குருந்திேனாடு - பந்திராய் கருவீழி கறுத்த வாழை பாங்கான கருநீலி சிவந்த பல்லி - யெந்திரா யிவ்வகை களிருபத்து மூன்று யென்மக்காள் மலைதோறும் மிருக்கும் பாரே 517

இருக்கிறதோர் மூலிகையால் சூதங்கட்டு மிசைந்துநின்ற வாசனைக்குப் பாஷாணஞ் சாகுஞ் - செருக்கிறதோ ருபரசங்கள் சத்தேயாகுந் தின்றாக்கால் திரேகமது பொன்போலாகும் - மருக்கிறதோரிதனாலே கட்டுஞ்சூதம் வாய்திறக்கப்போகாது மகத்துவமோ மெத்த பெருக்கிறதோர் மூலிகை தானுலகோர்க்கையா பேரான சித்தருக்கு மெய்யும் பாரே 518

பாரான மூலிகையா லொவ்வொன்றில் வேதை மலை பொன்னுங் கலைபொன்னுங் காடும்பொன்னுந் - தாரான அண்டரண்டந் திரியப்பண்ணும் சாரணையால் பதினாறு குளிகையாகும் - நீறான குருவாகுஞ் சுன்னமாகும் நிமிஷத்தே சமாதியிலே கேசரியைக் காட்டுங் கூறான பூரணத்தி லேத்தியாடுங் கொண்டாக்கால் காயசித்தி சுறுக்கிலாச்சே 519

சுறுக்கான மூலிகைதான் பரிசவேதை சொல்லுகிறேன் சிலதுதான் வேதையாகு - மூறுக்கான மற்றதுக்கு சூதம் வேணு மகத்தான வேதையிது சித்தர்க்கப்பா - நறுக்கான மூலிகை தானும் வேகம் நாட்டினுள்ளே சொல்லுகிறேன் கேளு கேளு - முறுக்கான தழைதாம்பு யிலைகளெல்லா மூட்டப்பாதுரிசியென்ற சுன்னந்தானே

## சகல சரக்கையும் சுன்னம் செய்ய சுன்னத்துக்காதி பூநீர் ஊனல்.

சுன்னமென்ற துரிசியின் பின் சாரச்சுன்னஞ் சுகமாக யிதின் பிறகு காரச்சுன்னஞ் - சுன்னமென்ற யிதின்பிறகு லவணச்சுன்னஞ் சொற்பெரிய யிதுமூன்றே யாதிவித்தை - சுன்னமென்ற குருவெங்கே பிறந்ததென்றால் சொல்லாதேயாருக்கு முவாங்காட்டில் - சுன்னமென்ன புடைபுடையாய் மல்லிகைப்பூ போலத் தூசாக வெளுத்து நிற்குஞ் சுன்னந்தானே 521

வெளுத்திருந்த ஊஷரமே குருத்தானப்பா விளங்கியதில் கல்லுப்புக் கலக்கவேணும் - அளுத்திருந்த பீங்கானும் கற்பாண்டத்தில் அப்பனே அமுரிவிட்டு ரவியில் வைக்கக் - கொளுத்திருந்த வுப்பாகும் வஸ்துவுப்ப, கூடாமலது வேறே யிதுவேறே வைத்து - நளுத்திருந்த சாரமிட்டு ஊஷரத்திலாட்டி நலயாக யீளகையிலே அமுரியுப்பைப் போடே 522

## ஊஷரச் செயநீர்.

போட்டரைக்க செயநீராம் புஷ்டியில்லை போக்கோடே சீனமொடு வெண்காரந் தோய்த்து - ஞட்டரைக்கச் சூடனொடு பூரந் தோய்த்து நலமாகக் கல்லுப்பு வெடியுப்புத் தோய்த்து - நீட்டரைக்க கண்டருமே தோய்த்துப்போடு - நிறையாக யேழுநாள் காய்ந்தபின்பு மூட்டரைக்க யிதுவேழுஞ் சமனுய்த் தூக்கி மூதண்ட செயநீரை விட்டு ஆட்டே 523

## 7-வகை மெழுகால் வெள்ளைமணிபோல் கட்டுதல்.

ஆட்டயிலே பொன்போலே வர்ணமாகு மப்பனே வற்ற வற்ற மூன்றுதிரமாட்டு - நீட்டயிலேயிதுவெடுத்து ரவியில்வைக்க நேரான மெழுகாகும் பாருபாரு - காட்டயிலே யிம்மெழுகை வெள்ளையிலே கட்டி கைமுறையாய் கரியோட்டில் வாட்டு வாட்டு - பூட்டயிலே உள்கருத்தான் சகலத்துக்கும் பொய்யன்றி மெய்யாகச் சொல்லுறேனே 524

சொல்லுகிறேன் வீரத்தில்பூநீறு போட்டு துடியாகமத்திக்கச் சிவந்துபோகு - மல்லுகிறேனிது மீவாடு காரங்கூட்டி மத்தித்து சவ்வாதிட்டு வைத்துக்கொண்டு - அல்லுகிறேன் துறைதோறும் பாஷாணமெல்லா மப்பியல்லோ அதுமேலே கவசங்கட்டி - வெல்லுகிறேனென்று கொண்டு கனலில் வாட்ட வோற்று வெள்ளையது மணிபோலாமே 525

## கட்டிய வெள்ளையால் வங்கம் கட்டும் வெள்ளி கட்டும் அதால் சூதக்கட்டு.

மணிபோலே நின்ற வெள்ளை யெடுத்துக்கொண்டு மாட்டப்பா வங்கத்தில் ரெண்டுக்கொன்று - கணிபோலே வங்கமது நொருங்கிப் போகுங் காணப்பா வெள்ளி ரெண்டிலிதுவொன்று போடு - தணி போலே வெள்ளியிது நொருங்கிப்போகுந் தன்னிடைக்குச் சூதமிட்டு ஆட்டு ஆட்டு - அணிபோலே குளிகையுமாம் சூதம் கட்டு மப்பனே முன்போலே கவசங்கட்டே 526

## சூதகுரு.

கவசித்து வாட்டயிலே சூதம் கட்டுங் காரணப்பா லகுவாகக் குருவைச் சொல்வேன் - கவசித்தின் மணிமேலே பூசக்கேளு அப்ப னே பூரீறு புனுகு சீனம் - அவசித்த தாளகமுங் கூட்டியாட்டி மகத் தான சூதத்தின் மேலே பூசி - நவசித்த அண்டத்தோல் பொடியில் வைத்து நன்றாகச் சீலை செய்து புடத்தில் போடே . 527

## சூதம் கட்டி வெள்ளி செய்யும் விதம்.

போட்டடனே யீசானம் பூசைபண்ணு புகழாக ரசமதுவுங் குருவுமாகு - மாட்டுகிறே னிக்குருவை யிரும்பில் செம்பில் வங்க மொடு நாகத்தி லாயிரத்துக்கொன்று - நீட்டடனே வெள்ளியுமாம் மாத்தைக் கேளு நேராக் யிருபத்து அஞ்சு மாற்று - பூட்டடனே உபரசங்கள் வெள்ளியாகும் போக்கீறியான் வழலையிலே மாய்வான் றனே 528

## லிங்கக்கட்டு.

மாயாமல் போக்கையப்பா சொல்லக்கேளு வாகான லிங்க மொரு பலந்தான் வாங்கி - ஓயாமல் பழச்சாறு மேனிச்சாறு உத்தம னே சுறுக்கிட்டுப் பின்புகேளு - தோயாமல் முலைப்பாலைச் சுறுக்குப் போடு - சொற்பெரிய லிங்கமது சுத்தியாகும் - மாயாமல் வெள்ளை யைப்போல் கவசங்கட்டி யடவாகக் கரியோட்டில் வாட்டு வாட்டே()

வாட்டிடவே லிங்கமது யிறுகிக் கட்டும் வகையாகச் செயநீரில் நாகஞ் சாய்த்து - ஓட்டிடவே நாகமது பலந்தானென்று உத்தமனே காண்டிக்குளுருகும்போது - நாட்டிடவே லிங்கத்தைக் காரந்தாக்கி நலமான நாகத்தினிடையே போட்டு - மூட்டிடவேநாகமது சேர்ந்து கட்டும் மூதண்ட பொற்குருவின் முறையைக்கேளே 530

## பறிகுரு.

கேளப்பா பறிரெண்டு உருகும்போது கெடியானநாகமொன்று கொடுத்துவாங்கி- ஆளப்பா வெள்ளியைப்போல் சூதத்தூட்டி அச் சூத மணியெடுத்து முன்போல் வாட்டி - தாளப்பா முன்போலே மருந்து பூசி சாதகமாய் முன்போலே புடத்தைப்போடு - நீளப்பா யீசானம் பூசை பண்ணு நிர்வாணி பாதத்தைப் பூசிப்பாயே 531

பூசித்தால் குருவாகுஞ் சுன்னமாகும் போக்கோடு செந்தூரங் களங்கமாகும் - ஆசித்தால் நாதாக்கள் நூலைப்பாரு அதற்குள்ள கருவறிய யென்னிகண்டைப் பாரு - தூசித்தால் வாமத்தை வாதம் போச்சு சொற்பெரிய யீசனன்று சொன்ன வார்த்தை - நேசித்தால் பராபரத்தில் நின்று பாரு நிலையாத கேசரியை நேர்ந்து கூடே 532

(கேசரி என்பது:--ரவி மதியும் வன்னியும் கூடி அதாவது இடகலை, பிங்கலை சுழிமுனை 3-ம் கூடி கலந்துநின்ற விடமல்லோ கேசரி என்று போகர் 7000ம் 1-வது காண்டம் 284-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீஜயோகி வேலுசாமி.

கூடினாலட்டாங்க சித்தியாகுங் குறைவில்லை நினைத்ததெல்லாங் கூடியாடும் - நாடினால் பெண்மேலே, காயசித்தி போச்சு - நலமான யோகமொடு ஞானம்போச்சு, ஊடினால்மன மறைச்சு யெல்லாமாச்சு ஊடாட்டாலொன்று மில்லை யெல்லாம் போச்சு - தேடினாற் கிடையாது வாதமப்பா சித்தருட நூல் கிடைத்தால் வாதமாச்சே 533

## அறிவு.

நூல் கிடைப்பதாருக்கு விட்ட குறையோர்க்கு நுணுக்கமுற்ற சாத்திரங்கள் கருக்காணாது - நூல்கிடைத்தும் கருக்காணேமென்று யேங்கி னேய்கொண்டு மனதுடைந்து நொந்தோர் கோடி நூல்க் கிடைத்தா லென்னுடைய நிகண்டைப்பாரு நுணுக்கமுற்ற கருக்க ளெல்லாம் வெளியாய்ப் போகும் - நூல் கிடைப்பதரிதல்ல வென்னி கண்டு கிட்டா நுகராமல் சாஸ்திரத்தை ஒளித்திட்டாரே 534

## கருவறிந்த சித்தர் பேர்.

ஒளித்திட்ட சாஸ்திரத்தை சொல்லக் கேளு உத்தமனே யென் னூலைக் கண்ணிற் காட்டார் - தளித்திட்ட கொங்கணர் தன் நூல தொன்று கைமுறையாய்ப் பதஞ்சலிமாமுனினூலொன்று - தெளித் திட்ட சூரியானந்தர் நூலுஞ் செப்பரிய சுந்தரானந்தர் நூலும் மளித்திட்ட பூரணானந்தர் நூலு மப்பனே குகைதோறுமாடும்பாரே.

## நூல்மறைப்பு நிகண்டில் தெரியும்.

குகைதோறு முனிகளைத்தான் கண்டால் மக்காள் கூப்பிட்டு அருகில் வைத்து பானமீய்ந்து - வகைதோறு மாறுபத்து நாலு மா புள்ளோர் மகத்தான குருவினுட பிள்ளையோ வென்பார் - பகை தோறு சாஸ்திரத்தை விரித்து நன்றாய் பருவமுடன் மறைப்பெல் லாம் நிகண்டாய்செய்தார் - துகைதோறு மரபினுள்ளே தற்கமானால் சொல்லுமடா கைலாசர் நிகண்டு பாரே 536

## நிகண்டின் பெருமை.

நிகண்டை விட்டு சுட்டதொரு வாதிசங்கம் நேராக ஊஷரத்தை விட்டோர்கோடி- நிகண்டைவிட்டு சாஸ்திரத்தைப் பொய்யென்றோர் கோடி நேராகச் சுட்டலைந்து கெட்டோர் கோடி - நிகண்டை விட்டு கருவேதோ பேரேதோவென்று நிரை நிரையாய்த் தேடுகிற வாதிகோடி - நிகண்டை விட்டால் சித்தருக்கும் பொருள் காணுது நேர்ப்பெல்லாங் குருச்சொல்லக் கட்டினேனே 537

கட்டினதோர் நாகமிட்ட சூதச்சுன்னம் கைமுறையாய்ப் புனுகிட்டுச் சீனம்போட்டு - ஒட்டியதோர் வீரமிட்டு ஆட்டிக் கொண்டு உபரசமும்பாஷாணமும் நவலோகத்தில் . கொட்டியதோர் தேள் போலாம் பூசநன்று குழுறவொரு புடம்போடச்சுன்னமாகு - மாட்டியதோர் சுன்னமொன்றில் சுன்னங்கோடி வாய்திறக்க முடியாது வேதையாமே 538

## உருக்கினம்.

ஆமப்பா முன்சூதக் குருவினுள்ளே அப்பனேவீரமிட்டு காரம் போட்டு - ஓமப்பா சவ்வாதிட்டு வைத்துக்கொண்டு உத்தமனே சரக்கோடு வுபரசமும் லோகங் - தாமப்பா பூசியதை யுருக்க ஆடுஞ் சத்தாகுஞ் சில சிலது மணியுமாகும் - போமப்பா வொவ்வொன்று பூசத் தொந்தம் பூட்டறிந்தா லொருகோடி தொந்தமாமே. 539

தொந்த மென்ற கவர்கோடி சுன்னங் கோடி சூட்டுகிற குருக் கோடி களங்கங் கோடி - பந்தமொன்றில் கொளுத்தியதோர் பந்தம் போலப் பாடரிது யென்னுலே சொல்லப்போகா - அந்தமென்ற சூதத்தினடியும் போச்சு ஆடாத கூத்தையெல்லா மாடுமாடுஞ் - சந்தமென்ற நாகரசக்குருவினுட்டு தாக்கினு லோகமொடு காயசித்தே()

## சதா புருவமய்யம் ஜோதி பார்.

சித்தாளுல் சித்தரென்ற பேருமாச்சு சித்தறிந்து தின்றுவிடில் வாதியாச்சு - முத்தான சூதம் விட்டால் வாதம் போச்சு மூச்சான வாசி விட்டால் யோகம்போச்சு - பத்தான புருவ மையம் ஞேக்கா விட்டால் பார்க்கிறதோர் ஞானமெல்லாம் பாழாய்ப்போச்சு அத்தான மாய்கைவிட்டா லாசை போச்சு ஆடுகிற ஆட்டெல்லாஞ் சூதத்தாட்டே 541

## நாகரச சுன்ன ஜெயநீர் சூதக்கட்டு.

ஆட்டான நாகரசச் சுன்னத்துள்ளே அப்பனே சாரமிட்டு அரைத்தாயானல் - மூட்டான செயநீராஞ்செயநீர்க்குள்ளேமூதண்ட சூதம்விட்டுக் கொதுக்க கட்டும் - நீட்டான சூதமது சுன்னமாகும் நேரான குருவாகுங் குளிகையாகும் - பூட்டான செந்தூரங் களங்கமாகும் போக்கேது நாக்கேது சொல்லத்தானே 542

## தொந்திப்புயினம் ஆதிச் சரக்கு:

சொல்லியதோர் பொன்னுக்கு நாகமாதி சொற்பெரிய வெள்ளிக்கு வங்கமாதி - மல்லியதோர் குளிகைக்குச் சாரணை தானதி மகத்தான செயநீர்க்குச் சாரமாதி-அல்லியதோர் சுன்னத்திற்கு வீரமாதி அப்பனே மெழுகுக்கு லவணமாதி - ஒல்லியதோர் ஊசரத்துக் கமுரியாதி ஒட்டிவைக்கு முபாசங்கள் தூரம்பாரே 543

## உள்க்கரு என்பது உதகம்.

பாரப்பா உள்க்கருவை விட்டாயானல் பாஷாணங் கட்டாது வேதைபோச்சு - நேரப்பா நஞ்சென்பார் 'ஜபியென்பார் நேரான விஷமென்பா ருட்கருத் தானென்பார் - சீரப்பா விட மென்பார் கொல்லினந் தானென்பார் சேர்ந்துநின்றசரக்குக்குக் காலனென்பார் ஓரப்பா பலநூலில்ச் சொன்னதெல்லா முட்கருவுக் கெடுத்துரைத்த யுறவு தானே. 544

## உதகஉற்பத்தி விபரம் சூதக்கட்டு.

உறவான வுதகத்தைச் சொல்லக்கேளு உத்தமனேசவட்டுநிலச் சுக்கான்பாறை - மறவான கற்சுவடு மலேயும் பூமி மைந்தனே மாலன்று வராகமாகி - நிறவாகத் துளேக்கையிலே செனித்த நீர்தான் நேராக உதகமென்ற நாமமாச்சு - அறவாக க்ஷணபேதி நிணத்தின் பேதி யப்பனே மூன்றுநாள் பேதியாமே 545

## உதகமுள்ள பூமி அடையாளம் ஆனே உள்ளே இழுக்கும்.

பேதியிலே வாரமொன்று பட்சமொன்று பேராக மாசமுண்டு மண்டலங் தானுண்டு - ஆதியிலேயிது பிறந்த வகையேதென்றால் அப்பனே சவட்டுமண்ணி லூத்துமாச்சு-சாதியிலே வர்ணமது பஞ்ச வர்ணஞ் சாதகமாய் வாசமென்ன அஞ்சுனதம் - வேதியிலே யிதை விட்டுச் சாயவேதி வெண்தழலா யானேயுள்ளே யிழுக்குந்தானே 546

## உதகநிறம் பஞ்சவர்ணம்.

இழுக்கிறதோருதகத்தைச் சுவாலையென்பார் யெடுக்கிறது கடின மெத்த சித்தர்க்காகும் - முழுக்கிறதோர் வஸ்துவெல்லாங் கல்லாய்ப் போகும் மூதண்டக்குணம் வந்தவாறே தென்னில் - வெழுக்கிறதோர் வண்ணன்கை யுவருக்குள்ளே விளைந்துநின்ற சலமெல்லோ உதக மாச்சு அளக்கிறதோருவர்மண்ணில் தண்ணீர் விட்டுப்பார் அந்தநிற மிந்தநிறஞ் சரியாம் பாரே 547

பாரப்பா உதகத்தில் பாஷாணங்கள் பலபலவா முபரசங்கள் சாரகாரம் - நேரப்பா சூதமொடு கிழங்கு காய்கள் நேரான தழை பூவும் வேவ்வேரெல்லாஞ் சீரப்பா போட்டவுடன் சுக்கான் கல் லாம் திறமாகக் குருபூசி யூதச்சுன்னம் - பேரப்பா தொந்தித்தால்ச் சுன்னங்கோடி போக்கென்றால் வேதைசங்கம் பூட்டிப்பாரே 548

## உதகத்தால் பாஷாணம் உருகிக் கட்டும் விதம்.

பூட்டியதோர் சுன்னத்தின் போக்கைச் சொல்ல பொற்சடை யோன் அரிதென்று தேவியுடன் சொன்னார் - ஆட்டியதோருருக்கி னத்தைச் சொல்லக்கேளு அப்பனேவீரமொடு சவ்வாதுகூட்டி - நீட் டியதோர் மது குன்றி காரம் வெல்லம் நேராக வெள்ளையது கூட்டிக் கொண்டு - மாட்டியதோ ருதகத்திற் கல்லையெல்லாம் வாகாசப்பிசறி விட்டு ஊது ஊதே மது—தேன் 549

## உருக்கினம்.

ஊதையிலே பாஷாண மணிபோலாடு முத்தமனே உபரசங்கள் மணிபோலாடும் - பாதையிலே சூதமது குளிகையாகும் பரிவாகச் சாரணையைத் தீர்ந்து ஆடு - மாதையிலே லவணமொடு காரசார மருவி நின்று மணிபோலே கண்விட்டாடும் - வேதையிலே ஒவ்வொ ன்றில் தொந்தங்கோடி வெகுபோக்கு பண்ணுகிற வித்தை கேளே()

## உதகத்தில் மெழுகு.

கேளப்பா செந்தூரம் பண்ணலாகுங் கெடியான குருவாகுஞ் சுன்னமாகும் - நாளப்பா களங்காகு மெழுகுமாகும் நாட்டுகிற செய நீராஞ் சத்துமாகும் - வேளப்பாவெகுவேகங் காயசித்தி மேருவுக்கும் பாற்கடற்குந் திரியலாகுந் - தாளப்பா தேவியுட தாளைப்பூசி தப் பாது சித்தியாகும் தைலங்கேளே 551

## உதகத்தைலம் செய்யும் விதம்.

தைலத்தைச் செய்வதற்கு விபரங்கேளு சாதகமாய் நூறுபடி புத்கம் வாங்கி - அயிலொத்து ஞலிலொன்ருய்க் காச்சி வாங்கி அதற்குள்ளே போடுதற்கு மருந்தை கேளு - வெயிலொத்த சார மது பலமோ பத்து வெடியுப்பு பலம் பத்து காரம் பத்து - கயிலொத்த கற்பூரம் பலமோவஞ்சு கல்லுப்பு பலமஞ்சு சீனமஞ்சே 552

பலமாகப் பதினஞ்சு வீரம்போடு பாங்கான கெவுரியந்தயிலை யே போடு - குலமான கெந்தகந்தா நூறுபோடு கொடியதொரு சிலை யதிலே யன்பதுதான் போடு - நிலமான மால்தேவி யன்பது தான் போடு நேரான சாதிலிங்க மூன்றுபத்து போடு - தலமான தொட்டி யதில் பத்து போடு சாதகமாய் சூதமதிலஞ்சு போடே 553

போட்டெல்லாம் பொடிசெய்து உதகத்துள்ளே புகழான அயப் பாண்டத்துள்ளே காச்சு - நீட்டெல்லாங் குறுகியது தைலமாகும் நேரானபாண்டத்துள் ளிருத்துக்கொண்டு ஆட்டெல்லாம் பறித்தகடு பலமேபோடு அந்தித்துக் கிண்டயிலே மென்றி வாங்கும் - பூட்டெல் லாந் தயிலத்தில் பரிசவேதை பொட்டொன்று பாண்ட மொன்று பொன்னுமாமே 554

## அண்டக்கட்டு பரிசவேதை.

பொன்னுகும் நவலோக முபாசங்களெல்லாம் புகழான அஸ்தி முதல் மரங்களோடு - மன்னுன சூதமது கட்டிப்போகு மேருவுக்குப் பொட்டொன்று மாட்டிப்பாரு - பன்னுன அண்டத்தல்ப் பொட்டுப் போடு பருதியிலே வைத்தவுடன் சிவந்துபோகுந் - தன்னுன சிவந்த அண்டந் தூமவேதை தாக்கறிந்தால் தீபமுதல் பரிசமாமே 555

## சூதக்கட்டு.

ஆமப்பா சூதமது வில்வக்காயி லடவான விளாங்காயில் புன்னை க்காயில் - ஓமப்பா அடைத்தந்த வுதகத்திலிட்டால உத்தமனே கல்லாகுஞ் சூதந்தானுந் - தாமப்பா யிதையெடுத்துப் பின்னும் விட் டால் சார்வாகச் செயமாகும் வாங்கிக்கொண்டு - நேரப்பா யிதை யெடுத்து மண்டலந்தான் கொள்ள நேராக பிர்மவரை யிருத்தும் பாரே 556

## சூதக்கட்டு கோடிக்கு 1 கொடுக்கலாம்.

இருத்துகிற சூதமது நவலோகத்தி லிதமாக யுபாசத்தில் கோடி க்கொன்று - அருத்துநின்றால் மாத்தென்ன அன்பத்தஞ்சு ஆடுமே தூமமுதல் பரிசவேதை - வருத்துகின்ற சூதத்திற் தாக்கக் கட்டும் வகைவகையாய் நூறுதொந்தமேறியாடுந் - திருத்துகின்ற வாதமெல் லாஞ் சூதத்தாலே செயமான சித்து முதல் குளிகையாமே 557

## உதகம் புண்ணியர்க்குக் கிட்டும். திரிகடு பற்பம் சாவு பொய்.

ஆமப்பா உதகத்தில் கடு தாணி நெல்லி அப்பனே போட்டவு டன் சுக்காளுகும் - ஓமப்பா காயசித்தி மண்டலத்தினுள்ளே உறை த்தண்ணு தின்பதற்கு நெய் தேன் குத்தி - சேமப்பா வுதகத்திற் பாலும் விட்டுத் திரளவல்லோ காச்சியதைத் தின்றுயாளுல் - போமப்பா சாவு பொய்யாம் உண்ட பேர்க்கு புண்ணியற்குஉதகமது கிட்டுந்தானே 558

## கோழிமுட்டையில் நாகம் ரசம் கெந்தி இருக்கிறது.

கிட்டித்த உதகமதில் லண்டம்போடு கெடியாக யிறுகியது கல்லுமாகு - மட்டித்த அண்டமதில் ளுகரச கெந்தம் வகையேது வென்றுக்கால் சொல்லக்கேளு - ஒட்டித்த ஓடதுவு நாகமாச்சு யுத்தமனே வெண்கருத்தாண் சூதமாச்சு - அட்டித்த மஞ்சகரு கெந்தி யாச்சு அப்பனே அண்டத்தின் பிறவி தானே 559

பிறவியென்ற அண்டமது சிலேயுமாளுல் பேராக தினமூன்றிற் காயசித்தி - திறவியென்ற சூதத்தில் நாகங்கட்டுஞ் செப்புகிறேன் தங்கத்தின் மேலேபூசி நிறமையென்ற புடம்போட குருவாந் தங்கம் நிமிஷத்திற் சரக்கெல்லாம் வாசனேக்குச் சாகு - முறவியென்ற தங்கத்தால் சூதங்கட்டு முத்தமனே பாஷாண முருகுங் காணே 560

## அண்டக்கட்டு.

காணப்பா அண்டத்தால் நவலோகங் குருவாம் கைவிட்ட உப ரசங்கள் குருவுமாகும் - பூணப்பா பாஷாணங் குருவுமாகும் போக் கிதிலே விரித்தாடக் கோடாகோடி - ஊணப்பா அண்டவித்தை வேக மெத்த ஒன்றுக்கு நூறுகவர் விரிந்து ஆடும் - தோணப்பா கெடுப் பினமும் பழுப்பினமு மாகுஞ் சொற்பெரிய அண்டவித்தை துறை யிதாமே 561

துறையான ஆட்டெல்லாங் குக்கிடத்தினுட்டு சொல்லிதுக்கு ரெட்டிப்பாங்காகத்தினுட்டு - நிறையான காகத்தின்ரெட்டிப்பாட்டு நேரான பிருவினிட அண்டத்தாட்டு - குறையான நாகமதிலதிக மாடுங் கொள்கியதோர் மயிலினுட அண்டத்தாட்டு - அறையான மயில்மேலே பத்தங்கமாடு மப்பனேகெருடனுட அண்டந்தானே 562

அண்டவித்தை யுலகத்தில் சுருக்கு மெத்த ஆடவல்லோ சித்தருட மரபுள்ளோர்க்காகும் - கண்டவித்தை லகுவாக உந்தன்வித்தை காயசித்தி லோகசித்தி கவனசித்தி - பிண்டவித்தை யாருக்காஞ் சிவயோகிக்காம் போராகப் பூசித்த வர்மிக்காகும் - அண்ட வித்தை வெகு சுளிவு உதகங்கண்டால் ஓடுகிற வேகமெத்த உசத்திதானே ()

உசத்தியென்ற பஞ்சமுகக் குருவைக்கேளு உத்தமனே வெண்காரப்பலகை மேலே - அசத்தியென்ற யெருக்கம்பால் தோய்த்துத் தோய்த்து அப்பனே ரவியிலிடு தினந்தானஞ்சு மசத்தியென்ற கல்மதத்தை விளக்கில் வாட்ட வருகுமப்பா தைலமதை வாங்கிக் கொண்டு குசத்தியென்ற வீரமொடு பூரம் போட்டுக் குழைத்து நன்றாய்க் காரத்தின்மேலே பூசே 564

## பஞ்சமுகக்குரு.

பூசியல்லோ ரவியிலிட்டுக் காயக்காய புகழான காரமது குருவுமாகும் - மாசியல்லோ அறுத்த கத்தனுயுருவிச் சாம்பல் வாகாகச் சுட்டதுவும் படிதானென்று - காசியல்லோ வாழையுட கிழங்குச் சாறு கலரப்பா படிநாலு கலந்த பின்பு - தேசியல்லோ உரைத்திடு வாய் தேத்தான்வித்து தெளிவாகத் தெளிவெல்லா மிறுத்துக் கொள்ளே 565

## கற்பூரவுப்பு.

இருத்ததிலே பூரமொரு பலந்தான் போட்டு இதமாகக் காச்சிடவே உப்புமாகு - மறுத்ததிலேபேரென்ன கற்பூரவுப்பு மாட்டினால் தழைப்பூவில் சாறேவோடும் - நிறுத்ததிலே பலமொன்று வைத்துக் கொண்டு நேராக முன்னெடுத்த காரந்தானுங் - தறுத்ததிலே பலமெடுத்துக் கூடப்போட்டு சூர்வாகப் பீங்கானில்வைத்திடாயே 566

## பூமிநாதக் குரு.

வைத்த பின்பு சொல்லுகிறே னின்னங்கேளு வாகான ஊஷரத்தின் முத்துவெள்ளை - கைத்தபின்பு படியொன்று பாண்டத்திட்டு கன்னிகெடாப் பெண்ணுடைய அமுரிதானும் - வைத்த பின்பு படிநாலு அதில் வார்த்து யுத்தமனே கல்சுண்ண மதிலே போட்டு நைத்த பின்பு தெளிவிருத்துக் காச்சிநன்றாய் நலமாகக் குழம்பான பதத்தில் கேளே 567

குளம்பிலே வீரமிது பலந்தான் போட்டு குறுக நன்றாய்க்காச்சி யிதை ரவியில்வைக்க - தளம்பிலே உப்பாகும் பூமினதம் சாதகமாய் சவுக்கார மிதற்கிடாமோ - அளம்பிலே யிதுபட்டால் தழை பூவெல் லாம் ஆறுபோலோடிவரும் சாறு பாரு - உளம்பிலே யிதின் பேரு பூனதக்குருத்தான் உத்தமனே யிதிலே யொரு பலந்தான் கூட்டே 568

## கார குரு.

கூட்டயின்னங் கருச்சொல்வேன் கேளு கேளு குமுறவே முடக்கொத்தான் சுட்டசாப்பல் - மாட்டப்பா படிஒன்றில் வாகான கோமியமோ ஞுலுபடிவிட்டு - நீட்டப்பா கலக்கியிதை தெளிவிறுத் துக்கொண்டு ஷோரகக் காரமொரு பலத்தை போட்டு - ஆட்டப்பா காச்சியிதை உப்பாய்வாங்க அப்பனேகாரமென்ற குருவுமாச்சே 569

## துருசு குரு

ஆச்சப்பா யிதிலொரு பலந்தான் போடு அப்பனே நாலுவகை உப்புமாச்சு - ஓச்சப்பா யிக்குருவாலிலே பூவெல்லாம் உத்தமனே சாறுவரும் பாருபாரு - வாச்சப்பா துரிசியுட குருவைச்சொல்வேன் வாகான (துரிசியொரு பலந்தான் மூன்று) - (வீச்சப்பா சூடனதுபல மோ நாலு விளங்கி நின்ற கெந்தியரைப் பலமுங்கூட்டே 570

கூட்டதிலே வீரமது பலமுங் கால்தான் குமுறவே வெண்கரு வாலரைத்துக்கொண்டு) - நாட்டதிலே யிதையெடுத்துத்துரிசிக்கப்பி நலமாகத் தினந்தோறும் ரவியில்போடு - ஆட்டதிலே துரிசியது பொருமி வீழும் மதின்பிறகும் துரிசின்மேற் பூசிப்பூசி - மூட்ட திலே உதிரும் வரை பூசிப்போடு உதிர்ந்த கண்டபொடியெல் லாங் கூடக்கூட்டே 571

## கடுங்கார செய நீரால் துருசு பசுமை போகும்.

கூட்டவே துரிசி வெள்ளைப் பீங்கானில் போட்டுக் குத்தினல் சலமதிலே பசுமை காணும் - நாட்டவே பசுத்துதென்று மயங்க வேண்டாம் நலமாகக் கடுங்காரச் செயநீர் குத்தி - ஊட்டவேரவியில் வைக்கப் பசுமை போகு முத்தமனே பசுமைசற்றே யிருக்கவேணும் நீட்டவே பசுமை கெட்டால் பிடியாதொன்றை நேர்பறியா வாதி சொல்லும் வார்த்தை காணே 572

## சூதம் சாகும் விதம்.

காணப்பா துரிசியது சாகாமல் செத்தால் கைகடந்து ஆடுகிற குருவென்பார்கள் - ஊணப்பா பசுமையற்று நீரிற்றுனல் உத்தம னே சுண்ணும்பு யென்றனுமம் - பூணப்பா குருவுக்குப் பசுமைவே ணும் போடுகிற சரக்கோடே பசுமை சாகுந் - தோணப்பா துரிசி யது சற்றேசெத்தால் சொற்பெரிய சூதமதிற் சொக்குந் தானே 573

துருசியது சுன்னமானுல் சாகாமல் செத்திருந்த பசுமை வேண்டும் என்று கோங்கணர் 3000-ல் சோல்லப்பட்டிருக்கிறது. வேலு.

## பஞ்சமுகக் குரு.

சொக்கியதோர் துரிசி குரு பலந்தான் போடு சுகமாக அஞ்சு வகைக் குருவுமாச்சு - அக்கியதோ ரஞ்சுமொன்று யரைத்துக் கொண்டு அடவாக ரவியினுள்ளே போடு போடு - மக்கியதோர் துரு சியுட செம்பைத்தின்று மைந்தனே பசுத்திருக்குஞ் சற்றேபாரு - ஓக்கியதோர் பஞ்சமுகக் குருவிதப்பா ஓடுகிற குணத்தையினி யுரைக் கிறேனே 574

---

## 9-வகை பாஷாணத்தின் பெயர்.

## 1-வது பாஷாணம் லிங்கமெழுகு.

உரைக்கிறே னிக்குருவைச் செம்பரத்திப் பூவி லூட்டியல்லோ பிசைந்துவைத்துப் பிழிந்தாயானுல் - நிரைக்கிறேன் ரெத்தம்போல் சாறுவரும் நோகயச்சாறு பிடிதானென்று - தரைக்கிறேன் லிங்க மது பலந்தான் ரெண்டு தன்னேடு பறிக்குருத்தான் விராகனென்று திரைக்கிறேன் பொடியாக்கிச் சாற்றில் போட்டு திறமான அயச்சட் டிக்குள்ளே வாரே 575

வார்த்தல்லோ அடுப்பேத்தி யெரித்து மெல்ல வாகான மெழு கான பதத்தில் வாங்கு - சேர்த்தல்லோ வன்னிகெற்ப மெழுகிதப்பா திறவான நவலோகம் நூற்றிலொன்று போட - மாற்றல்லோ பக் தாகு மெட்டுமோகும் வகையறிந்து லோகத்தே மாட்டு மாட்டே - ஊர்த்தல்லோ வன்னிகெற்ப மெழுகின் வேதை யுண்டாக்கால்காய சித்தியாகுந்தானே 576

சித்தியாம் வெள்ளியிலே நூற்றுக்கொன்று திறமானசெம்பிலே அன்பதுக்கொன்று - பத்தியாம் பித்தளையில் மூன்னூற்றுக்கொன்று பாங்கான வெண்கலத்தி லெண்பதுக்கொன்று - மூத்தியா மிரும்புக்கோ அன்பதுக் கொன்று முதிர்ந்து நின்று திராவானுல் முப்பதுக் கொன்று - அத்தியாம் காரீயம் நூற்றுக்கொன்று அப்பனே காந்தத் திலிருபதுக்கொன்றே 577

ஒன்ருன நாகத்தில் பத்துக்கொன்று ஊட்டப்பா யிந்தமுறை நவலோகத்தில் - நன்ருன பத்து முதலஞ்சுவரை காணும் நலமான லிங்கத்தின் வேதையப்பா - வன்ருன சுறுக்கென்ன சிவசத்திகூடி விளங்கிநின்ற சுறுக்காலே யித்தனையுமாச்சு- கன்ருன லிங்கவித்தை காயசித்தியாக்குங் கைமுறையாய் தினந்தோறும் பணந்தா னுண்ணே

## 2-வது பாஷாணம் வீரமெழுகு.

## 3-வது பாஷாணம் வெள்ளைமெழுகு.

உண்ணப்பா காயசித்தாம் லிங்கந்தானு முத்தமனே லிங்கம்போல் வீரத்தைப் பண்ணு - கண்ணப்பா மெழுகாகும் வீரந்தானும் நலமான நவலோகத்தோடும் வேதை - பண்ணப்பா யிப்படியே வெள்ளை தன்னைப் பாங்கான வெள்ளியுட குருவைப் போட்டு - விண்ணப்பா தொட்டாடும் வெள்ளிவித்தை வெருவிடவே யுபரசமும் வெள்ளி யாமே 579

## 4-வது பாஷாணம் கெவுரிமெழுகு.

## 5-வது பாஷாணம் தொட்டிமெழுகு.

## இதால் ரசம் தங்கமாகும்.

ஆமப்பா யிப்படியே கெவுரிபண்ணு அடவாக கெவுரியது மெழுகுமாகும் - ஓமப்பா நவலோகத்தூட்டிப் பார்த்தா லுத்தமனே பொன்னாகும் பாருபாரு - தாமப்பா தொட்டியிந்தப்படியேயாகுஞ் சாதகமாய்த் தொட்டியுட மெழுகை வாங்கி - கேமப்பா சூதத்தில் நூற்றுக்கொன்று செலுத்தியொரு புடம்போடத் தங்கமாமே 580

## 6-வது பாஷாணம் தீமுறுகல் மெழுகு,

தங்கமாந் தீமுறுகலிப்படியே பண்ணு சாதகமாய் மெழுகாகு மெழுகில் வேதை - வங்கமா முதலாக நவலோகம் பொன்னும் மகத்தான தீமுறுகல் மெழுகிதப்பா - பங்கமாய்ப் போகாது உப்பைக் கண்டால் பழுத்தமட்டுமிறங்கிவிடுந் தங்கமப்பா - சங்கமாயோடிவிடு மிதிலே வேதை சாதகமாய்க் கார்முகியைக் கேளுகேளே 581

## 7-வது பாஷாணம் காரமுகில் மெழுகு ரசம் கட்டும்.

கேளப்பா காரமுகிலிப்படியேபண்ணக் கெடியானமெழுகாகுஞ் சூதத்தைக்கட்டும் - நாளப்பா நவலோகம் வேதையாகும் நலம்பெற வே உபரசத்தில் வேதையாகும் - சூளப்பா சரக்குகளைத் துரத்திக் கொல்லுந் துறைகோடி கவர்கோடி ஆடுமாடும் - வேளப்பாயெரித்து நின்ற சிவன் சொல்லக்கேட்டு வேதாந்தி யெந்தனுக்கு உரைத்திட் டானே 582

## 8-வதுபாஷாணம் குதிரைப்பல் மெழுகு.

உரைத்திட்ட குதிரைப்பல் பாஷாணத்தை யுத்தமனே முன் போலே மெழுகு செய்தால் - நிரைத்திட்ட சூதத்தை வாசனைக்குக் கொல்லும் நேராக உபரசங்கள் சத்துமாகும் - பரைத்திட்ட நவ லோகம் வெள்ளியாகும் பாச்சிதிலே வெள்ளியென்ற குருவைக் கூட்ட - யுரைத்திட்ட யியத்துக்கசையாதப்பா யென்ன சொல்வேன் குதிரைப்பல் லாட்டுத்தானே 583

---

## 9-வது பாஷாணம் குக்கிட கெந்தி. இதுவே சிகப்பு நிற கெந்தகம் இதின் வாசனைக்குச் சூதம் கட்டும் கோடான கோடி தொழிலாடலாம்.

ஆட்டான குக்கிடத்தின் தலையின் கெந்தி அப்பனே சாவலுட சூடுபோலே - நீட்டான செந்நிறமாய்ப் பவழம் போலே நேராக யிருக்குமிது மெழுகுபண்ண - கூட்டான வாசனைக்குத் தங்கஞ்செம் பாங் கோடிவரை தொந்தமதுயேறுமேறும் - பூட்டான வாசனைக்குச் சூதங்கட்டும் பூட்டினுல் சூதமது தொந்தமாமே 584

தொந்தமொன்றில் சுன்னமொரு கோடாகோடி சூட்டுகிற குருக்கோடி குளிகை கோடி - அந்தமென்ற செந்தூரக் களங்கு கோடி அப்பனே வயத்தம்ப வசியங்கோடி - பந்தமென்ற தீயினுள் ளே அண்டாண்டமெல்லாம் பறந்திட்ட ஒளிபோலே யிதுவுமாடு - சந்தமென்ற கெந்தியது நவலோகத்தில் தாக்கப்பாகோடிக்கு ஒன்று தானே 585

கோடியன்றே ஓடுவது குக்கிடத்தின்கெந்தி குறுக்கினல் குறு காது கெந்தகத்தைப் போல - நாடியல்லோ தூம்பூரமும் பரிசவேதை நலமாக ஆடுமிந்த கெந்தியாட்டு - தேடியன்றே திரிந்தாலுங்கொடுக் கார் கெந்தி சித்தருட பிள்ளைகட்குக் கிடைக்குமப்பா - வாடியன் றே மயங்காதே பஞ்சமுகக் குருத்தான் வாய்திறக்க வொட்டாம லடுந்தானே 586

## ஆக பாஷாணம் ஒன்பதும் யிதுதான்.

தானென்ற பாஷாணம் ஒன்பதுவு மிதுதான் சரக்கறியான் வெவ்வேறு பேருஞ் சொல்வான் - வேனென்ற ஒவ்வொன்றை விரி த்துச் சொல்ல வேதையோ பாதையோ கோடாகோடி - கானென்ற செம்பரத்தம் பூச்சாத்தாட்டு கடல்போலே விரிந்தாடு மாடவாட தேனென்ற யிப்பூவைப் போலே மைந்தா செப்புகிறேன் பூவகையை செப்புறேனே 587

## பூவகை.

செப்புகிறேன் செவ்வறளிப் பூவுமாகுந் திறமான குமரியுடன் கொங்கிலவம் பூவாம் - ஒப்புகிறேன் மாதளையின் பூவுமாகு முத்தம னே சிவத்த மற்ற பூவுமாகு - மப்புகிறேன் செங்கொன்றைப் பூவு மாகுங் மப்பனே செவ்வகத்திப் பூவுமாகும் - கொப்புகிறே னிந்த வகைப் பூவுக்குள்ளே கொள்கியதோ ரஞ்சுவகைக்குருவைப்போடே

போட்டிடித்து முன்போலே சாறுவாங்கிப் புகழான முந்திய தோர் வரிசைபோல - மாட்டிதிலே மெழுசாகும் பாஷாணமெல்லாம் வகைவகையாய் லோகமொடு உபரசமும் பொன்னும் - மூட்டியிதில் தங்கமென்ற குருவைப்போட்டு உத்தமனே பிசைந்துகொண்டு வே தை போடு - நீட்டியிதில் கவர்கோடி துறையோ கோடி நேரான மெழுகினுட நிலை காணேனே 589

காணாத பஞ்சமுகக் குருவினோடே கலந்தரைத்துச் சாரமிட்டு சரக்கில் பூசித் - தோணாதே கரியோட்டில் வாட்டக்கட்டுஞ் சொல் லாத சரக்கொன்றில் வேதை கோடி - ஊணாத ஒவ்வொன்றில் கவ ரோ சங்கம் ஓட்டலாம் ஆட்டலாம் முறவுபார்த்து - பூணாதே துறை தோறுந்தங்கம்பூட்டு பொன்னுக்குப்பொன் னதுவும் வித்துமாச்சே

## ஞானயோகக் கரு.

வித்தென்ற சடத்துக்கு விந்துவித்து வேரான மரங்களுக்கு விதையே வித்து - பத்தென்ற வேதைக்குத் தங்கம் வித்து பரிவான வெள்ளிக்கு வெள்ளிவித்து - கொத்தென்ற போதத்தில் மனமே வித்து கொள்கியதோர் யோகத்தில் வாசிவித்து - மூத்தென்ற குரு வுக்குத் துரிசுவித்து மூவுலகுக்காதிவித்து சத்திதானே 591

சத்தியென்ற வடிவேது ஒளியாய் நிற்குஞ் சாதகமாய்ச் சிவமேது வேளியாய் நிற்கு - முத்தியென்ற யிடமேது வெளியொளியுங் கூடி மூதண்ட பரமான கேசரிதானப்பா - பத்தியென்ற யிதின் மேலே யாசைவைத்து பாணத்தை யுண்டு மைந்தா யதிலே நில்லு - வெத்தியென்ற செடமாகுங காயசித்தியாகும் வேரப்பா வாமமது ஞானந்தானே 592

தானென்ற ஆணவமே காமமாச்சு சங்கல்ப்ப விகல்ப்பமல்லோ சம்சாரமாச்சு - காமனென்ற பெண்ணாலே மோகமாச்சு கனகமென்ற மயத்தாலே லோகமாச்சு - ஊனென்ற சடத்தாலே உயிருமாச்சு உத்தமமான அன்னத்தால் சடமுமாச்சு - கோனென்ற பூமியுட நாதத்தாலே கூடிற்றே வாதமெல்லாங் குறிப்பாய்க் காணே 593

## நெகிழ பந்தக்கரு.

குறிப்பான நெகிழ்பந்தக் கருவைக் கேளு கூறியதோர் பலமொன்று துரிசுச்சுன்னம் - நெறிப்பாக கட்டியதோர் சாரமொன்று நேராகக் கட்டியதோர் காரமொன்று - மறிப்பாக யிந்துவென்ற லவணமொன்று வாகாக யிதுவெல்லாம் பலமாய் தூக்கி - பொறிப்பாகப் பூநாகம் புரசம்வித்து புகழான குண்டுமணி அழிஞ்சில் வித்தே 594

வித்தோடு குங்கிலியம் வகைதான் கேளு வெவ்வேறு அரைப் பலந்தான் கூடப்போட்டு - பத்தோடு யிடித்து நன்றாய் யிதிலே கேளு பாங்கான யெருக்கம்பால் சதிரக்கள்ளி பாலுங் - கொத்தோடு விட்டரைத்து மெழுகாய்ப் பண்ணி குலாவியதோர் பலம் ரெண்டு மெழுகு வாங்கி - நத்தோடு குழித்திதிலே சூதந்தானும் நலமாக ஒருபலமும் வாருவாரே 595

## சூதக்கட்டு.

வார்த்தல்லோ சூதத்தை குகையில் மூடி வாகாகச் சீலேசெய்து புடத்தைப் போட - கோர்த்தல்லோ புகையடங்கி கட்டிப்போகும் கொள்கியதோர் சூதமிதில் மணியாய் நிற்குங் - கூர்த்தல்லோ யிச் சூதஞ் சாரணைக்குமாகுங் குருவாகுஞ் சுன்னமுமாங் களங்கமாகும் வேர்த்தல்லோ காயசித்தாஞ் செந்தூரமாகும் வேரப்பா வாதத்துக் கறிந்துகொள்ளே 596

## பாஷாணம் 64-ம் கட்டும்,

## காரசாரம் கட்டும்.

அறிந்துகொள்ளு மெழுகெடுத்து சரக்கில் கட்டி யப்பனே புடம்போட அறுபத்தனுலும் - நெறிந்துகொள்ளு மந்தந்த வர்ணத் தோடு நேராகப் பாஷாணங் கட்டிப்போகும் - பிறிந்து கொள்ளு லவணமொடு காரசாரம் பேராகக் கட்டிப்போம் பாரு பாரு - மறிந் துகொள்ளு கட்டியதோகார்சார மகத்தான குருவாகுஞ் சுன்ன மாமே 697

ஆமப்பா செந்தூரம் மெழுகுமாகு மண்டாண்டங் கரைந்திடு மே காரசாரம் - போமப்பா நவகோடி மாற்கந் தானும் போக்கறி யானெடுத்தாலும் பொன்னுமெல்லாஞ் - சாமப்பா யிதினலேஉபரச முஞ் சரக்குஞ் சகலத்துக்காதியாங்காரசாரம் - ஓமப்பாயிதைவிட்டு வாதிகெட்டு ஓடுவான் தழைதேடிக் காட்டில் தானே 598

காட்டிலே மூலிகைக்ளனந்தமுண்டு வுண்டு கானகத்து சித்தருக்காம் பரதேசிக்காம் - நாட்டிலே யுள்ளதொரு வாதிக்கெல்லாம் நலமான லவணமொடு காரசாரம் - நீட்டிலே நாதாக்கள் சித்தராட்டு நேரான ரிஷிகளுக்குங் காரசாரம் - பூட்டிலே சாரணைக்குஞ் சுன்னத்துக்கும் போக்கான வீரத்துக்காதியாச்சே 599

ஆதியென்ற லவணமுதற் காரசார மப்பனே யிருபத்தஞ்சினந் தானுண்டு - வாதியென்ருலிதையறிவான் மர்மங்காண்பான் வாய்ப் பேச்சாய்ச் சுடுகிறவன் காணுன் காணுன் - பேதியென்ருல் சிலபேதி நவகண்டபேதி பேரான மலேபேதி தேகபேதி - சாதியென்ற யினங் கண்டு அறிந்து தாக்கச் சதகோடி நவகோடி கவருமாமே 600

## பாஷாணம் கட்டியதற்கு பரிக்ஷை.

கவராக முன்கட்டும் பாஷாணத்தை கருச்சொல்வே நன்ருகக் கேளுகேளு - தவராக மயிரளவு புகைந்துதானுற் சமத்தான முழுக் கட்டாம் பாரு பாரு - முவராக ஊசிபோற் புகைந்துதானல் யுத்த மனே முக்காலேகட்டுமாச்சு - நவராகக் கதிரதுபோற் புகைந்துதா னல் நலமான அரைக்கட்டாம் நாட்டிப்பாரே 601

பாரப்பா யெழுத்தாணி போலாந்தூமம் பரிவாகக் காற்கட்டுப் பரிந்துபாரு-நேரப்பாயித்தனையும் யுருக்கையிலேகாணும் நிறையாகப் பாஷாணம் பாச்சயிலே காணும் - சாரப்பா இதுவெல்லாந் தொழி லுக்காகுஞ் சாகாமற் செத்துநின்ற மார்க்கமப்பா - வோரப்பா லோகத்தி லூட்டும்போது ஓடுகிற புகையடங்கி வேதையாமே. 602

## ஊதிய சுன்னம் உயர்ந்த முதற்தரம்.

வேதையாம் புகைகிறதோர் சரக்கெல்லாம் யிளகியது புகையாமற் கிடந்துதானுற் - பாதையாம் ஊதிடவே சுன்னமாகும் பனர்கோடி கவர்கோடி சுன்னமாகும் - பேதைகளறியாமற் பிண வலிவுயென்பார் பேயரல்லோ சுன்னமாயூதமாட்டார் - தாதையாய்ந் தந்தைதாய்க் குருப்போற் சொல்ல சாற்றினே னெந்நூலிற் சாற் றினேனே. 603

சாற்றினேன் முன்கட்டுப் பாஷாணங்கள் தனிற்றனியே மெழு காகுங் களங்குமாகும் - போற்றினேன் குருவாகுஞ் சுன்னமாகும் புகழானசெந்தூரம் செயநீராகும் - ஏற்றினேனெவ்வொன்றை தொ ட்டுஆட யெடுத்த துறையாடவென்றால் றென்னுற் கூடா - ஆற்றி னேன் புத்தியுள்ளோன் அறிந்து ஆட அளவேது சரக்கினுட ஆட்டுத் தானே. 604

## கரியுப்பு மகிமை.

ஆட்டான லவணத்தை விரித்துச்சொல்வே னப்பனே வாருதி யையிறைத்துக்கட்டி - மூட்டாக விளைந்த வுப்பு ஞானிக்காகு மூவுல கில் வாழ்பவர்கள் கட்டினுலும் - நீட்டாகத்தெரித்துப்போம் தெரியா மல் நின்றாலும் நேர்பான லவணமது லேசுமெத்த - கூட்டான செந் தூரஞ் சுண்ணும்பு செய்துங் குறைந்துபோம் வர்ணமது வுலகத் தோற்கே 605

## பாறையுப்பு பெருமை

உலகத்தோற் கட்டுதற்கு பாறையுப்பைக் கேளு யுத்தமனே வாருதிக்குட் பாறைபோல் நிற்கு - மூலகத்தோற் கெடுத்த முறை கட்டியாட வூதினுற் சுன்னமுமாம் செந்தூரமாகு - மூலகத்தோர் மூடனென்று லொன்றுமில்லை சுறுதியொத்தசாத்திரத்தைப் பொய் யெண்ணுதே - உலகத்தே வாமியுமா யோகியானு லுத்தமனே வப் படங்கி கட்டுந்தானே 606

## அடியில்கண்ட வெடி சாரசெயநீரால் ஷை முறைப்படி பாறையுப்பைக்கட்டி பின் பாறையுப்பை செந்தூரம்செய்யும்விதம். R. M. K.

கட்டியதோருப்புக்குக் காரம் பூசிக் காய்ந்து நின்றுருகையிலே நாலிலொன்று பறிதான் - ஒட்டியதோர் திரிகுணசல் நாலிலொன்று போடு உத்தமனே நாலிலொன்று வீரம் போடு - கட்டியதோர் நாலிலொன்று லிங்கம்போடு வாகாக நாலிலொன்று சூதம் போடு - நெட்டியதோர் குகையோடே யெடுத்துக்கொண்டு நேராகச் சில்லிட்டுப் புடத்தைப் போடே 607

(திரிகுணசல் என்பது:—தாளகம், கெந்தி, மனோசிலை.) 3-ம் சமஎடை சேர்த்ததில் நாலிலோன்று போடவும். R. M. K.

## பாறையுப்புச் செந்தூரம்:

போடப்பா செவக்கமட்டுங் கெந்தகத்தைச் கூட்டுப் புகழாக லவணமது செந்தூரமாகு பாடப்பா செந்தூரந் நூற்றுக்கொன்று அப்பனே நவலோகம் பொன்னுமாகும் - நீடப்பா செந்தூரஞ் சரக்கைக் கட்டும் நேராகக் கட்டினதுவேதையாகும் - ஊடப்பா லவணத்தைச் சுன்னம் செய்ய உத்தமனே கட்டுகிற கருச் சொல்வேனே 608

## பாறையுப்பைக் கட்ட.

## வெடியுப்பு செயநீர், சாரச் செயநீர்.

சொல்லுவேன் ஊஷரத்தின் குரு தானென்று சொற்பெரிய சாரமொன்று கூட்டியாட்டி - அல்லுவேன் பனியில் வைக்கச் செயநீராகு மப்பனே வெடியுப்பும் ஊஷரத்தின் குருவு - மல்லுவேன் சமனாக வரைத்துக்கொண்டு மாட்டியதோரு கரண்டியிலே கொதிக்க வைத்து - நல்லுவேன் பனியில் வைக்கச் செயநீராகும் நலமான லவணமொடு சாரநீரே 609

## வேதை செய்நீர்:

நீரான விரண்டுமொரு சமனாய் வார்த்து நேரான வெண்கார மதிலே போட்டுத் - தாரான யிந்துப்பு பூரம் போட்டுத் தன்னோடு சூடனுடன் வீரம் போட்டு - வாரான கல்வத்திலரைத்து நன்றாய் யுத்தமனே கல்லுப்பு மேலே பூசி - சீரான ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு திறமான சீனமென்ற பொரியில் வையே 610

## கல்லுப்பு மணி.

வைத்தல்லோ கீழ்மேலுஞ் சீனத்தூளை வாகாக வடுப்பேத்திச்
சாம மட்டும் - நைத்தல்லோ தெரியாது வாமிக்கானல் நலமாக
ஒன்று ரெண்டா மூடனுக்குக் - கைத்தல்லோ விடுகாதே தெறித்தா
லென்ன கலங்காதே கருச்சொல்வேன் கேளு கேளு - பைத்தல்லோ
காரமொடு சவ்வாது சாரம் பாங்கான வீரமிட்டுப் பூசியூதே 611

## உப்பை சுன்னம் செய்ய குரு.

ஊதினு லுப்புனின்று வுருகியாடு மூட்டினல் சரக்கையெல்
லாஞ் செந்தூரம் பண்ணும் - வாதினுற் சுண்ணும்பு பண்ணக் கேளு
மகத்தான புனுகோடு வீரஞ் சீனம் - கோதினுலூஷரத்தின் குரு
வுங்கூட்டிக் குமுறவே பூசியுப்பை யூதச் சுன்னம் - யேதினல் சுண்
ணும்புமாச்சுதென்று லெடுத்ததொரு ஊஷரத்தின் குருவாலாச்சே()

## பாறை உப்புச் சுன்ன மகிமை.

ஆச்சப்பா வுப்பதுவுஞ் சுன்னமானு லடியாக நின்றுடு மாதி
வித்தை - ஒச்சப்பா ரவியென்பார் கூர்மையென்பார் உறவாகக்கடற்
குருவி சக்கரை தானென்பார் - நீச்சப்பா வாதமென்ற வாருதியிற்
போட்டு நீஞ்சுகிற தவளையென்பார் நிகிளமென்பார் - காச்சப்பா
நின்றதொரு வாதத்தாயை கையெட்டி யறுக்குகிறகுறடென்பாரே()

குறடென்பார் குருமுனிக்கு வழியென்பார் கூறுன அறுசுவைக்கு
காசாவென்பார் - முறடென்பார் உருக்கினத்துக் காதியென்பார்
மூட்டுகிற சாரணைக்கு ஆதியென்பார் - நறடென்பார் சத்தியுட நாத
மென்பார் நலமான சரக்குக்கு நமன் தானென்பார் - எறடென்பார்
கட்டுதற்கு கடினமென்பார் யேத்தினுற் கடுங்காரச் சுன்னமாமே614

சுன்னமென்ற முறைகளெல்லாங் கடுங்காரமேற்றி துடியான
குருவுக்கு காரமேற்றி - தன்னமென்ற கட்டுக்குக் காரமேற்றி
சார முதற்றுருசியதை காரமேற்றி - வன்னமென்ற பாஷாணங் கார
மேற்றி வாகாக வூதிடவே உயர்ந்த சுன்னம் - சுன்னமென்ற கோலு
க்கு சாணை தீர்த்த கருப்போல அண்டநீர் காட்டுறேனே 615

**சகல சரக்குகளுக்கும் கடுங்கார மேற்றுமல்
கட்டினல் ஓடி விடும் சுன்னமாகாது.
கடுங்கார மேற்றினல் சரக்குகள் கட்டி சுன்னமாகும்.**

# கடுங்காரமேற்ற கடுங்காரசெயநீர் என்ற அண்ட செயநீர் செய்யும் விதம்.

இதில் சகல சரக்குகளையும் நனைத்து ரவியிலிடவும், காய்ந்ததும் நனைத்து ரவியிலிடவும். இப்படி 7-நாள் அடிக்கடி நனைத்து நனைத்து உலர்த்தவும் பின் சாஸ்திரப்படி சரக்கைக் கட்டி கடுங்கார செயநீறல் அரைத்து வில்லைதட்டி ஊதவும், R M K.

காட்டுகிறேன் அண்டத்தோற் சுண்ணும்பாகக் கடுஞ்சுறுக்கா யூதினது பலந்தானென்று - மூட்டுகிறேன் சுண்ணும்புத் தண்ணீர் விட்டு முசியாமற் கரைத்து நன்றாய்த் தெளிவோர் சேரை - நாட்டு கிறே னிதில் மருந்து ஞபி பூரம் நலமான வீரமொடு சாரஞ் சீனம் ஊட்டுகிறே னுரத்தோடு குருவண்டு சூதம் உத்தமனே குக்கிடத்தின் வெண்மலமுங் காணே 616

## இதில் சவுக்கார சுன்னம் 1விராகனிடை சேர்க்கவேண்டும்

ஆர். எம். கே.

காணப்பா வெண்கார புனுகுகூட கைவிட்ட ஊஷரத்தின் பூவோடொக்க - பூணப்பா வகையொன்று வராகனென்று புகழாகத் தெளிவாலே அரைத்துக்கொண்டு - தோணப்பா யிதற்குள்ளே அண் டந்தானுஞ் சொல்லாக அன்பத்திஒன்று வாங்கி - பூணப்பா வெண் கருவை யுடைத்து விட்டு யுத்தமனே யெருக்கம்பால் சேரைவாரே ()

வார்த்தல்லோ கவையாலே கடைந்து நன்றாய் வைத்தாக்கால் நுரையாகித் தண்ணீராகும் - சேர்த்தல்லோ மூன்று நாள்தெளிவை வாங்கி திரமாக லவண முதல் காரசாரம் - வார்த்தல்லோ ரவியிலிட கட்டிப்போகும் வாகான பாஷாணம்உபரசங்கள் தோய்த்துப்போட்டு கோர்த்தல்லோ யூதிடவே கடுங்காரமேறிக் கொடுஞ் சுறுக்காய் சுண்ணும்பாய் நீரிப்போமே 618

பாரப்பா குருவுக்கு இந்நீர்வேணும் பாங்கான சுன்னத்துக் கின்னீர் வேணும் - நேரப்பா வஸ்துவுக்கு இந்நீர் வேணும் நேராக ஊதுவதுக்கின்னீர் வேணும் - சேரப்பா வழலைக்கு யின்னீர்வேணும் செப்பரிய பூரத்துக்கு யின்னீர் வேணும் - மூரப்பா சுட்டலைந்து செ்டுக்கவேண்டா மூட்டியிது துரைதோரு முரைத்துப் பாரே 619

உரைத்தயிந்த வெண்கருவாம் செயநீர் விட்டால் ஓடுகிற குரு வில்லை சுன்னமில்லை - நிரைத்ததொரு கடுங்கார வேகமில்லை நேராக சரக்குக்கு சுருக்கோயில்லை-மரைத்ததொரு மரைப்பெல்லாம் யிந்நீர் பட்டால் வாய்திறந்து பூப்போலே சரக்கும் வேகும் - வெரைத்த தொரு சரக்கெல்லாம் மெதுவேயாகும் வெகுசுருக்கு வெகுசுருக்கு அண்டநீரே 620

## கல்லுப்புச் சுன்னம்.

அண்டநீர்க்குள்ளேயல்லோ கட்டிய கல்லுப்பை அப்பனேதோய்த்தெடுத்து ரவியில்போட்டு - அண்டநீர்க் கருவாலே புனுகு வீரம் அடைவான சீனமொடு பூரங்கூட்டி - அண்டநீர் விட்டரைத்து உப்புக்கப்பி - ஆதியென்ற ஊஷரத்தின் பூவில் வைத்து - அண்டநீர் தெளித்ததின்மேல் புடத்தைப் போட அடைவாக கடுங்கார மேருந்தானே (ஊசரபூ—பூநீர்) 621

## கல்லுப்புச் செயநீரில் பச்சைக்கற்பூரச் சுன்னம், பச்சைக்கற்பூர செயநீரில் தாளக வெள்ளை.

தானென்ற உப்பெடுத்து சாரங்கூட்ட ஜலமாகும் ஜலத்துளே பூரம்போட்டு - வேனென்ற ஐங்குகையிலூத யூதச் சுன்னம் வெகு சுருக்கு பூரமென்ற சுன்னத்தாட்டு - வானென்ற பூரத்தில் சாரம் கூட்ட மகத்தான ஜெயநீராம் ஜெயநீர்க்குள்ளே . கானென்ற தாளகத்தை தோய்த்துப் போட காணு முன்னே மஞ்சளத்து வெள்ளையாமே 622

## தாளகச் சுன்னம் தாளகச்செயநீரில் வீர மெழுகு.

வெள்ளையென்ற தாளகமோ குருவுமாகு மேலரிந்து யூதிடவே சுன்னமாகுந் - தள்ளையென்ற தாளகத்தில் சாரங்கூட்டி தாக்கியே ஆட்டயிலே ஜலமுமாகும் கள்ளையென்ற ஜெயநீரில் வீரந் தோய்த்து கரியோட்டில் வாட்டயிலே மெழுகுமாகும் - நள்ளையென்ற மெழுகாலே வேதைகோடி நலமான மெழுகெடுத்து லிங்கத்தப்பே 623

## வீர மெழுகால் லிங்கச்சுன்னம் அதால் துருசுச் சுன்னம்.

அப்பியிதை வாட்டயிலே லிங்கங்கட்டும் ஆடுமே வெகுகோடி லிங்கவேதை - செப்பியிந்த லிங்கமது குருவுமாகுந் திரமாக ஊத யிலே சுன்னமாகு மொப்பியிந்த சுன்னத்தில் வீரங்கூட்டி யுத்த மனே புனுகிட்டு துரிசிக்கப்பு - உப்பியிது சுக்காலு மூதச் சுன்ன மோகோகோ துரிசியுட வேகங்கேளே 624

## துருசுச் சுன்னத்தால் கெந்திச் சுன்னம்.

கேளப்பா துரிசியுட போக்கைச் சொல்ல கீழேழு மேலேழும் பொன்னேயாகும் - நாளப்பா சங்கவரை தொந்தமேறும் நாதாந்த பச்சைநிறமான உப்பு - வேளப்பா யிதையெடுத்து புனுகு வீரம் வேதித்து கெந்தியிலே பூசிப்போட - தாளப்பா மஞ்சளரு மிதனை நீயும் சாதகமாய் ஊஷரத்தின் பூவில் வையே 625

வைத்தல்லோ அடுப்பேத்தி எரிப்பாய் ஜாம மஞ்சலருங் கெந் தியது சுன்னமாகும் - நைத்தல்லோ அண்டரண்டம் பொன்னுமா கும் நலமாக உண்டஉடம்பு தங்கம்போலாம் - கைத்தல்லோ கெந்தக த்தில் அடங்கா வேதை கரையேது துகையேது தோகையாட்டு - மொய்த்தல்லோ புவனத்திற் திருகணி போலாடு மூதண்ட கெந்தி யுட சுன்னந்தானே 626

## கெந்தக சுன்னத்தால் வெள்ளைப் பாஷாணம் சுன்னம்.

தானென்ற கெந்தியிலேபுனுகு வீரந் தாக்கியல்லோ வெள்ளை யிலே பூசிப்போட்டு - வானென்ற ஊஷரத்தின் பூவில் வைத்து வாகாகத் தீயெரிக்க ஜாமமொன்று - ஊனென்ற பாஷாணஞ் சுன்ன மாகு மொருபட்டால் வெள்ளியுமாம் பொன்னுமாகும் - கானென்ற வெள்ளிவிட்டால் வெள்ளியாகும் கைமுறையாய் பொன்னிட்டால் பொன்னுமாமே 627

## வெள்ளைப் பாஷாணச் சுன்னத்தால் நாகச்சுன்னம் அதால் வீரச்சுன்னம்.

பொன்னாகப் பாசாணச் சுன்னத்துடன் புனுகு வீரம் போட் டல்லோ மத்தித்து நாகத்துக்கப்பி - மன்னாக புடம் போட நாகச் சுன்னம் வாய்திறக்கப் போகாது நவலோகவேதை - கன்னனி நாகத்தில் புனுகு வீரங் கலந்தரைத்து வீரத்தின்மேலே யப்பி - தன்னன ஊஷரத்தின் பூவில் வைத்துத் தாக்கியொரு புடம் போடச் சுன்னமாமே 628

## வீரச்சுன்னத்தால் நவலோகமும் தங்கமாகும்.

ஆமப்பா வீரமென்ற சுன்னத்தாட்டு அண்டமெல்லாம் மெழுகாக்கி வேதையாக்கும் - மோமப்பா நவலோகந் தண்ணீராகுமுபரசங் களானதெல்லாம் சத்தாய் நிற்கும் - காமப்பா நவலோகம் பொன்னுமாகும் சதகோடி தொந்த மிட்டாற் தொந்த மேறுங் - காமப்பால் வித்தையென்ன யிதற்கு யீடோ கடுஞ்சுறுக்கு வீரத்தி னூட்டுத்தானே 629

## வீரச்சுன்னத்தால் வங்கச்சுன்னம், இதில் சூதக் கட்டு

ஆட்டான வீரச்சுன்னத்தில் வீரம்பூர மப்பனே புனுகிட்டு வங்கத்தப்பி - மூட்டான புடம்போட வங்கச்சுன்ன மூச்சற்றவிடம் போலே வாதமாடும் - கூட்டான வாதத்திற் கிதுவேயாகுங் கொள்ளே யிட்டுச் சூதமெல்லாம் குமுறக்கட்டும் - நீட்டான குளிகையென்ன செந்தூரமென்ன நேரான சுன்னமென்ன துரையைக்கேளே 630

துரையான களங்கதிலே கோடாகோடி சுருக்கான குருவிதிலே கோடாகோடி - அரையான மெழுகிதிலே கோடாகோடி அப்பனே ஜெயநீரோ கோடாகோடி - மரையான தொந்தவித்தை கோடாகோடி மாட்டிறதோர் கெடுப்பினமோ கோடாகோடி - நிரையான வங்கவித்தை சாரவித்தை நேராகமெடுத்ததெல்லா மாடுங்காணே 631

## வங்கச்சுன்னத்தால் நிமிளைச்சுன்னம்

காணப்பா வங்கத்தில் புனுகுவீரம் கைமுறையாய் விட்டரைத்து நிமிளைக்கப்பி - பூணப்பா ஊஷரத்தில் புடத்தைப்போட புகழான நிமிளையது சுன்னமாகுந் - தோணப்பா தேவியுட நாதத்தாட்டு சொல்லுதற்கு கவர்கோடி சுன்னங்கோடி - வீணப்பா மற்றதெல்லா மிதுக்கீடல்ல வேதாந்த வெளிக்கொக்கும் வேதைதானே 632

## நிமிளைச் சுன்னத்தால் சாரச்சுன்னம்.

வேதையென்ற நிமிளையிலேவீரம்பூரம் வேதித்து சாரத்தின்மேலேயப்பி - காதையென்ன கசிவெடுக்கும் மணலில் வைத்துக் கைமுறையாய் புடம் போட கட்டிப்போமே - பாதையிலே சாரத்தில் வீரங்கூட்டிப் பாகாக வெண்கருவாலரைத்துக்கட்டி - நாதையென்ற கரியோட்டி லூதச்சுன்னம் நவாச்சாரமாடுகிற ஆட்டைப்பாரே 633

பாரப்பா வாதமொடு காயசித்தி பரிவான அஞ்சனமும் வசிய மொடு - நேரப்பா யெட்டெட்டு மிதிலேயாடும் நிலேகண்டோ ராருமி ல்லே யானுங்காணேன் - போரப்பா யேமவித்தை மலேபொன்னுகும் பொற்குடத்துக் கதிகமென்ற குடமுமுண்டோ - சாரப்பா சாரத்தை த்தொட்டு ஆடித் திகைத்தார்கள் நாதாக்கள் சித்தர் தானே 634

## சாரச்சுன்னத்தால் துருசுச்சுன்னம்

சித்தானசாரத்திற் புனுகுவீரம் சேர்த்தல்லோ மத்தித்துத் துரி சிக்கப்பி - மத்தான சுக்கானும் ஐங்குகையிலூத வாய்திறக்கப் போ தாது கண்டருடசுன்ன - முத்தான சுன்னமென்பார் ஆதிகுருவென் பார் மூதண்ட பரிசத்திற் பாணியென்பார் - மத்தான சிவனென்பார் பரனென்பார் பாய்கிறதோர் வேகமது பார்கொன்னுதே 635

பார்கொன்னு துரைகோடி சுன்னங்கோடி பறக்கிறதோர் குளிகைமுதற் சரக்குகோடி - நாக்கொன்னு செந்தூரங் களங்கங் கோடி நலமான குருகோடி மெழுகுகோடி - வாக்கொன்னுஉருக்கின மும் நீற்றினமுங்கோடி வாகான சிங்கியிதில் கோடாகோடி தாக்கொ ன்னு வாதமெல்லா மிதற்குள்ளாச்சு சாரமென்ன தங்கமொடு சூதம் ரெண்டே 636

## தங்கம் என்பது கோஜம் ரசம்என்பது பீஜம்.

ரெண்டென்ன கோசமொன்று பீசமொன்று நேரானவாசியொ ன்று மனந்தானென்று - பண்டென்ன சத்தியொன்று சிவந்தானெ ன்று பாரப்பா நாதமொன்று விந்துவொன்று - விண்டென்ன குரு வொன்று சீஷனென்று வேதாந்த சித்தாந்தமானதொன்று - கண்டெ ன்ன ரவிமதியாய் நின்றதொன்று காட்டுமேதுரிசுபுட குளிகைதானே

துரிசியினற் கட்டியதோர் சூதந்தன்னேச் சுகமாகசெந்தூரக் களங்கஞ்செய்தால் - பரிசியினல் வேதைமுதல் தூமவேதை பண பேதி க்ஷணபேதி சத்தபேதி - தருசியின லேபனமுஞ் சந்தானபேதி சமரசமாய் கர்மங்களெட்டுமாடும் - பரிசியின லிதற்கெல்லாங் குருவென்ற நாமம் வாதத்துக்காதி யிந்தத்துரிசுதானே 638

## துரிசு சுன்னத்தால் தங்கம் சுன்னம்.

தானென்ற துரிசியிலே புனுகுவீரம் தாக்கியல்லோ தங்கத்தின் மேலேபூசி - கானென்ற புடம்போட தங்கச்சுன்னம் காயசித்தாம் லோகசித்தாம் கவனசித்தாம் - மூனென்ற புனுகுபட்டால் நீற்றின மோகோடி யுத்தமனே ஜவ்வாதுபட்டால் உருக்கினமோகோடி - வே னென்ற தொவ்வொன்றில் கவரோகோடி வேதையென்ற குருவெல் லாம் வெளியாய்ப் போச்சே 639

## சுன்ன குரு உருக்கின குரு.

வெளியாகச் சொல்லுகிறேன் கருவையெல்லாம் விளங்கியதோர் சுண்ணும்புக்காதி கேளு - அளியாகப் புனுகோடு சினம்வீரமப்பனே சவுக்காரச் சுன்னந்தானே - நெளியான உருக்கினத்தைச் சொல்லக் கேளு நேரானவெண்காரம் ஜவ்வாதுவீர - மொளியான ரெங்கிட் டால் உருக்கினதுத்தக்காதி யுத்தமனே குருக்கிடையை யுரைக் கிறேனே (ரேங்கு என்பது சத்தி என்ற பூநீர் இது உருக்கினச் சரக்கு)

## பரிசுன்னம் வேதை முடிவு குருக்கிடை.

உரைக்கிறேன் பரிச்சுன்னம் வீரங்கூட்ட யுத்தமனேசிவப்பாகு மதிலேகேளு - நிரைக்கிறேன் லிங்கமொடு காரங்கூட்டி நேராக மத் திக்கக் குருக்கிடையு மாச்சு - திரைக்கிறேன் வாதமென்ற புவனந் தன்னை ஜெகமெல்லாம் சொர்ணமய மாக்கலாகும் - நரைக்கிறேன் என்றசொல்லும் வீணாய்ப்போகும் நமனென்ற பேரெல்லாம் பொய்யு மாமே. 641

## தங்கச்சுன்னம் பூரணத்தைக் காட்டும்.

வாசியை அடக்கி நிறுத்த சரீரத்திற்கு பலத்தைக் கொடுக்கும் R. M. K.

பொய்யாகுஞ் சாபமப்பா சமாதியிலே நின்று புகழான பறிக் குருவைத் தின்றாயானல் - மெய்யாகுஞ் சமாதியுற்றால் பூரணத்தைக் காட்டும் வேறு மனமாணுக்கால் மாயைமூடும் . தையாகும் நித்தமது குருபதத்து மேலே சாதகமா யிருந்துரைத்தா லவனே வாதி - கை யாகு முந்திமுந்தி வாசியிலே கூடு காணுமே மூலத்தி னொளியுந் தானே 642

## பரிநீர் சூதக்கட்டு.

ஒளியோடே சென்றுக்கா லாறுதலங் காணு முத்தமனே மதி யுடைய வமுர்தஞ் சிந்தும் - நெளியோடே சென்றேற வுன்மனையைக் காட்டும் நிலையாத மனமங்கே நிலைத்துப் போகும் - வெளியோடே வெளிகலக்க நிருவிகற்பமாகும் வேதாந்தஞ் சொல்லுகிற முறைதா னப்பா வழியோடே யிதற்கல்லோ வாதஞ் சொன்னர் மகத்தான சின்மயமா மூற்றிதானே 643

## தங்க செயநீரில் ரசமணி.

தானென்ற பறிச்சுன்னத் துள்ளேயப்பா சாதகமாய்சாரமிட்டு யாட்டநீராம் - வானென்ற சூதமிதில் விட்டுக்காச்ச மகத்தான கட் டாகுஞ் சூதராசன் - வேனென்ற யிச்சூதங் குளிகைக்காகும் விளங் கியதோர் சொரூப முதற்கமலினியுமாகுந் - தேனென்ற அட்டமா சித்தியாகுஞ் செகச்சால மத்தனையு மிதினலாச்சே 644

## சூதச்சுன்னம்.

ஆச்சப்பபா யிச்சூத குளிகைமேலே அப்பனே புனுகோடு வீரம் பூரம் - ஒச்சப்பா சீனமொடு சவுக்காரச் சுன்ன முத்தமனே மத்தித்து மேலே பூசிப் - பாச்சப்பா அஞ்சுசுன்ன குகையினுள்ளே பாங்காக வூதிடவே சுன்னமாகும் - வாச்சப்பா யிச்சுன்னங்கழஞ்சி தூக்கி வாகாக நாலிடையாம் பரியிற்போடே 645

போட்டுருக்கி மணியாக வாங்கிக்கொண்டு புகழாக யிதுமேலே புனுகு சீனம் - நாட்டுகைக்கு யிதிேைடு வீரம் பூரம் நலமான சவுக் காரச் சுன்னத்தோடு - மூட்டுகைக்கு மணிமேலே பூசி நன்றாய் மூதண்ட யேழு சுன்னக் குகையிலிட்டு - நீட்டுகுகைக்கு கிழ்மேல் உப்போடு சுண்ணும்பிட்டு நேராகக் கெசபுடமாய்ப் போடு போடே

## பறிசூதச் சுன்னம்.

புடம்போடு யீசானம் பூசை பண்ணு புகழ் பெரிய சூதமொடு பறியோ சுன்னம் - குடம்போட்டு யிறைக்கிறதோர் வாருதியைப் போல் குறையாது கவர்கோடி யாடினலும் - தடம் போட்டு தட மெடுத்து ஆடலாகுஞ் சாதகமாய் வட்டிலுக்கு துறையோயுண்டோ சொல்லிடமற்ற அகண்டத்தில் மனமடங்கிப்போனு லேமமென்ற வாதவித்தை யிதற்குள்ளாச்சே 647

இதற்குள்ளே வரவேணு மெத்தனை தான்செய்தும் யெடுத்தெடுத்த நூல்முறையுங் காலமுறையுமப்பா - இதற்குள்ளே வேதைசொல்வார் நாதாக்களெல்லா மிதைவிட்டால் வாதமுண்டோ யெங்காணுலு மிதற்குள்ளே காயசித்திகுளிகைசித்தி ஏமமுதலாகிநின்ற வட்டாங்கசித்தி - இதற்குள்ளே யடங்கிற்று மரபு நூலெல்லா மிவ்வரையிற் றுனேரி பாருபாரே 648

பாரென்ற பறிக்குருவிற் சுன்னஞ் சங்கம் பாங்கான யுருக்கினமோ யன்ந்தங் கோடி - நிரையென்ற மெழுகு முதற் செந்தூரங்கள் நேரான குருவோடு சுளங்கோ் சங்கம் - நரையென்ற யிதின்கீழே மற்றதெல்லாஞ் சொல்லுகிற கவரெல்லா மிதற்குள்ளாச்சு விரையென்ற வித்ததுவே சுன்னமானல் வேதை சொல்ல முடியாது விசும்பியாடே 649

## வாதத்துக்கு விதை என்பது தங்கம்.

விசும்பினதோர் பொன்போலே வெள்ளி பண்ணு வேதையிட்டால் மலைகளெல்லாம் வெள்ளியாகும் - உசும்பினதோர் பொன்போலே அண்டாண்டம் வெள்ளி வோடுகிற வேதை சொல்லவுறைகொள்ளாது - அசும்பினதோர் கவரொன்றிற் சங்கமோடு மடுத்தடுத்துத் தொந்தத்தா லனந்த மோடும் - வசும்பினதோர் மாத்தேது வென்றுயானல் வகையாகச் சொல்லுகிறேன் கேளுகேளே 650

## 1008–மாத்துத்தங்கம் மெழுகு போல் மெதுவாயிருக்கும்.

கேளப்பா சிலநூலிலே ஐநூறென்பார் கெடியாகச் சிலநூலிலாயிரமாத்தென்பார் -வாளப்பா சிலநூலில்இங்நூற்றென்பார் மகத்தான மரபினுள்ள நூல்களெல்லாம் - நீளப்பா யெங்நூலிலாயிரத்தியெட்டு நேரான வர்ணமென்ன செம்புவர்ணம் . வேளப்பா மெழுகதுபோ லகுவுமாகும் விரைந்தூத விரைந்தூத லகுவுமாமே 651

## 1008–மாற்று தங்கம் லேசாயுருகாது.

லகுவாக வுருகாது மேருவுக்கு வொப்பு நாலுமுகந் துருத்தியிட்டு ஊதினுலுந் - தருவாக வெள்ளி செம்பிற் தனித்தாயானுற் தாழ்ந்தல்லோ பத்தாகப் பசும்பொன்னுகும் - வெகுவாக வெள்ளி செம்பு கூட்டவேணும் வேதையென்ன மாத்தடங்காப் பசுமையாகும் நகுவாக மாத்தினிட விபரம் சொன்னே நாதாந்த சின்மயமாங் குருவின் சொல்லே 652

## ஆர். எம். கே. அனுபவ முறை.

# அண்டச் சுன்னம் செய்யும் விதம்.

அண்டம் என்பது இந்த இடத்தில் கோழிமுட்டைத் தோடுதான்.

## முட்டைத் தோடு சுத்தி செய்யும் விதம்.

ஒரு படி அமுரியில் சுண்ணும்பு பூநீர் வகைக்கு 3-ரூபாய் எடை போட்டு கலக்கி அதில் வேண்டிய கோழிமுட்டைத் தோடுகளை போட்டு மூடிக் கொதிக்க வைக்கவும் எண்ணை கக்கி சுத்தியாகி கட்டிவிடும். ஷை முட்டைத் தோடுகளில் கோரை என்றும் ஜவ்வு என்றும் இரண்டு உண்டு. அவைகளெல்லாம் இதில் தானே வெந்து கரைந்து விடுகிறது. பின் இடித்து வெண் கருவிலரைத்து வில்லை தட்டவும்.

வேறுமுறை:- பூநீரையும் சுண்ணும்பையும் ஜலத்தில் கலக்கியும் அண்டத்தோட்டை வேகவைக்கலாம் ஆனால் அதில் சவ்வுகரையாது. கொதிக்க வைத்து கழுவி இறக்கியதும் சவ்வை உரிக்க, சிலதில் வரும், சிலதில் வராது. உலர்த்தினால் சவ்வு உருண்டு உப்பி விடும். பின்பு அதை உரிக்க வேண்டும். இவ்வளவு கஷ்டம் இருப்பதால் அமுரியிலேயே சுத்தி செய்துவிட்டால் ரெம்ப நயமாயிருக்கிறது. முட்டைத் தோட்டுக்கு மேல் அமுரி மிதக்க விட வேண்டும்

# நான் முப்பு முடிக்க பூநீர், சுண்ணும்பு, அமுரியில் கலக்கி தீக்ஷை செய்யும் போது உண்டான அனுபவங்கள்.

அமுரி பூநீர் சுண்ணும்பு மூன்றையும் சேர்த்த பிறகு
கையால் கலக்கக் கூடாது. குச்சியால் கலக்கவும்.

கலக்கினால் பேதியாகும் மயக்கம் வரும் அதைத் தாங்க முடியாது. அவ்வளவு அபாயகரமுள்ளது! அடியேன் ஒரு சமயம் கையால் கலக்க பத்துத்தடவை பேதியாகி மயக்கம் வந்துவிட்டது உடம்பெல்லாம் எரிச்சலுண்டாகி விட்டது. நூறு குடம் ஜலம் தலையில் விட்டும் எரிச்சலும் பேதியும் நிற்க வில்லை (விடக்கெல்லைக் கோல்வதற்கு வெண்கரு வொன்றே போதும்) என்று என் மனதில் உதித்தது. உடனே கோழிமுட்டையைக் கொண்டுவந்து வெண் கருவை மட்டும் ஒரு டம்ளரில் விட்டு சாப்பிட தொண்டையில் சுண் ணும்பு நாற்றம் வந்தது. கையில் கலக்கிய சுண்ணும்பின் வேகம் சரீர

மெங்கும் வியாபித்து விட்டதாகத் தெரிகிறதே என்று இதை பரீக்ஷிக்கும் பொருட்டு மஞ்சளை அரைத்து வாயில் போட்டு துப்ப ரத்தம் போல் சிவந்து விட்டது. வாயைக் கொப்பளித்து விட்டு பின்னும்ஒரு வெண்கருவை சாப்பிட பூரா மயக்கமும் தீர்ந்து விட்டது முதலில் சாப்பிட்டவெண்கரு ஒன்றினாலேயே மயக்கம் உடனே மாறிவிட்டது ஆகையால் கையினால் கலக்க வேண்டாம்

## இப்படி சுத்தி செய்த அண்டத்தோட்டை
## சுன்னம் செய்யும் விதம்.

ஒரு சரக்கைச் சுன்னம் செய்ய வேண்டுமானால் சத்துருவால் கொன்று மித்துருவைச் சேர்த்து எழுப்ப வேண்டும் என்று சாஸ்திர மிருக்கிறது. கோழிமுட்டைத் தோட்டுக்குச் சத்துரு கோழிமுட்டை வெண்கரு என்று சாஸ்த்திர மிருப்பதால் ஷெ அண்டப் பொடியை வெண்கருவில் அரைத்து சிரு வில்லைகளாகத் தட்டி ரவியில் உலர்த்தி சிரு சட்டியில் வைத்து மேல் சட்டி மூடி மூன்று சேலைமண் செய்துலர்த்தி ஒரு துருத்தியால் 2-மணி நேரம் ஊத வேண்டும். அப்படியே ஆற விடவும் சாயந்திரம் எடுக்கவும் ஆறுவிடில் மறுநாட் காலையில் எடுத்து பத்து ரூபாய் எடைக்கு ஒரு ரூபாய் எடை வீரம், ஒரு ரூபாய் எடை பச்சைக்கற்பூரம் கொஞ்சம் புனுகும் சேர்த்து முன் போல் வெண்கருவில் அரைத்து 5-தபா ஊத வேண்டும்.

இப்படி ஒவ்வொரு புடத்திற்கும் சேர்த்து அரைத்து அரைத்து ஊத அண்டம் கடுஞ் சுன்னமாகும்.

சுன்னமானதற்கு பரீட்சை:- இதில் வீரத்தைச் சேர்த்தரைக்க ஆட்டு ரத்தம் போல் சிவக்க வேண்டும். சிவக்காவிடில் முன்போல் வீரம் பூரம் புனுகு சேர்த்து வெடியுப்புச் செயநீரில் அரைத்து உலர்த்தி சுண்ணாம்புப் பொடியில் வைத்து ஊத அண்டம் கடுஞ்சுன்னமாகும் இதில் வீரத்தைச்சேர்த்தரைக்க குருவி ரத்தம்போல் சிவந்து விடுகிறது. இந்தச் சுன்னம் கடுங்கார செயநீருக்குச் சேர்க்கவேண்டும்

## பஞ்ச சுன்ன குகைக்கு சிப்பிச் சுன்னம்
## வகையறா செய்யும் விதம்.

இதே மாதிரி முத்துச் சிப்பித் தோட்டுகளையும் கும்பிடு கிளிஞ்சித் தோட்டுகளையும் நத்தைத் தோட்டுகளையும் சங்கையும் கடல் நுரையையும் மேல் கண்ட விதமே சுத்தி செய்து மேல்கண்டபடியே ஊத கடுஞ் சுன்னமாகும்.

ஆர், எம். கே. வேலுசாமி,

வைத்திய ஆசிரியர், பழனி.

## கல்லுப்புச் சுன்னம்.

621-வது பாட்டுப்படி கல்லுப்பை புடமிட்டும் கடுங்காரச்சுன்ன மாகாவிடில் அடியில்கண்டபடி செய்யக் கல்லுப்பு என்ற பாரையுப்பு கடுங்காரச் சுன்னமாகும். R. M. K.

---

## ஆர். எம். கே. நோட்.

ஒரு சரக்கை சுன்னம் செய்வது எளிதல்ல
அடியில் கண்ட கைபர்கங்களும் தெரிந்திருக்க
வேண்டியதிருப்பதால்
நமது அனுபவத்தை இங்கு எழுதுகிறோம்.

ஒரு சாஸ்த்திர முறைப்படி பஸ்பம் செய்த ஒரு சரக்கை சுண்ணும்பாக்க வேண்டுமானல் 621வது பாட்டுப்படி 'செய்த பாரையுப்பை கடுங்கார செயநீரில் நனைத்து நனைத்து 3-நாள் ரவியிலிட்டு அதாவது பாரையுப்புச்சுன்னம் 10-ரூ. எடைக்கு இந்நூல் 22-வது பக்கமுள்ள கோடாசோரி வீரம்1-ரூ. எடையும் இந்நூல்ப்படி செய்த சவுக்காரச் சுன்னம் 1-ரூ. எடையும் பச்சைக் கற்பூரம் 1-ரூ. எடையும் புனுகு கால் ரூ. எடையும் பாரையுப்புடன் முதலில் மட்டும் சேர்த்து (வெடியுப்புச் செயநீரிலாவது சட்டமுனி நிகண்டு 1200-லுள்ள வெடியுப்பு செயநீரிலாவது, கடுங்கார செயநீரிலாவது) அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அதன்மேல் சவ்வீரம் சீனம் பூநீர் பச்சைக் கற்பூரம் வகைக்கு ஒரு ரூ. எடை புனுகு 4-குண்டுமணி எடை. முப்பு அல்லது சவுக்காரச் சுன்னம் ஒரு குண்டுமணி எடை இந்த6-ம் கடுங்கார செயநீரல் அரைத்து வில்லை உப்புக்கு மேலே பூசி பஞ்சசுன்ன குகையிலிட்டு பூநீரும் சங்குச் சுண்ணும்பும் சமஎடை நிறுத்து கோழிமுட்டை வெண்கருவில் அரைத்து துணியில் கனமாய்ப் பூசி 3-சீலை செய்து உலர்த்தி அடியில்கண்ட சேர்க்கைமண்ணில் 7-சீலைமண் செய்து உலர்த்தி ஒரு துருத்தியால் ஊதவும் அரைமணி நேரத்துக்கொரு முறை திருப்பித் திருப்பி வைத்து 10-ரூ. எடை மருந்துக்கு 2-மணி நேரம் ஊத வேண்டும். அப்படியே மூடி ஆரவிட மறுநாள் காலையில் ஆரிவிடும். பின்பெடுத்து இந்தப்படி கடுங்கார செயநீரல் அரைத் தரைத்து 5-தரம் ஊத கடுஞ்சுன்னமாகிவிடும். ஆனல் 5-தடவையும் மருந்துடன் சவுக்காரச் சுன்னம்சேர்க்க வேண்டியதில்லை 1 தரம் சேர்த்ததே போதும்.

பாக்கி 4-தரமும் கோடாசோரிவீரம் பூரம் புனுகு சேர்த்து கடுங்காரசெயநீரல் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அதன்மேல் சவ்வீரம் சீனம் பூநீர் பச்சைக் கற்பூரம் வகைக்கு ஒரு ரூ. எடையும் புனுகு 4-குண்டுமணி எடையும், சவுக்காரச் சுன்னம் ஒரு குண்டு

மணி எடையும் சேர்த்து, கடுங்கார செயநீரில் அரைத்து ஷெ உப்புக்குப் பூசி உலர்த்தி பஞ்சசுன்ன குகையிலிட்டு பூநீரும் சங்குச்சுண்ணாம்பும் முன்போல் சேலை செய்து முன்போல் வஜ்ஜிர கவசமும் செய்து உலர்த்தி மேல்கண்டபடி ஊதவும்.

சகல மருந்துகளும்

## சுன்னமானதற்கு பரீட்சை.

ஊதிய மருந்தில் வீரத்தை சேர்த்தரைக்க ஆட்டு ரத்தம்போல் சிவக்க வேண்டும். சிவக்காவிடில் சிவக்கும் வரை பாறையுப்புடன் ஷெ மருந்துகளை சேர்த்து வெடியுப்புச் செயநீரால் அரைத்தரைத்து உலர்த்தி மேல்கண்டபடி மேல்மருந்தும் வெடியுப்புச் செயநீரால் அரைத்துப் பூசி பஞ்சசுன்ன குகையில் வைத்து பஞ்ச சுன்னத்தால் மேல் மூடிசெய்து மூடி, சந்து பொருத்துகளுக்கும் பஞ்ச சுன்னத்தை அப்பி பூநீரும் சங்குச் சுண்ணாம்பும் சமஎடை நிறுத்து சுண்ணாம்பு தெளிந்த ஜலத்தில் அரைத்து துணியில் கனமாய்த் தடவி 3-சேலை செய்து உலர்த்தி அதன்மேல் வஜ்ஜிரகவசம் அரை இஞ்சு கனம் அப்பி, உலர்ந்த பின் ஷெ மண்ணால் 7-சேலைமண் செய்து உலர்த்தி ஒரு துருத்தியால் அரை மணி நேரத்திற்கு ஒரு தரம் திருப்பித் திருப்பி வைத்து ஊத வேண்டும். ஷெப்பு கடுங்காரச்சுன்னமாகிவிடும. வீரத்துக்கு சிவந்தால் மருந்து முடிந்து விட்டது என்றறியவும். சிவக்காவிடில் சிவக்கும்வரை வெடியுப்புச் செயநீரால் முன்போல் மருந்துகளைச் சேர்த்து அரைத்து உலர்த்தி மேல்மருந்தும் முன்போல் பூசி முன்போல் சேலை செய்துஊதவும்

சில மருந்துகளை சிலசமயம் சுண்ணாம்பில்வைத்து ஊதவேண்டியிருக்கிறது. முன்போல் மருந்துடன் சேர்க்கவேண்டிய மருந்துகளை சேர்த்து முன்போல் மேல்மருந்தும் பூசி உலர்த்தி ஒரு சட்டியில் சுண்ணாம்பு வைத்து நடுவே ஷெ மருந்தை வைத்து மேல்சட்டி மூடி 7-சேலைமண் செய்து உலர்த்தி ஊத வேண்டும். ஊத்துத்தாங்காமல் மண்சட்டி இளகிவிடும்.

## அதற்காக வஜ்ஜிர கவசம் செய்யும் விதம்.

களிமண் 12-பலம், உமிக்கருக்கு 6-பலம், வெங்கக்கல் பொடி 2-பலம், பழையதுணி சுட்ட சாம்பல் 2-பலம், உலர்ந்த கழுதை லத்தி 2-பலமாக நிறுத்து ஜலம் விட்டரைத்து சட்டிக்கு மேல் அரை இஞ்சு கனம்அப்பி அதன்மேல் இதையே 7-சேலைமண் செய்து உலர்த்தி ஊதினால் சட்டி உருகாது. ரசமணி சாரணைக்கும் இதில் குகை செய்துகொள்ளலாம் உருகாது கிழியாது.

சட்டமுனி நிகண்டு 1200-ல் இந்தக் குகை சொல்லப்பட்டிருக்கிறது

## வாதம் சித்திக்க பஞ்ச சுன்ன குகை.

### இதை விட்டால் வாதம் என்கிற பேச்சே இல்லை என்று ஷை 3-சித்தர்களும் சொல்லி யிருக்கிறார்கள்.

பஞ்ச சுன்ன குகையை வெண்கருவில் அரைத்து குகையும் மூடியும் செய்துலர்த்திக் கொள்ளவும். அல்லது சுண்ணாம்பு தெளிந்த நீர் விட்டும் அரைக்கலாம்.

சுன்னம் செய்ய வேண்டிய மருந்தை சுண்ணாம்பில் வைத்து ஊதுவதை விட அகஸ்தியர் அமுர்த கலைக்கியானம் 1200-லுள்ள பஞ்ச பூதக்குகை என்ற பஞ்ச சுன்ன குகையிலாவது, போகர் 700-லுள்ள பஞ்ச சுன்ன குகையிலாவது, அகஸ்தியர் திருவகம் 800-லுள்ள பஞ்ச சுன்ன குகையிலாவது, கொங்கணர் 3000-த்திலுள்ள பஞ்ச சுன்ன குகையிலாவது, மருந்தை வைத்து ஊதுவது தான் வாதத்திற் காகும். சுண்ணாம்பில் வைத்தூதுவது வைத்தியத்திற் காகும்.

இந்தப்படி 5-தடவை ஊதினால் சகல சரக்குகளும் கடுங்காரச் சுன்னமாகி விடும். சுன்ன மென்றால் வீரத்துக்குச் சிவப்பதுடன் ஊசியைப் போட்டால் உள்ளே நுழைய வேண்டும். அவ்வளவு மெதுவாய் பூப்போல் நீற்ற வேண்டும் கெட்டியாக விருந்தால் மருந்தின் மேல் பூசும் சரக்குகளில் பூநீரை மட்டும் நீக்கிப் பூசவேண்டும்.

### துருத்தி, தீயின் அளவுக்கு சட்டம். கைபாகம் கவனி.

சுன்னத்துக்கு துருத்தி 1. உருக்கினத்துக்கு துருத்தி 2. சத்தெடுக்க துருத்தி 4. ஊத்துமுறை வரிசை தப்பில் சுண்ணாம்பு கருத்துப்போகும். சத்துகள் கறடு கட்டும் என்று போகர் 700-ல் சொல்லப்பட்டி ருக்கிறது. கொங்கணர் 3000-த்தில் ஊதவும் தெரியாவிடில் ஊமை போலிருந்திடாயே! ஊதிய சுன்னம் முதல்த்தரம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## வெடியுப்புச் செயநீர் முடிந்ததற்கு பரீட்சை.

வெடியுப்புச் செயநீரில் சவ்வீரத்தை நனைத்தால் ஆட்டு ரத்தம் போல் சிவக்க வேண்டும். அப்படியுள்ள வெடியுப்புச் செயநீரில் தவறாது சுன்னமாகிறது.

வேங்கைப் பட்டையால் கட்டிய வெடியுப்புச் செயநீரில் வீரம் ஆட்டு ரத்தம்போல் சிவக்கிறது. இது ஒரு அனுபவம்.

மருந்துக்கு கீழும் மேலும் வைக்கும்
சுண்ணாம்பு என்பது:—
கல்ச்சுண்ணாம்பில் ஜலம் தெளித்து நீற்றியது.

சுக்கான்கல் சுண்ணாம்பு, அல்லது வெள்ளைக்கல் சுண்ணாம்பு, அல்லது ஓடக்கல் சுண்ணாம்பும் ஆகும். இது கிடைக்காத இடங்களில் சமுத்திரத்திலுள்ள பலவித சங்குகளை நீற்றிய சங்குச் சுண்ணாம்பாவது முத்துச்சிப்பிச் சுண்ணாம்பாவது ஆகும்.

## கடுஞ் சுன்னம் செய்முறை.

வீரத்திற்குச் சிவக்கும்படியான சுன்ன முறைகள் நமது அனுபவத்தை முன் எழுதினோம். அகஸ்தியர் 800-ல் கடுஞ்சுன்னம் செய்முறைகளையும் சில சமயங்களுக்கு உபயோகிக்கவேண்டியதிருப்பதால் அவைகளையும் வாதி, வைத்தியர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு இங்கு எழுதப்படுகிறது.

வீரத்திற்குச் சிவக்கும்படி ஒரு சுன்னம் செய்யவேண்டுமென்றால் அகஸ்தியர் திருவகம் 800-ல் 128 பக்கம் பூநீரும் சங்கு நீரும் சமனாகக்கூட்டி அரைத்து பொடியாக்கி துருசு முதல் காரசார சரக்கோடு தங்கமுதல் நவலோகங்களுக்கு முப்பு பூசி உலர்ந்த பின் இப்பொடியை கீழ்மேல் வைத்துப் புடமிட கடுஞ் சுன்னமாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஊதிய சுன்னம் உயர்ந்த முதல்த்தரம் என்று கொங்கணர் 3000-த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூநீர் 5, சங்குசுண்ணம் 5, வீரம் 1, வெள்ளைப்பாசாணம் 1-ம் சேர்த்து கடுங்கார செயநீரால்லரைத்து சுன்னமாக்க வேண்டிய மருந்து கட்டிக்கு பூசி உலர்த்தி பஞ்சசுன்னக்குகையிலாவது சுண்ணாம்பிலாவது (சங்குச் சுண்ணாம்பும், பூநீரும், சமன்கலந்த பொடியிலாவது) வைத்து ஊதவேண்டும் என்று பல சாஸ்த்திர ஆராட்சியினாலும் நாம் தெரிந்து செய்த அனுபவ முறைகளை பரோபகாரமாகவும் இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,
சித்த வைத்தியர், பழனி.

# முன்சொன்ன சவுக்காரச் சுன்னம் காரமேற்றும் விதம்

இதில் 11-வது பக்கமும் கடுங்கார செயநீர் சொல்லப்பட்டிருப்பதில் கல்லுப்புச்சுன்னம் போடு என்பதற்கு சுக்கான்கல்சுண்ணும்பே சேர்க்கவேண்டும்.

---

சவுக்காரச் சுன்னம் செய்யும்போதும் சவுக்காரத்தை கடுங்கார செயநீரில் நனைத்து நனைத்து 10-நாள் ரவியிலிட்டு முறைப்படி புடமிட கடுங்காரச் சுன்னமாகும் இதை சட்டமுனி 10-நாள் என்று தெளிவாய்ச் சொல்லாமல் மறைத்துவிட்டார். நாம் பல சாஸ்திர ஆராய்ச்சியிலிருந்தும் போகர்700-ல் 10-நாள் சவுக்காரத்தை நனைத்து நனைத்து ரவியிலிடச் சொல்வதாலும் வைத்தியர்கள் மீது இறக்கம்கொண்டு நாம் கண்டுபிடித்து செய்த உண்மைகளை லோகோபகாரமாக இங்கு எழுதப்பட்டது. ஆர். எம். கே.

## வாதிகளே கவனியுங்கள்.

நவலோகச் சுன்னம் வெடியுப்புச் சுன்னம் நவாச்சாரச் சுன்னம் இந்துப்புச் சுன்னம் பச்சைக்கற்பூரச் சுன்னம் சீனம், சூடம், கல்லுப்பு, துருசு முதல் காரசாரம் பாஷாணம் உபரசங்கள் சுன்னம்செய்ய வேண்டுமானுலும் சகல சரக்குகளையும் கடுங்கார செயநீரால் நனைத்து 7-நாள் ரவியிலிட்டு அம்மருந்துடன் வீரம் பச்சைக் கற்பூரம் புனுகு முப்புவும் சேர்த்து கடுங்காரசெயநீரால் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அதன்மேலும் முன் எழுதியபடி மருந்துகள் பூசி உலர்த்தி பஞ்சசுன்னக் குகையிலிட்டு பூநீரும் சிங்குச் சுண்ணும்பும் சமஎடைவெண்கரு அல்லது சுண்ணும்பு தெளிந்த ஜலம் விட்டு அரைத்து துணியில் கனமாய்ப் பூசி 3-சேலை செய்து உலர்த்தி வஜ்ஜிர சேலை மண்ணில் 7-சேலை மண் செய்தும் ஊதவும். இப்படியே கடுங்கார செயநீரில் 3-தடவையும், வெடியுப்பு செயநீரில் 2-தடவையும் ஊத வேண்டும். சகலமும் கடுங்காரச் சுண்ணும்பாகிவிடும்.

ஆர். எம். கே. வேலுசாமி, பழனி.

# கோரக்கர் விதைத் தைலம்.

## லிங்கக் கட்டு:

சொல்லாக வித்துவகைத் தைலஞ்சொல்வேன் சுந்தரமே யானந்தா சொல்லக் கேளு. நல்லாக கோரக்கர் மூலிவித்து நலமாக படிரெண்டு பிடித்துக்கொண்டு நல்லாகக் கட்டியதோர் காரசாரம் நலமான லவணமொடு சவுக்காரச்சுன்னம் வில்லாக வகை வகைக்கு பலம் தான் கூட்டி விதமாக பெருக்கம்பால் விட்டு ஆட்டே 653

## தங்க லிங்கச் சுன்னம்.

ஆட்டி நன்றாய் காசுபோல் வில்லைதட்டி யப்பனே கலயத்திற் போடு நன்றாய் - நிறைத்துமே தமர்போட்டு பூப்புடத்தினுள்ளே நேர்பாகத் தைலத்தை வாங்கு வாங்கு - விரைந்து நன்றாய் இத் தைலம் லிங்கத்துக்கு மேலிமையாய் நாலிடைதான் சுருக்குப் போட தரைத்துநன்றாய்க் கட்டிப்போம் லிங்கந்தானும் தாக்கப்பா ரெண்டிடையாந் தங்கத்தொன்றே 654

தங்கமொடு லிங்கமது சேர்ந்து ஆடில் சாதகமாய்க் குருவாகுஞ் சுன்னமாகும் - தங்கமொடு லிங்கமுண்ண காயசித்தியாகும் சாவு பொய்யாய் நரையோடு திரையும் போகும் - தங்கமொடு லிங்கமிட்ட மணியை வாங்கி தாக்கப்பா நாகத்திற் பத்துக்கொன்று - தங்கமுண்ட நாகத்தை செந்தூரம் பண்ண சகத்திரத்தைத் தொட்டோடும் வேதை தானே 655

## கெவுரிக்கட்டு செந்தூரம்.

வேதையிந்தப்படியாட கெவுரிகட்டும் விளங்கியதோர் கெவுரி தன்னை தங்கத்திலூட்டு-போதையிந்த கெவுரிதன்னைக்காரீயத்தூட்டு புகழாக செந்தூரம் பண்ணித் தீர்த்து - மாதையென்ற நவலோகம் நூற்றுக்கொன்று மாட்டினாற் தங்கமுமா மைந்தா கேளு - காதையென்ற கெவுரியுட வேதையோட்டம் கைவிட்டசூத்திரம்போலாடுந் தானே 656

## வெள்ளைக்குரு.

ஓடுமே வெள்ளையைத் தானிப்படியே கட்டி யுத்தமனே வங்கமது ரெண்டுக்கொன்று - போடுமே யிதையெடுத்து வெள்ளி ரெண்டிலீந்து புகழாக அந்திடைக்குச் சூதமிட்டாட்டி நாடுமே வில்லை தட்டி ஐங்குகையில் வைத்து நலமாகப் புடம்போட குருவுமாகும் நீடுமே யிக்குருத்தான் வங்கமிரண்டில் நேராக ஐநூற்றுக்கொன்று போடே 657

போட்டாக்கால் வெள்ளியுமாம் வங்கமிரண்டிற் புகழாக வெண் கலமு மிரும்புஞ் செம்பும் - நீட்டாக்கால் வெள்ளியுமாம் நூற்றுக் கொன்று நேராக வெள்ளியிதிற் கோடாகோடி - ஊட்டாக்காற் தாளகமுஞ் சிலையுமப்பா யுத்தமனே சுறுக்கிடவும் கட்டிப்போகும் - மூட்டாக்கால் முன்போலேதங்கத்தூட்டி மூதண்ட நாகத்திலெடுத்து தாக்கே 658

## தாளகம் மனேசிலைக்கட்டு.

தாக்கியல்லோ தாளகமும் சிலைவேறாகத் தனித்தனியே செந்தூரம் பண்ணித்திரு - நோக்கியல்லோ ஒவ்வொன்று முந்நூற்றுக்கோடும் நுகர்ந்துகொண்ட நவலோகம் பொன்னுமாகும் - மாக்கியல்லோ துறைதோருந் தங்கஞ்சூத மப்பனே மறவாமற் போடுபோடு- பாக்கியல்லோ கோரக்கர் வித்திளுட்டு படர்ந்துதப்பா வேதையொரு வித்துக்கேளே 659

## தில்லைத்தைலம்.

கேளப்பா தில்லையுட வித்துத்தானுங் கெடியாகப்படியிரெண்டு மிடித்துக்கொண்டு - வாளப்பா லவணமொடு காரசாரம் வாகான சவுக்காரச் சுன்னத்தோடு - நாளப்பா நாலினமும் பலந்தாநாலு நலமாக த்தான் கூட்டி - வேளப்பா சதிரக்கள்ளிப் பாலாலாட்டி விளங்கியிதைக் காசுபோல்வில்லை போடே 660

போட்டல்லோ வில்லைதட்டி கலையத்திலிட்டு பூப்புடத்தில்தைலமதை வாங்கிக்கொண்டு - மூட்டல்லோ முன்போலே லிங்கத்துக் கூட்டு மூதண்டத் தங்கமிட்டு முன்போலாட்டு - நீட்டல்லோ பாஷாண மிப்படியே கட்டும், நிரை நிரையாய்த் தங்கமிட்டு வேதை போடு - ஆட்டல்லோ தைலத்திற் சூதங்கட்டும் அப்பனே வெகுசுறுக்கு தில்லைதானே(லிங்கத்துக்கு நாலிடை தைலம் சுருக்கிடவும்) 661

## சதிரக்கள்ளித் தைலம்.

## பாஷாணம் கட்டும் நாகம் சூதம்கட்டும்

தில்லையைப்போற் சதிரக்கள்ளி வித்தைப்பண்ணு திறமான தைலத்திற் பாஷாணங் கட்டு - மெல்லையைப்போற் தங்கமிட்டு வேதையாடு மிழுத்ததெல்லாஞ் செந்தூரங் களங்கமாகு - மல்லையைப் போற் பொன்னதுவும் பத்தும்பத்தாம் பாங்கான செந்தூர மெழுகுமாகும் - நல்லையைப்போல் நடராஜ ரிருந்த விருட்சம் நாக முதல் சூதவரை கட்டுந் தானே 662

## தேவதாளித் தைலம்.

கட்டுதற்கு தைலமொன்று தேவதாளி கலந்த வித்துப்படி இரண்டுமிடித்துக்கொண்டு - ஒட்டுதற்குலவணமொடுகாரசார முத்த மனே சவுக்காரச் சுன்னத்தோடு - மட்டுதற்கு வகைவகையே பல மதொன்று வாகாக யெருக்கம்பால் விட்டு ஆட்டி - பட்டுதற்குக் காசுபோல் வில்லைதட்டி பாங்காகப் பூப்புடத்திற் தைலம் வாங்கே.

## சூதக்கட்டு பாஷாணக்கட்டு.

வாங்கியதோர் தைலத்திற் துருசுச் சுன்னம் வாகாக்க் கழஞ்சி யிட்டு வைத்துக்கொண்டு - வோங்கியதோர் பொட்டிட்டார்ச் சூதங் கட்டு முத்தமனேபாஷாண மெல்லாங் கட்டுங் - தாங்கியதோர்சரக்கு களிற் தங்கங் கூட்டச் சாதகமாய் நவலோகந் தங்கமாகும் - பாங்கி யதோர் தைலத்தி லிரும்பு முதலாடும் பரிவாகக் குளிகையுமாம் பாருபாரே 664

## வெண்குன்றித் தைலம்.

பாரப்பா வெண்குன்றி படிதானிரண்டு பாங்கான லவணமொடு காரசாரம் - நேரப்பா சவுக்காரம் பூரச்சுன்னம் நிரையாக வகை யொன்று கழஞ்சிரெண்டு - தூரப்பா மணிச்சாற் விட்டு ஆட்டி சொற்பெரிய காசுபோல் வில்லைதட்டி - சேரப்பா பூப்புடத்திற் தைலம்வாங்கி சிறப்பாக தைலத்திற் சுன்னங் கேளே 665

## சூதம் கட்டும் 64-பாஷாணமும் கட்டும்

கேளப்பா சாரமென்ற சுன்னந்தானுங் கெடிபாகக் கழஞ்சி யிட்டு வைத்துக்கொண்டு - நாளப்பா சூதத்திற் பொட்டுப் போட நலமான சூதமது கட்டிப்போகும் - சூளப்பா பாஷாணந் துவைத்து வாட்ட சோத்தியமா யறுபத்துநாலுஞ் சாகுந் - தாளப்பா தங்க மிட்டால் வேதை கோடி சரக்கொன்றிற் கவர்கோடி தாக்கியாடே

## வெண்புரசுத் தைலம்.

ஆடவே தைலமொன்று வெண்புரசம் வித்து யப்பனே படி ரெண்டு மிடித்துக் கொண்டு - நீடவே லவணமொடு கார சாரம் நேரானசவுக்காரச்சுன்னம் போட்டு - கூடவே யெருக்கம்பால்விட்டு ஆட்டி குறையாமற் காசுபோற் வில்லைதட்டி - ஊடவேபூப்புடத்திற் தைலம் வாங்கி யுத்தமனே துரிசியுட சுன்னம் போடே 667

## சூதம் கட்டும் பாஷாணம் கட்டும்.

போட்டதொரு தைலத்தைப் பொட்டு போட புகழான சூத மது கட்டிப் போகும் - நீட்டதொரு பாஷாணந் துவைத்து வாட்ட நிரைநிரையாய்க் கட்டிப்போ மெல்லாமப்பா - மூட்டதொரு தங்கத் தைக் கூட்டினுக்கால் மூதண்டங் கிழிந்தாடும் வேதை கோடி - பூட் டதொரு தொந்தித்தால் தொந்தமேறும் போக்கான தைலத்தின் வேதை தானே. 668

## ஏழு விரைத்தைலம்.

வேதைக்குத் தைலமொன்று சொல்லக்கேளு விளங்கியதோர் கருவூமத்தை பொன்னூமத்தை - மாதைக்கு வெள்ளைமுள்ளி மருளூ மத்தை மைந்தனே காக்கொாட்டான் கறுத்தகுன்றி - பேதைக்குத் தாழையுட வித்துங்கூட்டி போராக வகையொன்று பலமோ பத்து கோதைக்கு யேழுவித்து மிடித்து நன்ருய்க் கூட்டுகிற மருந்துயினி கூறுவேனே 669

கூறுவேன் லவணமொடு காரசாரங் குறிப்பான சவுக்காரம் பூனைகந்தான் - நாறுவேன் சிலையினேடு மாலின்றேவி யப்பனே கெந் தகமுங் நாபியோடு - தேறுவேன் வகையொன்று பலந்தானென்று சேர்த்திட்டு யெருக்கம்பாற் கள்ளிப்பாலு மாறுவே னரைத்து நன் ருய் வில்லை தட்டி வாகாக பூப்புடத்திற் தைலம் வாங்கே 670

## 7-விரைத் தைலத்தில் சூதக்கட்டும், 64-பாஷாணம் கட்டும், நாகம் கட்டும், வங்கம் கட்டும்.

தைலமதை சூதத்தில் விட்டுக் காய்ச்சு தாக்கப்பா துரிசியுட சுன்னஞ் சற்றே தைலத்தில் சூதமது கட்டிப்போகுஞ் சாதகமாய்க் குருவாகுஞ் சுன்னமாகுந்-தைலத்திற் பாஷாணம் துவைத்துவாட்ட சாகுமப்பா வறுபத்துநாலு தானும் - தைலத்திலிரும்பாடுங் காந்த மாடுந் தாக்கினல் நாகவங்கங் கட்டிப்போமே 671

போமப்பா ஒவ்வொன்றில் வேதை கோடி பூட்டறிந்தால் செந் தூரங் களங்கு சுன்னம் - காமப்பா குருவோடு மெழுகுதானு மப் பனே செயநீரோ வனந்தங் கோடி - போமப்பா யித்தைலஞ் சிங்கி போல ஓடுங்காமல் வேதையிதி லோடுமோடும் - வேமப்பா அண்ட ரண்டந் தைலம்பட்டால் வேதையென்ன பாதையென்ன விளம் பிலேனே 672

# உபரசங்கள் 120.

உபரசம் 120-ம் விளைவு பாஷாணம் 32-ம் வாதிகள் காண மாட்டார்கள் எங்கே காணலாம் மலைகளிலே திரிந்தால் காணலாம் ரசமணிகளுக்கு சத்தூட்டும் சாரணைகளுக்கு இந்த உபரசம் ஆதியான சரக்கு, என்று அறியவும். உபரசத்தின் வேதை வெகு லகுவு. இதை முன்னே பார் உபரசத்தில் செய்தால் வெகு சுருக்கில் வேதை காணலாம்.

18-சித்தர்களும் ரசவாதச் சரக்குகளை இருள்போல் மரைத்து சாஸ்திரங்களை கரைகாண முடியாமல் பாடிவிட்டார்கள். அந்த மரைப்பை எல்லாம் வெகுநூலை ஆராய்ந்துபார்த்து ரசவாதச் சரக்குகளையெல்லாம் எடுத்து எழுதப்படுகிறது. மலைகளிலே சித்தர்களை கண்டு வணங்கினால் உபரசங்கள் பாஷாணங்களிருக்கும் ஸ்தானங்களை சொல்வார்கள். சித்தர்களை கண்டால் அடிமைபோல் தொண்டுபண்ணி வணங்கவேண்டும். அவர்கள் மனமிரங்க நடந்தால் சரக்குகள் இருக்கும் ஸ்தலத்தை காட்டி எடுத்துவந்து வாதத்தை தன் முன்னால் வைத்து செய்யச்சொல்லுவார்கள், கருவையெல்லாம் அறிந்துகொள், குளிகைகள்செய், சாரணைகள் செய், கருவைமனதில் பதியவை கருவை அறிந்துகொண்டோமென்று மதத்தினால் கர்ஜிக்காதே! முன் போல் தொண்டுசெய்து கடாக்ஷம் பெற்றால் காயசித்தி ஏமசித்தி சித்தியாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

உபரசங்கள் 120-க்கும் பேயர் சட்டமுனி வாதகாவியம்1000-ல் இல்லை அதிலும் கவியாகப் பாடிவிட்டார். அக்கவிகளுக்கு உரை எழுதப்படுகிறது. 4-எட்டுப்பிரதிகளிலும் 120-சரக்குகள் சொல்லவில்லை. அரைகுறையாகவே இருக்கிறது. சட்டமுனி நிகண்டிலும் உபரச சரக்குகள் 109-க்குமாத்திரம் பேர் சொல்லப்பட்டிருக்கிறது அதற்காகஅநேக சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து 120-சரக்குகளையும் கண்டுபிடித்து பேர் அடையாளம் விளங்கும்படி பழநி வைத்திய ஆசிரியர், R.M.K. வேலுசாமி பிள்ளை அவர்களால் எடுத்து எழுதப்பட்டிருகிறது. தவருதலிருந்தால் தெரியப்படுத்தவும். அடுத்த பதிப்பில் சேர்க்கப்படும்.

# உபரசம் 120-க்கும் பெயர்.

1 துருசு
2 நிமிளை—இதற்கு மாக்ஷீகம் என்றும் பெயர்
இது 5வகைப்படும்:-
பொன்நிமிளை, வெள்ளிநிமிளை
கஞ்சநிமிளை லோக நிமிளை
காக நிமிளை
3 அப்ரேகம்—இதில் 4-ஜாதி.
ஏமவர்ண அப்ரேக்
இதுவே தங்கவர்ணம்,
ரசிதவர்ண அப்ரேக்
இதுவே வெள்ளைநிறம்
இதை சுவேத அப்ரேக் என வழங்குவதுமுண்டு.
சிகப்பு அப்ரேக்
இதுவே ரத்தவர்ணம்
கிருஷ்ண அப்ரேக்
இதுவே கருப்பு வர்ணம்
4 காந்தம்—இதில் உட்பிரிவு 4-வகைப்படும்:—
அாக்குகாந்தம்—ஃ
அவுல்அாக்குநிறம்
ஊசிகாந்தம்—ஊசியை
எட்டிபிடிக்கும் காந்தம்
உருளை காந்தம்=
உருண்டவடிவம்
கற்காந்தம்—
இதுவே பயிர்காந்தம்
5 கற்பூரசிலாசத்து
6 கல்நார்
7 கல்மதம்—மலைகளிலிருந்து வழியும் மலைநஞ்சு
8 சாத்திரபேதி
9 அன்னபேதி
10 அஸ்திபேதி
11 சொர்ணபேதி
12 மாங்கிஷபேதி
13 ராஜவர்த்திக்கல்
14 கெருடபட்சிக்கல்—
விஷத்துக்கு ராஜன்
இதில் பாற்கருடக்கல்
கருப்பு கெருடக்கல்
செகப்பு கெருடக்கல்
மஞ்சவர்ணகருடக்கல்
என 4 வகையுண்டு,
15 அஞ்சனக்கல்—
இதில் 5-வகையுண்டு.
நீலவர்ண அஞ்சனக்கல்
லோக அஞ்சனக்கல்
ரசாஞ்சனக்கல்
சிலா அஞ்சனக்கல்
செகப்பு அஞ்சனக்கல்
16 சூடாலைக்கல்
17 மாக்கல்—பலப்பக்கல்
18 தேக்கல்
19 மஞ்சக்கல்
20 தவளைக்கல்
21 பேரோசனைக்கல்
22 கானகக்கல்—இது மாக்கல் இனத்தைசேர்ந்தது வரிவரியாயும் சாரை சாரையாயும் புள்ளிபுள்ளியாயு மிருக்கும் சிகப்புநிறம்.
23 குருந்தக்கல்—சாணைக்கல் செய்யஉபயோகிப்பது

## உப்ரசம் 120-க்கும் பெயர் விபரம்.

24 காஸ்மீரக்கல்...
காஸ்மீர படிகக்கல்
சிவனுடைய தேகமாக
விளைந்த கல்

25 படிகக்கல்—சத்தியுட
தேகமாக விளைந்த கல்
சாலேஸ்வர கண்களுக்கு
ஒளியை கொடுக்கும் கல்
மூக்கு கண்ணாடி செய்வ
தற்கு சிறந்தஒளிவீசும் கல்
இதில்வெள்ளைநிறம், சிகப்பு
நிறம், நீலநிறம்3 தினுசுண்டு
இது தஞ்சாவூர் ஜில்லா வல்
லத்தில் பூமிக்குள் வெட்டி
எடுத்து சாணையில் தீட்டி
மூக்கு கண்ணாடி செய்யப்
படுகிறது.

26 சிலாவங்கக்கல்

27 சிலாநாகக்கல்—பர்வத
வரையில் குடியிருக்கும்
நஞ்சு பஞ்சவர்ணம்

28 மாக்துளிர்க்கல்— ரவிநிறம்
தோன்றுளிக்கல், தீபநிறம்,
செந்நிறம், கொக்கு நிறம்,
மாதளம்பூ நிறம்.

29 கருங்கல்—
விக்கிரகம் செய்யும் கல்,
மேகத்திலுற்பவிக்கும் கல்

30 சுக்கான்கல்—
சுண்ணாம்புக்கல் இதில்
வங்கம் விளையும்

31 வெள்ளைச்சுக்கான்கல்
பூநீர் விளையும் கல்

32 கருஞ்சுக்கான் கல்

33 கற்சுவடு

34 ஈரக்கல்—ரத்தக்கல்.
இதற்கு குருவிந்தக்கல்
என்றும் ஒருபெயருண்டு
குருவி ரத்தம் போன்ற நிறமு
டைய உயர்ந்த சிகப்புக்கும்
குறைந்த வர்ணமுடைய தாழ்
ந்த ஜாதியாம். மாணிக்கம்
என்ற சிகப்பு விளையும்பூமியில்
சிகப்புநிறம் குறைந்து விளைந்த
கல்லுக்குத்தான் ஈரக்கல் என்
றும் பெயர் (நயம் சிகப்புக்கும்
ஈரக்கல் என்று பெயர்)

35 ஓடு—வெந்த மண்பானை
உடைந்தது.

36 செங்கல்

37 கற்கிட்டம்

38 நண்டு—10 கால் உள்ளது.

39 நத்தை—இதுவே ஊமச்சி

40 தவளை

41 கிளிஞ்சி—உடல் 2 உயிர் 1

42 முத்துச்சிப்பி

43 ஆமையோடு

44 சங்கு =வலம்புரி இடம்புரி.
முள்ளுச்சங்கு,
சங்கு, முட்சங்கு 2-யும்
ஏட்டில் 2-வித சரக்காக
எழுதியிருக்கிறது. 120-க்
கும் மீருவதால் சங்கின்
உட்பிரிவில் முட்சங்கை
சேர்க்கப்பட்டது.

45 நாகரவண்டு—சங்கஞ்செடி
யில் குடியிருக்கும் பாம்பு
கள் தண்ணீர்தாகம் அடங்க
சாப்பிடுவதுண்டு,

46 கழுதைவண்டு—
திருகுகள்ளி வேலிகளில்
வசிப்பது

## உபரசம் 120-க்கும் பெயர் விபரம்.

47 குருவண்டு—இதுவே 6-புள்ளி வண்டு கருப்புநிறம் 2-இஞ்சு நீளம் 1-இஞ்சு அகலம் முதுகின்மேல்இரு சையிட்டிலும் துவரம் பருப்புபோல் 6-புள்ளிகளிருக்கும்.
இது கடித்தால் குஷ்டம் வரும். நீற்றினங்களுக்குவிட்டரைக்கும்கடுங்கார செயநீரை கடுங்காரமேற்ற இந்த வண்டைத்தான் ஷெசெயநீரில் சேர்க்கப்படுகிறது.

48 தும்பி-இதுவேஊர்கதண்டு என்றுபெயர்இதற்கு6கால் கருப்புநிறவண்டுசிகப்புநிற வண்டு ஆக 2-தினுசுஉண்டு

49 கதண்டு—
இதுவே வஜ்ஜிரதலைச்சி
இதுவேயானைதும்பி கானக கதண்டு புதரில் குடியிருப்பது.

50 மின்மினிப்பூச்சி—இதுவே
மின்னிட்டான் பூச்சி

51 முட்டை—முட்டைத்தோடு,
வெண்கரு, மஞ்சக்கரு

52 ஆனைக்கொம்பு

53 பன்றிக்கொம்பு

54 கலைமான்கொம்பு

55 மாட்டுக்கொம்பு—
எருமைகெடாக் கொம்பு
பெண்எருமைக் கொம்பு
காளைமாட்டுக் கொம்பு
பசுமாட்டுக்கொம்பு

56 ஆட்டுக்கொம்பு—
செம்பிலியாட்டுக்கொம்பு
குரும்பாட்டுக்கொம்பு
வெள்ளாட்டுக்கொம்பு
இது 3-ம் ஆகும்.

57 கஸ்தூரிமான் கொம்பு,
ஷெ எலும்பு

58 காண்டாமிருகக் கொம்பு—
விஷத்தை போக்கும் வல்லமையுடையது.

59 கரடிநகம்

60 மயிர்

61 பல்

62 எலும்பு

63 திமிங்கிலமீன் எலும்பு

64 மகரமீன் அங்கம்—
இதுவே சுறுமீன்

65 கோழி—
சாவல் நெஞ்செலும்பு

66 திருக்கைமீன் முள்

67 பன்றிமுள்

68 எலிமுள்

69 எறும்பு

70 நாயின் காஷ்டம் (மலம்)

71 புறுவினெச்சம்

72 செவ்வட்டை—மரவட்டை

73 நாகப்பாம்பு சட்டை

74 கோமேதகம்-புலிக்கண்ஒளி

75 நீலம்

76 பவளம்

77 பச்சை

78 சிகப்பு இதுவே மாணிக்கம்

79 முத்து

80 புஷ்பராகம்—நவரத்தினம்.

உபரசம் 120-ல் நவரத்தினம் 9-ம் சேர்ந்ததல்ல. ஆதி நூலிலிருக்கிறது, அது தப்பு பாக்கி 9 உபரச சரக்கும் முப்புரகசியம் நூலில் பார்க்கவும்.

81 வைடூரியம்
82 வைரம்
83 நாகப்பச்சை
84 மரகதப்பச்சை
85 புத்தான் பவளம்
86 கடல்நூரை—சமுத்திர அலையில் திரண்ட தீ
87 கடற்பாசி
88 சாலக்கிராமம்—இதின் கற்பத்தில் தங்கம் விளையும் இதில் மகாவிஷ்ணு குடியிருக்கிறார்.
89 சுத்தமண்—லோகச்சலைவைமண் இதுவேபுடமண்
90 குளவிக்கூட்டின் மண்
91 உவர்மண்—ஊசரமண் இதுவே சலவை மண் பூநீர் விளையும் பூமிக்குள்ளிருக்கும் வெள்ளைநிற களிமண்ணுக்கும் உவர்மண் அளர்மண் என பெயருண்டு
92 செம்மண்—காவிமண் சித்திரம் எழுதும் மண் தாம்பரமண்
93 செம்புமணல்
94 நாகமணல்
95 காரீயமணல்
96 வெள்ளீயமணல்
97 வெள்ளிமணல்
98 ஏமமணல்—தங்கமணல்
99 லோகமணல்
100 கருமணல்
101 செஞ்சிலை இதுவேகாவிக்கல்
102 காகசிலை—காகமலை
103 மந்தாரசிலை—மேக வர்ணக்கல் செந்நிறம், சடநிறம் வெந்நிறம், உதிர நிறம், கார்நிறம்
104 மாங்கிஷசிலை
105 கெண்டகச்சிலை
106 ரசிதமலை
107 ஏமமலை
108 நாகமலை
109 வெள்ளீயமலை
110 காரீயமலை
111 அயமலை—ஆயுதங்களை இழுக்கும் காந்த அயமலை.
112 திராமலை
113 வெங்கலமலை
114 செம்புமலை
115 பித்தளைமலை
116 மயிலிறகு
117 புத்திசல்
118 முடவாட்டுக்கால்—மேகத்தின் கெற்பத்தால் குவட்டின் மேல்விளைந்து தொங்குவது இது ஒரு அருமையான மகாமூலி நொண்டி ஆட்டின் கால்மாதிரி இருக்கிறது இதை பழநி, ஆர். எம். கே. வேலுசாமி வைத்தியராகிய நான் நேரில் பார்த்திருக்கிறேன். செம்பிலியாட்டின் கால் நிறம் போல் செகப்பாய் அரைஅடி நீளம் எலும்பும் தோலுமாய் தோல் மிருதுவாய் பட்டுப்போலும் குளாம்பு சகிதம் இருக்கிறது. இது கொல்லிமலையில் ரெம்ப விளைந்திருக்கிறது வேரு எங்கும் கிடைக்காது.

## உபரசம் 120-க்கும் பெயர் விபரம்.

119 பூநாகம்— மேகத்தின் விந்து மின்னலினுற் உற்பத்தியாவது நாங்களுப்பூச்சி

120 இந்திரகோபம்—இதுவே தம்பலபூச்சி இதில் 3-விதமுண்டு வெள்ளைநிறம் செகப்பு நிறம் கருப்பு நிறம் செகப்புநிற பூச்சிகள் தென்இந்தியாவில் கிடைக்கும். இது இந்திராணி நாதம் மழையோடு உதிர்வது. உபரசம் 120-ம் முற்றிற்று.

---

## கவனிப்பு.

உபரசங்களின் குணங்களையும் பெருமைகளையும் இவை ஒன்றல் மற்றோர் மருந்தை முடிக்கும்விதங்களும் நான் எழுதியிருக்கும் முப்பு ரகசியம் எனும் நூலில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

உதாரணம்.—ஆனைக்கோம்பு—வேடியுப்பை கட்ட உதவும்.

ஆர். எம். கே.

---

## உபரச சரக்கால் மற்றோர் உபரச சரக்கை சுன்னம் செய்யும்விதம்.

பாடினே னென்னூலி லுபரசத்தை யெல்லாம் பாங்கான சித்தரொடு நாதாக்கள் நூலில் - தேடினேன் பல நூலில் பேரைக்காணேன் திறமாக செப்பினே னென்பார் கோடி - நாடினேன் பலநூலி லுபரசங்களில்லை நான்பாடச் சோம்பினுற் சாத்திரங்கள் பொய்யாம் - மூடினேன் நாதாக்க ளட்டவணை கொண்டு ஊட்டுவார் சாரணையி லூட்டுவாரே 682

## உபரசச்சரக்காகிய சுக்கான்கல் சுன்னத்தால் கற்பூரசிலாசத்துச் சுன்னம். அதால் கல்நார் சுன்னம்.

ஊட்டுவா ருபரசத்தா லுபரசத்தைச் சுன்ன முத்தமனே பண்ணுகிற முறையைக் கேளு - காட்டுவார் கற்பூரச் சிலையின் மேலே நலமான சுண்ணும்பைக் கவசங்கட்டி - மூட்டுவார் புடமொன்றில் சிலை சுன்னமாகு முதிர்ந்த சிலைச்சுன்னத்திற் புனுகு வீரம் - கூட்டியே மத்தித்து கல்நாரிற் பூசி குறையாமற் சுண்ணும்புச் சிலை செய்யே 683

சகல கவசங்களுக்கும் சுண்ணும்புத் தண்ணீர் விட்டரைத்து கவசிக்கவும். ஆர். எம். கே.

## கல்நார் சுன்னத்தால் பால்கருடக்கல் சுன்னம் அதால் கார்முகில் பாஷாண சுன்னம்.

செய்தல்லோ புடம்போட கல்நாருஞ் சுன்னந் திறமாக யிதி ன்னோடு புனுகு வீரம் - நைத்தல்லோ மத்தித்து கெருடபச்சைக்கப்பி நலமாகப் புடம்போடக் கெருடன் சுன்னம் - பைத்தல்லோ கெருட னிலே புனுகு வீரம் - பாங்காக மத்தித்து கார்முகியிலப்பி - கோத் தல்லோ சீலெசெய்துபுடத்தைப் போட கொடியதொரு கார்முகியுஞ் சுன்னமாமே 684

## கார்முகில் பாஷாணச் சுன்னம் இதால் 64-பாஷாணங்களுஞ் சுன்னம் செய்யும் விதம்.

ஆமப்பா சுன்னத்திற் புனுகு வீர மணைத்தல்லோ பாஷாணத்தப்பி வாட்டி - ஓமப்பா போட்டுதேச் சுன்னமாகு முத்த மனே சரக்கான அறுபத்துநாலும் - சேமப்பா சாரமிட்டாற் செய நீராகும் செயநீரில் புனுகோடு வீரமிட்டால் - வேமப்பா சரக்கெல் லாஞ் சுன்னமாகும் வெவ்வேறு தொந்திக்கத் தொந்தமாமே 685

ஒரு பாஷாண சுன்னத்தில் சவ்வாது வெங்காரம் கூட்டி ஒரு பாஷாண செயநீரால் அரைத்து ஏதாவது ஒரு பாஷாண கட்டிக்கு பூசியூத உருகிக்கட்டும் வஜ்ஜிரகவசம் செய்யும்விதமும் முன் எழுதப்பட்டிருக்கிறது.

## 64-பாஷாணங்களையும் கட்டும்விதம்.

தொந்தமாயுருக்குகிற வகையைக் கேளு சுகமாகக் காரமொடு சவ்வாதுகூட்டி-பந்தமாய் சரக்குகளில்பூசியூத.பலபலவாம் பாஷாண முருகிகட்டும் - தொந்தமா மொவ்வொன்றுந் தொந்தமேற தொழில் முறைகள் போக்கதிலே கோடாகோடி - தொந்தமா யுருக்கினத்திற் கவரோகோடி சமாசமாய் நீற்றினத்தில் கரைகாணேனே 686

## உபரசத்தொந்தம்.

காணாத உபரசத்திற் சத்தோகோடி கலந்துநின்ற உருக்கினமு நீற்றினமுங் கோடி பூணாத செயநீரோ மெழுகு கோடி. பூட்டுகிற கட்டினமுங் கெடுப்பினமுங் கோடி - பூணாத சாரணைக்கு கவரோ கோடி பூட்டுகிற லோகத்திலுரவோ கோடி - தோணாதே யாவருக்கு முபரசத்தினுட்டு சொல்லுகிறே னறிந்த மட்டுஞ் சொல்லுறேனே.

# சத்துகளின் பெருமை கவனி.

சொல்லுகிறேன் அப்பிரகச் சத்திலே சுகமாகத் தங்கமது குருவுமாகும் - சொல்லுகிறேன் பூநாகச் சத்திலே துடியாக நாக வங்கங் கட்டிப்போகும் - சொல்லுகிறேன் சிப்பியுட சத்திலே சோரமொடு காரீயஞ் சுழன்றுசாகும் - சொல்லுகிறே னண்டத்தின் சத்திலே சூதமுதற் சவ்விரஞ் சொக்குந்தானே சோரம்=நாகம்

சொக்குமே மயிலிறகு சத்திலே சொருகிடவே பாஷாண மெல்லாங் கட்டுஞ் - சொக்குமே நிமிளையுட சத்திலே நீரூத லோகங்கள் சுன்னமாகும் - சொக்குமே காந்தத்தின் சத்தென்றால் சூதமென்ற யானைக்கு அங்குசமுமாச்சு - சொக்குமே படிகத்தின் சத்திலே சொற்பெரிய காயசித்தியாகுந்தானே 689

பண்ணுமே சங்கதின் சத்திலே பறக்கிறதோர் குளிகைக்கு கிதமுண்டு - விண்ணுமே லாட்டிவிக்கு யிந்திரகோபம், வேதைக்கு கடுஞ்சுறுக்கு ரசவர்த்தம் - மண்ணிற்மேற் நடக்காமற் பண்ணி விக்கு மைந்தனே ஆமைபுடவோட்டின்சத்து - கண்ணுமேல்மாசியற குளிகையாக்குங் கல்நாரின் சத்துடைய காந்திதானே 690

காந்தியென்ற கற்பூரச்சிலையின் சத்தைக் காட்டிடவே யுபரசங்கள் சுன்னமாகுங் - காந்தியென்ற கல்மதத்தின் சத்தையப்பா காட்டு முன்னே சரக்கெல்லாம் கட்டிப்போகும் - காந்தியென்ற அஞ்சனக் கல் சத்திலே கசடற்று உபரசங்க ளீயமாகும் காந்தியென்ற கலங் கொம்பு சத்திலே கவனமது வெகு சுறுக்கு மகாவேகம் - காந்தி யென்ற பவழமது சத்திலே கரையில்லை கட்டினங்கள் வேதை தானே 691

வேதையென்ன வெகுசுறுக்கு கெருடன்சத்து விளங்கியதோர் காயசித்தி யெலும்பின்சத்து - பாதையென்ன வெகுபோக்குத் தந்த சத்து, பல்லுடைய சத்தால் பறக்குந்தூரம் - கோதையென்ற வயல்தம்பம் கரடியுடநிகச்சத்து, கொள்கியதோர் வைரசத்தில் குரு வோ கோடி - பாதையென்ன முத்துடைய சத்தேயானாற் படுமுன் னே சூதமது சாகும் பாரே 692

பாரப்பா யிப்படித்தான் உபரசத்தின் வேதை, பரவியதோர் கட்டினமுஞ் செந்தூரங்கோடி - நேரப்பாகுருகோடி சுன்னங்கோடி நேரான காயசித்துங் கவனசித்துங் கோடி - தூரப்பா வோடுகிற வேதை கோடி சூட்டயிலே கட்டுகிற யினமோ கோடி, - யாரப்பா காண்பார்கள் உபாசத்தின் போக்கை யறிந்த மட்டுஞ் சொல்லிவந் தேன் பிறப்பைக் கேளே 693

## பிறவி பாஷாணம் 32-ம் விளையுமிடம்.

கேளப்பா தாதுவகை பிறந்துநின்ற கெடியான மலைப்பேருஞ் சொல்லக்கேளு - வாளப்பா பொதிகைக்கு வாயுமூலை வாகாக லட்ச யோசனைக்கு மப்பால் - தாளப்பா தயவான பட்டணந் தானென்று தன்னுடைய அகலமது கேளுகேளு - நீளப்பா நீளமது ஆயிரங்கான் காதம் நேரான அகலமந்தப் படியுமாமே 694

## இமயமலை 10000-மைல் உயரம்.

ஆமந்தப் பட்டணத்தே நவலோகங்க ளப்பனே மலைமலையாய் நிற்கும்பாரு - வோமந்தப் பாஷாண முப்பத்திரெண்டு முத்தமனே பிறந்திருக்கும் மலையைச் சூழ்ந்து- தாமந்தப் பட்டணத்துக்கப்பால் நீங்கள் சாதகமாயாயிரமோ காதஞ் சென்றால் - லேமந்த இமயோர்ப் பர்வதந் தானென்று யேத்தமென்ன யாயிரந்தான் காதமாமே 695

## இமய மலையடியில் ரசக்கிணர் 5-உண்டு.

காதமென்ற மலைபதுவும் நீளங்கேளு கலந்துகொண்டு கிழ்கடலில் முக்காதம் புக்கும் - காதமென்ற மேல்கடலில் முக்காதம் புக்கும் கைவிட்ட நதியதிலே கோடாகோடி - காதமென்ற மலையடியிற் கிணறுவஞ்சு கலந்துநின்ற கிணற்றகலங் காணச்சொல்வேன் -காதமென்ற நூறுகாதம் ஞலுதிக்குங் கிணறு காணப்பா ஆழமென்ன சேடனுட முடியே 696

**சட்டமுனி வாதகாவியம் 1000-ல் அடியில்கண்ட 2 பாட்டுகளும் இருக்கவேண்டியதிருக்க 4 ஏட்டுப்பிரதிகளிலும் இல்லை. ஷ பாட்டுகள் மலைவளம் ஏட்டுப்பிரதியிலிருந்து சேர்க்கப்பட்டிருக்கிறது.**

R. M. K. வேலுசாமி, வைத்தியர்.

முடியளவுஞ் சூதமது தொட்டுநிற்கு மூவுலகுந் தீயெரித்த யிசனுட விந்து - கெடியளவுந் தொட்டவுடன் தூரத்திக் கொல்லும் கோரகக் குளிகை யிட்டு கெவுனமாகி - கெடியளவுந் தேங்காயின் குடுக்கைகொண்டு கெவுனி தானெடுப்பார்கள், தூரத்தும்போது - துடியளவு ரவிதனிலே சொக்கிப்போவார், சூட்சமிதையறிந்தூட்டால் தூரத்தும் பாரே 697

துரத்தியே வுள்ளுக்கு யிழுத்துக்கோல்லும்.

துரத்தியே வுள்ளுக்குள் சுளித்து கொல்லும் திறமையாய்க் கொண்டுவந்தால் சுரூபசித்தி - மரத்தியே பாஷாண வர்க்கமெல்லா மறவாமலெடுத்துமே மான்றேவிற்கட்டு- விரத்தியே வெவ்வேறு யெடுத்துக்கட்டு, விரவினு லொன்றோடே யொன்று சேர்ந்து - இரத்தியே யிளகியெல்லாங் கெட்டுப்போகும் ஏற்றமாந் தாதுடைய பெயரைக்கேளே 698

அநேக மலைகளிலும் பூமிகளிலும் விளைந்திருக்கும் விளைவு பாஷாணம் 32-ம் பறங்கிவைப்பு பாஷாணம் 32-ம் ஆக 64-பாஷாணங்களுக்கும் பெயர் சட்டமுனி வாதகாவியம் 1000-ல் தெளிவாய்த் தெரியாமல் அரைப்பெயர் வைத்து எகனை முகனையாக சேர்த்து கவியாக பாடிவிட்டார். அதினால் 64-பாஷாணங்களுக்கும் பெயர் தெரியாமல் தவிக்கிறார்கள். ஆகையால் அக்கவிகளுக்கு உரையெழுதி 64-பாஷாணங்களின் முழுப்பெயர்களை அநேக ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்து பழநி வைத்திய ஆசிரியர், R. M. K. வேலுசாமி பிள்ளை அவர்களால் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

# மலைகளிலும் பூமிகளிலும் விளையும் பிறவி பாஷாணம் 32-க்கும் பெயர் விபரம்.

1 கெந்தக பாஷாணம்--கெந்தமாதனபர்வதத்தில் உற்பத்தி தேவர் அசுரர் ராக்ஷதர் இதை மனிதர்கள் பார்த்தால் நரைதிரை மாறி சிரஞ்சீவி யாயிருப்பார்கள்.
2 கற்கடக பாஷாணம்
3 கோளக பாஷாணம்
4 சூதபாஷாணம்
5 லிங்க பாஷாணம்
6 கார்முகில் பாஷாணம்
7 அப்பிரக பாஷாணம்
8 காந்த பாஷாணம்
9 சங்க பாஷாணம்
10 கெவுரி பாஷாணம்
11 வெள்ளைப் பாஷாணம்
12 துத்தபாஷாணம்
13 தொட்டிப் பாஷாணம்
14 கற்பரி பாஷாணம்
15 சிரக்காண்ட பாஷாணம்
16 அஞ்சன பாஷாணம்
17 குதிரைப்பல் பாஷாணம்
18 அரிதார பாஷாணம்
19 தாளக பாஷாணம்
20 மனோசிலை பாஷாணம்
21 வீரபாஷாணம்
22 கல்ப்பாஷாணம்

## மலைகளிலும் பூமியிலும் விளையும் பிறவி பாஷாணம் 32-க்கும் பெயர் விபரம்.

23 சீதாங்க பாஷாணம்
24 சிலாமத பாஷாணம்
25 பலண்டுருக பாஷாணம்
26 அமுர்த பாஷாணம்—
இதுவேமி ஈத பாஷாணம்
27 கச்சாலபாஷாணம் இதுவே
காய்ச்சற் பாஷாணம்.
28 வைக்கிராந்த பாஷாணம்—
இதற்கு அங்கிரமாதிபாஷா
ணம் என்றும் பெயருண்டு.
29 சிரபந்த பாஷாணம் இதற்கு
சீர்பந்த பாஷாணம்என்றும்
பெயர்
30 சாலாங்கபாஷாணம்இதற்கு
காலாங்க பாஷாணம் என்
றும் பெயர்
31 அவுல் பாஷாணம் இதற்கு
கூபசாரங்கம் என்றும்
அவுபல்பாஷாணம் என்றும்
பெயர்
32 தாலம்பபாஷாணம் இதற்கு
காலக பாஷாணம் என்றும்
சிறுகோழி முட்டைபோல்
3-கண்ணுடனிருப்பதால்
பனங்காய் பாஷாணம் என்
றும் பெயர். கருப்பு சிகப்பு
வெள்ளை 3-நிறமுண்டு ஓரே
இடத்தில் 3ம்தனித்தனியா
யிருக்கும்32பாஷாணங்கள்
எடுக்கும்விதமும் இருக்கும்
விடமும் நீற்றும் விதமும்
வேதையும் முப்பு ரகசியம்
எனும் நூலில் விரிவாய்
எழுதப்பட்டிருக்கிறது.

இப்பாஷாணங்கள் கிடைக்கவே
கிடைக்காது என்று 18-சித்தர்
களும்சொல்லி விளைவுபாஷாணம்
32ல் இம்மூன்றும் சேர்க்கவில்லை

1 துருசு பாஷாணம்—
மயில்கழுத்துநிறம் விளைவு
2 தைலபாஷாணம்— விளைவு
செங்கத்தூள் நிறம் சந்திர
காந்தக்கல் போலிருக்கும்
சிகப்புநிறம்ஒன்று கோரோ
ஜனை நிறம்ஒன்று வில்போலி
ருக்கும் கம்பில்ல பாஷாண
மென்றும் பெயர் இதின்
விளைவு அபூர்வமாய் கிடை
க்குமென்று வைப்புச்
சொல்லப்பட்டிருக்கிறது.
3 பவளப்புத்து பாஷாணம்—
இமயமலை அடிவாரத்தில்
தங்கநிறப்புத்து கண்துவா
ரம் ஒன்றுடன் 3-நிறமாய்
விளைந்திருக்கிறது. ஜம்பு
தீவில் 5-வகை விளைந்திருக்
கிறது தங்கநிறம் பச்சை
சிகப்பு மஞ்சள் வெண்மை
நிறம்இதுஉலகோற்குகிட்டா!
குளிகையிட்டோர்க்கெய்தும்
விளைவு ரசம் 5·வகையும்
கெந்தகம் விளைவு 4-ல் செகப்பு
கெந்தி, கருப்பு கெந்தியும், நெல்
விக்காய் கெந்திடம் விளைவு
பாஷாண வர்க்கத்தில் சேர்க்கா
மல் சகல நூல்களிலும் விடப்பட்
டிருக்கிறது. வாணகெந்தி மண்
நீக்கி காச்சுவதால் வைப்பு பாஷா
ணத்தில் சேர்த்திருக்கிறார்கள்.

# தேவி சொல்ல பறங்கி வைத்த வைப்பு பாஷாணம் 32ன் பெயர் விபரம்

1 பொற்ரெட்டி பாஷாணம்
தங்கக்குப்பியில் வைப்பு
இதில் மேலே நின்றது
2 ரத்தபாஷாணம்-மாதளம்பூ
நிறம் செம்புபோல் சிகப்பு
அடியில் நின்றது
அஞ்சனபாஷாணம 1
நடுவில் நின்றது
கற்பரிபாஷாணம் 2
மூக்குநுனியில் நின்றது
சரகண்ட பாஷாணம் 3
(இந்த 3-ம் ஒன்றிலொன்று)
தங்ககுப்பியே பொற்ரெட்டி
பாஷாணமாகிவிட்டது.
பொற்ரெட்டி வைப்பிலும்
இந்த 3-பாஷாணங்களும்
உண்டாகிறது.
3 எருமைநாக்குத்தொட்டிப்
பாஷாணம் இதை
அயக்குப்பியில் எரிப்பதால்
அயத்தொட்டி பாஷாணம்
என்றும் பெயர்
4 புத்தோட்டுத்தொட்டி
வைப்பு—வெள்ளிக்குப்பி
யில் வெள்ளிகுப்பியே
புத்தோட்டுத்தொட்டி
பாஷாணமாகிவிட்டது.
5 ரசித பாஷாணம்
வெள்ளிமேருவில் எரிப்பு
6 செப்புத்தொட்டி பாஷா
ணம்-செம்புகுப்பியில்வைப்பு.
மேலேநின்றது
7 சாதிலிங்க பாஷாணம்—
அடியில் நின்றது
8 தீமுறுகல் பாஷாணம்
நடுவில் நின்றது
9 கார்முகில் பாஷாணம்—
செவந்தகருப்பு அந்த பா
ண்டமே செப்புத்தொட்டி
பாஷாணமாகிவிட்டது.
10 மிருதர் சிங்கி பாஷாணம்
இதற்கு ரசிதசிங்கி பாஷா
ணம் என்றும் பெயர்
மண் கலயத்தில் எரிப்பு.
11 ரத்தசிங்கி பாஷாணம்—
வெங்கலகுப்பியில் எரிப்பு
12 ஏமசிங்கி பாஷாணம்—
தங்கவர்ணம்
13 சவ்வீர பாஷாணம்
14 கோடாசூரிவீரம்
15 வெள்ளைப்பாஷாணம்
16 கௌரி பாஷாணம்
17 கோழித்தலைகெந்திபாஷாணம்
சேவல் சூடுபோல் பவளம்
போன்ற செகப்புநிறமுடை
யது இதற்குசெகப்புகெந்த
கம் என்றும் பெயருண்டு,
விளைவிலும்சிகப்புகெந்தகமுண்டு
18 பவளப்புத்து பாஷாணம்—
விளைவு வைப்பு 2-ம் உண்டு
சூதபாஷாணவைப்பில்
மேலே நின்றது
19 சூத பாஷாணம்
நடுவில் நின்றது
20 நீலபாஷாணம்—இதுவே
நீலவர்ண பாஷாணம்

## தேவிசொற்படி பறங்கி வைத்தபாஷாணம் 32ன் பெயர்

சூதபாஷாண வைப்பில்
அடியில் நின்றது
21 காகபாஷாணம்
22 பஞ்சபட்சி பாஷாணம்...
பஞ்சநிற்ம் பச்சையிலே
வேதையாகும்
23 குங்கும பாஷாணம்...
சிவந்த மஞ்சள்நிறம்
24 துத்த பாஷாணம், கபரி,
வெள்ளைநிறம் இது
ஒன்றுக்கே மண்டுகேதுத்தம்
என்றும் அஸ்வதுத்தமென்
றும் இரண்டு பெயர் உண்டு
25 தைலபாஷாணம்... வைப்பு
இரும்பு மேருவில் கருஞ்
சிவப்புமஞ்சள்நிறம்
26 கெந்தக பாஷாணம்
நாகபாஷாணம் வைப்பில்
காசிகுப்பி எரிப்பில்
அடியில் நின்றது
27 நாகபாஷாணம்
மேலேரி நின்றது
28 இந்திரபாஷாணம்..
மாதளம்பூநிறம்

விலாபகதம்
29 சோரபாஷாணம்
பச்சைவர்ண வெளுப்பு
30 லவண பாஷாணம்
31 அரிதார பாஷாணம்
32 வாணகெந்தி பாஷாணம்..
சுரைக் கெந்தி என்றும்
படைக்கு அரசனென்றும்பெயர்
காசிகுப்பியில் சாதிலிங்க
பாஷாணம் ஒன்றுமட்டும்
செய்யும் முறையும் ஒன்று
இருக்கிறது.
சூதபாஷாணம்...ரத்தநிறம்
போல் இருக்கும் மேருவில்
ஒன்று மட்டும் வைக்க
வைப்பு முறையுமுண்டு.
சவ்வீரத்தை 3மடக்கு எரித்தால்
1 கொச்சி வீரம்
2 செகப்பு வீரம்
3 ரசகற்பூரம்
4 ரசசெந்தூரம்
5 வங்காளபச்சை
6 துருசு
7 பறிங்கி பாஷாணம்
இவைகள் வைப்பு பாஷாணம்
32-ல் சேர்க்கப்படவில்லை.
ஆர். எம். கே

### 64-பாஷாணங்கள் எடுத்தாட எழும்பும் தானே.

எழும்பியதோ ரறுபத்துநாலு தாது யிதுமைந்தா யிதுமைந்தா யறிந்துகொள்ளு - மெழும்பியதோர் சாத்திரங்கள் கோடி பார்த்தே னென்னசொல்வேன் முப்பத்திரண்டே சொல்லும் - மெழும்பிய தோர் நூல்களுக் கென்னாலே மிச்சம் எதிர்த்த சித்தர் மார்பிலே யறைந்துபேசு - மெழும்பியதோர் குளிகையிலே சின்மயத்தின் மணிக்கு யீடுண்டோ வென்று சொல்லி யறைந்திடாயே. 705

அறைந்திட்ட சித்தர்களே உங்களிட நூலில் ஆதியுண்டோ அந்தமுண்டோ கருத்தானுண்டோ - நிறைந்திட்ட மறைப்பல்லோ சகலருட நூலும், நேராக யெங்களுட நூலுக்கீடோ - குறைந்திட்டு போகுமென்று கருவையெல்லா மறைத்துக் கூறியே யெங்களுட நூலெடுத்து ஒளித்தீர் யறைந்திட்ட நிகண்டை வைத்துப் பூசை செய்த உங்களுக்கு ஆகுமோ வாதமென்று அரைந்து சொல்லே 706

சொல்லயிலே சித்தரெல்லாம் தலை தனிந்து நிற்பார் சுருக்கான மூலவற்கமானலப்பா - யெல்லையிலே எங்கள்வற்கங் கைலாயமூர்த்தி யெங்களுட பாட்டனென்று மல்லுக்கு நிற்பார் - மல்லையிலே அவர் களுடன் சண்டைவேண்டா மகத்தான கொங்கணற்கு பிள்ளைகளோ மெத்த - கல்லையிலே யெங்கள் நூல் கருத் தப்புக்கெல்லாம் கைலாச பாட்டர் னூலுரையென்பாரே 707

உரைப்பென்றதிந்த நூல் தமிழுக்காதி யொளித்திட்ட கருவுக்குத்திறவுகோலப்பா - நிரையென்ற யீசனுடவடமொழியைப் பார்த்து நேராகக் கட்டியதோர் சாஸ்திரங்கள் கோடி - கரையென்ற சாஸ்திரங்களத்தனைக்குமப்பா கண்திறந்து ஆட்டிவைத்தே நிகண்டிதுலே துரையென்ற நூலிதுதான் சகல நூல்க்கும் தொடுகுறிபோல் சரக்கையெல்லாம் சொல்லக் கேளே 708

## லவணமொடு காரசாரம்.

கேளப்பா லவணமொடு காரசாரம் கெடியாக இருபத்தஞ்சு சொல்வேன், நாளப்பா நவச்சாரம் சத்திச்சாரம் நலமான ஊஷரமாம் சாரத்தோடு - வேளப்பா எவாட்சாரம் ஏகாம்பர சாரம் விளம்பியதோர் காசியென்ற சாரத்தோடு - தாளப்பா பொன்னம்பர் சாரந்தானுஞ் சாதகமாய் மீனம்பர் சாரந்தானே 709

தானென்ற அக்கினியாம் சாரத்தோடு சாதகமாஞ் சவுக்காரஞ் சீனக்காரம் - வானென்ற வெண்காரம் பூரஞ் சூடன் வகையான கல்லுப்பு வெடியுப்போடு - கோனென்ற இந்துப்பு சவுட்டுப்பு கொடியதொரு திலா லவணம் வளையலுப்பு - ஊனென்ற அமுரியுப்பு கெந்தியுப்பு யுத்தமனே சிந்துவென்ற லவணம்பாரே 710

## உப்பால் சகல சரக்கும் கட்டலாமெனல்

பாரப்பா பிடாலவணம் தன்னோடொக்க பாங்கான காச்சு லவணந்தானும் - நேரப்பா இருபத்தியஞ்சு சொன்னேன் நிலையாக யிதுவல்லோ சாரணைக்குஆதி - வேரப்பாகட்டுகிற குருவுக்கெல்லாம் விரையைவிட்ட மரமுண்டோ காச்சுப்பூற்க - தூரப்பாலவணமொடு கார்சாரம் சொற்பெரிய வாதியென்று லறிவான்றனே 711

# பிர்மகற்பம்.

1 விளைவு சவுக்காரம்—இதுவே முப்பு இதுவே முதல் வழலை 1-வது பிர்மகற்பமென்றும் இணங்கன் என்றும் ஈசனுப்பு என்றும் நாதமென்ற வெடியுப்பு என்றும் காந்த உப்பென்றும் நஞ்சு என்றும் பெயர் 18-சித்தர்களும் இந்த உப்பை ஒளித்து மறைத்து பரிபாஷையாக பாடிவிட்டார்கள். சகல சாஸ்திரங்களிலும் காரசார உப்புவகை 25 என்று சொல்லியிருக்கிறது. சட்டமுனி இந்நூலில் 25-உப்பே சொல்லி இருக்கிறூர் அவர் நிகண்டிலும் போகர் காரசாரத்துரை 60-லும் 26-உப்பு எழுதப்பட்டிருக்கிறது. சட்டமுனி நிகண்டில் 26-உப்பை எழுதியிருந்தாலும் அதுதெரியாதபடி எழுதப்பட்டிருக்கிறது. அந்நூலில் எமன்கூட நுழையமாட்டான் இதை யாராலறிய முடியும் என்று போகரே 60-ல் சொல்லுகிறூர். அப்படி மறைத்த உப்பை நான் கண்டுபிடித்து ஆதியோடந்தமாய் முப்பு ரகசியம் எனும் நூலில் விரிவாய் எழுதியிருக்கிறேன் பார்த்துக் கொள்ளவும். வாதிகளுக்கு இது அவசியமாகையால் இந்நூலில் அதை எடுத்து எழுதி 1லக்கமிட்டு சேர்த்திருக்கிறது.

2 பூநீரு=ஊசரம்

3 வைப்பு சவுக்காரம்=5-பஞ்சபூதமும் சேர்ந்தது. இதன் விபரம்-
பிரிதிவு=பூநீர், அப்பு=ஜலம், தேய்வு=கல்லுப்பு
வாய்வு=எண்ணை, ஆகாயம்=கற்சுன்னநீர். என
சட்டமுனி நிகண்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகும் வழலை ஆதிபிறப்பு கேள்
பாகுநல் லூஷரம் பகிர்ந்தனற் சுன்னநீர்
வாகு கல்லுப்பு மருவிய எண்ணெயும்
போகும் ஜலத்தொடு பூதமு மைந்தே

4 நவாச்சாரம்
5 சத்திச்சாரம்
6 எவாச்சாரம்
7 காசிச்சாரம்-இதற்குணங்கன் என பெயருண்டு.
8 ஏகாம்பரச்சாரம்
9 சீனிக்காரம்
10 வெண்காரம்
11 சூடன்
12 பச்சைக்கற்பூரம்
13 அமுரிஉப்பு
14 கல்லுப்பு
15 வெடியுப்பு—இதுவே பொட்டலுப்பு இது விந்து என்ற வெடியுப்பு இணங்கன் என்றும் பெயர் இது 7-வது வழலை 7-வது பிர்மகற்பம் என்றும்பெயர் இதன்பெருமையை முப்பு ரகசியம் எனும் நூலில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது

16 இந்துப்பு
17 வளையல் உப்பு
18 சவட்டுப்பு
19 திலாலவணம்
20 கெந்தி லவணம்
21 பிடாலவணம்
22 சிந்துலவணம்
23 காச்சுலவணம்
24 பொன்னம்பர்
25 மீனம்பர்
26 அக்கினிகை...அக்கினியாம் சாரம் இதுவேஆகாசசீயின் கட்டி சமுத்திரத்திலுண்டு இதன் ரகசியமும் எடுக்கும் விதமும் வேதையும் நவரத்தின சிந்தாமணி300-லிருக்கிறது. யார் பார்த்தாலும் விளங்காது. நான் எழுதியிருக்கும் முப்பு ரகசியம் எனும் நூலில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது பார்த்துக்கொள்ளவும். லேசான கடல் நுரை.

---

## பிறவி பாஷாணம் 32-ம் பிறந்த மலைகளின்பேர்.

அறிவதென்னவொவ்வொன்றுங் குருவுமாகு மண்டமுதல் பாஷாணங் கட்டியாடும் - நெறிவதென்ன உபரசங்கள் மணியுமாகும் நேராகச் செயநீரோ மெழுகுமாகும் - முறிவதென்ன குளிகையிலே சத்துகளை யூட்ட மூதண்ட மாட்டிவைக்கும் கவனவீதி - செறிவதென்ன சுன்னமுதல் செந்தூரஞ் செய்யும் செகச்சாலவித்தையெல்லா மிதற்குள்ளாச்சே 712

ஆச்சப்பா முப்பத்திரண்டு தாது மப்பனே மலைதோறும் பிறக்கும்பாரு - ஓச்சப்பா மலைப்பேரைச் சொல்லக் கேளு யுத்தமனே கல்யாணி கெந்தமாதனம் - வாச்சப்பா ஏமகூடம் பரங்குன்றம் வாகான ருத்திரமென்ற கூடத்தோடு - கூச்சப்பா கணிகண்டம் பூதகூடங் கூறுன லக்ஷ்மியின் விலாசந்தானே 713

விலாசமென்ற பத்ராலயங் கேதுபந்தம் விளங்கியதோர் கொங்கணமும் வடக்கேயாகும் - விலாசமென்ற காசிக்குத் தெற்கேகேளு விந்தையாரண்யமும் சிந்தூமேரு - விலாசமென்ற தனசாலக்கிரமத்தோடு விளங்கியதோர் கிரவுஞ்சமென்ற மலையுமாகும் - விலாசமென்ற மல்லிகார்ச்சுனத்திலப்பா வேதாந்த சித்தருண்டு கோடிதானே 714

## வேடங்கொள்க.

தானென்ற கொல்லிமலை பன்றி மலையோடு சதுர் முகமாம்
பருவதமுமடுக்கக் கேளு-வானென்ற பொதிகையிலே அகஸ்தியரும்
வாசம் மகத்தான சிவரூப ரிஷிதானப்பா - கோனென்ற
அவர்கையால் வேடங்காவி கொண்டாக்கால் கெவனத்தில் திரியலா
கும் - தேனென்ற மேருவுக்கு வடக்கே கேளு தெட்சணா மூர்த்தி
கையில் வேடந்தானே 715

வேடமொடு காவிகொண்டால் நாலுதிக்குஞ் செல்லும் விளங்
கியதோர்சித்தண்டம்பேரண்டபதமும் - வேடமொடு காவிகண்டால்
வாவாவென்பார்மேலான புவனத்தின் சித்தரெல்லாம் - வேடமொடு
காவியுட வரிசைகேளு மேலாக சிரசில் வைப்பார் சின்மயத்தின்
காவி - வேடமொடு காவி கொண்டால் ரிஷியுடைய காவி விளங்கிய
தோரிடைக்குள் சுத்துவாரே 716

சுத்தியதோ ரறுபத்துநாலு மரபுள்ளே துலங்கியதோர் சிஷவற்
கம் நவகோடியாச்சு - பத்தியதோர் சிஷ்யவற்க சிஷர்களைச் சொல்ல
பதந்தொட்டு அண்டவரை பரவிற்றப்பா - முத்தியதோர் தமருக்குள்
புக்கினோர் கோடி மூச்சாடா சமாதியிலே யிருந்தோர் கோடி - அத்
தியதோர் பூரணத்தி லகிச்சேரர் கோடி யரகரு நாதாக்களாடு
மாட்டே 717

## உபரசபாஷாணம்.

ஆட்டான பொதிகைவிட்டு யப்பால்கேளு யப்பனே தாடகிமலை
தானென்று - நீட்டான மகேந்திர சலந்தரனென்று நேராகயிடை
களிலே குட்டிமலைகோடி - மூட்டானமலைதோறும் பாஷாணமுண்டு
பரிசனமாம் மூலிகையோ கோடாகோடி - தீட்டான மலைருதுவும்
சூதமுண்டு திறமான புதகமுண்டு குளிகையிட்டுப் பாரே 718

## 229-சரக்கிலும் சத்தெடுத்து ரசமணிக்கு யூட்டினால் சாரணை ஒன்று.

பார்த்திடீர் உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும் பாங்கான தாது
வகை அருபத்திநாலும் - பார்த்திடீர் லவணமொடு காரசாரம் அப்
பனே யிருபத்தியைந்தும் - சேர்த்திடீர் நவலோகம் பதினொன்றும்
சிறப்பான நவரத்தினம்ஒன்பதுமே மைந்தா-போர்த்திட ரித்தனையுஞ்
சூதத்தூட்டிப்பொலிவாக விடுவித்தால் சாரணை தானென்றே 719

## சாரணை குளிகைவேகம்.

ஒன்ருன சாரணைக்கு யித்தனையுமில்லாட்டால் உத்தமனே குளிகைக்கு வேகமில்லை - ஒன்ருன சாரணையைத் தீர்த்தசூதம் ஓடுமே சங்கவரை வேதைதானும் - ஒன்ருன சாரணையைத் தீர்த்த சூதம் உண்டாக்கால் கடுங் காயசித்தியாகும் - ஒன்ருன சாரணையைத் தீர்த்த சூதம் யுத்தமனே பாலரசமாக்கக் கேளே 720

கேளப்பா குளிகையைத்தா னுடைத்து நன்ருய் கெடியாக தலைருதுவை விட்டுஆட்டி - வாளப்பா யிந்திடைக்கு சவ்வீரம் போட்டு வாகாக அரைத்து நன்ரு யதிலே கேளு - நீளப்பா அமூரியிட்டு யிஞ்சிச்சாறும் நேராக முலைப்பாலும் விட்டுஆட்டி - தாளப்பா பூரமது நாலிலொன்று தாக்கி யிதிலரைத்து வொருகிளிபோற் கட்டே

## வாலரசம்.

கட்டியதோர் கிளியெடுத்து டோலை போல்விட்டு கலந்துபார் பழங்காடி நிறம்பநீயும் - மொட்டியதோர் தீயெரிப்பாய் தினந்தான் மூன்று யுத்தமனே குளிகையது வாலைரசமாகும் - வட்டியதோர் வாலையிலே தங்கங்கூட்டி மைந்தனே பொட்டொன்று கொப்பரைக்குப்போட்டு - நெட்டியதோ ரணல் காட்டத் தங்கமாகும் நேராகத் தாம்புரமும் பரிசமாமே 722

ஆமப்பா வாலைதனை பொற்குருவால் கட்டி யப்படியே பின்பொருக்கால் வாலையாக்கி - ஓமப்பா வாலைக்குச் சாரணையைத் தீர்த்தாலுத்தமனே வாசனைக்கு கொப்பரைதான் பொன்னும் - தாமப்பா பின்பொருக்கால் குருவிட்டுக் கட்டி - சாதகமாய் பின்பொருக்கால் வாலையாக்க - காமப்பால் வித்தையென்ன யிதற்கு யீடோ காணுமிந்தப் படியேழு திரந்தான் பண்ணே 723

பண்ணினல் வாலையது சங்கமோடும் பணபேதி க்ஷணபேதி சத்தபேதி-பண்ணினல் சித்தர்கள்தான்பண்ணவேணும் பசாசுகளோ வுலகத்திற் பண்ணப்போருன் பண்ணினு லிதற்குள்ளே ரசமூட்டிப் பாரு பறக்கிறதோர் கமலிமுதற் சொரூபமாகும் - பண்ணினு லிதின் போக்கு சித்தருக்கே யல்லால் பாங்காண வுலகத்தோற் காகாவாரே

## தங்கபீசம்.

வாகாக பீசங்கள் செய்யக்கேளு வகையாக தங்கமதை பீசம் பண்ண - பாகாக தங்கமொரு பலந்தான் போட்டு பாச்சிந்த யிடைக்கொக்கச் செம்புதானும் - தாகாக நிமிளையொடு கெந்தி லிங்கம் சமனகக் கூட்டியிதைப் பொடியாய்ப் பண்ணி - யேகாக யிதற்குள்ளே காரங்கூட்டி யிதமாக தங்கமொடு செம்புருக்கே 725

உருக்கியே பொடிதூவி மேலேகேளு உயர்வாக வார்த்திடுவாய் புங்கனெண்ணை - நோக்கியே கிருவணத்தை யிட்டுநன்றாய் நுகரவே பொடிதூவி யூதுவூது - ஆத்தியே செம்பற்றுத் தங்கந்தானு மருணன்போல் நிறமாகு மேமபீசம் - தாக்கியே யிப்பீசம் வேதைக் காதி சகலத்துக் கிப்பீசம் தாக்கியாட்டே 726

கிருவணமென்பதை பின் எழுதப்படும். R. M. K.

ஆட்டுகிற துறைக்கெல்லாம் பொன்கூட்டச் சொல்லி யறைந் திட்ட முறைக்கெல்லா மிதனைக் கூட்டு - ஒட்டுகிற தங்கமிட்டால் வேதை கொஞ்சம் உத்தமனே சாஸ்திரத்தைப் பொய்யென்றெண் ணாதே மூட்டுகிற அஞ்சினமாம் பீசஞ் சொல்வேன் மூதண்ட அயத் தோடுகாந்தங்கேளு - நீட்டுகிற அப்பிரகம் செம்பு தங்கம் நேராகக் கூட்டியிதை யுருக்கிடாயே 727

## அப்ரேக பீசம்.

சித்தர் சூரணம் செய்யும்விதம் 164-ம் பக்கம் பார்க்கவும்.

உருக்கயிலே சித்தரென்ற சூரணத்தை யுத்தமனே தூவி யிதை யூதுவூது - மருக்கயிலே திரிவங்கம் கூடப்போட்டு மாட்டி யல்லோ அஞ்சோடே பொடியைத்தூவி - அருக்கயிலே யுருகியது சத்தாய் நிற்கு மப்பனே அப்பிரேக பீசமாச்சு - குருக்கயிலே யப் பிரேக பீசஞ் சொன்னேன் சார்வான வெள்ளியுட பீசங்கேளே 728

## வெள்ளி பீசம.

கேளப்பா வெள்ளியொடு நிமிளை தானும் கெடியான வைக் கிருந்தங்கருத்தவங்க - மாளப்பா செம்போடுஅஞ்சினமுங்கூட்டி யப் பனேயுருக்கையிலே சித்தர்பொடிதூவு - நீளப்பா கசடற்று வெள்ளி தானும் நேராகப் பீசமாய் நிற்கும் நிற்கும் - நாளப்பா ரசிதமென்ற போக்குக்கெல்லாம் நலமான வெள்ளியுட பீசங்கூட்டே 729

## காந்த பீசம்.

கூட்டவே காந்தத்தின் பீசங்கேளு கொடியதொரு செம்போடு அயமுங் காந்தம் - நீட்டவே கார்முகியும் பித்தளையுங்கூட நேராக வுருகையிலே சித்தர் பொடிதூவு - நாட்டவே யூதிடவு மாசியற்று நலமானகாந்தமது மணியாய் நிற்கும் - மாட்டவே யிதின்பேரு காந்த பீச மப்பனே அயபீச மரையக்கேளே 730

## அய பீசம்.

தானென்ற அயத்தோடு வங்கஞ்செம்பு சாதகமாய் திராவோடு தொட்டிகூட்டி - வேனென்று யுருகையிலே சித்தர் தூளை விளங்கியே தூவிடவுமாசியற்று - கோனென்ற அயமதுவும் பீசமாகுங் குறிப்பா னஅஞ்சுவகை பீசத்துக்கும் - கானென்ற பத்துவிசை யிப்படியே சேர்த்துக் கலந்திட்டு சூரணமும் பத்துவிசைபோடே 731

போடப்பா யிட்டதெல்லா மற்று நன்றாய்ப் புகழாகவஞ்சின மும் பீசமாகும் - நீட்டப்பா பீசமென்ன வென்றாயானல் நேரான பீசமெல்லாஞ் செம்பு வர்ணம் - மாட்டப்பா அஞ்சுவகை பீசந்தானு மருணனைப்போல் நிறமாகும் செம்புமாகும் - மூட்டப்பா பீசமிடு வென்றதுறைக் கெல்லாம் யுத்தமனே யிதுபீச மறிந்துகொள்ளே 732

## சித்தர் சூரணம் செய்யும் விதம்.

அறிந்துகொள்ளு அஞ்சுவகை பீசத்துக்கு மப்பனே தூவிடவே சித்தர் தூளை - நெறிந்துகொள்ளு கெந்தியொடு மாலின் தேவி நேரான துரிசியொடு சிலைபும்லிங்கம் - மறிந்துகொள்ளு பூளுக கற்பூரச்சிலை மகத்தான நிமிளையொடு அன்னபேதி- செறிந்து கொள்ளுமப்பிரேகம் ரசவர்த்தம் சிறப்பான கல்க்காவி காந்தமாமே 733.

ஆமப்பா வைக்கிறாந்தங்காவி தானும் அப்பனே நவச்சாரம் சத் திச்சாரம் - நாமப்பா யெவட்சாரம் சதிரக்கள்ளியுப்பு யுத்தமனே கடல்நுரையும் கூடச்சேர்த்து - சேமப்பா யிதுவெல்லாம் சமனாய்க் கூட்டித் திறமாகப் பொடிசெய்து வைத்தாயானல் - சாமப்பா சித்த ருட சூரணந்தானென்பார் சாதகமாய் கிறாவணமும்தாக்கிப்பாரே 734

பாரப்பா சூரணந்தான் கிறாவணத்தோடு பரிவான புடமருந்தும் சாரணைக்காகும் - நேரப்பா யிப்பொடிதான் பிண்டத்துக் கொக்கும் நேராக யிதினலே பீசமாச்சு - சீரப்பா பீசமென்ன தங்கச்செம்பு சிறப்பான அயச்செப்பு காந்தச்செம்பு - தூரப்பா தாரத்தின் செம்பு மாகும் சுகமான வப்பிரேகச் செம்புதானே 735

## புடமருந்து.

சூதமணி சாரணை செய்ய குகையும் குகைக்குள் பூசும் மருந்தும் சூதங் கட்டி சத்தூட்டும் சாரணை செய்யும்முன் ரசமணிக்கு சகலசத்துகளை யும் சாப்பிடும்படி காலாக்கினி போல் பசியை யுண்டாக்க வேண்டும். அதற்காக முதலில் பூநாகசத்தை யூட்டவே ண்டும். கட்டிய சூதம் 0 பூநாகசத்து 10 புடமருந்து 1 • போட்டு ஷெ குகையில் உருக்கினல் பூநாகசத்தை சூதமுண்டுவிடும். புடறஜன் என்ற புடமருந்தின் வல்லமையால் சத்துகளை சாப்பிடுகிறது. என்று சொல்லப்பட்டிருப்பதால் புடமருந்து செய்யும் விதமும் சாரணை விபரங்களும் சட்டமுனி நிகண்டிலும் போகர்7000 2காண்டம் குளிகைசாரணை என்பதை பார்த்துக் கொள்ளவும்.

R. M. K.

## சூதச் சாரணை.

தானென்ற சூதத்திற் சாரணையைக்கேளு சமத்தான உபரசங் கள் நூற்றிரண்டு பத்தும் - வானென்ற பாஷாணம் அருபத்தினாலும் வாசான நவலோகம் பதினென்றும் போட்டு-கானென்ற வஞ்சுவகை பீசமிட்டு கைமுறையாய் ரெத்தினங்கள் ஒன்பதையுமிட்டு - தேனெ ன்ற கடசியிலே தங்கச்செம்பிட்டு தீர்த்தாக்கால் சித்தரென்ற பேருமாச்சே 736

ஆச்சப்பா சூதத்திலிருநூத்திருபத்தொன்பதும்அணைத்தல்லோ விடுவித்தால் குளிகையாச்சு - போச்சப்பா அண்டாண்ட பதமெல் லாங்காட்டும் பொலிவான சாரணையைத் தீர்க்கத்தீர்க்க - மூச்சப்பா ஆடுமுன் சங்கவரையோடும் முழித்த கண்ணை மூடுமுன்னே கோடி சங்கமோடும் - வீச்சப்பா தேகமது கண்டிப்பற்று விளங்கியதோர் சோதி மயமாகுந்தானே 737

சோதியென்ற குளிகையைத்தான் செய்தவனே சித்தன் சுக மாக வுண்டுடுத்து சையோகித்து - வாதியென்று பேரெடுத்து வே தை போட்டு மயக்கமா யோனியிலே மாண்டானானால் - சாதியென்ற வர்ணமற்று செனிப்பானென்று சதாசிவன்றான் சொன்னபடி சாஸ் திரமுஞ் சொல்லும் - காதியென்ற காயசித்தி பண்ணினாக்கால் கானகத்தின் சித்தனென்ற நாமமாச்சே 738

நாமமென்ற அஞ்சுவகை பீசந்தானும் நலமான செந்தூரக் களங்குபண்ணு - காமமென்ற வித்தைக்குரெட்டிப்பாடும்காயசித்தி லோகசித்தி கவனசித்தி - தாமமென்ற துரைதோறு மிதுவே பீசம் தாகிக்கு முப்போடே தாக்கிப்பாரு - வாமமென்ற வித்தையல்லோ வாதத்துக்காதி மகத்தான பீசமிது வர்ணந்தானே 739

## படிகச்செய்பு.

வர்ணமென்ற படிகத்தைச் செம்புசெய்ய வாகாகச் சொல்லு கிறேன் கேளு கேளு - வர்ணமென்ற படிகமது பலந்தான்பத்து வா காகப் பொடிசெய்து யதிலே கேளு - வர்ணமென்ற வெண்காரம் பலமோவஞ்சு மருவு மாவரைவேர் பலமோபத்து - வர்ணமென்ற அழிஞ்சிவேர் பலந்தான் பத்து மாட்டுதற்கு குமரிவேர் பலந்தான் பத்தே 740

பத்தாக அரைத்ததெல்லா மதிலே கூட்டி பாங்காக மூன்று வகை மித்திரமுங் கூட்டி - கொத்தாகக் குகையிலிட்டு உலையில்வைத்து கொட்டியல்லோ கரிபோட்டு குமுறவூது - மத்தாக யிப்படிதான் மூன்றுதிரமூத மகத்தான படிகமது மாப்போலாகுஞ் சித்தான மாவுக்குச் சரியாய்ச் சூதம் சேர்த்தல்லோ பழச்சாற்றா லரைத்திடாயே 741

அரைக்கையிலே யெட்டிலொன்று குடோரி போடு யப்பனே அஞ்சுவகை மித்திரமும் போடு - தரைக்கையிலே துரிசியொடு காரம்போடு சார்வாக யுநட்டியதின் கீழுமேலும் - நிரைக்குகை யில் குதிரையுட குளம்பு போட்டு நேராகச் சில்லிட்டு வூதுநன்றாய் திரைக்கையிலே யுருகியது செம்புமாகும் செப்பரிது செப்பரிது படிகச்செம்பே 742

குடோரி முறை பின் எழுதப்படும் R. M. K.

செம்பாக நின்றதென்ன சிவசத்திக் கூறு சிறப்பான படிகத் தின் செம்பதொன்றை-செம்பாக தங்கமது நூற்றுக்குள்ளே யூட் டினால் தங்கமது செம்புமாகும் - வம்பான பறிச்செம்பை வெள்ளி நூறில் மாட்டொன்று வெள்ளியது செம்புமாகும் - கொம்பானவிச் செப்பு கருநாகம் நூற்றிற் கூட்டொன்று கருநாகம் செம்புமாமே ()

ஆமப்பா கருநாகச் செம்பதொன்றை அப்பனே நூறிடையாம் நாகத்தூட்டு - வோமப்பா களங்காகும் நாகந்தானும் யுத்தமனே களங்கொன்று ரவிதா நூறில் - தாமப்பா யிட்டவுடன் தங்கமாகுஞ் சார்வாக நவலோக மிப்படியே பொன்னும் - நாமப்பா யிக்களங்கு குன்றியுண்ண நமனில்லை மண்டலத்தில் காயசித்தே 744

## நாகக்களங்கு.

சித்தான படிகத்தின் செம்பதொன்று செயரசந் தானென்றிட்டு யுருகும்போது - மத்தான தங்கமொன்று கூடயிட்டு வளமாக யுருக் கியிதை மணியாய் வாங்கி - பத்தான கெந்தியிந்த யிடையே போட்டு பாங்கான பொற்றிலையின் சாற்றாலாட்டி - கொத்தான வயக்குகையி லடைத்துமூடி கொள்கியிதைப் புடம்போட சிவந்துபோமே 745

## தங்கச்செப்பு.

சிவந்து நின்ற செந்தூர மாயிர்த்துக்கொன்று சேர்த்தாக்கால் தங்கமது செம்புமாகும் - கவந்து நின்ற செம்பெடுத்து வெள்ளியிற் தான் காட்டப்பா வாயிரத்துக்கொன்று பொன்னும் - தவந்துநின்ற மாத்தென்ன நாற்பத்தஞ்சு - சாதகமாய்ச் செந்தூரங் காணியிடை யுண்ண - பவந்துநின்ற பட்சத்தில் அருணன்போலாம் பாங்கான படிகத்தின் வேகந்தானே 746

வேகமென்ற படிகத்தின் செம்பதொன்று விளங்கியதோர் பறி யினுட செம்பதொன்று - பாகமென்ற காந்தத்தின் செம்பதொன்று பாங்கான அயத்தினுட செம்பதொன்று - வாகமென்ற பூநாகச் செம்பதொன்று மகத்தான நிமிளையுட செம்பதொன்று - மோக மென்ற முட்டையுட செம்பதொன்று மூதண்டச் சங்கதின் செம்ப தொன்றே 747

# 21-வகை செப்பு பாத்திரம்.
## 7-நாளில் காயசித்தி.

ஒன்றான கௌரியுட செம்பதொன்று யுத்தமனே கெந்தியுட கபரி என்று 2-எட்டில்
செம்பதொன்று - நன்றான ருஜவற்றி செம்பதொன்று நலமான மயூ ரத்தின் செம்பதொன்று - கன்றான மனோசிலையின் செம்பதொன்று காணப்பா கல்நாரின்செம்பதொன்று - பன்றான கருங்கல்லின் செம் பதொன்று பாங்கான வயிரத்தின் செம்பு தானே 748

தானென்ற நாகப்பச்சைச் செம்பதொன்று சாதகமாய் காரீயச் செம்பதொன்று - ஊனென்ற மனுஷருட அஸ்திச் செம்பு வுத்த மனே யிந்திரமாங் கோபச்செம்பு-கானென்ற வாமையுட வோட்டின் செம்புங் கைமுறையா யிருபத்துஒன்றுமாச்சு - வேனென்ற வகை வகைக்குப் பலமே கூட்டி விளங்கயிதை மூசையைப்போலுருக்கி வாரே 749

வார்த்ததொரு குகைக்குள்ளே வஸ்துவார்த்து ஆயியுட பாத த்திற் பூசைபண்ணி - யோர்த்தபடி யர்ச்சித்துபானம் பண்ணு யேழு நாள் கொண்டிடவே காயசித்தி - கோர்த்ததொருசக்கரங்களாறுங் காணுங் கூப்பிட்டா லுன்மனையுங் கூடப்பேசு - மார்த்ததொரு மன மடங்கும் வாசிதானும் மகத்தான பாத்திரத்தின் பானந்தானே 750

# 21-வகை செப்பு
## மூசையில் செய்த செந்தூரம்.
## லட்சத்துக்கொன்று பாயும்.

தானென்ற மூசையிலே செந்தூரிக்கச் சாதகமாய்ச் சொல்லு கிறேன் கேளு கேளு - கானென்ற நாகமிட்டுச் சூதம் போட்டுக் கையோடே தங்கபீசமிட்டுக் கெந்திபோட்டு-வேனென்ற வீரமிட்டுச் சிலையுமிட்டு விளங்கியதோர் வாலுகையின் மேலே வைத்து - கோ னென்ற தீயெரித்து யுருக்கும்போது குறிப்பாகக் கல்லுப்புசற்றே போடே 751

போட்டல்லோ அபத்துடுப்பால் கிண்டக் கிண்ட பொலிவாக நீர்வற்றி செந்தூரமாகும் - மூட்டல்லோ செந்தூரம் லெட்சத்துக் கொன்று மூதண்டமாத்தேது அறுபத்தாறு - நீட்டல்லோ நவலோக முபாசமும் பொன்னும் நேரான வஸ்துவித்தை யி த ற் கு யீடோ - ஆட்டல்லோ வெகுசுறுக்கு மூசையாட்டு யாடுவதார் சிவயோகியாடு வாரே 752

## ஷை மூசையில் 7-வித நாகக் களங்கை செந்தூரம் செய்தால் கோடிக்கு ஒன்று பாயுமெனல்

ஆடுதற்கு செந்தூரமிப்படியே மைந்தா அயநாகம் பொன்னாகம் வெண்ணாகத்தோடு - ஓடுகிறகருணாகம் கெவுரிநாகம் யுத்தமனே
(சபரி—என்பது துத்தம்) சபரிநாகம் என்று 2-ஏடு
சென்னாகம் காந்தனாகம் - நீடுகிற விதுவேழும் முன்போல் பண்ணு.
நிறைநிறையாய் வேதையிது கோடியோடும் - மூடுகிற மேகம்போல் களங்குமாகும் மூதண்டச் செந்தூரமாகும் பாரே 753

பொன்னாகம்—தங்கம். சென்னாகம்=செம்பு

## சூதக்கட்டு.

பாரப்பா மூசையிலே சூதம்வார்த்து பரிவாக நூற்றிலொன்று தங்கபீசமிட்டு - நேரப்பா வாலுகையிற் வைத்தெரிக்க நிலையாகச் சூதமது கட்டிப்போகும் - சேரப்பா குளிகைக்காங் காயசித்திக்காகுந் திறமான செந்தூரக் குருவுக்காகும் - போரப்பா சுண்ணம்பும் களங்குமாகும் பூட்டலாங் கவர்கோடி பூட்டலாமே 754

பூட்டியதோர் × மூசையைப்போல் செம்பெல்லாந் தூக்கிபுகழான இருபத்தோர் செம்புங் கூட்டி - நாட்டியதோ ரிந்திடைக்குச் சூதம் சேர்த்து நலமாகச் சூதமிடைத் தங்கமிட்டு - யாட்டியதோ ருருக்கி நன்றாய்க் கல்வத்திட்டு அந்திடைக்குக் கெந்தகந்தான்ரெட்டிப்பிட்டு கூட்டியதோர் பொற்றிலையின் சாற்றாலாட்டி குறிப்பாக வயக்குகையில் வைத்துமூடே 755

ஆதிநூலில் × மூசையைப்போல் என்றிருப்பது தப்பு
மூசையுடன் என்றிருக்கவேண்டும் அதாவது
7-நாகக்களங்கு மூசையுடன் 21-வகை
செம்பும் கூட்டி என்றிருக்கவேண்டும் என்று
நமது ஆராய்ச்சியில் தெரிகிறது. ஆர். எம். கே.

மூட்டியல்லோ சீலைசெய்து கெஜபுடமாய்ப்போடு முகுந்தனுட தங்கைக்குப் பூசைபோடு - நீட்டியல்லோ யீசானம் நிற்வாணி போற்றி நேராகவெடுத்தவுடன்செந்தூரமாகும்-நாட்டியல்லோ தினங்காணி செந்தூரமுண்ண நலமாகத் தினமேழிற் காயசித்தி ; பூட்டியல்லோ செந்தூரங் கோடிக்கொன்று வுத்தமனே நவலோகத்தோடுந் தானே 756

ஓடுமேமாத்தென்ன நூற்றிரண்டு உத்தமனேசெம்புபோல் நிற மாய் நிற்கும் - மாடுமே அண்டரண்டம் வேதை தானும் ஆடுகிற கவர்கோடி தொந்தங்கோடி மூடுமே யண்டமெல்லாம் விரித்து ஆட மூச்சற்ற வெளிபோல் முடிவு காணும் - மூடுமே மகத்தான செந் தூரத்தை நிலைத்துண்டால் சட்டை கக்கும் நினைவாய்ப் பாரே 757

## ஞானம்.

நினைவாலே நினைவுகொண்டு மூலம்பாரு நேராக வாறுதலமோட்டி ப்பாரு - நினைவாலே மேல் மூலத்திலிருந்து கொண்டு நிற்மலமாம் நிஷ்களத்தை நோக்குநோக்கு - நினைவாலே நினைவழிந்து நேரப்பண் ணும் நேர்ந்தபின்பு நீயென்ற நாமம்போச்சு - நினைவாலே நினைவொ டுங்குங் காரணத்தைப்போல நேரான செந்தூரமாடுந் தானே 758

## சூதபணி சாரணைக்கு குகைக்குள் பூசும் மருந்து

தானென்ற சாரணையைத்தீர்க்கும்போது சாதகமாய்மூசைபிலே பூசக்கேளு - கோனென்ற கெந்தகமுஞ் சிலைபினோடு குறிப்பான பூநாகம் நிமிளை தானும் - வேனென்ற காந்தமுடனைந்தும் மைந்தா விளங்கியதோர் சமனாகக் கூட்டிக்கொண்டு - வானென்றகஞ்சாவின் விரைத் தைலத்தோடு வாகான மாதவிடாய் ரோமமீரே 759

நீராலே யரைத்ததைந்தும்குகையிற் பூசி நேராகச் சூதமிட்டுச் சார ணையைத் தீர்ந்தால் - ஆராலேபிடிகொள்ள மகண்டவீதி ஆடுமே நிற் குணத்தை யந்தாவென்று - பேராலே கட்டியதோர் சூதந்தன்னை பிரவாகச் சாரணையைத் தீர்க்கானாகில் - ஊரிலே வாழ்ந்துடுத்திச் சாவான் வாதி உற்றதொரு சாத்திரத்தைத் தேடார் தானே 760

## சகலத்திலும் சத்தெடுக்க 8-வகை மித்திர விபரம்.

அப்ரேகச்சத்து, காந்தச்சத்து, அயச்சத்து கெந்தகச் செம்பு பூநாகச்செம்பு மயிலிறகுச்செம்பு, இந்திரகோபச் செம்பும் செம்புச் சத்துள்ள ஈய சத்துள்ள மூலிகைகளில் அவைகளைப் பிரித்தெடுக்கவும் இம்மித்திரங்கள் சேர்த்து செய்யவேண்டும். ஆர் எம். கே.

தேடாத மித்திரத்தைச் சொல்லக்கேளு செப்பியதோ ரேக மது வெண்காரந்தான் -காடாதரண்டதுவே காரசாரம் நல்கியதோர் மூன் றதும் படிக்காரம் குன்றி - சாடாக வெண்கருவோடாக மூன் றே சாதகமாய் நாலுவகை மித்திரத்தைக் கேளு - யூடாத யிந்துப்பு சாரத்தோடு உத்தமனே வெண்ணெயொடு மெழுகு தானே 761

தானென்ற குன்றியொடு காரந்தேனும் சாதகமாய் வெல்லமொடு நெய்புங்கூட - கானென்ற மித்திரங்களைந்துமாச்சு கரையாக வேழுவகை மித்திரத்தைக் கேளு - வூனென்ற துருசோடுகாரசாரம் வுத்தமனே சவுக்காரம் தாளகமும் ரெங்கும் - கோனென்ற வீரமொடு யேழுமப்பா கொடுஞ்சாறுக்கு யுருக்கினத்துக் காதி தானே

ஏழைவிட்டுப் பதினொன்று சொல்லக்கேளு யிதமான வெள்ளை

ஒரு எடுடில் வெண்ணே

யொடு குன்றி காரம் - வாழையுட பழந்தானும் சர்க்கரையும் சாரம் நலமான யேரண்ட வித்து பிருவினெச்சம் - காளைவிட்டபழங்காடி குக்கிலோடு மெழுகு - கைவிட்டப் பதினொன்று மித்திரந்தானப்பா தாளையிட்ட இருபத்து ஒன்றை சொல்வேன் தாழ்வாகக்கேள் மக்காள் சாற்றுறேனே 763

சாற்றுகிறேன் வரத்தவளை கம்பிளியுங் குக்கில் சார்வான முயலெலும்பு காரசாரம் - போற்றுகிறேன் யானைதந்த மெருமைக்கொம்பு புகழான குதிரையொடு குளம்பு சீவல் - ஆற்றுகிறேன் சவுக்காரம் தாளகத்தினோடு அப்பனே வீரமொடு ரெங்குதானும் - மாற்றுகிறேன் மெழுகோடு குன்றிதானு வழகான கலங்கொம்பு முட்கொளுஞ்சி வேரே 764

வேரோடே யெரிகாலன் வித்துங்கூட்டி விளங்கியதோர் பேய்ப்பீர்க்குப்புரசம்வித்து -தாரோடே வெள்ளைப்பாஷாணத்தோடு சாதகமாய் இருபத்து ஒன்றுமாச்சு - தீரோடு சமனாக இடித்து நன்றாய் சொற்பெரிய பீங்கானில் வைத்துக்கொண்டு - போரோடு வுபரசங்கள் நவலோகங்கள் புகழாக மூலிகையிற் கலந்து ஆட்டே 765

ஆட்டயிலே சத்தாகும்வுபரசங்களெல்லாம் அப்பனே நவலோகந் தண்ணீராகும் - யூட்டையிலே மூலிகைகள் செம்புமாகும் உத்தமனே கடுஞ்சரக்கு மெதுவேயாகும் - நீட்டயிலே யுதகத்தில் போட்ட சரக்கையெல்லாம் நேராகவெவ்வேறே யுருக்கியாட்டு - மீட்டயிலே யினங்கண்டு மீட்டியாட்டு மூதண்ட மாட்டிவிக்கு முருக்கினத்தைபாரே 766

## கெந்தகக் குருசெயநீர்.

பாரப்பா கெந்தகத்தின் குருவைச் சொல்வேன் பாங்கான கெந்தகந்தான் பலமதொன்று - நேரப்பா கட்டியாய் நிறுத்துக் கொண்டு நேராக யிதற்கிடவுங் கவசங்கேளு - தாரப்பா சாரமொன்று வெடியுப்பொன்று தன்னோடு பூநீருதானுமொன்று - தூரப்பா யிந்துப்பு தானுமொன்று துடியான சூடனரைதானுங்கூட்டே 767

சகல சரக்கையும் சத்துருவால் கொன்று மித்துருவால்
செயமே செய்ய வேதையாகும். ஆர். எம். கே.
சூதத்திற்கு கெந்தகம் மித்துரு.

## சூதம் கட்ட கெந்தகக் குரு.

கூட்டியதை யரைத்து நன்ருய் பனியில் வைக்க கொப்பளித்து ச்சலமாகும் செயநீரப்பா - மாட்டியல்லோ செயநீரில் கெந்தகத் தைத்தோய்த்து வாகாக ரவியிலே போடு போடு - நீட்டியல்லோ பதிஞேர் நாள் காய்ந்த பின்பு நேராக யிதின் மேலே கவசங்கேளு - பூட்டியல்லோ சவுக்காரச் சுன்னத்தோடு புகழாக வீரமொடு சீனமாமே 768

ஆமப்பா முன்னீரா லரைத்துக் கட்டி அடைவாக வெய்யலிலே புட்சம்போட - வேமப்பா மஞ்சளரும் கெந்திதானும் விளங்கியதோர் கெந்திக்குப் பாதிகேளு - தாமப்பா ஆடுதின்ஞப்பாளேயுப்பு தன்னே டே போட்டரைத்து யுண்டைகட்டி - ஓமப்பா ரவியினுள்ளே காயப் போட்டு யுத்தமனே சீலைசுத்தி நூலுஞ் சுத்தே 769

சுத்தியதோ ருண்டையின் மேல் கவசங்கேளு சுகமான சீந்தியுட சத்தைக்கட்டி - அத்தியதோர் பாண்டத்திற் சீந்திச்சாறு அமர விட்டு வேடுகட்டி மேலுண்டை வைத்து - மத்தியதோர் மேல்மூடி யடுப்பிலேற்றி வாகாக யிருசாமந் தீயைமூட்டி - பத்தியதோர் பிட்டாக வெந்த பின்பு பாங்கான புட்டெடுத்து யுலரப்போடே 770

உலர்ந்த பின்பு புட்டெடுத்துக் கிளிபோற்கட்டி யுத்தமனே மாதளேயின் விரைத்தைலம் பூசி - உலர்ந்த பின்பு புகை போக்கிக் குள்ளேகட்டி அப்பனேவிரைத்தைலம் தினமும்பூசி - கலர்ந்த பின்பு அஞ்சுநாள் கடந்தே நீயும் காணப்பா யிதையெடுத்து கல்வத்திட்டு மலர்ந்த பின்பு குமரிச்சார் விட்டு ஆட்டு வாகாகச் சாமமைந்து அட்டிடாயே 771

## தீநீர்க் கடுகு.

ஆட்டியதோர்மருந்தெடுத்து பீங்கானிலப்பி அப்பனே தூட்டி கட்டி பீங்கான் தூக்கி - நீட்டியதோர் தட்டொன்று கீழே வைத்து நேரான தைமாசம் பனியில் தூக்கு - யூட்டியதோர் கசிந்திளகி சலமாய் வீழும் யுத்தமனே கரைந்ததெல்லாம் வீழ்ந்த பின்பு - நாட்டியதோர் ரவியில் வைக்க சலமெல்லாம் வற்றி நாதமென்ற கெந்தகந் தான் குருவுமாமே 772

## சூதக்கட்டு.

குருவான கெந்தகத்தைச் சூதத்திற்போட கூப்பிட்டு யானை யைப்போல் கட்டிப்போகும் - தருவான பாஷாணம் பூசிவாட்ட சமு சயங்களொன்றுமில்லை மணிபோலாடும் - திருவான சூதத்தில் சுன் னங்கோடி செந்தூரங் களங்கு முதற் குருவோ கோடி - மருவான குளிகையொடு வசியங் கோடி மகத்தான வறுபத்துநாலுங் கேளே()

கேளப்பா சரக்கிலே மெழுகு கோடி கெடியான் களங்கு முதற் சுன்னங் கோடி - நாளப்பா யுருக்கின முஞ் செயநீர் கோடி நலமான கட்டினமும் பரிசின முங்கோடி - தாளப்பா பாஷாணக்கவரோகோடி. சாதகமாய் வாங்குகிற சத்தோ கோடி - நீளப்பா இழுத்ததெல்லாம் நீளவாடும் நேரான கெந்தியுட வேதை தானே

## தங்கக்குரு.

வேதையென்ன முன்கெந்தியுடன் சூதங்கூட்டி விரைந்தரைத்துப் புடம்போடக் குருவுமாகும் - பாதையென்ன நவலோக மாயிரத்துக் கொன்று பாச்சினல் பதினென்று மாத்த த்தங்கம்-கோதையென்ன சூதத்தைக் குன்றியுண்ண - குமட்டியல்லோ சட்டை கக்கி காயசித் தியாகும் - பேதையென்ன கற்பமிது வானேருண்டார் பேருலகி லெமனுண்டா னறிந்திடாயே 775

அறிந்திட்ட சூதமென்ற குருவினேடு அப்பனே வீரமிட்டுப் புனுகுங் கூட்டி - மறிந்திட்ட தங்கத்திற் பூசிப்போட மகத்தான குருவாகுந் தங்கந்தானும் - பரிந்திட்ட பரிக்குருவை ரசத்திற்போட பிரளாமல் ரசமதுவும் கட்டிப்போகும் நெறிந்திட்ட சூதத்திற் குளி கை கோடி நேரான துரைகோடி யறிந்திலேனே 776

## துருசுகுரு.

அறிந்திலேன் பரியான குருவினேடு அப்பனே வீரமொடு புனுகு கூட்டி - நெறிந்திலேன் துருசியின்மேல் பூசிப்போட நேராக ரவி பட்டு சுக்காகும் - மறிந்திலே னேந்துசுன்னக் குகையிலூது மகத் தான குருவாகும் துருசுதானும் - பறிந்திலே னிக்குருவில்சவ்வாது காரம் பாய்ச்சிடவே சரக்கெல்லாம் மணிபோலாமே 777

## கெந்தகச்சுன்னம்

மணியான முருக்கினத்தில் வேதை கோடி மாட்டுகிற துரை கோடி கவுரே கோடி - கணியான செந்தூரஞ் சுன்னங்கோடி கை விட்ட செயநீரும் மெழுகு கோடி - தனியான நீற்றின முங் கட்டின மும் கோடி சாதகமாய் அண்டத்தின் போக்கோகோடி - பிணியான நோய்தீரும் மருந்து கோடி பேரான துரிசியுட ஆட்டுத்தானே 778

## துருசுகுருவால் கெந்தகக் குரு.

ஆட்டான துருசியிலே புனுகுவீரம் அப்பனே மத்தித்து கெந்தகத்திலப்பி - மூட்டான ரவியிலிட்டுஐங்குகையில் வைத்து மெள்ள மெள்ள வூதிடவே சுன்னமாகும் - நீட்டான கெந்தகத்தி லுருக்கினமோ சங்கம் நேரான நீற்றினங்கள் கரையோயில்லை - பூட்டான மெழுகோடு செயநீர்போக்கு புகழரிது புகழரிது ஆடிப்பாரே 779

## கெந்தகக் குருவால் தாளகக்குரு.

புகழான கெந்தகத்திற் புனுகு வீரம் போட்டல்லோ மத்தித்து தாளகத்திலப்பி - புகழான தாளகத்தை ஐங்குகையிலூத பொருமியல்லோ மால்தேவி குருவுமாகும் - புகழான தாளகத்தில்கட்டினமோ கோடி போக்கானநீற்றினமும் உருக்கினமுங்கோடி புகழானமால் தேவியாடுமாட்டு பொற்சடையோன் சீவனத்துக்காமென்றாரே 780

## தாளகக்குருவால் வங்கக்குரு.

## வங்கசெயநீரால் சூதக்கட்டு.

ஆமென்ற தாளகத்தில் புனுகுவீரம் அப்பனேமத்தித்து வங்கத்திலப்பி - தாமென்ற புடம்போட வங்கந்தானும் சாதகமாய்க்குருவாகு மதனைக்கேளு - ஓமென்ற சாரமிட்டால் செயநீராகும் உத்தமனே செயநீரிற் சூதங்கட்டும் - வாமென்ற சரக்கெல்லாம்தோய்த்து வாட்ட மைந்தனே மெழுகாகு மணியுமாமே 781

ஆமப்பா யுபரசத்தைத் தோய்த்துவாட்ட அந்தந்த வர்ணமுமாயுருகிநிற்கும்-ஓமப்பா சூதமொடு யுபரசங்கள்தானு முத்தமனேபாஷாணம் சாரகாரம் - வேமப்பா வங்கத்தால் துறையோகோடி வெவ்வேறு விளம்ப வென்றால் நாவோயில்லை-போமப்பா அண்டாண்டம் கிழிந்து ஆடும் பொன்னாகும் வெள்ளியுமாம் போக்குத்தானே 782

## வங்கச் சுன்னத்தால் சாரக்குரு.

போக்கான வங்கத்தில் புனுகு வீரம் போட்டல்லோ மத்தித்து சாரத்திலப்பி-வாக்கான மணலில்வைத்துப் புடத்தைப்போட்டு வாங்கியிதை வெண்கருவா லரைத்துக்கட்டி - நோக்காக வஞ்சு சுன்னக்குகையிலூத நுட்பமாய்க் குருவாகுஞ் சாரந்தானும் - தாக்கான சாரத்திற் பத்தங்கமாடும் சதகோடி நவகோடி யாடுங்காணே 783

## சாரகுருவால் துருசுகுரு.

காணப்பா சாரத்திற் புனுகு வீரம் கலந்தல்லோ துரிசியின்மே லப்பிப்போட்டு - ஊணப்பா வஞ்சுசுன்னக்குகையிலூது புத்தமனே துருசியது குருவுமாகும் - தோணப்பா துருசியிலே புனுகு வீரம் பூட்டினுல் திசைபத்துங் குருவேயாகும் - தூணப்பா துரும்பாகும் துரும்பு தூணும் சொற்பெரிய துருசியுடசுறுக்குக் கேளே 784

சுறுக்கான துருசியிலே குருவோ சங்கம் துடர்ந்தேற செந்தூரங்களங்கு தானும் - மறுக்கான சுன்னமொடு செயநீரப்பா வாகான மெழுகோடு வுருக்கின முஞ் சொல்ல - முறுக்கான வேலை நீரிமைக்குப் பத்தா - மூதண்ட வாதத்துக் காதிவித்தை குறுக்கான போக்கல்ல அளவற்ற போக்கு கூவென்றால் கேளாது துரிசிக்காடே 785

## தாளகச்சத்து.

கேளாத தாளகத்தைச் சத்துபண்ண கெடியாகச்சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு - நாளாத சாரமென்ற குருவதொன்று நலமான காரமென்ற குருவதொன்று - தாளானவீரமொன்றுசவ்வாதுகூட்டி யதனோடு காரமிட்டரைத்துக்கொண்டு - வாளான தாளகத்தி லப்பியேதான் வாகான பட்சமது ரவியிற்போடே 786

## தாளகச்சத்துக் கிண்ணியில் வீரகுரு

போட்டெடுத்து அண்டத்தோல் பொடியில்வைத்து புகமூகத் தீயெரிக்கச் சத்தேயாகும் - ஆட்டெடுத்த சத்துடன்காரமிட்டுருக்க அப்பனே மால்தேவி சத்துமாகும் - நீட்டெடுத்த சத்தையெல்லாங் கிண்ணிவார்த்து நேராகக் கிண்ணிக்குச் சீலைசெய்து - ஆட்டெடுத்த கிண்ணியிலே வீரமிட்டு அப்பனே வாலுகையின் மேலேயேற்றே 787

ஏற்றியே தீயதுவும் யிதமாகத் தானெரிக்க வீரந்தானும் - மாற்றியே குருவாகி நிற்குமப்பா மகத்தான வீரமது குருவேயானல் - போற்றியே குருவோடு பரியைக்கூட்டி போட்டாக்கால் ரவியினுள்ளே புனைந்துமெல்லும் - ஆற்றியே யிக்குருவை நவலோகத்தில் ஆயிரத்துக் கொன்றிடவும் வேதையாமே 788

ஆமப்பா யிக்குருவை தொட்டுக்கொண்டு அறுபத்து நாலையுந் தான் போட வேதை - தாமப்பா தங்கமுமாம் குருவினாலே சாதகமாய் வீரத்தை தொந்தித்தேற - ஓமப்பா நூறுதொந்தங் குருவேயாகும் மூட்டினுல்நவலோகங் குருவுமாகும் . வேமப்பா அண்டமது விர்ப்பன்னத்தாட்டு விடுபட்ட மதயானை வீரந்தானே 789

சாரம் என்பது அண்டமென தெரிகிறது. R. M. K.

## தாளகசத்துக் கிண்ணியில் சூதக்கட்டு.

வீரத்தைப் போலு மந்தக் கிண்ணிக்குள்ளே வேதாந்த சூதத்தை விட்டுமூட்ட - காரத்தைக் கொடுத்தல்லோ சூதராசன் கடுஞ் சுறுக்காய் குருவாகுங் காணு காணு - பாரத்தை வைத்தெல்லாஞ் சுமந்துகொண்டு பறக்கிறதோர் குளிகையுமாம் குருவேயாகும் - ஆரத்தைக்கழற்றிவிடும் சாவுபொய்யாம் அப்பனேசூதத்திற் தங்கங் கூட்டே 790

## கோசபீசக்குருவால் வாதம் முடிந்தது.

கூட்டியல்லோ ரவியில் வைக்கத் தங்கத்தை யுண்ணும் கோசமொடு பீசமுந்தான் குருவேயாகும் . நாட்டியல்லோ சரக்கெல்லாம் வேதையாகும் நலமான யுபரசமும் வேதையாகும் - மூட்டியதோர் துறையெல்லாம் வேதையாகும் முடிந்து தப்பா முடிந்ததப்பா வாதமெல்லாஞ்-நீட்டியல்லோ தொட்டதெல்லாம் வேதையாகும் நேரான சூதத்தின் குருவினுட்டே 791

ஆட்டான குருவிலே வீசமுண்ண அப்பனே தினமேழிற் சட்டை கக்கும் - நீட்டான உலகத்தோர்க் கரகாதப்பா நேரான சித்தருண்ணப் பொருத்துப் போகும் - மூட்டான மூட்டெல்லாஞ் சூதத்தாலே மூவுலகுஞ் சுத்துவது சூதத்தாலே - நாட்டான துறையெல்லாஞ் சூதத்தாலே நலமான கிண்ணியிலே விந்தை கேளே 792

## தங்க நாகரச கெந்தி செந்தூரம் 1000-த்துக் கொன்று பாயுமெனல்.

விந்தையென்ன கிண்ணியிலே நாகரச கெந்தம் விளங்கியதோர் சிலையோடு வீரந்தங்கம் - விந்தையென்னி கிண்ணியிலே பொடித்தெல்லாம் போட்டு - விரைந்தல்லோ வாலுகையின் மேலே வைத்து விந்தையென்ன தீயெரித்துக் கிண்டினுக்கால் வேதைக்குச் செந்தூரமாகு மாகும் விந்தையென்ன ஆயிரத்துக் கொன்றேயோடும் வெகு விதமாய் செந்தூரமாகும் பாரே 793

## தாள்கச் சத்தால் அயச்சத்து அயச்சத்தால் நாகக்கட்டு நாகக்களங்கு

பாரப்பா அரப்பொடியும் பலந்தானென்று பரிவான தாளகத்தின் சத்தந்தொன்று - நேரப்பா காரமிட்டு வெருவியூத நேராக கண்விட்டு யுருகியாடும் - சேரப்பா யிந்திடைக்கு நாகந்தானும் சேர்ந்து கொண்டு கண்விட்டுநிற்குமப்போ - தாரப்பா நாகத்தை நீட்டநீட்ட சாதகமாய் பத்திடைதான் கட்டுந்தானே 794

## நாகரசதங்க களங்கு நவலோகம் பழுக்குமெனல்.

கட்டியதோர் நாகத்திற் பலந்தான்வாங்கி காரமிட் டுருக்கையி லே சமனுய்ச் சூதம் - கொட்டியல்லோ சூதத்திற் பத்துக்கொன்று கூட்டப்பா தங்கத்தை கூட்டியாட்டி - தெட்டியல்லோ சூதமிடை லிங்கம்போடு சிறப்பான லிங்கமிடை வீரம்போடு - எட்டியல்லோ வீரமிடை சிலேயைப்போட்டு யெடுத்தாக்கால் மேகம்போல் களங்க மாமே 795

களங்கெடுத்துச் செம்பிலே ஆயிரத்துக்கொன்று கலந்துநின்ற பித்தளேயில் நூற்றுக் கொன்று - களங்கெடுத்து வெங்கலத்தில் மூந்நூற்றுக்கொன்று - காட்டப்பா யிரும்பிலே நூற்றுக்கொன்று களங்கெடுத்து வெள்ளியிலே யிருநூற்றுக்கொன்று - கனிவான ஈயமிதில் நூற்றுக்கொன்று களங்கெடுத்து திருவிலே ஐம்பதுக் கொன்று காட்டினுல் பத்தரையுந் தப்பாவாறே 796

## பரிக்களங்கு.

வாறுன ×நாகம்போல் தங்கங்கட்டி மைந்தனே முன்போலமருந் தெல்லாங் கொடுத்து - தாறுன களங்கெடுத்து நவலோகத்தில் தாக்கப்பா ஆயிரத்துக்கொன்றுநீயும் - வேறுன மாற்றேது இருபத் தைந்து விடுபட்ட மதயானேபோலேயோடும் - கூறுன தாளகத்தின் வேதையின்னம் கூறுவேன் வகையாகக் கூறுவேனே 797

×நாகம்போல் தங்கம் கட்டி என்பதற்கு உரை:–

இரும்பு அரப்பொடி 1, தாளகச் சத்து 1-ம் சேர்த்து வெங்காரமிட்டுருக்க அயம் சத்தாகும் அயச்சத்து ஒரிடைக்கு சமமாகதங்கம்சேர்த்துருக்கதங்கம்கட்டும் தங்கமிடைக்கு 10க்கு ஒன்று சூதம், லிங்கம், வீரம், மனேசிலே சேர்த்துருக்க களங்காகும் இதேமாதிரி காரீயம்கட்டி களங்கு செய்யவும். வெள்ளீயம்கட்டி களங்கு செய்யவும். செம்பும் கட்டி களங்கு செய்ய வும். 794-வது பாட்டு நாகக்கட்டு. ஆர். எம். கே.

## காரீயக் களங்கு.

கூறுகிறேன் நாகம்போல் காரீயங்கட்டி கூட்டுகிற யினமெல்லாம் முன்போற்கூட்ட மாறுகிறேன்களங்காகும்நவலோகத்தில்மைந்தனே திசைமாற்று வர்ணங்காணும் - தேறுகிறேன் நாகம்போல் வங்கங் கட்டி திறமாக சரக்கெல்லா முன்போலூட்டி - ஏறுகிறேன் களங் கான பதத்தில்ப் பார்த்து எடுத்தல்லோ நவலோகத்திட்டிடாயே798

## வெள்ளியக்களங்கு.

இட்டாக்கா லாறுமுதல் பத்துங்காணும் யிதமாகக் கொடுக்த முன்னே களங்குகொள்ளும் - பட்டாக்கால் வங்கத்தின் வேதை தானும் பசுமை மெத்த பசுமை மெத்த பொன் தானப்பா - தொட் டாக்கால் உபரசங்கள் மணிபோலாடும் சொற்பெரிய பாஷாண முருகிநிற்கும் - நிட்டாக்கால் தாளகத்தில் செத்த வங்கம் நலமான வெள்ளியுமாம் தங்கமாமே 799

## செம்புக்களங்கு.

ஆமப்பா நாகம்போல் செம்பைக்கட்டி அப்படியே சரக்கெல் லாமதிலே யூட்டி - ஓமப்பா களங்காகயெடுத்துக்கொண்டு உத்தம னே வெள்ளிமுதல் நவலோகத்தில் - தாமப்பா நூற்ருென்று யிட் டாயானல் தப்பாது திசைமாற்றுதாக்கிப்பாரு - போமப்பா வேதை யிதில் சுருக்கு மெத்த பொன்னுக்குச் செம்பாதிபூட்டிப்பாரே 800

## 5-வித லோகவித்தை.

பாரப்பா அஞ்சு வித லோகவித்தை பரிவான தாளகத்தின் சத்தாலாச்சு - நேரப்பா யிரும்புச்சத்தால் புடசெயமுமாச்சு நிரை நிரையாய்களங்காச்சு வேதையாச்சு-தூரப்பா தாளகத்தை தொட்டு ஆட சுத்தரசவாதியல்லால் மற்றோர்க்காகா - ஓமப்பா வெள்ளிவித் தை ஒன்று சொல்வேன் உத்தமனேதாளகத்தின் சத்தில்தானே 801

ஷை 5வித லோகவித்தை தாளகச் சத்தாலாச்சுது என்றும் இரும்புச் சத்தால் 5 வித லோகமும் புடஜெயமாச்சு என்பதாலும் 5ம் ஓடாமல் கட்டிவிடுகிறது எனத்தெரிகிறது. நாம் மேல் எழுதிய உரை சரியான உரைஎன இனிஅறிவீர்கள். ஆர். எம். கே.

## தாளகச்சத்தால் ரசிதவித்தை.

தானென்ற வங்கமது நாலுக்குள்ளே தாளகமாம் சத்தொன்று தாக்கு தாக்கு - கோனென்ற வங்கமது உடைந்துதூளாம் கடிதான வங்கத்தை வெள்ளி நாலில் - பானென்று யிட்டாக்கால் வெள்ளி தூளாம் பாச்சப்பா வெள்ளியைத்தான் சூதம் நாலில் - கோனென்ற சூதமது குளிகையாகும் குளிகையைத்தான் குருவாகச் செய்யக் கேளே 802

## சூதகுரு

கேளப்பா புனுகோடு வீரஞ்சினம்கெடியான சவுக்காரம் பூரங் கூட்டி - நீளப்பா மணிமேலே பூசிநன்றாய் நேராக அண்டத்தோல் கீழ்மேலிட்டு - வாளப்பா புடம்போட குருவுமாகு மகத்தான குரு வைத்தான் வங்கம் நூற்றில் தூளப்பா குருவிடவும் வங்கமது வெள்ளியாகும் பதினறுமாற்றுமாமே 803

மாற்றான வெள்ளியைப்போல் நாகமாகும் மைந்தனே ஈயமு மாம் செம்புமாகும் - போற்றான குடவனோடு வெங்கலமும் வெள்ளி பொல்லாத யிரும்புமுதல் வெள்ளியாகும் - காற்றான தாளகத்தின் வாடைபட்டால் களைத்தல்லோ சூதமுதல் எல்லாஞ்சாகும் - நீற்றான நீற்றினமு முருக்கினமுமாகும நிலையான தாளகத்தின்வேதைதானே

## வேதைக்கு ரோமத்தைலம்.

வேதைக்கு ரோமமென்ற தைலங்கேளு விளங்கியதோர் கேச ரந்தான் பலமோ பத்து - மாதைக்கு மயிலிறகு பலமோபத்து மைந் தனே எள்ளுப்போல் நறுக்கிக்கொண்டு - கோதைக்கு முலைப்பாலிற் தோய்த்து நன்றாய் கூடவே போடுகிற மருந்தைக்கேளு - பேதைக்கு சாரமொரு பலந்தானஞ்சு - பேறானலவணமது பலந்தானஞ்சே 805

மூன்று என்று 2-எட்டில்

அஞ்சான கெந்தகமோ பலமுமொன்று அப்பனே வீரமொரு பலமுமொன்று - வஞ்சான சிலையதுவும் பலமுமொன்று மகத்தான வழலையது பலமுமொன்று - தஞ்சான கல்வத்தில்பொடித்துநன்றாய் சாரவே யெருக்கம்பால் விட்டேயாட்டி - மஞ்சான மயிருக்கு பிசை ந்து நன்றாய் மகத்தான ரவியினுள்ளே யுலரப்போடே 806

### அயச்செம்பு செய்ய அயம் உருக்கும்விதம்

உலர்ந்த பின்பு பூப்புடத்தில் தைலம்வாங்கி யுத்தமனே தைலத் தில் வேதை கேளு - மலர்ந்த பின்பு கெந்தகமுஞ் சிலையுஞ் சூதம் வாகான லிங்கமொடு நாலுங் கேளு - யலர்ந்த பின்பு வகையொன்று பலமதொன்று யப்பனே தைலத்திலாட்டி நன்றாய் - கலர்ந்த பின்பு காசமொரு பலமும் போட்டு கைமுறையாய் மூன்றுபங்கு பண்ணி வையே 807

பண்ணியதோர் பங்கொன்றில் அயச்சல்லி தானும் பாங்காகப் பலமாறு பிசரி நன்றாய் - எண்ணியதோர் குகையிலிட்டுருக்கி நன்றாய் யுத்தமனே மறுபங்கு மெடுத்துச் சேர்த்து - கண்ணியதோர் தாக்குலையிலூதியாட்டி கசடகற்றிப் பின்னுமொரு பங்குங் கூட்டி யண்ணியதோர் மூன்றுருக்குத் தீர்ந்த பின்பு அப்பனே அயமணியை நொறுக்கிடாயே 808

## அயச்செம்பு உயர்ந்த முறை.

நொறுக்கியதோர் அயத்திடைக்கு துருசு துத்தம் நுகரவே பொடிசெய்து தைலங்கூட்டி - மறுக்கியதோர் குகையிலிட்டுதே நன்ருய், மகத்தான அயந்தானே செம்புமாகும்- முறுக்கியதோர் செம் பதுவும் சுறுக்குமெத்த மூலிகையிற் செம்பானல் மூன்று மாற்று - தறுக்கியதோர் செம்புக்குள் வேதை கேளு சாற்றுகிறேன் லகுவாக சாற்றுறேனே 809

## அயச்செம்பு தங்கக்குகையில் நாகரசகெந்தி வீரசெந்தூரம்.

சாற்றுகிறேன் அயச்செம்பு பலந்தானென்று தன்னிடைக்குப் பாதியல்லோ தங்கமிட்டு - தோற்றுகிறேன் குகைபோல யுருக்கி வார்த்து குகைக்குள்ளே செந்தூரஞ்செய்யக்கேளு - ஆற்றுகிறேன் சூதமிட்டு நாகமிட்டு அப்பனே கெந்தியிட்டு வீரமிட்டு - மாற்றுகி றேன் சிலையிட்டு வாலுகையின் மேலே வைத்தெரித்துக் கிண்டை யிலே சிவந்துபோமே 810

## ஷை செந்தூரம் நவலோகத்தில் நூற்றுக்கொன்று தங்கமாகும்.

சிவந்ததொரு செந்தூரம் நவலோகத்தில் சேரப்பா நூற்றுக் கொன்று தங்கமாகும் - கவந்ததொரு அயக்கிண்ணிக்குள்ளேயப்பா யல்ந்திருந்த முறைபோலே செந்தூரங்கோடி - தவந்ததொரு பிள்ளை சென்று நடந்தாற்போலே சாதகமாய்ச் செம்பின் குணத்தைக் கேளு - பவந்ததொரு அயமொன்று தங்கமொன்று பரிவாகயுருக்கி யொரு தகடுபோடே 811

## அயத்தங்க தகட்டு வேதை.

போட்டதொரு தகட்டின்மேல் பூசக்கேளு புகழாக கெந்தக முஞ் சூதமிரண்டும் - நாட்டதொரு வெருக்கன்பால் விட்டேயாட்டி நலமான தகட்டின்மேல் பூசிநன்ருய் - நீட்டதொரு புடமூன்றில் நொருங்கும்பாரு நேரான வெள்ளியிலே பத்துக்கொன்றீய - வாட்டு தொரு பத்தரையே மாற்றுகாணும் அயச்செம்பின் வேதைக்கு யடுத்தவாறே 812

## அயச்செம்பு தங்கம் நாக ரச கெந்தி செந்தூரம்.

அடுத்ததொரு அயச்செம்பைச் செந்தூரிக்க அதிசியமாய் சொல்லு கிறே னறிந்துகேளு - அடுத்ததொரு அயச்செம்பொன்று தங்க மொன்று ஆட்டியதை யுருக்கியொரு மணியாய்வாங்கி-கடுத்ததொரு பொடியாக்கி வைத்துக்கொண்டு காணப்பா நாகமொன்று சூத மொன்று எடுத்ததொரு யிதரண்டுங் கூட்டியாட்டி.யிதமான அயத் தங்கம் சேர்த்திடாயே 813

சேர்த்ததற்கு யிடைக்கிடைதான் கெந்தி போடு திறமாக நாலி லொன்று சிலையைப்போடு - கோர்த்ததற்கு எட்டிலொன்று வீரம் போடுகுறிப்பாக கலந்து × அயக்குப்பிக்கேற்று -போர்த்ததுக்குச்சீலை செய்து வாலுகையில் வைத்துப் புகழாகத் தீயெரித்துப் பதத்தைப் பார்த்து - கார்த்ததுக்கு குப்பியிலே சலாக்கைப் போடு கரகரப்புக் கண்டாக்கால் தீயையாற்றே 814

× அயக்குப்பிக்கேற்று என்றிருப்பது தப்பு அயச்சேம்பு தங்கக்குகை என்பது நமது அபிப்பிராயம். R. M. K.

## செந்தூரம் 1000-க்கு ஒன்று பாயும்.

ஆற்றியல்லோ யீசானம் பூசைபண்ணி அப்பனே செந்தூர மெடுத்துப்பாரு - மாற்றியல்லோ செந்தூரம் சிவப்புமாகும்வாகான செந்தூரம் நவலோகத்தில் - போற்றியல்லோ வாயிரத்துக்கொன்றே யீய புகழான பதினைந்து மாற்று மாகும் - நேற்றியல்லோ செந்தூ ரம் தினம் குன்றிதானும் கோராகப் பாலோடே யுண்டிடாயே 815

## காயசித்தி.

உண்டாக்கால் பட்சத்தில் காயசித்தி வுத்தமனேமண்டலத்தில் கெவுனசித்தி-கண்டாக்கா லுபரசங்கள்பொன்னுமாகும் கரையில்லை அயச்செம்போ தொந்தமேற - கொண்டாக்கால் சிலைபோலே தேக மாகுங் குத்தினால் மலைதூளாய்க் குமுரிப்போகும் - விண்டாக்கா விதைவிட்டால் காயசித்தியில்லை வெகுசுறுக்கு அயத்தங்க கற்பங் தானே 816

## கெந்தகத்திரிதி.

தானென்ற கெந்தகமோ பலமோ பத்து சார்வாகக் கல்வமதி விட்டு நன்றாய் - தேனென்ற திராவகத்தை விட்டேயாட்ட திறமான லோகத்தைக் கரைத்துப்போடும் - வானென்ற பனியில் வைத்து யிருசாமமாட்டு மைந்தனே வைந்துநாளிப்படியே யாட்டி - கோனெ ன்ற திராவகத்தை தினந்தான் விட்டு குமுரவரைத்துப் பனியிலே வைத்திடாயே 817

வைத்ததொரு கெந்தகத்தைப் பீங்கானிலப்பி வாகான ரவியில் வைத்துக் காந்திகாட்டு - மொய்த்ததொரு திரிதியெல்லா மோடும் பாரு முசியாமல்திரிதியெல்லாம் வடித்துக்கொண்டு - கைத்ததொரு ரவிகாந்தி காட்டக் காட்ட கரைந்துவருந் திரிதியெல்லாம் கடக்க வாங்கி - நைத்ததொரு பரணிதனி லடைத்துக்கொண்டு நாதாந்த வேதையிதில் கோடி காணே 818

காணப்பா திரிதியிலே வேதைகேளு கடுந்தங்கம்பலமரைதான் கண்டுகொள்ளு - பூணப்பா பூநாக மயூரச்செம்பு புகழான வகை யொன்று பலமோகால்தான் - தூணப்பா ரசிதமது பலமோகாலும் உருக்கியல்லோ வொன்றேகால்பலத்தை நீதான் - நாணப்பாவாலைரச மிருபலத்திற் போட்டு வப்பனேநொருக்கி யொன்றாயரைத்திடாயே

அரைத்ததிலே தாளகமும் பலமொன்று அப்பனேசிலையதுவும் பலமொன்று - நிரைத்ததிலே கெந்தகத்தின் திரிதிவார்த்து நேராக அறுசாம மரைத்து நன்றாய் - திரைத்ததிலே யிதையெடுத்துக் குப் பிக்கேற்றி திறமான வாலுகையின் மேலேவைத்து - முரைத்ததிலே முத்தீயு மூன்று சாமம் மூட்டியல்லோ யீசானம் பூசை பண்ணே 820

## வாலைரசக்களங்கால் காயசித்தி.

பண்ணையிலே பளபளத்துக் களங்குமாகும் பாரப்பா வாலைரசங் களங்கிணாட்டு - நண்ணையிலே நவலோக மாயிரத்துக் கொன்றீய புத் தமனே நாற்பத்து யெட்டு மாற்று - கண்ணையிலே யுபரசத்தில் ஐநூற்றுக்கொன்றீய காணப்பாமாற்றென்ன இருபத்தைந்து-தண்ணை யிலே யிக்களங்கு பணவிடைதான் தூக்கி தன்பசுவின் பாலோடு காய்ச்சிக்கொள்ளே 821

கொள்ளையிலே மூலத்தில் கருத்தை யூன்றி குறிப்பாக சிவயோக வெளியை பார்த்து - தெள்ளையிலே மேல்மூலம் புருவத்தூன்றி சீராக வந்தபின்பு யதிலே நின்று - அள்ளையிலே யெடுக்கின்ற கனி யைப்போல அப்பழனை மூலத்தில் வாசியூட்டி - தள்ளையிலே மாய்கை யற்று கற்பங்கொண்டால் சாதகமாய்த் தினமொன்றில் சித்தியாமே

சித்திக்காம் முத்திக்காம் புத்திக்காகும் க்ஷணத்திலே சட்டை யொன்று கழன்று போகும் - எத்திக்காம் திசைதோருங் கவனந் தூக்கும் என்மக்காள் அருணனைப்போல் திரேகமாகும் - முத்திக் காம் பராபரத்தை யிந்தாவென்று மோகமென்ற பாசமெல்லா மகன் றுபோகும் - பத்திக்கா மிதுகொண்டா லவனேவாதி பாழ்மனது கொள்கைக்கு கொள்ளொட்டாதே 823

## அறுவகை செந்தூரம்.

ஓடாதநாகமொன்று சூதமொன்று வுத்தமனே தங்கமொன்று வீரமொன்று - கட்டாத சிலைபொன்று தாளகந்தானென்று கல்வத்திலிட்டுமல்லோ திரிகிவார்த்து - மட்டாக வரைத்துநன்று யாறுசாமம் வாகான குப்பியிலேயேற்றிமூடி - நாடாக செந்தூரம் பதத்தில் வாங்கி நவலோக மன்னூற்றுக்கொன்றிடாயே 824

ஒன்றிட்ட நவலோகந் தங்கமாகும் முத்தமனே யுபரசமுந் தங்கமாகும் - நன்றிட்ட குன்றிகொள்ள காயசித்தியாகும் நமனேது மூலமென்ற காலன் போக்கு - மன்றிட்ட செந்தூரம்தொந்தமேறு மந்திக்கயந்திக்க கவமேற கோடி - பன்றிட்ட திறிதியினால் சூதஞ் சாகும் பரிசினத்தில் வேதைபுமாம் பாருபாரே 825

## கெந்தகத்தைலம்.

பாரப்பா கெந்தகத்தின் தைலஞ் சொல்வேன் பாங்காகப் பதிறு பலந்தான்கெந்தி - நேரப்பா கட்டியதோர் சாரந்தானும் நேராகப் பலமொன்று கூடப்போட்டு - வாரப்பா துருசு குரு பலந்தா

2-என்று 2-ஏடு

னென்று வாகான வீரமது பலந்தானென்று - சாரப்பா கட்டியதோரிணங்கன்றுனும் சாதகமா யரைப்பலமு மிதிலே போடே 826

போட்டதெல்லா முலைப்பாலை விட்டேயாட்டி புகழான தென்னங்காய்க்குள்ளே யிட்டு - நாட்டதெல்லாம் வாயதற்குள் மயிரை வைத்து நலமான சீலைசெய்து குப்பித்துப்போட்டு - மூட்டதெல்லாமெருவடுக்கித் தீயைப்போட்டு முகமான தேங்காயில் கிண்ணி வைத்து - பூட்டதெல்லாம் புடத்தோடு தைலம் வீழும் புகழான கெந்தகத்தின் தைலந்தானே 827

## லிங்கக்கட்டு.

தானென்ற தைலத்தை லிங்கத்திற்கு சாதகமாயிடைக்கிடைதான் சுறுக்குப்போட - வானென்ற புகையடங்கிக் கட்டிப்போகு மாட்டப்பா நவலோகம் நூற்றுக்கொன்று - மானென்ற தங்கமுமாம் லோகமெல்லாம் அப்பனே அறபத்துநாலுங் கேளு - வேனென்ற யிடைக் கிடைக்குச் சுறுக்குப்போட விளங்கியெல்லாங் கட்டுண்டு வேதையாமே 828

வேதையென்று லொவ்வொன்றில் தொந்தமேற்ற வெகுதொந்தமாகுமப்பா வுரைத்துப்பாரு - மாதையென்று மொவ்வொன்றிற் குருவுமாகு மருவியதோர் களங்காகுஞ் சுன்னமாகும் - பாதையொன்றே கவரொன்றே துறைதானென்றே பரிசனமுந் தெரிசனமுந் தூமமொன்றே - போதையொன்றால் குளிகைமுதல் காயசித்தியாகும் பொற்றகடு தைலத்தில் கூட்டியாட்டே 829

முன்பாட்டின் முடிவு ஆதிநூலில் சொல்லப்படவில்லை
842 வது பாட்டுப்படி செந்தூரித்து வேதையாடலாம். ஆர். எம், கே.

## சுத்திசெய்த கெந்தித் தைலம்.

ஆடவே தைலமொன்று யின்னங்கேளு அப்பனே குமரியிடசோற்றி னுள்ளே - நீடவே அமுரிவிட்டுக் கெந்தகத்தைப் போட்டு நேராகப் பதினாறு பலந்தான் கெந்தி - யூடவே டோலைப்போல் கட்டிவிட்டு யுத்தமனே தினமூன்று யெரித்து நன்றாய் - நாடவே கெந்தகத்தை நாலாநாள் வாங்கி நலமான கல்வத்தில் நாட்டிடாயே 830

நாட்டுவாய் பலமொன்று அழிஞ்சிபுட பருப்பு நலமாகக் கட்டியதோர் சாரம் ரெண்டு - மூட்டியதோர் வீரமொன்று கார மொன்று மூதண்டக் கல்லுப்புச் சுன்னமொன்று - ஆட்டிடா யெ ருக்கம்பால் விட்டு நன்றாய் அப்பனே தினமொன்று அரைத்தபின்பு நீட்டிடாயெருக்கினுட பழுப்புச்சாறு நேராகத்தினமொன்று அரை த்திடாயே 831

அரைத்தபின்பு செம்பரத்தம் பூவைக்கேளு அப்பனேநூறிட்டு க்கூடவாட்டு - நிரைத்த பின்பு புரசம்பூ நூறுபோட்டு நேராகப் பாதிரிப்பூ நூறுபோட்டு - தரைக்த பின்பு குமரிப்பூ நூறுபோட்டு தனித்த யிந்திரகோபமது நூறுபோட்டு - விரைத்தபின்பு யிதுவெல் லா மரைத்து நன்றாய் விளங்கியதோர் காசுபோல் வில்லைகட்டே 832

கட்டியதோர் வில்லை யெல்லாங் கலைபத்திட்டு கலங்காத பூப்பி டத்திற் தைலம் வாங்கி - ஒட்டியதோர் தைலத்தில் வேதை கேளு உத்தமனே காயசித்தாம் சூதங்கட்டு - மட்டியதோர் சூதமது பலந் தானைந்து வளமான தாளகமும் பலந்தான் மூன்று - நெட்டியதோர் சிலையதுவும் பலந்தான் ரெண்டு நேரான வீரமது பலந்தானென்றே

தானென்ற காரமது பலந்தானென்று சாதகமாய் துரிசுருரு பலந்தானென்று - கானென்ற கெந்தகத்தின் தைலம் வார்த்து கலந் தைத்து யெண்சாமம் குப்பியிலே போட்டு - வானென்ற வாலுகை யிலேற்றியப்பா வாகான முத்தீபுமெண் சாமமிட்டு - பானென்றரவி போல செந்தூரமாகும் பட்சத்தில் வாமமாய்ப் பூசைபண்ணே 834

## தங்கச்செப்பு செய்யும் விதம்

பண்ணியதோர் செந்தூரம் தங்கம் பத்தில் பாச்சிடவே செம் பாகும் தங்கச்செம்பு - பண்ணியதோர் செம்பெடுத்து பவத்துக் கொன்றாய் பாச்சப்பா யேழுதொந்தம் பறியோ செம்பாம் - பண்ணியதோரேழு தொந்தச் செம்பை வாங்கி பாச்சப்பா வெள்ளி யிலே அன்பதுக்கொன்று பண்ணியதோர் வெள்ளியது மாற்றுக் கேளு பதினாறு மாற்றான தங்கமாமே 836

# அயச்செப்பு

## மகா அருமையான முறை.

ஆமப்பா கெந்தகத்தின் தைலத்தோடு அப்பனே நாகபச்சை காரங்கூட்டி - ஓமப்பா அரைப்பொடியில் பிசறியூத யுத்தமனே அயந்தானுஞ் செம்புமாகும்-சேமப்பா வயச்செம்பை வெள்ளி நூறிற் சேர்த்துடனே பதினைந்துமாற்றுமாகும் வாமப்பா ஒண்டாக்காலித் தனையுஞ் சித்தி வாமத்தை தூசித்தால் வாதம் போச்சே 836

## வாத வரலாறு.

வாதமென்ற பொருள்தானு மாருடைய வித்தை மகத்தான யீசனல்லோ மாயிக்கின்றார் - வேதமென்ற அந்தத்தின் பிள்ளைக்கிந் தாள் விளங்கிநின்ற பிள்ளைகள்தான் சாஸ்திரமோ செய்தார் - நாத மென்ற சாஸ்திரத்தின் மறைப்போ கோடி நலமான சாஸ்திரங்க ளொன்றுமில்லை - வாதமென்ற கட்டொன்றில் வேதை யொன்றில் கால்மாடு தலைமாடாய்ப் பாடினாரே 837

### மறைத்த வாதக்கரு நிகண்டில் தெரியும்.

பாடினதோர் சாஸ்திரத்தி லொப்புத்தப்பாய் பார்க்கலாங் கொங்கணர்தன் பாட்டை தானும் - நாடினதோர றுபத்துநாலு மர புள்ளே நாதாக்கள் சாஸ்திரத்திற் கருவே காணேன் - வாடினதோர் மனம்படைத்து யேங்கிடாமல் மறைத்ததொரு கருவுக்கு நிகண்டு சொன்னேன் - மூடினதோர் மூட்டெல்லாம் வெளியாய்ப் போகும் மோகமற்ற பெண்சீலை அவுத்தவாறே 838

## மறைப்பறிய.

அவிழ்த்தாக்கால் சீலையைத்தான் அங்கங்கள் தோன்றி லருவி ருப்பா மாய்கையெல்லா மகன்று போகு - மவிழ்த்தாக்கா லழகெல் லாம் விகாரமாகு மப்பனே வாந்திகொண்ட அன்னம்போலாம் - மவிழ்த்தாக்கால் வாதத்தின் கருத்தெரிந்துபோகும் அங்கமெல்லாம் கைக்குள்ளாய்க் குருடனுக்குந் தோன்றும் - மவிழ்த்தாக்கால்வெளி யாகுமென்று சித்தர் அடவாக மூடினார் திறந்திட்டேனே 839

திறந்திட்ட யென்நூலில் நிகண்டுதானுந் திக்கெட்டுங் கொடுத் தாலுங் கொடுக்காரையா - அறைந்திட்ட கோடிதனமீய்ந்து மீயார் அங்கங்கே குகைதோறு மடக்கிப் போட்டார் - மறைந்திட்ட சாஸ் திரத்தில் தர்க்கம் வந்தால் மைந்தனே நம்முடைய நூலைப்பார்ப்பார் இறந்திட்ட நூல்களுக்கு யென்நிகண்டைப் பார்த்து யேற்றியல் லோ சாஸ்திரத்தைக் கட்டுவாரே 840

## கெந்தித்தைல மகிமை.

கட்டியதோர் கெந்தகமாந் தைலம் தானுங் காணப்பா சரக்கு களில்சுறுக்குப்போட - ஒட்டியதோர் சரக்கெல்லாங்கட்டிப்போகும் மூதினல் சுண்ணும்பாம் களங்குமாகும் - நெட்டியதோர் செந்தூரக் குருவுமாகும் நோத ஒவ்வொன்றில் கவமோகோடி - மட்டியதோர் வேதையல்ல தூமவேதை வாய்திறக்கப் போகாது தோகையாட்டே.

## சூதச் செந்தூரம்.

ஆட்டான தைலத்தை சூதத்தூட்டி அப்பனே தங்க மிட்டு அரைத்து நன்ருய் - மூட்டான குப்பியிட்டு வாலுகையிலேற்றி மூவி ரண்டு சாமமது யெரித்தாயானுல் - நீட்டான செந்தூர மருணன் போலாம் நீட்டப்பா வெள்ளியிலே நூற்றுக்கொன்று - நாட்டப்பா தங்கமுமாம் தினந்தான் முன்றி நலமான மண்டலந்தான் உண்ணு உண்ணே 842

உண்டாக்கால் காயசித்தி யருணன்போலாம் உத்தமனே காய சித்தி கடிசுமெத்த - கண்டாக்கால் சித்தரெல்லாம் மெச்சுவார்கள் கைவிட்ட வாசிபுள்ளே கலங்துநிற்கும்-நின்ருக்கால் சொர்ணமென்ற சிலையோவென்பார் நோனரோமமதுநீலம்போலாம் - பண்டாக்கால் திரேகமது பரிசவேதை பாற்கவே குளிகையிட்டால் வேண்டுமாமே

## வேதைக்குச் செய்த மருந்துகள்பாயா விடில்கெட்டதென்று எரியவேண்டாம் கருவை கவனி.

ஆமப்பா செந்தூரங் களங்குதானு மாதியென்ற மெழுகோடு குருவுந்தானும் - தாமப்பா சுன்னம் சத்தும் செம்பும் தாக்கு கிற வேதையிலே தவறிற்ருனல் - வாமப்பா கெட்டதென்று யெறிய வேண்டாம் வாதிமகன் வேதையிட கருவைச்சொல்வேன் - சேமப் பா தங்கமது யுருகும்போது தீர்க்கயிடு கெட்டதொரு களங்கைத் தானே 844

## கெட்டுப்போன சுன்னம் களங்கை பறிகூட்டி செந்தூரம் செய்யும்விதம்.

தானென்ற களங்கையல்லோ தங்கமிடை தாக்கு சாதகமாய் மணிபோலே வாங்கிக்கொண்டு - மோனென்ற மணிக்குக் கால் கெ வுரிவீரம் சிலாவியதோர் கிலேயோடுமுக்காலுங் கூட்டி - வானென்ற சூதமது அரைவாசி கூட்டி மணியோடே பொடியாக்கி முலைப்பால் விட்டு - கானென்ற கல்வத்தி லரைத்துநன்ருய் கனமான அூக் குப்பிக் கடைத்திடாயே 845

## கெட்டுப்போன செந்தூரங்களை முன் போல் மருந்துகளை சேர்த்துச் செய்ய வேதை தவறுதெனல்.

அடைத்திட்ட குப்பியின் மேல் சீலைசெய்து அப்பனேசில் விட்டு ஆட்டெருவில் வைத்து - நடைத்திட்ட யெருவிட்டுப் புடத்தைப் போட நலமான செந்தூரமாகும்பாரு - படைத்திட்ட நவலோகத் தூட்டிப் பாரு பசும்பொன்னும் பதினறு மாற்றுமாகும் - முடைத் திட்ட களங்குமுதற் செந்தூரமெல்லாம் மூட்டினல் முன்போலே யதிகம்போமே 846

போமப்பா முன்னுக்கு அஞ்சதிகம்வேதை புகழான வர்ணமங்கப் படியே காணும் - ஓமப்பா வெகுசூறுக்கு ஓடவென்று வுத்தமனே முலைப்பால்போல் திராவகத்தை விட்டு - தாமப்பா அரைத்து முன் போல் புடத்தைப்போட சாதகமாய்க்கங்களங்கம் நற்களங்குமாகி- மாமப்பா வெகுதூரமெட்டியோடு மாச்சரிய மிருபத்திரண்டுமாற்றே

## களங்கு கெடுவதற்குள்ள காரணங்கள்

மாற்றன களங்கெல்லாங் கெடுவதேதோ மைந்தனே அரைப் பதிக மானத்தாலும் - காற்றன வூத்தாலும் புடத்தினலும் கை விட்ட யெரிப்பாலும் வாட்டினலும் - மூத்தான செயநீரிற் கருத்தப் பினலும் வுத்தமனே சவ்வீர வைப்பினலும் - முத்தான சவுக்காரச் சுன்னமில்லா மோசத்தாலும் துறைகளெல்லாங் கெட்டுப்போமே

கெட்டதென்று வாதிகள்தான் கைத்தப்பாய்க்செட்டு கெடியான சாஸ்திரத்தின் மேலேவைவார் - மட்டியென்றுங்காணர் ஊத்துங் காணர் வாதமென்ற சாஸ்திரத்தைக் காதிற்கேளார் - ஒட்டிதென்ற துறைகாணர் சுண்ணம்பெல்லாம் வூதுகிற நேர்ப்பறியா ருவுத்த மாண்பர் பட்டுதென்ற வாதத்தைப் பார்த்துச்சுட்ட பாதகர்க்கு யிந்தமுறை பாடினேனே 849

## மகாசெயநீர்.

முறையாகச் செயநீரோ யொன்று கேளு மூவுலகு மணியாக மெழுகுமாக - நிறையான கெருடபட்சி கற்பூரசீ சத்து நேரான கல்நாரும் மயூரவண்டம் - மறையாகச் சங்கோடு வெடியுப்புச் சீன மப்பனே கல்லுப்புத் துருசுதானும் - கறையான கற்பூரம் கெந்தி வெள்ளை கடியதொரு மால்தேவி வீரந்தானே 850

இந்தப் பாட்டில் கேந்தகத்தை பாஷாண வர்க்கத்தில் சேர்த்தும் துருசை உப்பு வகையில் சேர்த்தும் சொல்லியிருக்கிறார்.
முன்சொல்லிய 25-வகை உப்பில் துருசை உப்பு வகையில் சேர்க்காமல் உபரசத்தில் சேர்த்திருக்கிறார். R. M. K.

தானென்ற கெவுரியொடு பாஷாணவர்க்க மைந்தும் சாதகமா யுபரசத்திலைந்து தானும் - வானென்ற வெணமொடு காரமைந்தும் மைந்தனே பதினைந்தும் சுன்னமாயூதிக் - கானென்றவகையொன்று பலந்தான் றூக்கிக் கலரப்பா யிரண்டு பலம் வழலைச்சுன்னம் - பானென்ற பதினேழு பலத்தில் செட்டி பரிவாகச் சாரமிட்டு ஆட்டு ஆட்டே 851

ஆட்டயிலே மெழுகாகிக் கசிவுகாணு மரைக்கரைக்கச் செயநீராம் பனியில்வைக்க - நீட்டயிலே செயநீரை யிருத்துக்கொண்டு நேராக வீரமிட்டு தணலில்வைத்து - ஊட்டையிலே டறித்தகட்டை பரிந்துவாங்கும் யுத்தமனே மகத்தான செயநீரப்பா - பூட்டையிலே சரக்கெல்லாந் துவைத்து வாட்டப் பொன்போலே சிவந்து நின்று யுருகும் பாரே 852

## மகா செயநீரில் சரக்குகள் வாட்ட வாதிக்கு இது லெகுவான முறை.

பாரப்பா சிலசரக்கு தோய்த்துவாட்ட பரிவாக வுருகியது மெழுகுமாகும் - நேரப்பா சிலசரக்கை தோய்த்து வாட்ட நேராகச் செந்தூரமாகும் பாரு - சீரப்பா யுபரசத்தை தோய்த்து வாட்ட திரண்டல்லோ முத்துப்போல் சத்தாய் நிற்கும் - மூரப்பா வாதிக்கு யிது லகுவுமெத்த வூதையிலே சுண்ணம்பை லகுவாயூதே 853

## ஊத்துமுறை லக்ஷணம்.

ஊதையிலே லகுவாகஊதிச்சுன்னஞ் செய்தால் உவுத்தமனேசெயநீர்க்கு சுறுக்குமெத்த-ஊதையிலே கடுஞ்சுன்னமாச்சு தானால்ஊட்டினால் சிவ்வீரம் ரத்தமாகும்-ஊதயிலே சுண்ணம்பு மலருவிட்டால் ஓடாது வேதையது சுறுக்குமில்லை - ஊதையிலே ஊத்துமுறைத் தப்பித்தானால் ஒன்றுக்குமாகாமற் சிட்டமாமே 854

## வாதி ஏன் மூலிகை தேடி அலைகிறாய் மகாசெயநீர் செய் சுருக்கமுறை.

ஆமப்பா செயநீரிற் கட்டியதுவெல்லா மளவற்ற களங்காகும் செந்தூரமாகும் - சேமப்பா செயநீராம் மெழுகுமாகும் சிறப்பான குருவாகும் சுன்னமாகும் - வேமப்பா அண்டாண்டம் செயநீர் பட்டால் வேதையென்ன பாதையென்ன கவைகொள்ளாது - ஓமப்பா யிதைவிட்டு உலுத்தவாதி ஓடியல்லோ வேர் தழையைப் பிடுங்குவாரே 855

## மூலிகையால் ரசத்தை அரைத்து புடமிட்ட வாதி முகஞ்சுண்டி தவித்தல்.

பிடுங்கியல்லோ சாற்றைவிட்டு ரசத்தையாட்டி பேறானவேரை யொரு குகையாப்பண்ணி - நடுங்கியல்லோ சீலைசெய்து புடத்தை வைப்பார் நாதனல்லோ குகையை விட்டோடிப்போவார் - முடங்கி யல்லோ முகஞ்சுண்டி வாதம் பொய்யென்று மூச்சறியாருலகத்து வாதிபாரு அடங்கியல்லோ லவணமொடு காரசாரமறியார் அப்பனே யுபரசத்தைத் தேடார் காணே 856

## மகா செயநீரில் ரசமணி வெகு சுருக்கமான முறை.

காணப்பா கரண்டியிலே சூதம்வார்த்துக் கலந்துயிந்தச்செய நீரை சுறுக்குப்போடே - பூணப்பா மெழுகாகி மணியுமாகு முத்த மனே சூதமென்ற ரசராசன்தான் - பூணப்பா காரமிட்டாலுருகி யாடும் புகழான சூதமிது குளிகைக்காகும் - வீணப்பா வாதத்திற் சூதம்விட்டால் வேறேது வாதத்திற்சூதந்தானே 857

## நாக ரச கெந்தி தங்க செந்தூரம்.

தானென்ற சூதமொன்று தங்கமொன்று சார்ந்து நின்று யுருகையிலே ஞகம்ரெண்டு - வேனென்ற அதிவிட்டு யுருக்கி வாங்கி விளங்கியிந்த மணியிடைக்கு நாலுகெந்தி - பூனென்ற தாளகமும் சிலையுமப்பா யுத்தமனே யெட்டிலொன்று மணிக்கிக்கூட்டி - வானென்ற கல்வத்தில் பொடித்துநன்றாய் கலந்தெடுத்து அயக்குப்பிக் குள்ளே போடே 858

போட்டதொரு குப்பிதனை வாலுகையிலேற்றிப் புகழாக யெரித்தல்லோ பதத்தைப்பார்த்து - நீட்டதொரு சலாக்கையிலே தைலம் வற்றி நேராகக் காகாத்த பதத்தைப் பார்த்து - யாட்டதொரு தீயமத்தியீசானத்தி லானந்தமாயிக்கிப் பூசைபண்ணி -மூட்டதொரு நவலோகம் நூற்றுக்கொன்று மூட்டவேபன்னிரண்டு மாற்றுமாமே

## வாசி சித்தி.

மாற்றான செந்தூரங் குன்றியுண்ண மண்டலத்தில் காயசித்தி யாகும் பாரு - காற்றான வாசியது சக்கரத்தில் நிற்கும் காணுதகேசரியைக் காணப்பண்ணும் - மூப்பான நரையெல்லா மாறிப்போகும் உத்தமனே திரையடங்கி சட்டை கக்கும் - கூத்தான வுலகத்தை வெறுத்துப்போகும் கூடாத பூரணத்தில் கூடலாமே 860

# தீ அதிகம் எரித்தால் செந்தூரங்கள் உருகிப்போமெனல்,

கூடலாம் சாஸ்திரத்திற் செந்தூரங்களெரிப்பு கூறுவார் சாமமது யாறேழென்பார் - யூடலாந் தினம் தினந்தான் நாலு மூன்றென்பார் யுத்தமனே வாரமென்பார் பட்சமென்பார் - ஆடலாம் தீ மட்டாய் எரிந்தாலாகு மப்பனேதீய தூவும் யேறிற்றுனல் - நாடலாஞ் செந்தூர முருகிப்போகும் நலமான தீயெரிவு குறைந்தால் கேளே 861

# எரிப்பு புடம் செய்பாக மறிய.

குறைந்தாக்கால் தைலமது சுத்திக்கொண்டு குழம்புபோல் மெழுகாக நின்றுபோகும் - முறைந்தாக்கால்சாஸ்திரத்தைப் பொய் யெண்ணாதே யுத்தமனே கைப்பிசகினாலே போச்சு - யறைந்தாக்கால் சாஸ்திரத்தில் செந்தூரங்க ளப்பனே கெடுகாமற் கருவைச் சொல் வேன் நிறைந்தாக்கால் குப்பியிலே தைலம் வற்றி நின்றதொரு பதம் பார்த்து சிலாக்கைப் போடே 862

சிலாக்கிட்டுத் திருப்பையிலே மெழுகுபோல் நின்றால்சாதகமாய் கமலம்போல் தீயையாற்றி - சிலாக்கிட்டுத் திருப்பையிலே கடிசுகண் டால் தயவாக தீபம்போல் வன்னிபோடு - சிலாகிட்டுத் திருப்பையி லே கரகரப்புக் கண்டால் தப்பாது செந்தூர பதமாச்சு - சிலாக் கையிட்டுத் திருப்பையிலே சிலாக்குநுனி சிவந்தால் தணலவித்து யீசானம் பூசைபண்ணே 863

# ஈசான பூசை மகிமை,

பூசித்தாலிகத்திலே காயசித்தி புகழான வாதமுதற் குளிகை சித்தி - பூசித்தால் மனத்தோடு கற்பசித்தி போக்கறியா மனுஷரு க்கு விவேகசித்தி-பூசித்தால் யோகமொடு ஞானசித்தி புருவமையத் தீயோடு அம்பரமும் சித்தி - பூசித்தால் கவனசித்தி யவனே வாதி பொற்சடையோன் பதத்துள்ளே யடைவன்றானே 864

# 18-சித்தர் சாஸ்திரங்களிலு மில்லாத 1-வது சிலசரி மெழுகு.

தானென்ற சிலசரியை சொல்லக்கேளு சாதகமாய் வெகுசுளிவு பார்ப்போர்க்கையா - வானென்ற பூமியொரு வட்டியாச்சு வைத்த தொருகிண்ணியல்லோ மேருவாச்சு- கானென்ற மெழுகதுவும் வாயு வுமாச்சுக் கலந்துவிட்ட சலமல்லோ கடலுமாச்சு - யூனென்ற சரக் கான சிவசத்தி ரண்டில் ஒடுங்காத வேதையென்ற செந்தூரமாச்சே

ஆச்சப்பா சிலசரி மெழுகைக் கேளு அந்தரமாந் தாமரையுஞ் சணப்புங் கூட்டி - ஓச்சப்பாகடுக்காயும் வெள்ளைக்கல்லு முத்தமனே யரக்கோடு வெல்லந்தானும் - தாச்சப்பா வெண்கருவுங் கல்லுச் சுன்னம் சாதகமாய்ச் சேங்கொட்டை குங்கிலியத்தோடு - வாச்சப்பா மெழுகோடு தேனும் கூட வாகான செங்கருவும் சமனாய்க் கூட்டே 866

## 2-வது சலசரி மெழுகு.

கூட்டப்பா செம்பினுட அரப்பொடியுந் தானே குலாவியதோர் உருக்கினுட பொடியுங் கூட - நீட்டப்பா வங்கமொடுகாரீயப்பொடியும் நிறையான வெண்கலத்தின் பொடியுங்கூட - யாட்டப்பா கள்ளிப்பால் ஆலம்பாலும் அரசோடு அத்தியுந்தான் பேயத்திப்பாலும் - மூட்டப்பா சதிரகள்ளிப் பால் இலுப்பைப்பாலும் மூதண்டயிச்சிப்பால் யெருக்கப்பாலே 867

பாலோடு துகையெல்லாம் துகைபைக்கேளு பாங்கான யிநபத்தேழதாச்சு - சேலோடு யிதவெல்லாஞ் சமனாய்க்கூட்டி சிறக்கவே பாலையெல்லாம் சமமாய்க் காச்சி - காலோடு பாலிலே மருந்தெல்லா மிட்டு கவையான குறடுகொண்டு கிண்டி நன்றாய் - மாலோடு பட்டரையின் மேலேவைத்து மகத்தான சம்மட்டிகொண்டு தாக்கே

## 3-வது சலசரி மெழுகு.

தாக்கப்பா நன்றாகக் கரையுமட்டும் சாதகமாய் மயனம்போலாகமட்டும் - நோக்கப்பா யிதுவல்லோ சலசரிக்கி மெழுகு நழையாது சலந்தானுங் கடேமெழுகிதப்பா - ஆக்கப்பா யின்னமொரு மயனஞ் சொல்வேன் அப்பனே கருமணலும் அரப்பொடியும் பீங்கான் - வாக்கப்பா அப்பிரேகங் கிட்டத்தோடு வாகான விளாம் பிசினுங் கூடப்போடே 869

போடப்பா மாம்பாலும் தாமரையின் சாம்பல் புகழானவெண் கருவுங் கூடக்கேளு - நீடப்பா பலமொன்று வகையதொன்று நேராகப் பொடிசெய்து யிதனைக்கேளு - யாடப்பா ஆலம்பால் அரப்படியிற் போட்டு அத்தோடே அஞ்சுதுளிஎண்ணெவூர்த்து - நாடப்பா அஞ்சுதுளி யேரண்டம் விட்டு நலமாக வெதுப்பியதைக் கிண்டிடாயே 870

கிண்டியல்லோ பட்டரையின் மேலே வைத்து கெடியான சம்மட்டி கொண்டு தாக்கு தாக்கு-அண்டியல்லோ அடிக்கடிக்க மெழுகுமாகு மாறாமல் கரையமட்டு மடித்து நன்றாய் - தண்டியல்லோ மெழுகெடுத்து பதத்தில் வாங்கு சாதகமாய்ச் சலசரியின் மெழுகீதப்பா - ஒண்டியல்லோ கவசித்தால் சலம்புகாது யுத்தமனே தீக்கசையா தூணிப்பாரே 871

அத்திப்பாலில் அப்பிரகமிட்டு ரவியில் வைக்க கரைந்து மெழுகாகும்.

## 4-வது சலசரி மெழுகு.

பாரப்பா யின்னமொரு மெழுகு சொல்வேன் பாங்கான அத்திப்பால் படியதொன்று - நேரப்பா அப்பிரேகம் பலந்தான் பத்து நேராகப் பொடிசெய்து யதிலே போட்டு - சேரப்பா ரவியில்வைக்க மெழுகாயப்போகும் சேர்ந்ததிலே வெண்கருவும் சங்கோடொக்க தாரப்பா வகையொன்று பலந்தானைந்து சமுத்திரத்தின் மீன்னெட்டி மொருச்சாண் நீளம் 872

வாங்கியல்லோ மீனெட்டி தண்ணீரில் காச்சி வாகாக மெழுகோடு மருந்தெல்லாம் போட்டு - தாங்கியல்லோ பட்டரையின் மேலே வைத்து சாதகமாய் மெழுகாக கரையுமட்டு மடித்து - பாங்கியதோர் மெழுகுபோலாகு மட்டும் பரிவாக அடித்து நன்றாய் வைத்துக்கொண்டு - ஓங்கியதோர் சிலசரிக்கு மெழுகு மைந்தா வூட்டுகிற வரிசையெல்லாம் சொல்லுவேனே 873

சலசரி வட்டியும் மூடும் கிண்ணியும்செய்து வட்டியில் மருந்தை வைத்து கிண்ணிமூடி ஷ 4-வித சலசரிமெழுகில் ஒன்றை சந்துவாய்க்குப் பூசி ஜலம்விட்டெரிக்க தீய்க்கு மெழுகு இளகி ஜலம் உள்ளே போகவிடாததால் இதற்கு சலசரி மெழுகென்று பெயர்.

## சலசரி வட்டி செய்யும் விதம்.

சொல்லுவேன் சலசரிக்கு வட்டிகேளு சுகமாக நடுமையம் வரையோ பண்ணி - அல்லுவேன் வெண்கலமாம் கிண்ணி மூடி அடித்தசந்தில் மெழுகடைத்து கோட்டைபோல - மல்லுவே வடிவு தண்ணீரை தாலத்தில் வார்த்து மருவியதோர் முக்கவரின்மேலேவைத்து நல்லுவேன் தாலத்தினடியிற்கேளு நலமான நூலிழை போட்டுவிளக்கு வையே 874

## சலசரி வட்டியில் செய்யும் தங்க ரச கெந்தி செந்தூரம்.

வைக்கவே தாலத்திற் மருந்து கேளு மருவியதோர் † நாரும்பூ காசு நாலு - நைக்கவே சூதமது காசுநாலு நலமான லிங்கமது காசுரண்டு - தைக்கவே காரீயங் காசுரெண்டு சாதகமாய் சிலைதானும் காசுஒன்று - மைக்கவே தங்கமது காசுஒன்று மருவியிதை யிடைதூக்கி கல்வத்தூட்டே 875

† நாரும்பூ—கெந்தகம்.

ஊட்டியல்லோ அயவணையின் சாற்றாலாட்டி யுத்தமனே பொற்றிலையின் சாற்றாலாட்டி - நாட்டியல்லோ தாம்பூலச் சாற்றாலாட்டி நலமான முச்சாறு மெட்டுச்சாம - மாட்டியல்லோ வில்லை தட்டி தெல்லுப்போல யடவாக யுலர்த்தியல்லோ தாலத்தில் வைத்து, மூட்டியல்லோ கிண்ணியதின் மேலே மூடி மூதண்ட மெழுகாலே சூழ்க் கட்டே 876

கட்டியல்லோ நூறிழையிற் திரியைப் போட்டு காணப்பா யிலுப்பை நெய்யை நிறையவார்த்து - ஒட்டியல்லோ தீபமிட்டு கீழேவைத்து - வட்டியல்லோ சுட்டாக்கால் நீரிறைத்துப்போட்டு வார்த்தல்லோ மறுநீரைப் பதனமாக - நெட்டியல்லோ விளக்கவிந்து போகாமல்த்தான் நேர்ப்பாக யிலுப்பை யெண்ணை வார்த்திடாயே 877

வார்த்தல்லோ தினமூன்று எரித்தாயானல் வாகான வில்லையுள்ளே செந்தூரமாகும் - கோர்த்தல்லோ காரீய யிரும்பினுள்ளே கொடுத்திடுவாய் எண்பதுக்கு ஒன்று நீதான் - மாற்றல்லோ பத்துக்குக் குறையாதப்பா வாகான சிலசரியின்செந் தூரந்தான் - பார்த்தல்லோ சிலசரியை வைக்கும்போது பாங்கான கணபதியும் சிவனுங்காணே

காணப்பா சிவனோடு சத்திதானும் கைமுறையாய்பூசைபண்ணி யீசானத்திற் - பூணப்பா வஸ்துவுட கடத்தை வைத்து புகழான வடமாலை சுத்திவைத்து - ஊணப்பா வயிரவனைத் தியானம் பண்ணி யுத்தமனே சுசியாகப் பானம் பண்ணி - தோணப்பா லெட்சயத்தில் மனதை மாட்டி சுகமாக சமாதியிலே யிருந்திடாயே 879

## வாதசித்தி 17 எனல்.

இருந்தாக்கால் நிற்வாணி யேவல்கேட்டு யேறும்மல் சலமுள்ளே செந்தூரமாகும் - இநந்தாக்கால் மாய்கையற்று மனமோ சித்தியேத்திநின்ற சிலசரியும் சித்தியாகும் - இருந்தாக்கால் வாதசித்தி பதினேழுமாகும் எடுத்த துறையத்தனையுமேறியாடும் - இருந்தாக்கால் யோகமென்ற குண்டலியே சித்தி யேழுசட்டைக் கக்கியுடல் சித்தியாமே 880

## சலசரியில் செய்யும் நாக அயநாக தங்க செந்தூரம்:

சித்திக்குஞ் சலசரிக்கு மருந்து கேளு திறமான நாகமது யிருபதப்பா - மத்திக்கும் அயநாக மிரண்டிடைதான் கூட்டி வாகான லிங்கமது மூன்றேமுக்கால் - பத்திக்கும் தங்கமது ரெண்டு போட்டு பாங்கான கெந்தகமும் மூன்றேமுக்கால் - அத்திக்கும் தாளகமும் மூன்றேமுக்கால் அப்பனே சிலையதுவும் மூன்றேமுக்கால் 881

மூன்ருக முக்காலாய் தூக்குகிற யிடைதான்கேளு மோசங்கள் வருமல் பணத்தூக்கமப்பா - நானுகக் கல்வத்திலிட்டுக் கொண்டு நலமான செம்முள்ளிச் சாற்ருலேடொக்க - பூணுகக் கூந்த னுட சூதம்பைச்சாறும் புகழாக மூன்றுநாள் விட்டுஆட்டி - தேனுகத் தெல்லுப்போல் வில்லைகட்டி சிறப்பான சிலசரியிலேத்தி வையே 882

வைத்தல்லோ கிண்ணியைத்தான் மேலேமூடி வாகான மெழு காலே சூழக்கட்டி - நைத்தல்லோ தாலத்தில் நீரைவார்த்து நல மான விளக்கிட்டு தினந்தான் ரெண்டு - கைத்தல்லோ சலமெல்லா மீட்டு மீட்டு கைமுறையாய் மநசலந்தா னதிலே வாரு - வைத்த ல்லோ வில்லைபுள்ளே செந்தூரித்து பாங்கான அருணனைப்போலிருக் கும் பாரே 883

# வறுமையை நீக்கும் மருந்து.

பாரப்பா செந்தூரம் பஞ்சலோகம் பாச்சிட்டால்நூற்ருென்று தங்கமாகும் - நேரப்பா அருணனைப்போல் சொர்ணமழைபெயும் நீங் காத வறுமையெல்லாம் நீங்கிப்போகும் - சாரப்பா குன்றியுண்ண மண்டலத்தினுள்ளே தங்கம்போல் திரேகமது சித்தியாகு - ஆரப் பா செய்தாலும் சலசரியின் வித்தை ஆண்டவனை பூசைபண்ண பலிக்குங் காணே 884

# தங்க ரச செந்தூரம்.

காணப்பா தங்கமது மூன்றுபங்கு கழுகினதோர் சூதமதுநாலு பங்கு - ஆணப்பா சிலையதுவு மஞ்சுபங்கு வுத்தமனே லிங்கமது ஒன்றே பங்கு - தோணப்பா பதின்மூன்று பணவிடையை தூக்கி சுகமாகக் கல்வத்திலிட்டுக்கொண்டு - பூணப்பா கொடுவேலிவேரின் பட்டை புகழான பழச்சாற்றில் நொறுக்கிட்டிடாயே 885

நறுக்கியிட்டு பிழிந்துகொண்டு மருந்தையாட்டி நலமாக தெல்லுப்போல் வில்லைதட்டி - தறுக்கியல்லோ தாலத்தில் வைத்து மூடி சந்துக்கு மெழுகணைத்து நீரும்வார்த்து - அறுக்கியல்லோ சுண்டுவிரல் பருமன் தீபமதிற்கொளுத்தி யிலுப்பை நெய்யை விட்டு நீயும் - மறுக்கியல்லோ மூன்றுநாள் தீபம் மாட்டி மாற்றியல் லோ சலம் விட்டு ஆற்றிவாரே 887

ஆற்றியல்லோ சலம்வாரு தினந்தான் மூன்று மப்பனே செந் தூரமருணன்போலா - மாற்றியல்லோ செந்தூரம் நூற்றுக்கொன்று மாட்டினல் வெள்ளியிலே தங்கமாகும் - போற்றியல்லோ யிப்படியே நவலோகத்தூட்டப் பொன்னுக்குப் பொன்னுகும் பாருபாரு - நேத் தியல்லோ சலசரிதான் ஏழைக்காகும் நிற்மூடா பசுவென்ருல் பலித் திடாதே 887

## யோகாப்பியாசம் செய்யாததாலும் மருந்துகளில் பூநீர்க்குருவை சேர்க்காததாலும் வாதம் சித்திக்கவில்லை எனல்.

பலியாமல் போவதேன் யோகமில்லாப் பாவம் பாங்கானபானத் தைக்கொள்ளாப் பாவம் - பலியாமல்போவதேன் யோகமில்லாப் பாவம் பரிவான சாஸ்திரங்கள் கிடையாப்பாவம் - பலியாமல் போவதேன் பூநீற்றின் குருவைப் பாச்சாத கருவாலே பதங்கமேறும் பலியாமல் போனதென்ன சமாதுக்குள்ளே பயிரவனை தோத்தரியா பாவந்தானே 888

## தேவி பூசைசெய்தால் வைரவன் வந்து வாதமெல்லாம் தெரியச்சொல்லும் தப்பாது.

தோத்தரித்து ஆயியைத்தான் பூசைபண்ணி சுகமான ஆசனத் திலிருந்துகொண்டு - தோத்தரித்து சிவம்பண்ணி தியானத்தோடு சொற்பெரிய பானத்தி லகிரியோடு - தோத்தரித்து வயிரவனை வாவென்றாக்கால் சொல்லுவார் வாதமெல்லாம் தெரியத்தானும் - தோத்தரித்தாலுலகத்தி நன்மைதின்மை சொல்லுவார் சொன்னபடி தப்பாவாறே 889

## தங்க நாக ரச கெந்தி செந்தூரம்.

வாறான செந்தூரமொன்று கேளு மைந்தனே ரசம் ரெண்டு நாகம் ரெண்டு - கூறான பறிரெண்டு கெந்திநாலுக் கொள்கியே கல்வத்திலிட்டு நன்றாய் - தேறான புளியாரைச் சாற்றை வார்த்து தெளிவான வெண்சாம மரைத்த பின்பு - மாறான தைவேளைச் சாற்றாலாட்டி மைந்தனே தெல்லுப்போல் வில்லை தட்டே 890

தட்டியதோர் வில்லைதனை யுலரவைத்துக் காணப்பா தாலத்தில் வைத்து மூடி - ஒட்டியதோர் மெழுகிட்டுச்சந்துதோறு முத்தமனே சலமிட்டு விளக்கு வைத்து - யட்டியதோர் கிண்ணியின்மேல் நெல்லுவைத்து யப்பனே நெல்ப்பொரிந்தால் செந்தூரமாச்சு - முட்டியதோர் செந்தூரம் நவலோகத்துள்ளே மூட்டப்பா பத்தொன்று தங்கமாமே 891

## அயனகச் செந்தூரம்.

ஆமப்பா செந்தூரமின்னங் கேளு அயனகமொன்று நின்றுரு
கும்போது - ஓமப்பா நாகமது ஒவ்வொன்றதாக யுத்தமனே பத்தி
ட்டால் கட்டிப்போகும் - தாமப்பா யிப்படியே நீட்ட நீட்ட தப்பா
மல் நூறிடைதான் நாகங்கட்டும் - வேமப்பா அண்டரண்டம் நாக
வித்தை வேதையினிச் சொல்லுகிறேன் விரைந்துகேளே 892

கேளப்பா நாகமது விராகன் மூன்று கெடியான சூதமது
விராகன் மூன்று - நாளப்பா கெந்தகந்தான் விராகன்நாலு நலமான
தங்கமோ விராகமொன்று - த்தாளப்பா யிதுவெல்லாம் தாம்பூலச்
சாற்றில் சாரவே அரைத்து நன்றாய் வில்லை கட்டி - நீளப்பா தாலத்
தில்வைத்து மூடி நேராக மெழுகனைத்து நீவைவாரே 893

வார்த்தல்லோ விளக்கிட்டு தினந்தான் மூன்று வாகாகயெரிந்த
பின்பு செந்தூரமாகும் - கோர்த்தல்லோ செந்தூர மாச்சுகாணல்
கொடும்பாவம வறுமையெல்லாம் குடிவிட்டோடும் - சேர்த்தல்லோ
நவலோகமாயிரத்துக்கொன்று திறமாக யிட்டாக்கால் மாற்று பத்
தாம் - மார்த்தல்லோ ஏறிநின்ற தங்கம்போல மைந்தனே யுண்டாக்
கால் சித்தியாமே 894

## ஷை 4-வித சிலசரிக்கும் அரிசிகுரு.

சித்தியாய் வைக்குகிற சிலசரிக்கெல்லாம் செப்புகிறேன் குரு
வொன்று நன்றாய்க் கேளு - அத்தியாம் கிளிஞ்சி சதையோடுவாங்கி
அப்பனே நடுக்கிளிஞ்சி தமரோ போட்டு - முத்தியாம் ஊஷரத்தின்
பூவொடொக்க பூதண்டச் சவ்வீரம் கூட்டியாட்டி - மத்தியாங்
கிளிஞ்சியுள்ளே போட்டுவைக்க மைந்தனே தினமொன்றில்
கிரைந்துபோமே 8: 5

போமப்பா கிளிஞ்சியுட சதைகளெல்லாங் கரைந்து போகமட்
டும் ஊஷரமும் வீரம் தூவு - ஆமப்பா கரைந்தெல்லாம் சலமாய்நிற்
கும் அந்தநீர் படியொன்று அளந்துகொண்டு - ஓமப்பா தென்னங்
காய் குடுக்கையிலேயிட்டு யுத்தமனே போடுகிற மருந்து கேளு
தாமப்பா கல்லுப்பு வெடியுப்பினோடு சாதகமாய் வெண்காரஞ் சீனங்
கூட்டே 896

கூட்டப்பா வீரமொடு சவுக்காரச் சுன்னம் குறியான துரிசி
யென்ற சுன்னத்தோடு - நீட்டப்பா பூரமொடு சாரந்தானும் நேராக
வகையொன்று பலமோ கால்தான் - நீட்டப்பா ஊரமதுவும் விராக
னென்று யுத்தமனே பத்தையுந்தான் பொடியாய்ப் பண்ணி - கூட்
டப்பா கிளிஞ்சியென்ற தண்ணீர்க்குள்ளே காலையொடு மாலைரெண்
டுங் கையால்த்தேயே 897

தோய்த்துவா மாதமொன்று யிரண்டுநேரம் திறமாக வற்றியது குளம்புபோலாம் - வார்த்துவா பீங்கானில் வழித்துக்கொட்டி வாரப்பா நாதவிந்து ரெண்டு சேறை - தாய்த்துவா ரவியில்வைத்து மெழுகு பதத்துள்ளே சாதகமா யரிசியைப் போலுருட்டிப் போட்டு காய்த்துவர யுலர்ந்த பின்பு சிமிளில் வைப்பாய் காரணமா யண்டவஸ்துக் குருவுமாச்சே 898

ஆச்சப்பா யிக்குருவி ளுட்டைச் சொல்வேன் அப்பனேசலசரி யாலெடுத்த துறைக்கெல்லாம் - ஓச்சப்பா அரிசியொன்று போட்டுப்பாரு யுத்தமனே துறையொன்றும் பொய்யாகாது - மாச்சப்பா அரிசிவிட்டு சிலசரியை வைத்தால் வாகான கிண்ணியிலே பதங்கமேறும் - பாச்சப்பா குருவையிட்டு சலசரியை வைக்க பாங்கான வயனாக கூட்டிவையே 899

## அயநாகம் நாகத்தைக் கட்டும்.

## கட்டியநாகம் சூதத்தைக் கட்டும்.

கூட்டயிலே வயனாகம் நாகத்தைக்கொல்லும் குலாவியதோர் நாகமது சூதத்தைக்கொல்லும் - நீட்டயிலே யிதுமூன்றும் கெந்தகத்தைக் கொல்லும் நேரான தங்கமிட்டு வில்லைகட்டி - மூட்டயிலே சிலசரியில் வைத்தாயானால் மூதண்ட வேதையொடுகாயசித்தியாகும் காட்டயிலே யுபரசங்கள் பொன்னுமாகும் கடுஞ்சுறுக்கு அயனாக போக்குத்தானே 900

## அரிசிகுரு கூட்டி சிலசரிவை.

போக்கான முன்குருவாம் அரிசிபட்டால் பொர்த்தகடு குருவாகும் சூதங்கட்டும் - வாக்கான சரக்கெல்லாம் புகையோ கட்டி வகைவகையாய் கோடி துறைவேதையாகும் - நோக்கான தூமமுதல் தீபவேந்த நுகாவே பரிசமொடு சந்தானவேதை - தாக்கான அண்டத்தின் மயனவேதை தப்பாது யிக்குருவைத் தாக்கிப்பாரே 901

தாக்குகிற வரிசை சொல்வேன்ன்றுய்க்கேளு சாதகமாய் நாகமொன்று சூதமொன்று - நோக்குகிறகெந்தியொன்று வீரமொன்று நுகாவே சிலையொன்று பரிதானென்று - வாக்குகிற லிங்கமொன்று மால்தேவியொன்று மைந்தனே சாரமொன்று காரமொன்று - தேக்குகிற யுப்பொன்று பூரமொன்று சிறப்பாக முலைப்பாலை விட்டு ஆட்டே 902

# 1. கிளிஞ்சி அரிசியில் சரக்குகள் ஓடாமல் கட்டும் விதம்.

ஆட்டுகிற சரக்கெல்லாம் பணம்பணமே தூக்கி அதற்குள்ளே குருவென்ற அரிசியொன்றிட்டு - ஆட்டுகிற சரக்கெல்லா மரைத்து நன்றாய் அப்பனே குகையில் வைத்துப் புடத்தைப்போடு - நீட்டு கிற சரக்கெல்லாம் கட்டிக்கொள்ளும் நேராகச் செந்தூர மருணனு கும் - கூட்டுகிற நவலோகம் நூற்றுக்கொன்று கொடுத்தாக்கால் பத்தரையாம் பாரு பாரே 903

## சகல செயநீர்களுக்கும் கிளிஞ்சி அரிசி போட வேண்டுமெனல்.

ரசம் கட்டிப்பார்த்தும் கட்டாததால் துயரப்படும் வாதி! கிளிஞ்சி அரிசி போட்டு ரசம் அரை மெழுகாகும் புடமிடு கட்டும்.
உன் துயர் தீர்ந்துவிடும்

பாரப்பா யிப்படியே பச்சைச்சாக் கெல்லாம் கட்டில் பலபல வாம் செந்தூரங் களங்கமாகும் - நேரப்பா குருவாகும்சுன்னமாகும் நிலையான கட்டாகு மெழுகுமாகும் - வேரப்பா யிந்தரிசி செயநீர்க் கெல்லாப்போடு விளங்கியிந்த அரிசிவிட்டால் செயநீரோ பொய்யாம் தூரப்பா சூதத்திற் போட்டு ஆட்ட தயருன சூதமது மெழுகுமாமே

## சூதவேதை.

மெழுகான சூதமது வேதையாகும் வெண்காரம் பட்டாக்கா லுருகியாடும் - மெழுகான சூகமது கல்லுமாகும் மேல்ப் பூசிப் புடம்போட்டால் குருவுமாகும் - மெழுகான சூதமதுகுளிகையாகும் விடுவித்தால் சாரணையை கவனமோடும் - மெழுகான சூதமது செந் தூரமாகும் வேதையோ வெகுதூர மோடும்பாரே 905

# 2. மயில்முட்டை நீரில் அரிசி செய்தால் குருடனுக்கும் வாதம் சொன்னபடி கேள்க்கும்.

ஓடவே யின்னமொரு கருவைக்கேளு யுத்தமனே மயூரவண்ட முடைத்துவிட்டு - நாடவே ஊஷரத்தின் குருவோடொக்கநலமாகச் சாரமொடு வீரம் பூரம் - நீடவே பொடிசெய்து அதிலே போட்டு நேராக மூன்றுநாள் மத்தித்து வைக்க - ஆடவே முறிந்தெல்லாஞ் சலமாய் நிற்கும் மச்சலத்திற் படியளந்து வார்த்துக்கொள்ளே 906

வார்த்ததிலே முன்போல பத்துமருந்திட்டு வாகாக மாசமொ ன்றுமத்தித்தப்பா - போர்த்ததிலே நாதவிந்து கூடக்கூட்டி புகழாக ரவியில்வைத்து அரிசிபண்ணி - சேர்த்ததிலே துவைதோறும் அரிசி யிட்டாட்ட குருடனுக்கும் வாதவித்தையேவல்கேழ்க்குஞ் சேர்த்த திலே பச்சையிட்டால் யெல்லாஞ் சாகும் சேர்ந்தினத்தில் வேதை யொருகோடியாமே 907

ஆமப்பா குருகோடி சுன்னங்கோடி ஆடுகிற செந்தூரங் களங்கங்கோடி - ஓமப்பா மெழுகோடு செயநீரோகோடி யுத்தமனே கட்டுமுதல் குளிகை கோடி - சாமப்பா சத்தோடு யியங்கோடி தாக் கினல் தங்கமது குருவுமாகும் - காம்ப்பால் வித்தையொடு அண்ட வித்தை கலந்திட்ட மகிமைபினலாடுந்தானே 908

## 3 கோழிமுட்டை நீரில் அரிசி.

தானென்ற குக்கிடத்தின் கருவைக் கேளு சாதகமாய் பதி னைன்றும் வார்த்துக்கொண்டு - கானென்ற யூஷரத்தின் குருவோ டொக்க கைமுறையாய்ச்சீனமொடுவீரம்பூரம் - மூனென்றகல்லுப்பு சாரத்தோடு யுத்தமனே அமூரியுப்பு கூடப்போட்டு - வானென்ற கவையாலே கடைந்துவைக்க மைந்தனே மூன்றும்நாள் தண்ணீராமே

தண்ணீரில் முன்போலே பத்துமருந்திட்டு சாதகமாய் மாத மொன்று மத்தித்தப்பா - ஒண்ணியிலே நாதவிந்து கூடவார்த்து யுத்தமனே ரவியில்வைத்து அரிசிபண்ணி - நண்ணியிலே சரக்குகளில் அரிசிகூட்டு பரிசமுதல் தூமவரை வேதையோடுங் - கண்ணியிலே பட்டமான் மாண்டாப்போலி காட்டுமுன்னே சரக்குகட்டு கால னமே 910

## கோழிமுட்டை அரிசியில் தங்கச்சுன்னம்

காலனைய் சரக்கையெல்லாங் கொன்றுசாடும் கவர்கோடி செந் தூரங் களங்கு கோடி - காலனைய் தங்கத்தை நீறப்பண்ணும் கடுஞ் சுறுக்காய் தங்கமதுதொந்தமேறும் - காலனைய் காலனென்றமெழுகு மாகும் காட்டுமுன்னே யுபரசங்கள் சத்துமாகும் - காலனைய் சூதத் தைக் கொன்று சாடும் கண்கொள்ளா வேதையிதிலாடுந்தானே 911

## 4 பூநாக அரிசி.

ஆடவே பூநாக அரிசிகேளு அப்பனே செம்மண்ணிற் பூநாகம் வாங்கி - நீடவே கழுவி நன்றாய்ப் பீங்கானிற் போட்டு நோரகயூஷ ரீத்தின் குருவும் வீரம் - கூடவே சாரமொடு அன்னபேதி கொடி தான யிணங்கனெடு சீனந்தானும் - மூடவே பொடிசெய்து ரவியில் வைக்க யுத்தமனே தினமூன்றில் கரைந்துபோமே 912

கரைந்தபின்பு பிழிந்துகொண்டு நிறிதிவாங்கி காணப்பா படி யொன்று அளந்துவிட்டு - நிரைந்தபின்பு முன்போல பத்துவகை மருந்தும்போட்டு நேராகத் தினங்கிண்டி மாதமொன்று - யுரைந்த பின்புபீங்கானிற் குழம்பெடுத்துவார்த்து யுத்தமனே நாதவிந்து கூடவார்த்து திரைந்த பின்பு அரிசிபண்ணி யுலரவைத்து திறமாகச் சிமிளுக்குள் அடைத்திடாயே 913

## பூநாக அரிசியில் தங்கச்சுன்னம்செய்தல்

அடைத்தரிசி பரிசத்தால் தங்கம் நீறு மப்பனே நாகமது மணி போலாடும் - கடைந்தரிசி பச்சையிலே கூட்டியாட்ட களங்கமுதற் செந்தூரங் குருவோ கோடி - நடைந்தரிசி பரிசித்தால் சூதஞ்சாகும் நலமான சுன்னமொடு குளிகை கோடி - இடைந்தரிசி தூபமுதல் தீபவேதை யேற்றங்காண் வெகு சுறுக்கு யேற்றிடாயே 914

யேற்றியே நவலோகம் பரிசிக்கக் குருவாம் எடுத்தாட யொவ் வொன்றில் வேதை கோடி - மாற்றியே செயநீரோ மெழுகோகோடி ஆடுகிற துறைதோறுங் கவரோ கோடி - மாற்றியே யுபரசத்தில் சத்தும் செம்பும் வாங்குகிற துறைகோடி வேதைகோடி - போற்றி யே பூநாகம் திரிதியாட்டு புகழாக மூன்று அங்கத்ததிகந்தானே 915

## 5 இந்திரகோப அரிசி.

தானென்ற யிந்திரமாங் கோபத்துள்ளே சாதகமாய் வீரமொடு பூமிநாதம் - கானென்ற சாரமொடு யிணங்கன்சினம் கைமுறையாய் மாங்கிஷத்தின் பேதிகூட்டி - வேனென்ற பொடிசெய்து அதிலே தூவி விளங்கவே தினமூன்று யிருந்த பின்பு-வானென்ற திரிதியெல் லாம் பிழிந்துகொண்டு வளமாக படியொன்று வாருவாரே 916

## இந்திரகோப அரிசியால் தங்கச்சுன்னம்

வார்த்ததிலே முன்போலே பத்துமருந்திட்டு வாகாகமாத மொன்று கையாற் தேய்த்து - கோர்த்ததிலே நாதவிந்து கூடவார் த்துக் கொட்டியல்லோ பீங்கானி லுலரவைத்து - பார்த்ததிலே யரிசி செய்து யுலரவைத்து பாங்கான பரணிதனி லடைத்துக் கொண்டு - போர்த்ததிலே அரிசியொடு வீரம்போட்டு புனுகிட்டு தங்கத்திற் பரிசம் பண்ணே 917

## தங்கச் சுன்னத்தால் ரசமணி செய்தல்.

பரிசித்துப் புடம்போடத் தங்கம் நீரும் பாங்கான தங்கத்தி னுட்டைக் கேளு - பரிசிக்கச் சூதமது குளிகையாகும் பாங்கான சூதத்திற் கவரும் கோடி - பரிசிக்கப் பாஷாணங் கட்டிப்போகும் பலபலவாங் கவர்கோடி பாஷாணத்தில் பரிசிக்க யுபரசங்கள் சத்தே யாகும் பரிவாகச் செந்தூரங் களங்கமாமே 918

## தங்கச் சுன்னம் பூசி நவலோகங்களை நீற்றும் விதம்.

ஆமப்பா தங்கமது நீறிப்போனால் அப்பனே நவலோகம் நீறிப் போகும் - ஓமப்பா ஒவ்வொன்றில் கட்டினமோ கோடி யுருக்கின மும் நீற்றினமும் யுரைக்கப் போகா - வேமப்பா நவலோகம் அண்ட ரண்டம் நீறும் விளங்கி யிதிற்சாரமிட்டால் செயநீரோ வேகம் - சாமப்பா சரக்கெல்லாந் தோய்த்து வாட்ட சரக்கொன்றில் கவர் கோடி சார்வாய்ப் பாரே 919

## சரக்குகளை மெழுகு செய்யும்விதம்.

சார்வான சரக்கெல்லாம் மெழுகு பண்ண சாதகத்தைச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு - சார்வான மூலைப்பாலி லரிசிபோட் டால் கற்கம் போல் முறிந்திருக்குங் கடையவெண்ணை - ஆர்வான சரக்கெல்லாங்கட்டிமெழுகாக அப்பனே, வெண்ணைச்சத்தைசுறுக்கு போட்டால் - தூர்வானமெழுகாகு மறுபத்தினாலும் புத்தமனே மெழுகு செய்யு மாற்கந்தானே 920

## வெண்ணைச் சத்தில் கட்டிய சரக்குகளை செந்தூரம் செய்யும்விதம்.

மார்க்கமாய் கட்டியதோர் சரக்கையெல்லாம் வாகான செந்தூ ரஞ்செய்யக் கேளு - மாற்கமாய் திரிகுணசல் பரியுஞ் சூதம் மாட் டினால் சரக்கெல்லாம் செந்தூரிக்கும் மாற்கமாய்நவலோகம் நூற்றுக் கொன்று மாட்டினால் தங்கமுமாம் பாருபாரு - மார்க்கமாய் உருக் கினத்தில் சவ்வாது கூட்டு மைந்தனே நீற்றினத்தில் புனுகு கூட்டே

## முப்பு ரகசியம்.

உருக்குமுகத்தில் கொடுத்த மருந்துகள் உட்சென்று வாங்காத காரணம் என்ன? உட்சென்று வாங்கினாலும் கொடுத்த மருந்தில் பழுக்காத காரணம் என்ன?

அந்த ரகசியத்தை ராமதேவர் 500-லிருந்து கண்டுபிடித்துச் செய்து நான் எழுதி அச்சிட்டிருக்கும் முப்பு ரகசியம் எனும்நூலில் விரிவாய்எழுதப்பட்டிருக் கிறது. பார்த்துக்கொள்ளவும். விலை ரூ. 5.

சுன்னம் செய்யத் தெரிந்தும் கொடுத்தால் பழுக்காத காரணம் என்ன?

## சுன்னஞ் செய்த மருந்தை கொடுக்கத் தெரியாததால் பழுக்கவில்லை

எப்படி கொடுப்பது?

## சுன்னத்தோடு வீரம், லிங்கம் வெங்காரம் கொஞ்சம் சேர்த்து உருக்கு முகத்தில் கொடுத்தால் பழுக்கு மெனல்.

பூட்டப்பா களங்குகட்டு காரியஞ்சேர் புகழான குளிகைக்குச் சாரணையைத் தீர் - மூட்டப்பா சுன்னங்கள் வேதையாட மூதண்டக் குருக்கிடையைச் சொல்லக் கேளு - ஆட்டப்பா சுன்னத்திற் வீரம் போட்டு அப்பனே காரமிட்டு லிங்கம் போட்டு - நீட்டப்பா லோகத்தில் வேதையாகும் நேரான குருக்கிடைதான் அறிந்திடாயே 922

## ஐவகை அரிசி மகிமை.

அறிந்துகொள்ளு அஞ்சுவகை அரிசியிலே சொன்ன ஆடுகிற செந்தூர மெழுகு சுன்னம் - நெறிந்துகொள்ளு களங்கோடு உருக்கினங் களெல்லாம் நேராக யிப்படியே செய்து ஆடு - பிரிந்துகொள்ளு வாதத்துக்கான பூதமிதுதான் போனரசத்துக்கு வாய்க்கரிசி யிதுதான் - அறிந்துகொள்ளு அண்டவித்தை பிண்ட வித்தையிதுதான் மைந்தனே லகுவுபெத்த மாட்டிப்பாயே 923

பாரப்பா யார் செய்வாரிந்த வித்தை பாங்கான சிவயோகி வாம யோகி - நேரப்பா மும்மூலம் பார்த்தயோகி நேரான தேவியு பூஜை யோகி - சேரப்பா சமாதியுற்றோர் ஞானம் பார்த்தோர் திறமாக லெட்சயத்தில் சேர்ந்து நின்றோர் - ஆரப்பா யிருந்தாலென்ன மலையில் வாழ்ந்தாலென்ன யுத்தமர்களாடுகிற வாதந்தானே 924

## ரசமணி சாரணைக்கு உபரசங்கள் மர்மம் எனல்.

தானென்ற யுபரசத்தில் செந்தூரஞ் சொல்வேன் சாதகமாய்ப் பண்ணுகிற வரிசைகேளு - கானென்ற நூற்றிரெண்டு பத்தையுந் தான் சொல்ல கண்கொள்ளா விண்கொள்ளா கரையுங் கொள்ளா கோனென்ற தொவ்வொன்றிற் களங்குகோடி குருகோடி செந்தூரக் கூறுகோடி - வானென்ற காயசித்தி லோகசித்தி கோடி - மாட்டுகிற சாரணைக்கு இவை மர்மந்தானே 925

## உபரசங்களின் தொந்தம்

மர்மமென்ன உபரசச் சத்தை லோகத்தூட்டி மாட்டுகிற செந்தூ ரம்மட்டோயில்லை-மர்மமென்ன பாஷாணம் யுபரசச் சத்தில்சேர்த்து வைக்கிறதோர் குருப்போக்கு மட்டோயில்லை - மர்மமென்ன யுபரச சத்தை யுபரசத்திலேத்தி வளமாக யூதினல் சுன்னங்கோடி - மர்ம மென்ன யுபரசச் சத்தில் ரத்தினங்களிட்டு வாங்குகிற வாதவித்தை கோடிதானே 35, 104, 152-வது பக்கங்களை பார்க்கவும். 926

## ஓரிடை பூநாகச் சத்தால் பத்திடை நாகம் கட்டுமெனல்.

கோடியென்று சொன்னுக்கால் காணமாட்டார் குறிப்பாகத் துறை துறையாய் சொல்லக்கேளு - ஊடியென்ற பூநாகத்துக்குள்ளே யுத்தமனே நாகத்தை கொடுக்கக் கட்டும் - நீடியென்ற பூநாகச்சத்து ஒன்றில் பத்திடை தான் நாகங்கட்டும் - ஓடுகிறபுகையைந்தும் யுள்ளே நிற்கும் யுத்தமனேநாகத்தின் சீறல்போமே 927

சீறலற்றால் நாகமது கட்டிப்போகும் சிறப்பாக பூநாகச் சத் தினலே - சீறலற்றால் நாகத்தில் சூதம்தங்கம் சேர்த்துமே கெந்த கத்தை பின் செந்தூரம் செய் - ஊறலற்றால் வேதையது நூற்றுக் கோடு மப்பனே மாற்றென்ன பத்துப் பத்து - கூறலற்றால் பூநாகச் சத்துக்குள்ளே குறிப்பாக கருநாக மிரண்டு கூட்டே 928

## பூநாக சத்தால் காரீயம் கட்டி களங்காகும் இதில் வெள்ளி பழுக்கும்.

கூட்டியதை யடித்தாக்கால் நொருங்கிப்போகும் குறிப்பாகச் சூதமிட்டுத் தங்கமிட்டு - நாட்டியிதில் திரிகுணசல் கூடயிட்டு நலமாக முலைப்பாலி லரைத்து நன்றாய் மூட்டியதைக் குகையிலிட்டுப் புடத்தைப்போட மூதண்டக் களங்காகும் வேதைகேளு - ஆட்டிய தோர் ரவிமதியில் யெண்பதுக்கொன்றீய அப்பனே யெட்டரையாம் மாத்துத் தானே 929

## காரீயச் செந்தூரம்.

தானென்ற காரீயங் கட்டினத்துக் குள்ளே சாதமாய்ப் பரியோடு சூதங்கூட்டி-கானென்ற திரிகுணசல் இரட்டிப்பிட்டுக் கட்டியதோர் கல்லுப்புக் கூடப்போட்டு - வானென்ற குப்பியிலே ஏற்றினுக்கால் மைந்தனே கருநாகம் செந்தூரிக்கும் - வேனென்ற நவலோகம் நூற்றுக்கொன்று வேதையிடப் பத்தாகும் மூாத்துப்பாரே 930

## பூநாகச் சத்தில் வெள்வங்கம் கட்டும்

டாரப்பா பூநாகச் சத்துக்குள்ளே பாச்சிடுவாய் இரண்டிடைதான் வங்கமப்பா - நேரப்பா வெள்வங்கம் கட்டிப்போகும் கட்டியதோர் வங்கத்தை வெள்ளி ரெண்டில் - சேரப்பா வெள்ளியது தகர்ந்து போகும் சிறந்த வெள்ளிக்கிடைக்கிடைதான் சூதஞ்சேர்த்து-தாளப்பா தாளகத்தைச் சரியாய்ச்சேர்த்து சாதகமாய்ப் புடம்போடக் களங்கமாமே. 931

## ரசிதக்களங்கு ரசிதக்குரு.

களங்கெடுத்துத் திரிவங்க மிரும்பு செம்பிற் காட்டப்பா நூற்றொன்றில் வெள்ளியாகும் - களங்கெடுத்து வெள்ளியிலே இரண்டுக்கொன்றிட்டு கண்டதொரு வெள்ளியிடை சூதம் போட்டு - களங்கறவே முலைப்பாலி லரைத்து நன்ருய் கலந்தெடுத்து அயக்குகையில் சீலெசெய்து - களங்கறவே புடம்போடக் குருவுமாகும் காட்டப்பா ஐநூற்றுக்கொன்று தானே. 932

## வெள்ளி செய்ய வெகு லகுவான முறை.

ஐநூற்றுக் கொன்றிட்டால் திரிவங்கவெள்ளி அப்பனே இருபத்தஞ்சு மாற்று - ஐநூற்றுக் கொன்றிட்டால் குடவன் மேலே அதிசயமாய்ப் பதினைந்து மாற்றுமாகும் - ஐநூற்றுக் கொன்றிட்டால் செம்புமீதில் அதிகமென்ற பத்தாகும் வெள்ளிமாற்று ஐநூற்றுக்கொன்றிடவே இரும்புதானும் அறிந்துகொள்ளு சீனவெள்ளியாகுந்தானே 933

## பூநாகச் சத்தில் வயிரம் கட்டி நீறி குருவாகும்.

ஆகுமென்ற பூநாகச் சத்துக்குள்ளே அப்பனே வைரமிட்டால் சுளித்துவாங்கும் - பாகுமென்ற வைரத்தில் சூதங்கூட்டி பாங்காக முலைப்பாலில் அரைத்து நன்ருய் - தாகுமென்ற புடம்போட வைரம் நீறிச் சாதகமாய்க் குருவாகும் யிதனைக்கேளு-ஏகுமென்ற சூதத்திற் றொந்தமேற்ற யிதிமாகப் பத்துக்கு ஒவ்வொன்றேற்றே 934

### வைரகுருவால் சூதம் கட்டி பரிசவேதையாதல்.

ஏற்றப்பா நூறுதொந்தம் சூதந்தன்னை இச்சூத முண்டாக்கால் காயசித்தி - தாக்கப்பா நவலோகம் சூதம்பட்டால் கடுஞ்சுறுக்குப் பரிசினத்தில் வேதையாகும் - மூத்தப்பா தூபமுதல் தீபவேதை யுத்தமனே யிழுத்த துறையெல்லா மாடும் - சாற்றப்பா சூதத்தால் வாதமாச்சு சார்வான புடசெயந்தான் தங்கத்தாலாச்சே 935

கவனத்தில் வைக்கவும்

## தங்கச் செம்பு.

தங்கத்தில் இச்சூதந் தாக்கினைக்கால் சாதகமாய்க் குருவாகும் செம்புமாகும் - வங்கத்துக்கு இக்குருவைத் தாக்கினைக்கால் வாய் திறக்கப்போகாது வங்கத்தாட்டு - அங்கத்துக்கு இக்குருவைக் கொண்டாயானால் அப்பனே ஏழுசட்டைக் கக்கிப்போகும் - பங்கத் துக்கிதுவாதி சூதவித்தை பாற்கிறதோர் வாதியென்றால் இது வைப் பாரே 936

## அப்பிரக சத்தில் வேதை

பாரப்பா வப்பிரேகச் சத்திநோடு பாங்காகத் தங்கமிட்டு யுருக் கும்போது - நேரப்பா லிங்கமிட்டால் வேதையாகும் நிறையாக வீர மிட்டால் வேதையாகும் - சேரப்பா கெவுரியிட்டால் வேதையாகும் திறமான சூதமிட்டால் வேதையாகும் - சாரப்பா களங்காகுஞ் செந் தூரமாகும் காட்டுகிற முறையெல்லாங் குருவுமாமே. 937

## அண்டத்தோல் சத்தில் சூதம் கட்டுதல்.

குருவான அண்டத்திற் சத்துவாங்கிக் கூட்டினைல் தங்கத்திற் சூதஞ்சாகும் - மருவான சூதமது குருவுமாகும் சேர்ந்தினத்திற் செந்தூரக் களங்குமாகும் - தருவான அண்டத்தில் கவுரிசத்துட்டிச் சாதகமாய்ச் சூதமிட்டு செந்தூரித்தால் - இருவாக நவலோக மாபி ரத்துக்கொன்று அப்பனே பரிசனமாம் வேதையாமே 938

## சங்கு சத்தில் செப்பு களிப்பு போகும்.

வேதையென்ன சங்கதின் சத்திநுள்ளே விளங்கியதோர் செம் பிட்டால் களிம்பு போகும் - வேதையென்ன யிந்திடைக்கு வெள்ளி சேர்த்து அப்பனே யிந்திடைக்கு தங்கம் கூட்டி - பாதையென்ன

வெள்ளியிடை என்று 2-ஏட்டில்

வெள்ளியிலே பத்துக்கொன்று பாச்சினைல் பசும்பொன்னும் பாரு பாரு - வேதையென்ன சங்கதின் சத்திநுண்மை குருடனுக்கு பொன்னுகும் கூட்டிப்பாரே (76-வது பக்கம் பார்க்கவும்) 93

கூட்டவே சொல்லுகிறேன் சங்குச்சத்தில் குறையாமலந்திடைக்கு தங்கம்போட்டு -மூட்டவே அந்திடைக்கு நாகம்போட்டு முகம்விட்டு ஆடையில்... லிங்கம் போட்டு - நீட்டவே யெடுத்தாக்கால் களங்கு மாகும் நேராக நூற்றுென்று நவலோகத்தோடும் - நீட்டவே திச மாற்று சங்குச்சத்து ஆடவே வெகுதூர மோடும்தானே 940

ஓடவே கெருடபட்சி சத்துக்குள்ளே யுத்தமனே தங்கமிட் உருகும்போது - நாடவே நாகமிட வாங்கிவாங்கி நலமிக ஒன்றுக் பத்துகட்டும் - நீடவேயிந்திடைக்குச் சூதமிட்டு நேரான திரிகுணச ரெட்டிப்பிட்டு - ஆடவே வாலுகையிற் செந்தூரித்தால் ஐநூற்றுக் கொன்றிடவும் வேதையாமே 94

## பச்சைநிற கெருடக்கல் சத்தால் நீங்காத விஷங்கள் நீங்கிப்போகும் தாதுவிர்த்தியாகும்.

பாரப்பா நவலோகம் பொன்னுமாகும் பரிவாக யுபரசங்கள் பொன்னுமாகும் - நேரப்பா கொண்டாக்கால் காயசித்தியாகும் நீங்காத விஷங்களெல்லாம் நீங்கிப்போகும் - சேரப்பா தின்றக்கால் தாதுவிர்த்தியாகும் செப்பரிய நரையோடு திரையும் மாறும் - மூரப்பா கெருடபட்சி பச்சைநிறம் மெத்த நன்று யுத்தமனே கிடையாவிட்டால் வெள்ளைநிறம் யூதே 942

## கல்நார்சத்துசெந்தூரம்.

ஊதப்பா கல்நாரைச்சத்துமாக யுத்தமனே சத்துக்குச்சரியாய்த் தங்கம் - போதப்பா தங்கமிடை நாகம் போட்டு புகழாக நாகமிடை செம்பும் போட்டு - மாதப்பா செம்பிடைக்குக் காரீயம் போட்டு மைந்தனே யீயமிடை காந்தம் போட்டு - வாதப்பா காந்தமிடை கபரிச்சத்துப் போட்டு மருவியிந்த யிடைக்கெல்லாம் சூதம்போடே

கவுரிசத்து 1-ஏட்டில்

சூதமிடை தாளகமும் சிலையும் போடு சுகமாக சூதரெட்டி கெந்தகத்தைப் போடு-மாதயிடை பொடிசெய்து குப்பியிலே யேற்று மைந்தனே வாலுகையில் வைத்து ஆட்டு - போதயிடை கூடியெல்லாம் செந்தூரமாகும் போடப்பாவொன்பதினு மாயிரத்துக்கொன்று காதயிடை மாற்றென்ன பதினாறாகும் கல்நாரின் சத்துடைய கடிசுதானே 944

## [illegible]வகைச் சத்தும் முன்போல் செந்தூரம் செய்யலாம்.

தானென்ற கல்நாரின் சத்தைப்போல சாதகமாய் கற்பூரச்சிலையு மாடும் - வானென்ற சிலைபோல அஸ்தியாடும் வாகான அஸ்தியைப் போல் கலங்கொம்பாடும் - மூனென்ற கொம்பதுபோல் தந்தமாடும் உத்தமனே தந்தம்போல் தவளையாடும் - கோனென்ற தவளையைப் போல் அஞ்சனமுமாடும் குறையாமல் முன்போல கூட்டிடாடே 945

## நாகபச்சை சத்துச்செந்தூரம்.

ஆட்டப்பா நாகபச்சை சத்துமாகும் அறிந்தூத அறிந்தூத செம்புமாகும் - மூட்டப்பா தங்கத்தை நாகபச்சை சத்தில் மூதண்டதிற்கு ரெட்டி நாகம்போடு- நீட்டப்பா நாகம்ரெட்டி சூதந்தானும் சீராக சூதம்ரெட்டி கெந்தி தானும் - கூட்டப்பா குப்பியிலே வாலுகையிலேற்றிக் குறையாமற் செந்தூரமாகப் பண்ணே 946

பண்ணியதோர் சேந்தூரம் நவலோகத்தில் பாச்சினல் ஐநூற்றுக்கொன்று வேதை - கண்ணியதோர் செந்தூரம் தினங்குன்றி யுண்ண கனகம்போற் திரேகமெல்லாம் காந்தியாகும்-ஒண்ணியதோர் செந்தூரம் பரிசவேதை ஓடுமே யுபரசத்தில் தூரந்தானும் - மெண்ணியதோ ரெண்ணமென்ன தலையெழுத்து மென்ன யியல்பறியான் சொல்லுகிற வார்த்தை தானே 947

## பூமி நாதமாய் பூநீர் விட்டால்
## சகல சரக்கும் கட்டாது
## பூநீரிலுள்ள எண்ணையை கக்கவைத்து
## பூநீரை காரமேற்றினல்
## சகல சரக்கும் கட்டுமெனல்.

வார்த்தைசொல்லி திரிந்தாக்கால் காயசித்தியாமோ வாய்ப்பேச்சில் சுட்டாக்கால் வாதமாமோ - வார்த்தை சொல்ல லவணமொடு காரசாரம் வகையாகப் புகைச்சலொடு பொங்கப் போமோ - வார்த்தை சொன்னல் கட்டுமோ வண்ணனைவிட்டு மகத்தான பூநாதம் வழலை வண்ணன் - வார்த்தைசொல்லி அலையாதே வண்ணனின் எண்ணை வாயாலே கக்கடித்துக் காரமேற்றே 948

எப்படி எண்ணை கக்கவைப்பது 11, 62-வதுபக்கம் பார்க்கவும். காரமேற்றும்விதம் 12, 17, 38. 125, 126, 140 பக்கங்களில் பார்க்கவும்.

941-வது பாட்டில் பால்கெருடக்கல் சத்துச் சேந்தூரம் இருக்கிறது.

## உபரசங்கள் சத்தெடுக்கும் விதம்.

யேறிற்றுக் காரமென்றல் வழலைக்குள்ளே யிதமாக காரமொடு சாரங்கூட்டி - மாறிற்று வீரமிட்டு சவ்வாது போட்டு வரிசையாய் உபாசத்திற் பூசியூத - தேறிற்று வெவ்வேறே சத்தாய் நிற்கும் திறமாகயிப்படித்தான் சித்தர் செய்வார் -ஊறிற்றுகேணியென்று விறைக்கிறைக்க மைந்தா ஊற்றப்போலுபரசங்கள் சத்துமாமே 949

சத்தாக யின்னமொரு வரிசைகேளு சாதகமாய்ப் பூநீற்றின் குருவினேடு - பற்றுக சாரமிட்டு யீரைத்தாயானல் பூரங்காகச் சலமாகும் சலத்தினுள்ளே - கொற்றுக காரத்தைத் தோய்த்துப் போடு கூறுக ரவிபட்டுச் சுன்னமாகும் - முற்றுன காரச் சுன்னத்தில் சமனாய் வீரங்கூட்டியல்லோ செயநீரை விட்டு ஆட்டே 950

ஆட்டயிலே மெழுகாகும் மெழுகில்த் தானே அப்பனே சவ்வா திட்டு உபரசத்திற் பூசி - நாட்டயிலே யூதநன்றாய்ச் சத்துமாகும் நலம்பெறவே பார்த்தூது உலேயினுள்ளே - மூட்டயிலே யுபரசங்கள் சத்தாய்நிற்கும் மூசியாமற் கறடானல் பின்பொருக்காலூது - நீட்ட யிலே சத்தெடுக்க யிதுவே மாற்கம் நேரான உபரசத்தின் போக்கை கேளே 951

## 7-சத்துச் செந்தூர விபரம்.

கேளப்பா நாகபச்சைச் சத்துபோல கெடியான சுக்கானும் கிளிஞ்சி நத்தை - வாளப்பா *மன்னவற்தம் ஈரக்கல்லும் வாகான கரு மணலும் செம்மணலும் கூட - நீளப்பா சத்தாக்கி நாகபச்சைபோல் நேராகச் செந்தூரம்பண்ணினக்கால் - தாளப்பாநவலோகம் வேதை யாகும் தாக்கியுண்ண காயசித்தியாகுங் காணே 952

* மன்னவர்த்தம்=ருசவர்த்திக்கல்

# நிமிளைச் சத்தால் சத்தெடுக்கும் விதம்.

காணப்பா நிமிளையைத்தான் சத்தாயூதி கண்டிடைக்குத் தங்க மிட்டுருகும்போது - யூணப்பா சூதமிந்த யிடையேபோடு யுத்தமனே யுருக்கி நன்றாய் மணியாய் வாங்கி - தோணப்பா சவுக்காரம் புனுகு வீரம் சூதமொடு வெள்ளுரமும்முலைப்பாலாலாட்டி - யூணப்பா மணி மேலே பூசி நன்றாய் போக்கான ஊஷரத்தின் குருவில் வையே 953

வைத்தல்லோ புடம்போட நிமிளைதானும் மகத்தானகுருவாகும் மைந்தா கேளு - நைத்தல்லோ யிக்குருவில் சவ்வாதுவீரம் நலமான காய மிட்டரைத்துக்கொண்டு - பைத்தல்லோ சரக்குகளைத் தொட்டு ப்போட பரிசமுதல் சந்தான வேதையாகும் - கைத்தல்லோ யுபரசங் கள் சத்துமாகும் காட்டுமுன்னே பச்சையெல்லாம் வேதையாமே ()

# நிமிளைச் சுன்னத்தால் 64-பாஷாணங்களும் உபரசம் 120-ம் சுன்னம் செய்யும்விதம்.

ஆமப்பா யிக்குருவில் புனுகுவீர மதினேடு சீனமிட்டு அரைத் துக்கொண்டு - ஓமப்பா பாஷாண முபரசத்திற்பூசி யூதிடவே தனித் தனியே சுன்னமாகும் - வேமப்பா அண்டரண்டம் குருவினட்டு வேதையென்ற துரைசொல்ல கவரோகோடி - சாமப்பா தங்கமதில் பூசிப்போட தவளம்போல் புடமொன்றில் குருவுமாமே 935

## பறிக்குருவால்கோடானுகோடிதொழில் நிமிளை வாடைபட்டால்சூதம் கட்டும்.

குருவான தங்கத்திற் கட்டோகோடி கூட்டுகிற யுருக்கினமும் நீற்றினமுங்கோடி-தருவானகாயசித்தி கணக்கோயில்லை சந்தான,சுர பியொடு குளிகைகோடி - திருவான நிமிளையுடகுருவைத்தூவ சிறப் பான சூதமது காத்தடிக்கக்கட்டும் - கருவான சூதத்தைச் செந்தூ ரித்தால் கடுஞ்சுறுக்காய் கோடிக்கி யோடுந்தானே 956

## 8-வகை சத்துக்களில் செய்யும் வேலை.

ஓடுகிற நிமிளையைப்போல் மயூரசத்தோடும் யுத்தமனே படிக மது சுறுக்காயோடும் - ஓடுகிற நிமிளையைப்போல் ரோமசத்தோடும் ஓங்கியே யிந்திரமாங் கோபச்சத்தோடும் - ஓடுகிற நிமிளையைப் போ லாமையோடும் முறவப்பாபவளமது சுறுக்காயோடும் - ஓடுகிற நிமிளையைப்போல் வயிரமோடும் உறுதியாங் கெண்டகச்சிலை யினுட்டே 957

## காண்டாமிருகக் கொம்புச் சத்து

### தங்கரசச்செந்தூரம் சாப்பிட்டால் 7-உலகும் சஞ்சரிக்கலாம்.

ஆட்டான காண்டாமிருகக்கொம்பை யப்பனே சத்தாக யூதி வாங்கி - மூட்டானஇந்திடைக்குத்தங்கமிட்டு மூதண்டச்சூதமிட்டுச் செந்தூரித்தால் -கூட்டான நவலோக மாயிரத்துக்கொன்று கொடுத் தாக்கால் பதினாறு மாற்றுமாகும் - நீட்டான தினங்குன்றி மண்டல மே கொள்ள நேரான மேகம்போல் காயமாமே 958

## கற்பூர கெவுனசித்தி.

### கூடுவிட்டு கூடுபாய்தல்.

காயமோ கருமேகக்காந்தியோடும் கவனமோரேகணியைத் தொட்டு ஓடும் - மாயமாய் கூடுவிட்டுக்கூடுபாயும் வாகாகத்திரியலாம் யுலகேழுமப்பா - மாயமோ சொரூபமொடு கமலினியும் அணிந்தால் ஓடுமே அண்டத்தில் நிமைக்குக்கோடி -சாயமோ நிற்குணத்தினண் டங்காட்டும் சமத்துண்டாயிருந்தாக்கால் யேறிப்பாரே 959

கற்பூர கேவுனம் உரை:—

உச்சிக்குங் கீழ் உண்ணாக்குக்கு மேல் உள்ள கிருதமர் வழியில் பிராணவாயுவை செலுத்திராஜயோகம் செய்தல்.

கேவுனம்:— கோட்டை வாயில் என்று உரையிருப்பதால் ஜோதியை தெரிசிக்கப் போகும் கோட்டைவாய் சிறுதமர் என அறியவும். ராஜயோகி வேலுசாமி.

## கலங்கொப்பு சத்துவகை 13-ல்

தங்கரசம் சேர்த்து செந்தூர்த்துச் சாப்பிட்டால் கூடுவிட்டு கூடு பாயலாம். வாசியை ஸ்தப்பித்து நெடுநேரம் நிறுத்தியிருக்க சரீரத்துக்கு எவ்வளவு பலம் வேண்டுமோ அவ்வளவு பலத்தையும் கொடுத்து பூரணம் தெரிசிக்கச் செய்யும்.

பாரப்பா யிப்படியே கஸ்தூரியெலும்பும் பாங்கான காடி நிகம் பன்றிக்கொம்பும் - நேரப்பா கலங்கொம்பும் மாட்டுக்கொம்பும் நேரான மீனெலும்பும் கதண்டுமோடும் - தூரப்பாசூடாலே மரகதமாம் பச்சை சொற்பெரிய காகசிலே மந்தாரச்சிலையும் - மோரப்பா மாங்கிஷத்தின் சிலையினோடு யுத்தமனே கர்க்காவியாடுந்தானே 960

ஆடுமேயுபரசங்கள் நூற்றிரண்டுபத்தும் அப்பனே காயசித்தி லோகசித்தி - நீடுமே குருவோடு சுன்னமாகும் நேராகக்களங்கமுதற் செந்தூரங்கள் - ஆடுமே மெழுகோடு செயநீருஞ்சத்தும் அப்பனே செம்போடு பொட்டிட்டால் வேதை - சாடுமே அண்டாண்டம் கவன வேதை சாதகமாய்ப் பாஷாணக் குருவைக்கேளே 961

## உபரச சத்துகளில் பாஷாணங்களை மாரணம் செய்யும்விதம்.

உபரசச் சத்துக்களில் இன்னின்ன சத்துக்களில் இன்னின்ன பாஷாணங்களை சேர்த்தால்த் தான் கட்டும் அவை செந்தூரமாகும் வேதையாகுமெனல் அண்டச்சத்தில் கெவுரிபாஷாணம் கட்டும்.

கேளப்பா அண்டத்தின் சத்தநொன்று கெடியான கெவுரியுட சத்தமொன்று - வாளப்பா தங்கமொன்று சூதம்ரெண்டு வாகாக உருக்கியொரு மணியாய் வாங்கி - நீளப்பா × திரிகுணசல் ரெட்டிப் பிட்டு நேராக வாலுகையிற் செந்தூரித்தால் - கேளப்பா நவலோக மாயிரத்துக்கோடும் சுகமாகத்தங்க முமாம் சூட்டிப்பாரே 962

× திரிகுணசல் என்பது—தாளகம், மனோசிலை, கெந்தி.

இதைச் சேர்த்துச் செய்தால்சிவக்காத செந்தூரங்களைசிவக்கச் செய்கிறது ஆதலால் இதற்கு செந்தூர குருவென்றும் பெயர்.

## சங்குச் சத்தும் கற்கடக பாஷாணச் சத்தும்.

சூட்டியின்னந் துறைகேளு சங்குச்சத்தில் சுகமான கற்கடகத்தின் சத்துக்கூட்டி - மூட்டியின்னந்தங்கமொடு சூதமிட்டு மூதண்டத் திரிகுணசல் ரெட்டிப்பிட்டு - ஆட்டியின்னம் வாலுகையிற் செந்தூரித்து யப்பனே யுபரசம் லோகத்துள்ளே - நாட்டியின்ன மாயிரத்துக்கொன்றுனுட்டினுல் நலமான தங்கமுமாம் நாட்டிப்பாரே 963

## பூநாக சத்தில் லிங்கம் கோளக பாஷாணம் கட்டும்.

பாரப்பா பூநாகச்சத்திேைனாடே பாங்கானலிங்கமிட்டு கோளகமும் போட்டு - நேரப்பா திரிகுணசல் ரெட்டிப்பிட்டு நிலையாகத் தங்கமிட்டுச் சூதமீட்டு - சேரப்பா வாலுகையிற் செந்தூரித்தால் ஜெகமறிய ஒன்பதிலுமாயிரத்துக்கோடும் - வாரப்பா கப்பிக்காம் பதினைந்துமாற்று மைந்தனே சுருக்காக ஆடும்பாரே 964

## கல்நார் சத்தில் அமுர்தபாஷாணம் கட்டும் வீரமும் கட்டும்.

ஆடவே கல்னருச்சத்திேைனாடே அப்பனே அமுர்தமொடு வீரங்கூட்டி - நீடவே தங்கமிட்டுச்சூதம்போட்டு நேராகப் பொடிசெய்து வாலுகையிலேற்றி - நாடவே செந்தூரமானபின்பு நவலோகமுபரசத்திலாடக்கேளு - சூடவே ஆயிரத்துக்கொன்று விட்டால் உத்தமனே பணிரெண்டு மாற்றுமாமே 965

## கற்பூரசிலாசத்துச் சத்தில் சரகண்ட பாஷாணம் கட்டும்.

ஆமப்பா கற்பூரச்சிலையின் சத்து அப்பனே சரக்கண்டம் சிலையுங்கூட்டி - தாமப்பா தங்கமோடு சூதமிட்டு சாதகமாய் திரிகுணசல் ரெட்டிப்பிட்டு - ஓமப்பா வாலுகையில் ஏற்றிமூட்டி யுத்தமனே செந்தூரமானபின்பு - சேமப்பா செந்தூரமாயிரத்துக் கொன்று சேர்த்தாக்கால் பதினாறு மாற்றுமாமே 966

## மயிலிறகுச்சத்தில் கற்பரி பாஷாணம் கட்டும் பொற்ரெட்டி பாஷாணமும் கட்டும்

மாத்தாக மயூரத்தின் சத்திருேடு மைந்தனே கற்பரியு மேமத் தொட்டி - மூத்தான தங்கமொடு சூதஞ்சேர்த்து மூதண்ட திரிகுணசல் ரெட்டிப்பிட்டு - ஆத்தான வாலுகையில் ஏற்றிமூட்டி அருணன்போல் செந்தூரமானபின்பு - போத்தான நவலோக மாயிரத்துக் கொன்று புகட்டிருல் பதினாறு மாற்றுக்காணே 967

## செகப்பு தங்கம்.

காணப்பா சூதமென்ற பாஷாணத்தில் கைமுறையாய் நாகமொடு தாளகமுங்கூட்டி - பூணப்பா சூதமொடு தங்கமிட்டுப் புகமூாகத் திரிகுணசல் ரெட்டிப்பிட்டு - பூணப்பா வாலுகையிற் செந்தூரித்து யுத்தமனே நவலோகம் ஆயிரத்துக்கொன்று - ஆணப்பா யிட்டாக்கால் பதினெட்டு மாற்று ஆச்சரியந் தங்கமிது சிவப்புத்தானே

## கற்காவிச் சத்தில் கபரி என்ற துத்த பாஷாணம் கட்டும்.

சிவப்பான கர்க்காவி சத்திருேடு சேர்ந்துநின்ற கபரிச்சத்துஞ் சூதம்கூட்டி - சிவப்பான தொட்டியொடு தங்கங்கூட்டிச் சேர்ந்திதுக்கு ரெட்டிப்பு திரிகுணசல் கூட்டிச் - சிவப்பான வாலுகையிற் செந்தூரித்தால் சேரப்பா ஒன்பதிலு மாயிரத்துக்கொன்று - சிவப்பாகத் தங்கமது பதினைந்துமாற்று செகமறியச் செப்பினேன் திறத்தைப் பாரே 969

## காந்தசத்தில் பவளப்புத்து பாஷாணம் கட்டும்.

திறமான காந்தசத்தும் பவளப்புத்தும் சேர்ந்துநின்ற நாகமொடு கோடாசோரி - யறமான தங்கமொடு சூதஞ்சேர்த்து அப்பனே வாலுகையி லேற்றிமூட்டி - நிறமான செந்தூரப் பதத்தில்வாங்கு நீட்டப்பா நவலோகமாயிரத்துக்கொன்று - திறமான தங்கமது பதினெட்டு மாத்துதீக்கிசைந்த யீயம்போல் தவளுந்தானே 970

## கடல்பாசிசத்தில் சிரபந்த பாஷாணம் கட்டும் தீமுறுகல் பாஷாணமும் கட்டும்

சவளவே கடல்ப்பாசி சத்திருேடே சாதகமாய் சிரபந்தம் தீமுறுகல் கூட்டி - கவளவே சூதமொடு தங்கங்கூட்டி கைமுறையாய் வாலுகையில் வைத்தெரித்து - தவளவே செந்தூரம் பதத்தில்வாங்கி தாக்கிருல் நவலோக மாயிரத்துக்கொன்று - துவளவே யிட்டாக்கால் பதிமூன்று மாற்று சூட்டிருலுப்புக்கு அசையாவாறே 971

## மயில்முட்டை சத்தில் சங்கபாஷாணமும் கோழித்தலை கெந்தி பாஷாணமும் கட்டும் இதுவே செகப்பு கெந்தகம்.

வாறான மயூரமென்ற அண்டச்சத்தும் வளமாகச் சங்கமென்ற பாஷாணசத்தும் மருவிநின்ற கோழியுடச் சூட்டுக் கெந்தி கூட்டி - வளமாகத் தங்கமிட்டு சூதம்போட்டு - கூறான வாலுகை யிலேற்றிமூட்டி குழுறவே செந்தூரமான பின்பு - வூறான நவலோக மாயிரத்துக்கொன்று வேதையிட்டால் பதினாறு மாற்றுமாமே 972

## சிலாவங்கக்கல்ச் சத்துடன் வைக்கிருந்த பாஷாணச் சத்து கூட்டவும்.

ஆமப்பா சிலாவங்கக்கல்சித்தும் அப்பனே வைக்கிருந்தச் சத்துங் கூட்டி - ஓமப்பா பஞ்சபக்ஷி தங்கஞ் சூதம் யுத்தமனே கூட்டி யொன்றாய் வாலுகையிலேற்றி - தாமப்பா செந்தூரபதத்தில் வாங்கி சாதகமா யொன்பதிலும் ஆயிரத் துக்கொன்று - போமப்பா தச மாற்றுக் காணுங் காணும் பொற்கொடியைப் பூசைபண்ணி பூட்டு பூட்டே 973

## துருசுசத்துடன் ரசிதபாஷாணச்சத்து,

பூட்டவே உபாசத்தில் துருசினுட சத்தும் புகழான ரசித மென்ற பாஷாணச் சத்தும் - ஆட்டவே வீரமொடு தங்கஞ்சூதம் அப்பனே கூட்டியொன்றாய் வாலுகையிலேற்றி - நீட்டவே பதத் தோடு செந்தூரித்து நேராக வொன்பதிலு மாயிரத்துக்கொன்று - மூட்டவே பதிமூன்று மாற்றுமாகும் மூதண்ட பாஷாணச் சத்துத் தானே 974

## மாக்கல் சத்தில் குங்குமபாஷாணம் கட்டும். ரத்தபாஷாணமும் கட்டும்.

சத்தாக மாக்கல்லை யூதிக்கொண்டு தாக்கப்பா குங்குமமாம் பாஷாணத்தை - ஆத்தான ரத்தவர்ண பாஷாணமுமிட்டு அப்பனே தங்கமிட்டுச் சூதம்போட்டு மூதண்ட திரிகுணசல் செட்டிப்பிட்டு மூத்தான வாலுகையிலேற்றி மூட்டி - கோத்தான செந்தூரமாயிரத் துக்கொன்று கூட்டப்பா ஒன்பதிலும் பத்து மாத்தே 975

## சிலாநாகக்கல் சத்தில் நாகபாஷாணம் கட்டும்.

மாத்தான சிலாநாகக்கல்ச் சத்தில் மகத்தானநாகமென்ற பாஷா
ணமிட்டு - நாத்தான நத்தையுட சத்துடன் நலம்பெறவே கெந்தி
யென்ற பாஷாணங் கூட்டி - மாத்தான தங்கமொடு சூதங் கூட்டி
மைந்தனே திரிகுணசல் செட்டிப்பிட்டு - கொத்தான வாலுகையிற்
செந்தூரித்தால் கூறுகிறேன் ஒன்பதினு மாயிரத்துக்கொன்றே
ஒன்றான செந்தூரம் யினங்கடோறும் உத்தமனே திரிகுணசல்
மறந்திடாதே - ஒன்றான துறைதோறந் தங்கஞ் சூதம் சேர்க்க
உத்தமனே மறந்திட்டால் வேதை போச்சு - ஒன்றான துறைதோ
றும் யுபாசச்சத்தில் பாஷாணத்தையூட்டயிலே புகையடங்கி கட்டிப்
உபரசத்தில் என்று 4-ஏட்டுப்பிரதியிலுமிருக்கிறது
போகும் - ஒன்றான துறைதோறும் சமபாகங் கூட்டு உறுதியாய்
திரிகுணசல் செட்டிப்புப் போடே 977

## கவனிப்பு.

சில இடத்தில் உபரச சத்துடன் பாஷாணச்சத்தை சேர்க்கும்படியும்
சிலபாட்டுகளில் பாஷாணத்தை சேர்க்கும்படியும் சொல்கிறார்.
இந்தப் பாட்டில் உபரசத்தில் சமம் பாஷாணங்களையூட்டயிலே
புகையடங்கிக் கட்டும் என்று சொல்கிறார் இது தப்பு.
34-வது பக்கப்படி கல்லுப்புச் செயநீரால் பாஷாணங்களை கட்டி
அத்துடன் 39-வதுபக்கப்படியுள்ள குடோரி சேர்த்துருக்கி
பாஷாணங்களை சத்தெடுக்கலாம்.
இப்படி பாஷாணங்களை சத்தெடுத்து உபரச சத்துக்
களுடன் சேர்த்து செந்தூரம் செய்ய வேண்டும்.
உபரச சத்துக்களுடன் சமமாக கட்டாத பாஷாணங்களைச் சேர்க்க
கட்டுதாவென செய்து நிர்ணயிக்கவும்.

ஆனால் இன்னின்ன பாஷாணங்களை இன்னின்ன சத்தில்
சேர்க்க வேண்டுமென்று எட்டிங்கில் சொல்லப்பட்டிருக்கிறது.
இதில் 34ம் பக்கம் கல்லுப்புச் செயநீரால் 64-பாஷாணங்
களையும் கட்டலாம் என்றும் உபரச சரக்கு 120லும்
சத்தெடுக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.
35 வது பக்கத்தில் உருக்கிகட்டிய பாஷாணங்களை உபரசசத்தி
லூட்டி அதை தங்கதிலூட்டி அந்த தங்கத்தை சூதத்திலூட்
டினால் சூதம் கட்டுமெனவுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்
ஷை உபரசசத்தை தங்கத்திலூட்டும்போது ஷை குடோரி 30கரு
ஒன்று சேர்த்து உருக்கவேண்டும் தங்கத்தில் உபரச சத்தை
கலந்துருகச்செய்யும் வல்லமை ஷை குடோரிக்குத்தான் உண்டு.

ஆர். எம். கே. பழனி.

## மஞ்சக்கல் சத்துச் செந்தூரம்.

போடப்பா மஞ்சக்கல் சத்ததொன்று புகழானகெந்தியுட சத்த தொன்று - நீடப்பா வெஷரத்தின் சத்ததொன்று நேராகச் சூதமொ ன்று தங்கமொன்று - யூடப்பா வீரமொன்று கூடக்கூட்டி யுத்த மனே திரிகுணசல் செட்டிப்பிட்டு - கூடப்பா வாலுகையில் செந்தூ ரித்து கொடுத்திடுவாய் ஆயிரத்துக்கொன்று தானே 978

## மரகத பச்சைக்கல்ச் சத்து.

தானென்ற மாகதமாம் கல்லின்சத்து தனித்துநின்ற சோபப் பாஷாணச் சத்தும் - வானென்ற நீலப்பாஷாணங்கூட்டி வகையாகத் தங்கமொடு சூதம் விட்டு - கோனென்ற திரிகுணசல் செட்டிப்பிட்டு குமுறவே வாலுகையிற் செந்தூரித்து - வேனென்ற நவலோக மை நூற்றிவிட்டால் வேதையுமோ பத்தாகும் மேவிப்பாரே 979

## 64பாஷாணசத்துக்களையும் 120உபரசச் சத்துக்களையும் தனித்தனி செந்தூரம் செய்யும்விதம்.

மேவியதோர் பாஷாணச்சத்தும் உபரசத்தின் சத்தும் வெவ்வேறாய் தங்கமொடு சூதம் கூட்டி - பாவியதோர் திரிகுணசல் செட்டிப்பிட்டு பாங்காகச் செந்தூரம் செய்தாயானால் - காவியதோர் லோக சித்தி சித்தியாகி கைவிட்ட தூமமுதல் வேதையாகும் - நாவியதோ ரிட்டவிடம் தலைக்கேறினாற்போல் நவலோக முருவழிந்து தங்க மாமே 980

## ஒருசரக்கை சத்துருவால் கொன்று அதாவது கட்டி மித்துருவைச் சேர்த்துப்புடமிட உயிருண்டாகும் இதில் வேதை தவறுதெனல்.

ஆமப்பா உபரசங்கள் நூற்றிரண்டுபத்தும் அப்பனேபாஷாண மறுபத்தினாலும் - ஓமப்பா சத்துருவு மித்துருவுஞ் சொன்னேன் உயிரான தங்கமொடு சூதஞ்சொன்னேன் - சேமப்பா யிப்படியே சேர்த்து சேர்த்துத் திறமாகச் செந்தூரதொழிலைப்பாரு - நாமப்பா யிப்படியே ஆடிக்கண்டோம் நாதாந்த சின்மயத்தின் சொல்திதாமே

## காரசார உப்புவகை 25-ம் தனித்தனி செந்தூரம் செய்யும்விதம்.

சொல்லான லவணமொடு காரசாரம் சூட்டுகிற செந்தூரத் துறையைக்கேளு - வல்லான லவணமொடு துருசுசாரம் மகத்தான தங்கமொடு நாகஞ்சூதம் - நல்லான கெந்தியிட்டாட்டி நன்றாய் நலமான அயக்குகையிலிட்டு மூடி - வில்லானபுடம்போடச்செந்தூர மாகும் வேதையப்பா ஒன்பதிலும் நூற்றுக்கொன்றே 982

## சவுக்காரச் சுன்னத்தை செந்தூரம் செய்யும்விதம்.

ஒன்றான சவுக்காரச் சுன்னத்தோடு யுத்தமனே வெண்காரம் சர்சிச்சாரம் - நன்றான தங்கமொடு நிமிளைகூட்டி நலமாகச் சூத மிட்டு சிலையும்போட்டு - நன்றான அயக்குகையி லரைத்துவைத்துச் சாதகமாய்ப் புடம்போட செந்தூரிக்குங் - குன்றான மலை பழுக்கும் நவலோகம்பொன்னாம் குறிப்பாக நூற்றொன்று கொடுத்திடாயே 983

## கற்பூரச் செந்தூரம்.

கொடுக்கவேகற்பூரம் இந்துப்போடு கொடியதொருவெடியுப்பு கபரிச்சத்தும் - அடுக்கவே சவ்வீரந் தங்கங் கூட்டி அப்பனே தாள கவுரி என்று 2ஏட்டில்
கத்தை ரெட்டிப்பிட்டு - மடுக்கவே அய்க்குகையில் வைத்து மூடி வாகாகப் புடம்போடச் செந்தூரிக்கும் - நெடுக்கவே நவலோகம் நூற்றுக்கொன்று நீட்டினால் பதினாறு மாற்றுமாமே 984

## காரசாரக் களங்கு.

ஆமப்பா யெவாச்சாரம் சீனிக்காரம் அப்பனே சூடனொடு வெள்ளை கூட்டி - சேமப்பா வெள்ளீயம் வெள்ளி சூதம் திறமாகப் பொடிசெய்து அயக்குகையிலிட்டு - தாமப்பா புடம்போடக்களங்கு மாகுஞ் சாதகமாயிதை யெடுத்து வங்கத்தள்ளே - ஓமப்பா செம்பி னுள்ளே நூற்றிலொன்று தாக்க யுத்தமனே சீனமென்ற வெள்ளி யாமே 985

## வீரகுரு.

வெள்ளியின்ன மாவதற்கு வரிசைகேளு மேவியதோர்சவ்வீரம் வங்கத்திட்டு - தெள்ளியிதைப் புடமிட்டெடுத்திந்திடைக்குச் சூதம் திறமாக வப்பிரேகச் சத்துங்கூட்டி - ஒள்ளியதோர் பாஷாணந் தாளகமுங் கூட்டி - யுத்தமனே காரமிட்டரைத்து நன்றாய் வள்ளி யதோ ரெருக்கோடு சதிரகள்ளிப்பாலும் வார்த்தல்லோநாளொன்று ஆட்டிடாயே 986

ஆட்டியதோர் மருந்தெல்லாம் அயக்குப்பிக்கேற்றி வப்பனே தினமொன்று வாலுகையில்முட்டி - நீட்டியதோரிதை யெடுத்துமுன் பாலாலாட்டி நேராக அயக்குகையில்வைத்துமூடி பூட்டியதோர்புடம் போடக் குருவாய் நிற்கும் புகழான குருவெடுத்து வங்கத்துள்ளே மாட்டியதை நூற்றிலொன்று யிட்டாயானால் மைந்தனேசீனவெள்ளி க்கதிகமாற்றே 987

## சூதகுரு.

அதிகமாய் குருவெடுத்துச் சூதத்தூட்ட வப்பனேமணியாகும் சூதந்தானும் - பதிகமாய்ச் சூதத்தை வங்கத்தூட்டு பாங்காக ரண்டிடைக்கு செட்டிவெள்ளி - எதிகமாயிட் டெடுத்து னுறுக்கிக் கொண்டு யேத்தியல்லோ யிந்திடைக்குப் பச்சைச்சூதம் - செதிகமாய்ச் சூதமிடை தாளகத்தைப் போட்டு நேராக யெருக்கம்பால் விட்டு ஆட்டே 988

ஆட்டியல்லோ அயக்குகையில் வைத்துமூடி அப்பனேயீசானம் பூசைபண்ணி - பூட்டியல்லோ புடம்போடக் குருவுமாகும் மூதண்ட குருவினுட வேதைகேளு - நாட்டியல்லோ யிருப்பொன்று வெண்கலம் தானென்று நலமான பித்களேபு மொன்று கூட்டி - நீட்டியல்லோ செம்பேழுமாக பத்தில் நிலைபான குரு நூற்றுக்கொன்று போடு போடே 989

போட்டாக்கால் சீனம்போல் வெள்ளியாகும்போட்டுதே சயத்துக்கசையாதப்பா- மூட்டாக்கால் மூளாது சூதப்பாம்புமோசமென்ன சூதம்விட்ட வாதி கெட்டான் - நீட்டாக்கால் நீண்டுபோம் சூதவித்தை நேராகக் கட்டாட்டால் குறைந்துபோகும் - கேட்டாக்கால் வாதிவந்து, யிப்படிதான் சொல்லு கெடியான ரசவாத மென்று பேரே 990

## அயத்தை நாகமாக்கும் விதம்.

பேரான அயநாகமொன்று கேளு பிரிவான வேப்பங்காய் அரைவாசி பதத்தில் - வாரான காயரிந்திடித்து நன்றாய் வுழமாகப்பிழிந்துகொண்டு பாண்டத்துள்ளே சாரான சவ்வீரஞ் சவுக்காரச் சுண்ணம் சாதகமாய் வகையொன்று வராகனென்று - சேராக அரைத்திலே கலக்கிக்கொண்டு சிறப்பான காந்தமதை கிட்ட வையே 991

வைத்த பின்பு தேய்ந்த கொளுக் கரியிலூதி வளமாகக் காய்ந்த பின்பு காந்தத்திற் காட்டி-கைத்தபின்பு காய்ச்சாற்றில் துவைத்துவா நீ கிரணப்பா அதாதாராய் விழுந்துபோகும் - மெய்த்த பின்பு அதரெடுத்து யெரிகால்மெண்ணே யிசையவிட்டுபிசைந்துவைத்துமூன்று நாள்தான் - கைத்தபின்பு காரமிட்டு யுருக்கினக்கால் சாதகமாய் அயநாகமாகும் பாரே கொளு—தேய்ந்த இரும்பு. 992

பாரப்பா அயநாக முருகும்போது பாச்சிடவே நாகமது கட்டிப்போகும் - நேரப்பாதங்கமிட்டு சூதம்போட்டு நேராகவிந்திடைக்கு திரிகுணசல் கூட்டி - சேரப்பா குப்பியிட்டுவாலுகையிலேற்றித் திறமாகச் செந்தூரபதத்தில் வாங்கி - காரப்பா நவலோகம் நூற்றுக்கொன்று காட்டினால் பனிரெண்டு மாற்றுமாமே 993

### காயசித்திக்கு இரும்பைவிட்டால் சுறுக்கில்லை.

மாற்றான செந்தூரங் குன்றியுண்ண மண்டலத்திற் காயசித்தி மைந்தா பாரு - காத்தான கவனமுமாந் தேகம் பொன்னும் காய சித்திக்கிரும்பைவிட்டால் சுறுக்கோயில்லை - போத்தான மூலருண் டார் கோரக்கருண்டார் புகழான கஞ்சமலை சித்தருண்டார் ஏத்த மென்ன ஏத்தம்போலிதிலே வாத மெழும்புமடா நூறுயுகமெடுத்த ஆடே 994

### காஸ்மீர படிகக்கல்ச் சத்து இதுவே படிகவங்கம் சிவன் கூறு படிகக்கல்லீய செந்தூரம் 147 பார்

ஆடவே படிகக்கல் லீயமொன்று அப்பனே சொல்லுகிறேன் கேளுகேளு - நீடவே படிகக்கல் பொடியாய்ப்பண்ணி நேராகப்பலம் பத்து கல்வத்திட்டு - வீரான சவுக்காரம்வீரம் வகையொன்றுவிராக னொன்று யதிலே போட்டு - கூறான மான்செவியின் கள்ளிச்சாரு குமூரவே வார்த்தரைப்பாய் நாலுச் சாமம் 995

சாமமே அரைத்து நன்றாய் வில்லைதட்டி சமமாக ஓட்டில் வைத்துப் புடத்தைப் போட்டு - பவமாக யிதை யெடுத்துக் கார மிட்டு பாச்சியல்லோ குகையில் வைத்து ஊது ஊது - தவமாக மணிமணியாய் யீயம் வீழும் தவருமல் நாலுதிர மஞ்சுதிர மூதி நவமாக யீயமெல்லாங் கழுவிவாங்கி நலமாகக் கரண்டியிலே யுருக் கிடாயே 996

### 1-படிகவங்கம் 100-நாகம் கட்டும்.

உருக்கியதோர் படிகவங்கமாடும்வேதை உத்தமனே சொல்வ தற்கு நாவோயில்லை - செருக்கியதோர் படிக வங்கம் ஒன்று தானும் திறமாக வுருகையிலே நாகம் போட - பருக்கியதோ ரொன்றுக்கு பத்துகட்டும் பாங்கறிந்து ஊட்டிவா நூறுகட்டும் - மருக்கியதோர் நாகத்தை குகையிலுருக்கி யந்திடைக்குப் பாதியிதில் தங்கம்போடே

போடப்பா ரெண்டிடைக்குச் சமனாய்ச் சூதம் புகழாக உருகி யது வாங்கிக் கொள்ளும் - நீடப்பா யெடுத்திடித்து நன்றாய், நேராக யிந்திடைக்கு கெந்திகூட்டி - ஊடப்பா வாலுகையிலேற்றி மூட்டி, யுறுதியாய் செந்தூரஞ் செய்தாயானால் - நாடப்பா நவலோ கம் நூற்றுக்கொன்று நலமாகப் பதினாறு மாற்றுமாமே 998

### புருவமையம் தமர் திறக்கும்.

மாற்றான செந்தூரங் குன்றிபுண்ண மண்டலத்தில் காயசித்தி யாகும் பாரு - காற்றான வாசியுள்ளே நின்றுபோகுங் கைமுறையாம் புருவமையந் திறந்துகாணும் - மேற்றான வங்கமது படிகவங்கம் மெழும்பவே துறைசொல்வேன் கேளு கேளு - மூற்றான படிகவங் கம் பலந்தானென்று மூதண்ட அயநாகம் பலந்தானென்றே 999

## படிகவங்கப், தங்கம் அயநாக செந்தூரம்.

ஒன்ருக யுருகையிலே பலந்தான் தங்கம் உத்தமனே கூடயிட்டு ருகும்போது - நன்ருக சூதமது முப்பலமும் போட்டு நலமாகச் சேர்ந்து நின்றுருகும்பாரு - கன்ருக யிதை யெடுத்திந்திடைக்கு கெந்தி, கலந்திட்டு பொற்றிலையின்சாற்ருலாட்டி - பன்ருகவாலுகை யில் செந்தூரித்து பரிவாக ஒன்பதிலு மாயிரத்துக்கொன்றே 1000

## சிவன் கூறு படிகவங்கம் சூதமும் நவலோகமும் கட்டும்.

ஆயிரத்துக்கொன்றிட்டால் பதினைந்து மாற்று அப்பனே தின ங்குன்றி இருபது நாளுண்ண - சாயிரத்துக் காயசித்தி தங்கம்போ லாம் சட்டைகக்கும் கெவனமேகும் தளுக்கரா திரேகம் - பாயிர துக் காதியிது அண்டப் பாச்சல் பராபரமாம் சிவன் கூறு படிக மப்பா தாயிரத்துப் படிகவங்கம் சூதம்கட்டும் சாற்றிடவே நவலோ கம் கட்டுந்தானே 1001

தானென்ற படிகவங்கங் குருவுக்காகுஞ் சாதகமாய் களங்கா குஞ் செந்தூரமாகும் - பானென்ற குளிகைக்குத் தாயு மாகும் பாங்காகவைரம்போல்சுறுக்காயோடும் - கோனென்றதுறை கோடி சுன்னங்கோடி கொள்கியதோர் காயசித்தி கோடாகோடி தேனென்ற மொழியாட்கு யீசன் சொன்ன திறவுதனை சித்தர் கண்டார் சேர்ந்த பேரே 1002

பேரான உபரசத்தின் பெருண்மை சொன்னேன் பரிவானபாஷா ணக் குருவுஞ் சொன்னேன் - வாரான லவணமொடு காரசாரம் வகையாக செந்தூர வழியுஞ் சொன்னேன் - சீரான சத்துருவு மித் துருவுங் கூட்டி சேர்க்கிறதோர் குருச் சொன்னேன் செந்தூரஞ் சொன்னேன் - நேரான கட்டினத்தில் சவுக்காரஞ் சொன்னேன் நிலையறியாப் பூநீற்றின் கருச்சொன்னேனே 1003

கருச்சொன்னேன் வழலைகொண்டு சுண்ணும்புசெய்ய கட்டுக் குஞ் செந்தூரஞ்செயநீர்க்கப்பா - கருச்சொன்னேன் பூமியுடநாதஞ் சொன்னேன் கண்டவனே ரசவாதி லோகவாதி - கருச்சொன்னேன் மெழுகுக்கு முலைப்பாலில் வெண்ணெ கட்டுகிற செய்நீர்க்கு கிளிஞ்சி யரிசி, கருச் சொன்னேன் திரிகுணசல் செந்தூரத் துக்காதி காணுத வாதியெல்லாம் கழுதை தானே 1004

தானென்ற புடஞ்சொன்னேன் சாரணைக்கு மைந்தா தாக்கவல்
லா களங்கெடுக்துக் கிருவணத்தைச் சொன்னேன் - வானென்ற
ழுகு சொன்னேன் களங்கு சொன்னேன் மகத்தான செந்தூரக்
நவுஞ் சொன்னேன் - கோனென்ற சுண்ணும்பு பாயக் குருக்
டயுஞ் சொன்னேன் கொடியதொரு திராவகமுஞ் செயநீருஞ்
ான்னேன - வேனென்ற கட்டினமும் கெடுப்பினமுஞ் சொன்
ன் வேதைக்கு தங்கமிட விதஞ்சொன்னேனே 1005
விதமாக புபாசத்தை விரித்துச் சொன்னேன் விளங்கியதோர்
பாஷாண விபரஞ் சொன்னேன் - விதமாக லவணமொடு காரசாரம்
திக்கச் செந்தூரக் குருவுஞ் சொன்னேன் - விதமாக யுருக்கின
நீற்றினமுஞ் சொன்னேன் மெச்ச வல்லோ சித்தரெல்லாம்
ண்டு சொன்னேன் விதமாக சிங்கி சொன்னேன் வஸ்து சொன்
ன் வெளியாக உதகமொடு சிலைசரியுங் காணே 1006

## வாத அங்கம் 23.

காணப்பா இருபத்திமூன்று அங்கம் காப்பேடு முதற்கொண்டு
டயேடு வரைக்கும் - பூணப்பா வரிசையாய்ச் சொல்லி வந்தேன்
ம்பெரிய நாதாக்கள்மனதுமெச்ச - வீணப்பா போகாதுயெந்நூல்
ான் வேதாந்தசின்மயத்தின் மொழியைக்கேட்டு-தோணப்பாகண்ட
டி பாடிப்போட்டேன் சொல்லொன்றுந் தப்பாது கூட்டிப்பாரே
பாரப்பா பலநூலில் பதினைந்தங்கம் பாடினூர் வல்லோர்கள்
கினேழங்கம் - நேரப்பா யிதைவிட அங்கமில்லை நேரான சாஸ்தி
த்தில் யென்றார் கோடி - சேரப்பா யெந்நூலி லிருபத்தி மூன்று
சப்பினேன் விரித்து நன்றாய்த் திறமதாக - ஊரப்பாக் கிடையாது
ந்தன் நூல்தான் ஒளித்துவிட்டார் நாதாக்கள் குகையில் தானே.
குகைதோறும் நாதாக்கள் வாதம் பார்த்து குளிகை யிட்டாடி
லோ காயசித்தி பண்ணி - குகைதோறுஞ் சாஸ்திரத்தைக் கண்ட
மறைத்து கூராகச் சீடருக்கு யுபதேசித்து - குகை தோறும்
பார், கருவேதென்றால் கோமளமாம் பராபரியைப் பூசிப்பார்
- குகைதோறுஞ்சங்கோடு சேகண்டி மொழங்கும் ‡கூப்பிட்டால்
ணியோசை கேட்டிடாதே 1009

‡ கூப்பிட்டால் மணியோசை கேட்டிடாதே என்பதற்கு உரை.
முதல்பக்கம் எழுதப்பட்டிருக்கிறது.

## தாயின் பூசை.

கேளாமற் பூசைபண்ணி பானஞ்செய்து கெடியான மூலத்தில்
த்தைவைத்து-வாளானவாசிகொண்டு மாய்கையைத்தான்வெட்டி
க்கி மவுனத்திலிருந்து கொண்டு - கோளானவாங்காரமதனைச்
கூடியல்லோ ஆறுதலங் குறியுங்கண்டு - நாளான குருபதத்
நின்றுகொண்டு நாவடங்கி பூரணத்திற் சொக்கு சொக்கே 1010

சொக்கினல் சித்தரென்ற நாமமாச்சு சொக்காட்டால் வாதி யென்ற நாமமாச்சு - மக்கினல் மோகத்தில் காமியாச்சு வரம்புதப்பி திரிந்தாக்கால் பாவியாச்சு - சிக்கினல் சாஸ்திரங்கள் விவேகியாச் சிக்காட்டால் நிற்மூட வாதியாச்சு - சிக்கின லெந்நூல்தான் வா சித்தி சாத்திரங்கள் மெத்தவுண்டு கருச்சொல்லாதே 101

கருவில்லா சாஸ்திரங்கள் கிடைத்தாலென்ன காலோடு தலை கெட்ட நூலிருந்தாலென்ன - குருவில்லா வட்டவணை யிருந்தாலெ ன்ன குறிப்பில்லா திரைகோடி யிருந்தாலென்ன - குருவில்லா கரு மறைப்பு இருந்தாலென்ன சாதகமாமிடைபாகந் தப்பிலென்ன-குரு வில்லா சாஸ்திரத்தில் திருவுண்டாக செப்பினேன் நிகண்டுக்குள் செப்பினேனே 101

செப்பினேன் உபாசந்தான் நூற்றிரண்டுபத்திற்கும் திறமாகவு த்துரைத்த நாமமெல்லாம் - செப்பினேன் பாஷாணமறுபத்திநாலு தெரியாமல் பேரிட்ட பேரையெல்லாம் - செப்பினேன் லவணமொ காரசாரம் திருக்காகப் பேரிட்ட பேரை யெல்லாம் - செப்பினேன் நவலோகம் சேர்ந்த யினமெல்லாம் திருட்டான நாமமெல்லாந் தெரி யத்தானே 101

தெரியவல்லோ மறைப்பான சாஸ்திரங்களெல்லாம் திறமாக பார்த்தலைந்து தேவியைத்தான் கேட்டு - தெரியவல்லோ மூலத்தில் ஞானதீப மீண்டெடுத்ததாயோடு தந்தையைத்தான்கேட்டு-தெரியவல் லோ பூரணத்திலமர்ந்து நின்ற தாயான யுன்பனையைக் கேட்டு ந ளுய் - தெரியவல்லோ அண்டாண்ட பதங்களெல்லாம் செப்பினேன் நிகண்டொன்று செப்பினேனே 101

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப்போற்றியுற்றதொரு கைலாச த்திரேகமாக - நன்றாக யீன்றதொரு வுன்மனையைப் போற்றி நல மான நாதாக்கள் பதத்தைப் போற்றி - கன்றான கைலாசத் திரே மாய்வந்த காரணமாம் சேஸ்டரூட பாதம்போற்றி - தன்றான வா நூலாயிரமுஞ்சொல்லி சாதகமாய் பாடிவிட்டேன் ஞானமொருநூ தான்முற்றே 101

காப்பு - 1

ஆக செய்யுள் விருத்தம் 1016.

கம்பிளி சட்டமுனி நாயனர் வாதகாவியம் — முற்றிற்று.

இதன்பிறகு ஞானம் 100-பாடியிருக்கிறர்.

ஓம் தேவி துணை.

(1935)

ஆர். எம். கே. பிரஸ், பழநி. காப்பிகள் 5000.

N 35 974